ശ്രീമൻ നാരായണൻ

[illegible]


T.D.R.C 2313

R.No. 53-IV-1885

O22:4l7x8
M87
11603

11687

உ

சிவமயம்.

# பத்தாந்திருமுறையென்னும்

# திருமந்திரம் மூவாயிரம்.

அறுபத்துமூன்று நாயன்மாருளொருவராகிய

திருமூலநாயனாரருளிச்செய்தது.

இஃது,

சோ - சண்முகசுந்தர முதலியாரவர்களால்
சிவஞானபோதயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை.
சர்வஜித்து ௵ ஆவணி ௴

ஒ23:417x8
1167

## திருமூலநாயனார் சரித்திரம்.

நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி. ௩௧-வது, செ.

குடிமன்னுசாத்தனூர்க் கோக்குலமேய்ப்போன் குரம்பைபுக்கு, முடிமன்னுகூனற் பிறையாளன்றன்னை முழுத்தமிழின், படிமன்னுவேதத்தின் சொற்படியேபர விட்டெனுச்சி, யடிமன்னவைத்தபிரான் மூலனாகின்ற வங்கணனே. (௩௧)

உமாபதி சிவாசாரியார்

திருத்தொண்டர் புராணசாரம். ௩௭ - வது, செ.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற்சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கருதுமூலன், பயிலாகோ வுடன்வியத் தயர்கின்ற சுக்கனைக்கண் டவனுடலிற் பாய்ந்துபோத, வயலாகப் பண்டையுட லருளான்மேவி யாவடுதண் டுறையாண்டுக் கொருபாவாக, குயிலாரு மரசடியி லிருந்துகூறிக் கோதிலா வடகயிலை குறுகினாரே. (௩௭)

திருமந்திரம் பத்தாவது திருமுறை என்பதற்கு

திருமுறைகண்டபுராணம். ௨௧ - வது செ.

ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று, மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ, போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே, பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள். (௨௧)

திருமூலர் திருநக்ஷத்திரம்

ஐப்பசி ௴ அஸ்வநிநக்ஷத்திரம்.

திருமூலநாயனார் இம்மூவாயிரச்செய்யுளன்றி வயித்தியத்தில் ௨௦ - ௩000 - என்னுங் கோர்வைகளையுஞ் செய்திருக்கின்றனர்.

## இப்போதச்சிட்டிருக்கும் சிவஞானபோதயந்திரசாலை புத்தகங்களின் விபரம்.

| | |
|---|---|
| சிவஞானபோத விருத்தியுரை. | க - சா - 0 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், திருவருட்பயன், வினாவெண்பா, கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், போற்றிப்பஃறொடை, சங்கற்ப நிராகரணம், இவற்றினுரை. | க - கஉ - 0 |
| சிவஞானசித்தியார் பரபக்ஷவுரை. | க - அ - 0 |
| சிவப்பிரகாச வியாக்கியானம். | க - அ - 0 |
| திருமூலர் திருமந்திரம். | 0 - கஉ - 0 |
| இலிங்கபுராணம். | க - அ - 0 |
| கூர்மபுராணம். | உ - அ - 0 |
| விநாயககவசம், சிவகவசம், சத்திகவசம், திரிபுரை அகவல், திரிபுரைதோத்திரம், காமாட்சியம்மன் அகவல், விநாயகர் அகவல், கந்தர் சஷ்டி கவசம். | 0 - 0 - கூ |
| சௌந்தரியானந்தலகரி மூலம். | 0 - 0 - அ |
| அபிராமியந்தாதி. | 0 - 0 - அ |
| கந்தரநுபூதி மூலமும் - உரையும் | 0 - 0 - கூ |
| சரஸ்வதிதோத்திரம், சரஸ்வதியந்தாதி. | 0 - 0 - ங |
| ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூலம். | 0 - 0 - சா |
| ௸ உரை. | 0 - 0 - கூ |
| வாக்குண்டாம் மூலம் உரையும், | 0 - க - 0 |
| நல்வழி ௸ ௸ | 0 - க - 0 |
| சமஸ்கிருத சிவஞானபோத சவ்வியாக்கியானம். ஆகம உதாரணங்களுடன். | 0 - சா - 0 |
| சித்தாந்த சாரீவளி வியாக்கியானம். | |



சிவமயம்

# அதிகாரவகராதி.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| விநாயகர்காப்பு | க | பிறர்மனைநயவாமை | உரு |
| சிறப்புப்பாயிரம் | உ | மகளிர்இழிவு | உசா |
| வேதச்சிறப்பு | ரு | நல்குரவு | உசா |
| ஆகமச்சிறப்பு | எ | அக்கினிகாரியம் | உஎ |
| குருபாரம்பரியம் | அ | அந்தணரொழுக்கம் | உஅ |
| திருமூலர்வரலாறு | கூ | இராசதோஷம் | உகூ |
| அவையடக்கம் | கக | வான்சிறப்பு | உகூ |
| திருமந்திரத்தொகைச்சிறப்பு | கஉ | தானச்சிறப்பு | உகூ |
| | | இறந்தார்க்கிதல் | உகூ |
| குருமடவரலாறு | கஉ | அறஞ்செயான்திறம் | ங0 |
| திருமூர்த்திகளின் சேஷ்டகனிஷ்ட முறைமை | கஉ | அன்புடைமை | ஙக |
| ஆ அதிகாரம் | ௬0 | அன்புசெய்வாரை யறிவன் சிவன் | ஙஉ |
| | | கல்வி | ஙச |
| முதற்றந்திரம். | | கேள்விகேட்டமைதல் | ஙரு |
| உபதேசம் | கரு | கல்லாமை | ஙசா |
| யாக்கை நிலையாமை | கஎ | நடுநிலையாமை | ஙஎ |
| செல்வநிலையாமை | ககூ | கள்ளுண்ணாமை | ஙஅ |
| இளமைநிலையாமை | உ0 | ஆ அதிகாரம் | உச. |
| உயிர்நிலையாமை | உஉ | ஆ பாயிரமுட்பட | ஙச |
| கொல்லாமை | உங | | |
| புலால்மறுத்தல் | உங | | |

பக்கம்.

இரண்டாந்தந்திரம்.

அகத்தியம் ௩௧
பதிவலியில் வீரட்டமெட்டு [௪௰
இலிங்கபுராணம் ௪௰
தக்கன்வேள்வி ௪௧
பிரளயம் ௪௨
சக்கரப்பேறு ௪௩
எலும்புங்கபாலமும் ௪௩
அடிமுடிதேடல் ௪௪
சர்வசிருஷ்டி ௪௫
திதி ௪௮
சங்காரம் ௪௯
திரோபாவம் ௫௰
அனுக்கிரகம் ௫௧
கர்ப்பக்கிரியை ௫௩
மூவகையாருயிர்வர்க்கம் ௫௭
பாத்திரம் ௫௮
அபாத்திரம் ௫௯
தீர்த்தம் ௫௯
திருக்கோயிலழிவு ௬௰
அதோமுகதரிசனம் ௬௧
சிவநிந்தை ௬௧
குருநிந்தை ௬௨
மயேசுரநிந்தை ௬௩
பொறையுடைமை ௬௩
பெரியோரைத் துணைக்கோ [டல் ௬௩

ஆ. அதிகாரம் ௨௫.
பாயிரமுட்பட ௫௯

மூன்றாந்தந்திரம்.

அட்டாங்கயோகம் ௬௪
இயமம் ௬௫
நியமம் ௬௫
ஆதனம் ௬௬
பிராணாயாமம் ௬௬
பிரத்தியாகாரம் ௬௮
தாரணை ௬௯
தியானம் ௭௰
சமாதி ௭௩
அட்டாங்கயோகப்பேறு ௭௪
அட்டமாசித்தி ௭௬
கலைநிலை ௮௪
சரீரசித்தியுபாயம் ௮௫
காலசக்கரம் ௮௭
ஆயுள்பரிட்சை ௯௰
வாரசரம் ௯௩
வாரசூலம் ௯௩
கேசரியோகம் ௯௪
பரியங்கயோகம் ௯௭
அமுரிதாரணை ௯௯
சந்திரயோகம் ௱

ஆ. அதிகார-௨௧
பாயிரமுட்பட ௮௰





பக்கம். பக்கம்.

நாலாந்தந்திரம்.

அசபை ௱௪
திருவம்பலச்சக்கரம் ௱௭
அர்ச்சனை ௱௰௭
நவகுண்டம் ௱௰௯
சத்திபேதம்-தி-ம் ௱௨௰௨
வயிரவிமந்திரம் ௱௨௰௯
பூரணசத்தி ௱௩௰௨
ஆதாரவாதேயம் ௱௩௰௫
ஏரொளிசக்கரம் ௱௪௰௭
வயிரவசக்கரம் ௱௫௰௧
சாம்பவிமண்டலச-ம் ௱௫௰௩
புவனாபதிசக்கரம் ௱௫௰௫
நவாக்கரிசக்கரம் ௱௫௰௭

ஆ. அதிகாரம்-௧௩
பாயிரமுட்பட ௯

ஐந்தாந்தந்திரம்.

சுத்தசைவம் ௱௬௰௬
அசுத்தசைவம் ௱௬௰௬
மார்க்கசைவம் ௱௬௰௭
கடுஞ்சுத்தசைவம் ௱௬௰௮
சரியை ௱௬௰௯
கிரியை ௱௭௰
யோகம் ௱௭௰
ஞானம் ௱௭௰௨
சன்மார்க்கம் ௱௭௰௩
சகமார்க்கம் ௱௭௰௪
சற்புத்திரமார்க்கம் ௱௭௰௫
தாசமார்க்கம் ௱௭௰௬
சாலோகம் ௱௭௰௬
சாமீபம் ௱௭௰
சாரூபம் ௱௭௰௭
சாயுச்சியம் ௱௭௰௭
சத்திநிபாதம் மந்தம் ௱௭௰௭
மந்ததரம் ௱௭௰௮
தீவிரம் ௱௭௰௯
தீவிரதரம் ௱௭௰௯
புறச்சமயதூஷணம் ௱௮௰
நிராகாரம் ௱௮௰௨
உட்சமயம் ௱௮௰௩

ஆ. அதிகாரம்-௨௩.
பாயிரமுட்பட ௱௩௰௯

ஆறாந்தந்திரம்.

சிவகுருதரிசனம் ௱௮௰௫
திருவடிப்பேறு ௱௮௰௭
ஞாதிருஞானஞேயம் ௱௮௰௮
துறவு ௱௮௰௯
தவம் ௱௯௰௧
தவதூஷணம் ௱௯௰௨
அருளுடைமையின் - ஞானம் [வருதல் ௱௯௰௩

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| அவவேடம் | ௧௯௪ | பூரணக்குகைநெறிச்சமாதி | ௨௨௫ |
| தவவேடம் | ௧௯௫ | சமாதிக்கிரியை | ௨௨௬ |
| திருநீறு | ௧௯௬ | விந்துற்பனம் | ௨௨௭ |
| ஞானவேடம் | ௧௯௬ | விந்துஜயம் போகம் | ௨௨௯ |
| சிவவேடம் | ௧௯௭ | ஆதித்தநிலை-அண்டம் | ௨௩௦ |
| அபக்குவன் | ௧௯௮ | பிண்டாதித்தன் | ௨௩௪ |
| பக்குவன் | ௧௯௯ | மனவாதித்தன் | ௨௩௫ |
| ஆ அதிகாரம் - ௧௪ | | ஞானாதித்தன் | ௨௩௫ |
| பாயிரமுட்பட ௧௫ | | சிவாதித்தன் | ௨௩௬ |
| ஏழாந்தந்திரம். | | பசுலக்கணம் - பின் | ௨௩௭ |
| ஆறாதாரம் | ௨௦௧ | புருடன் | ௨௩௭ |
| அண்டலிங்கம் | ௨௦௨ | அணு | ௨௩௭ |
| பிண்டலிங்கம் | ௨௦௪ | சீவன் | ௨௩௮ |
| சதாசிவலிங்கம் | ௨௦௪ | பசு | ௨௩௮ |
| ஆன்மலிங்கம் | ௨௦௭ | போதன் | ௨௩௯ |
| ஞானலிங்கம் | ௨௦௮ | ஐந்திந்திரியமடக்குமரு | ௨௩௯ |
| சிவலிங்கம் | ௨௦௯ | ஐந்திந்திரியமடக்குமுறை | ௨௪௦ |
| சம்பிரதாயம் | ௨௧௦ | அசற்குருநெறி | ௨௪௨ |
| திருவருள்வைப்பு | ௨௧௨ | சற்குருநெறி | ௨௪௩ |
| அருளொளி | ௨௧௪ | கூடாவொழுக்கம் | ௨௪௫ |
| சிவபூசை | ௨௧௫ | கேடுகண்டிரங்கல் | ௨௪௬ |
| குருபூசை | ௨௧௬ | இதோபதேசம் | ௨௪௯ |
| மயேசுரபூசை | ௨௧௯ | ஆ அதிகாரம் ௩௮ | |
| அடியார்பெருமை | ௨௨௦ | பாயிரமுட்பட | ௩௯ |
| போசனவிதி | ௨௨௨ | | |
| பிக்ஷாவிதி | ௨௨௩ | எட்டாந் தந்திரம். | |
| முத்திரைபேதம் | ௨௨௩ | உடலிற்பஞ்சபேதம் | ௨௫௧ |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| உடல்விடல் | ௨௫௩ | முப்பாழ் | ௨௮௫ |
| அவத்தைபேதம் | ௨௫௪ | காரியகாரணோபாதி | ௨௮௬ |
| மத்தியசாக்கிராவத்தை | ௨௫௭ | உபசாந்தம் | ௨௮௭ |
| அத்துவாக்கள் | ௨௫௯ | புறங்கூறல் | ௨௮௮ |
| சுத்தநனவாதிபருவம் | ௨௫௯ | அஷ்டதளகமல முகை | ௨௮௯ |
| கேவலசகலசுத்தம் | ௨௬௪ | நவாவத்தை நவி | ௩௦௧ |
| பராவத்தை | ௨௬௯ | சுத்தாசுத்தம் | ௩௦௨ |
| முக்குணநிர்க்குணம் | ௨௭௨ | மோக்ஷநிந்தை | ௩௦௩ |
| அண்டாதிபேதம் | ௨௭௨ | இலக்கணாத்திரயம் | ௩௦௪ |
| பதினோராந்தானமு மவத் [தையெனக்காணல் | ௨௭௨ | தத்துவமசிவாக்கியம் | ௩௦௫ |
| | | மகாவாக்கியம் | ௩௦௬ |
| கலவுசெலவு | ௨௭௩ | விசுவக்கிராசம் | ௩௦௭ |
| நின்மலாவத்தை | ௨௭௩ | வாய்மை | ௩௦௮ |
| அறிவுதயம் | ௨௭௪ | ஞானிசெயல் | ௩௧௦ |
| ஆறந்தம் | ௨௮௧ | அவாவறுத்தல் | ௩௧௦ |
| பதிபசுபாசவேறில்லை | ௨௮௫ | பத்திபுடைமை | ௩௧௧ |
| அதீதக்கிலேயறியுந்திறங்கூறல் [ | ௨௮௭ | முத்தியுடைமை | ௩௧௩ |
| | | சோதனை | ௩௧௩ |
| முக்குற்றம் | ௨௮௮ | ஆ அதிகாரம்-௩௪. | |
| முப்பதம் | ௨௮௮ | பாயிரமுட்பட | ௩௫ |
| முப்பரம் | ௨௮௯ | | |
| பரலக்ஷணம் | ௨௯௦ | ஒன்பதாந்தந்திரம். | |
| முத்துரியம் | ௨௯௨ | குருமடதரிசனம் | ௩௧௫ |
| மும்முத்தி | ௨௯௩ | ஞானகுருதரிசனம் | ௩௧௬ |
| முச்சொரூபம் | ௨௯௩ | பிரணவசமாதி | ௩௧௮ |
| முக்காரணம் | ௨௯௪ | ஒளி | ௩௧௯ |
| முச்சூனியம் தொ-சி | ௨௯௫ | தூலபஞ்சாக்ஷரம் | ௩௨௦ |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| சூக்ஷுமபஞ்சாக்ஷரம் | ௩௨௨ | மோனசமாதி | ௩௪௯ |
| அதிசூக்ஷுமபஞ்சாக்ஷ | ௩௨௩ | வரையுரைமாட்சி | ௩௫௧ |
| திருக்கூத்துத்தரிசனம் | ௩௨௪ | அணைந்தோர் தன்மை | ௩௫௧ |
| ஆகாசப்பேறு | ௩௩௩ | தோத்திரம் | ௩௫௪ |
| ஞானோதயம் | ௩௩௪ | சர்வவியாபி | ௩௫௯ |
| சத்தியஞானானந்தம் | ௩௩௬ | ஆ. அதிகாரம் ௨௨ | |
| சொரூபோதயம் | ௩௩௭ | ஆ பாயிரமுட்பட | |
| ஊழ் | ௩௩௭ | அதிகாரம் | ௨௩௫ இ |
| சிவதரிசனம் | ௩௩௯ | கூடிய திருமந்திரம் | ௩௦௮௩ |
| சிவரூபதரிசனம் | ௩௪௦ | முற்றிற்று. | |
| முத்திபேதம் | ௩௪௧ | | |
| சூனியசம்பாஷணை | ௩௪௧ | | |




## திருமூலநாயனார்.

# திருமந்திரம்

### விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானைமுகத்தனை
யிந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

### சிறப்புப்பாயிரம்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை, நாற்றிசைக்
கும்நல்ல மாதுக்கு நாதனை, மேற்றிசைக் குட்டென் றிசைக்
கொரு வேந்தனுங், கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. (௧)

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னரு, ளின்றனன் மூன்
றினு ணான்குணர்ந் தானைந்து, வென்றனன் றாறு விரிந்தன னேழு
ம்பர்ச், சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே. (௨)

ஒக்கநின் றானை யுலப்பிலி தேவர்க, ணக்கனென் றேத்திடு நா
தனை நாடொறும், பக்கநின் றாரறி யாத பரமனைப், புக்குநின் று
ன்னியான் போற்றிசெய் வேனே. (௩)

அகலிடத் தார்மெய்யை யண்டத்து வித்தைப், புகலிடத்
தெம்மைப் போதவிட் டானைப், பகலிடத் தும்மிர வும்ப
ணிந் தேத்தி, யிகலிடத் தேயிரு ணீங்கிநின் றேனே. (௪)

சிவனொடொக்குந் தெய்வந் தேடினு மில்லை, யவனொடொ
ப் பாரிங்கு யாவரு மில்லை, புவனங் கடந்தன்று பொன்னொளி மி
ன்னுந், தவளச் சடைமுடித் தாமரை யானே. (௫)

அவனை யொழிய வமரரு மில்லை, யவனன்றிச் செய்யு மருந்
தவ மில்லை, யவனன்றி மூவரா லாவதொன் றில்லை, யவனன்றி
யூர்புகு மாறறி யேனே. (௬)

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன், றன்னையொப் பாயொன்று மில்லாத் தலைமகன், றன்னையப் பாவெனி லப்பனு மாயுளான், பொன்னையொப் பாகின்ற போதகத் தானே.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன், ஆயினு மீச னருளறி வாரில்லை, சேயினு நல்ல னணியனல் லன்பர்க்குத், தாயினு நல்லன் றாழ்சடை யோனே. (௮)

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப், பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி, யென்னாற் றொழப்படு மெம்மிறை மற்றவன், றன்னாற் றொழப்படு வாரில்லை தானே. (௯)

தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந், தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களுந் தானே தடவரைத் தண்கட லாகுமே. (௧0)

அயலும் புடையுமெம் மாதியை நோக்கி, லியலும் பெருந்தெய்வ மியாதுமொன் றில்லை, முயலு முயலில் முடிவுமற் றாங்கே, பெயலு மழைமுகிற் பேர்நந்தி தானே. (௧௧)

கண்ணுத லாமொரு காதலி னிற்கவு, மெண்ணிலி தேவ ரிறந்தா ரெனப்பலர், மண்ணுறு வார்களும் வானுறு வார்களு, மன்ன னிவனென் றறியகி லார்களே. (௧௨)

மண்ணளந் தான்மல ரோன்முதற் றேவர்க, ளெண்ணளந் தின்ன நினைக்கிலா ரீசனை; விண்ணளந் தான்றன்னை மேலளந் தாரில்லை, கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. (௧௩)

கடந்துநின் றான்கம லம்மல ராதி, கடந்துநின் றான்கடல் வண்ணனெம் மாயன்; கடந்துநின் றானவர்க் கப்புற மீசன், கடந்துநின் றானெங்குங் கண்டுநின் றானே. (௧௪)

ஆதியு மாயர னாயுட லுள்நின்ற, வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தாரருட், சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையு, நீதியு மாய்நித்த மாகிநின் றானே. (௧௫)

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை, மாது குலாவிய பாகத்தப் பாகனை, யாது குலாவிய மரருந் தேவருங், கோது குலாவிக் குணம்பயில் வாரே. (௧௬)



காயமி ரண்டுங் கலந்து கொதிக்கினு, மாயங் கத்தூரி யது மிகு மவ்வழி; தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினு, மீச னுறவுக் கெதிரில்லை தானே. (௧௭)

அதிபதி செய்த வளகை வேந்தனை, நிதிபதி செய்த நிறைதவ நோக்கி, யதுபதி யாதரித் தாக்கம தாக்கி, யிதுபதி கொள்ளென்ற வெம்பெரு மானே. (௧௮)

இதுபதி யேலங் கமழ்பொழி லேழு, முதுபதி செய்தவன் மூதறி வாளன், விதுபதி செய்தவன் மெய்த்தவ நோக்கி, யதுபதி யாக வமருகின் றானே. (௧௯)

முடிவு பிறப்பையு முன்னே படைத்த, வடிவுடை யுமா னெறி நாடி, யிடியு முழக்கமு மீச ருருவங், கடிமலர்க் குன்ற மலையது தானே. (௨0)

வானப் பெருங்கொண்டன் மாலயன் வானவ, ரூனப் பிறவி யொழிக்கு மொருவனைக், கானக் களிறு கதறப் பிளந்தவெங், கோனைப் புகழுமின் கூடலு மாமே. (௨௧)

மனத்தி லெழுகின்ற மாயநன் னாடன், நினைத்த தறிவ னெனிற்றா னினைக்கிலர், எனக்கிறை யன்பில னென்ப ரிறைவன், பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. (௨௨)

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரண, நில்லென நிற்பித்த நீதியு ளீசனை, யில்லென வேண்டா மிறையவர் தம்முத, லல்லும் பகலு மருளுகின் றானே. (௨௩)

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி, தேற்றுமி னென்றுஞ் சிவனடிக் கேசெல்வ, மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை, மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. (௨௪)

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாள, னிறப்பிலி யாவர்க்கு மின்ப மருளுந், துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதான், மறப்பிலி மாயா விருத்தமு மாமே. (௨௫)

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் றொழுதாற், படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங், கடந்துநின் றான்கம லம்மலர் மேலே, யுடந்திருந் தானடிப் புண்ணிய மாமே. (௨௬)

சந்தி யெனத்தக்க தாமரை வாண்முகத், தந்தியி னீசனைத் தன்மைக் கேயென்று, நந்தியை நாளும் வணங்கப் படுமவர், புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. (௨௭)

இணங்கிநின் றானெங்கு மாகிநின் றானும், பிணங்கிநின் றான்பின்னு முன்னுநின் றானு, முணங்கிநின் றானம ராபதி நாதன், வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. (௨௮)

காணநில் லாயடி யேற்குற வாருள, ரநாணநில் லேனுன்னை நான்றழு விக்கொள்ளக், கோணநில் லாத குணத்தடி யார்மனத், தாணிய தாகி யமர்ந்துநின் றானே. (௨௯)

வானின் றழைக்கு மழைபோ லிறைவனுந், தானின் றழைக்குங்கொல் லென்று தயங்குவா, ரானின் றழைக்கு மதுபோ லென்னந்தியை, நானின் றழைப்பது ஞானங் கருதியே. (௩௰)

மண்ணகத் தானொக்கும் வானகத் தானொக்கும், விண்ணகத் தானொக்கும் வேதகத் தானொக்கும், பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே, கண்ணகத் தேநின்று காதலித் தேனே. ()

தேவர் பிரானம் பிரான்றிசை பத்தையு, மேவு பிரான்விரி நீருல கேழையுந், தாவு பிரான்றன்மை தானறி வாரில்லை, பாவு பிரானருட் பாடலு மாமே. (௩௨)

பதிபல வாயது பண்டிவ் வுலகம், விதிபல செய்தொன்று மெய்ம்மை யுணரார், துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரு, மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. (௩௩)

சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல், வேந்த னமரர்க் கருளிய மெய்ந்நெறி, யார்ந்த சுடரன்ன வாயிர நாமமும், போந்து மிருந்தும் புகழுவென் றானே. (௩௪)

ஆற்றுகி லாவழி யாகு மிறைவனைப், போற்றுமின் போற்றிப் புகழுமின் புகழ்ந்திடின், மேற்றிசைக் குங்கிழக் குத்திசை யெட்டிற்கு, மாற்றுவ னப்படி யாட்டவு மாமே. (௩௫)



அப்பனை நந்தியை யாரா வமுதினை, யொப்பிலி வள்ளலைப் பூழி முதல்வனை, யெப்பரி சாயினு மேத்துமி னேத்தினா, லப்பரி சீச னருள்பெற லாமே. (௩௬)

நானுநின் றேத்துவ னாடொறு நந்தியைத், தானுநின் றான்றழற் போலொக்கு மேனியன்; வானினின் றார்மதி போலுட லுள்ளுவந், தூனினின் றாங்கே யுயிர்க்கின்ற வாறே. (௩௭)

பிதற்றொழி யேன்பெரி யானரி யானைப், பிதற்றொழி யேன்பிற வாவுரு வானைப், பிதற்றொழி யேனெங்கள் பேர்நந்தி தன்னைப், பிதற்றொழி யேன்பெற் றிருந்தவன் றானே. (௩௮)

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத், தீர்த்தனை யங்கே திளைக்கின்ற தேவனை, யேத்தியு மெம்பெரு மானென் றிறைஞ்சியு, மாத்தஞ்செய் தீச னருட்பெற லாமே. (௩௯)

குறைந்தடைந் தீசன் குரைகழ னாடு, நிறைந்தடை செம்பொனி னேரொளி யொக்கு, மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப், புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே. (௪௰)

சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப், புனஞ்செய்த நெஞ்சிடைப் போற்றவல் லார்க்குக், கனஞ்செய்த வாளுதற் பாகனு மங்கே, யினஞ்செய்த மான்போ லிணங்கிநின் றானே. ()

போயரன் றன்னைப் புகழ்வார் பெறுவது, நாயக னான்முடி செய்தது வேந்தற்கு, மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும், வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே. (௪௨)

அரனடி சொல்லி யரற்றி யழுது, பரனடி நாடியே பாவிப்ப நாளு, முரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு, நிரனடி செய்து நிறைந்துநின் றானே. (௪௩)

போற்றியென் பாரம ரர்புனி தன்னடி, போற்றியென் பாரசு ரர்புனி தன்னடி, போற்றியென் பார்மனி தர்புனி தன்னடி, போற்றியென் னன்புள் விளங்கவைத் தேனே. (௪௪)

விதிவழி யல்லதிவ் வேலை யுலகம், விதிவழி யின்பம் விருத்தமு மில்லை, துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும், பதிவழி

காட்டும் பகலவ னாமே. (௬௫)

அந்திவண் ணாவரனே சிவனே யென்று, சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ, முந்திவண் ணாமுதல் வாபரனே யென்று, வந்திவ் வண்ணனெம் மனம்புகுந் தானே. (௬௬)

மனையி லிருந்தவர் மாதவ ரொப்பர், நினைவு ளிருந்தவர் நேசத்து ணிற்பர், பனையு ளிருந்த பருந்தது போல, நினையா தவர்க்கில்லை நின்னின்பந் தானே. (௬௭)

அடியார் பரவு மமரர் பிரானை, முடியால் வணங்கி முதல்வனை முன்னிப், படியா ரருளும் பரம்பர னெந்தை, விடியா விளக்கென்று மேவிநின் றேனே. (௬௮)

பசைபசு பாசத்து நாதனை யுள்ளி, வசைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத், திசைபசு பாசச் செழுந்தட் டின்றிக், தசைபசு பாசங் கடந்தெய்த லாமே. (௬௯)

சூடிவ னெஞ்சிடை வைப்பன் பிரானென்று, பாடுவன் பன்மலர் தூவித் தொழுதுநின், றாடிவ னாடி யமரர் பிரானென்று, நாடிவ னுனின் றறிவது தானே. (௭௰)

வேதச்சிறப்பு.

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி, னோதத் தகுமற மெல்லா முளதர்க்க, வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற, வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே. (௧)

வேத முரைத்தானும் வேதிய னாகிலன், வேத முரைத்தானும் வேதா விளங்கிட, வேத முரைத்தானும் வேதியர் வேள்விக்காய், வேத முரைத்தானு மெய்ப்பொருள் காட்டவே. (௨)

இருக்குரு வாமெழில் வேதத்தி னுள்ளே, யுருக்குணர் வாயுணர் வேதத்து ளோங்கி, வெருக்குரு வாகிய வேதியர் சொல்லு, மருக்குரு வாய்நின்ற கன்னியு மாமே. (௩)

திருநெறி யாவது சித்தசித் தன்றிப், பெருநெறி யாய பிரா-



னை நினைந்து, குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடு, மொருநெறி யொன்றாக வேதாந்த மோதுமே. (௪)

ஆறங்க மாய்வரு மாமறை யோதியைக், கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை, வேறங்க மாக விளைவுசெய் தப்புறம், பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. (௫)

பாட்டு மொலியும் பறக்குங் கணிகையா, ராட்ட மறுத வவனியின் மாட்டாத, வேட்டு விருப்பார் விரதமில் லாதவ, ரீட்டமி டஞ்சென் றிகலுற் றாரே. (௬) அஉ ௫௯

ஆகமச்சிறப்பு.

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்த, னஞ்சொ டிருபத்து மூன்றுள வாகம, மஞ்சலி கூப்பி யறுபத் தறுவரு, மஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே. (௧)

அண்ண லருளா லருளுஞ் சிவாகம, மெண்ணி லிருபத்தெண் கோடிநூ றாயிரம், விண்ணவ ரீசன் விழுப்ப முரைத்தன, ரெண்ணிநின் றப்பொரு ளேத்துவ னேனே. (௨)

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங், கண்டவர் கூறுங் கருத்தறி வாரென்க, பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையு, மண்ட முதலா னரன்சொன்ன வாறே. (௩)

அண்ண லருளா லருளுந் திவ்யாகமம், விண்ணி லமரர் தமக்கும் விளங்கரி, தெண்ணி லெழுபது கோடிநூ றாயிர, மெண்ணிலு நீர்மே லெழுத்தது வாகுமே. (௪)

பரனாய்ப் பராபரங் காட்டி யுலகிற், றரனாய்ச் சிவதன்ம றானேசொல் காலத், தரனா யமரர்க ளர்ச்சிக்கு நந்தி, யுரனாகி யாகம மோங்குகின் றானே. (௫)

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவ, முவமா மகேச ருருத்திர தேவர், தவமால் பிரமீசர் தம்மிற்றாம் பெற்ற, நவவாகம மெங்க ணந்திபெற் றானே. (௬)

பெற்றநல் லாகமங் காரணங் காமிய, முற்றநல் வீர முயர்

வா துளஞ் சிந்திய, மற்றவ் வியாமள மாகுங்கா லோத்திரந், துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே. (எ)

அன்ன லருளா லருளுஞ் சிவாகம, மெண்ணிலி கோடி தொகுத்திடு மாயினு, மன்ன லறைந்த வறிவறி யாவிடி, னெண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே. (அ)

மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின், றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து, வாரிய முந்தமி மும்முட னேசொல்லிக், காரிகை யார்க்குங் கருணைசெய் தானே. (௯)

அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ், சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந், தமிழ்ச்சொல் வடசொ லெனுமிவ் விரண்டு, முணர்த்து மவனை யுணரலு மாமே. (௰) ஆ கூசு

---

## குருபாரம் பரியம்.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடி, னந்திக ணால்வர் சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரம, ரென்றிவ ரென்னோ டெண்மரு மாமே. (௧)

நந்தி யருளாலே நாதனாம் பேர்பெற்றோம், நந்தி யருளாலே மூலனை நாடினோம், நந்தி யருளாவ தென்செயு நாட்டினில், நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. (௨)

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்க, னிந்திரன் சோமன் பிரம னுருத்திரன், கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ, டிந்தெழுவரு மென்வழி யாமே. (௩)

நால்வரு நாலு திசைக்கொன்று நாதர்க, ணால்வரு நானா விதப்பொருள் கைக்கொண்டு, நால்வரு நான்பெற்ற தெல்லாம் பெறுகென, நால்வருந் தேவராய் நாதரா னார்களே. (௪)

மொழிந்தது மூவர்க்கு நால்வர்க்கு மீச, னொழிந்த பெருமை யிறப்பும் பிறப்புஞ், செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன், கழிந்த பெருமையைக் காட்டகி லானே. (௫)



எழுந்துநீர் பெய்யினு மெட்டுத் திசையுஞ், செழுந்தண் ணியமங்கள் செய்யின்னென் றண்ணல், கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே, யழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. (௬) ஆ எ௨.

---

## திருமூலர் வரலாறு.

நந்தி யிணையடி நான்றலை மேற்கொண்டு, புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய், தந்தி மதிபுனை யரனடி நாடொறுஞ், சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. (௧)

செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று, மப்படி நல்கு மருணந்தி தாள்பெற்றுத், தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபி, னொப்பி லெழுபது கோடி யுகமிருந் தேனே. (௨)

இருந்தவக் காரணங் கேளிந் திரனே, பொருந்திய செல்வப் புவனா பதியா, மருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன், பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. (௩)

சதாசிவந் தத்துவ முத்தமிழ் வேத, மிதாசனி யாதிருந் தேநின்ற கால, மிதாசனி யாதிருந் தேன்மன நீங்கி, யுதாசனி யாதுட னேயுணர்ந் தோமால். (௪)

மாலாங்க னேயிங்கி யான்வந்த காரண, நீலாங்க மேனி நேரிழை யாளொடு, மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின், சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. (௫)

நேரிழை யாவா ணிரதிச யானந்தப், பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள், சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை, யேருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. (௬)

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச், சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை, சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலிற், ...ந்திருந் தேன்சிவ னாமங்க ளோதியே. (எ)

...லிக் காயத்தே யெண்ணிலி கோடி, யிருந்தே னி... விடத்தே, யிருந்தே னிமையவ ரேத்தும் பதத்... ...ன் னந்தி யிணையடிக் கீழே. (அ)

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது, முன்னைநன் றாக
முயல்தவஞ் செய்கிலீ, ரென்னைநன் றாக விறைவன் படைத்தன
ன், றன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே. (௯)

ஞானத் தலைவிதன் னந்தி நகர்புக்கு, வூனமி லொன்பது
கோடி யுகந்தன்னுள், ஞானப்பா லாட்டி நாதனை யர்ச்சித்து,
யானு மிருந்தேனற் பொதிகையின் கீழே. (௧௦)

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன், வெல்கின்ற ஞான
த்து மிக்கோர் முனிவராய்ப், பல்கின்ற தேவ ரசுரர் நரர் தம்பா,
லொல்கின்ற வான்வழி யூடிவந் தேனே. (௧௧)

சித்தத்தி னுள்ளே சிறக்கின்ற நூல்களி, லுத்தம மாகவே
யோதிய வேதத்தி, னொத்த வுடலையு முள்ளநின் றுற்பத்தி ய
த்தனெனக் கிங் கருளா லளித்ததே. (௧௨)

நான்பெற்ற வின்பம் பெறுக விவ் வையகம், வான்பற்றி நி
ன்ற மறைப்பொருள் சொல்லவு, மூன்பற்றி நின்ற வுணர்வுறு ம
ந்திரந், தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. (௧௩)

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச், சிறப்பொடு வா
னவர் சென்றுகை கூப்பி, மறப்பிலர் நெஞ்சினு மந்திர மாலை
யுறைப்பொடு கூடிநின் றோதலு மாமே. (௧௪)

அங்கி மிகாமை வைத்தா னுடல் வைத்தா, னெங்கு மிகாமை
வைத்தா னுலகேழையுந், தங்கி மிகாமை வைத்தான் றமிழ் சா
த்திரம், பொங்கி மிகாமைவைத் தான்பொரு டானுமே. (௧௫)

அடிமுடி காண்பா ரயன்மா லிருவர், படிகண் டிலர்மீண்
டும் பார்மிசைக் கூடி, யடிகண் டிலனென் றச்சுதன் சொல்ல, மு
டிகண்டே னென்றயன் பொய்மொழிந் தானே. (௧௬)

பெற்றமு மானு மழுவும் பிரிவற்ற, தற்பரன் கற்பனை
யுஞ் சராசரத், தற்றமு கல்கி யுடிபேன் சித்தினி, னற்
ம்மலிந் தனெங்க ணந்தியே.

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை, மா
மாயை தன்னில் வரும்பரை, யாயத்தை யச்சிவன் ற



சா, வியத்தை முற்றும் விளங்கியிட் டேனே. (௧௭)

விளங்கிப் பரமாகு மெய்ஞ்ஞானச் சோதி, யளப்பில் பெ
ருமைய ரானந்த நந்தி, துளக்கறு மானந்தக் கூத்தன்சொற்
போந்து, வளப்பிர் கயிலை வழியில்வந் தேனே. (௧௮)

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின், னந்தி யருளாலே ச
தாசிவ னாயினே, னந்தி யருளாலெய்ஞ் ஞானத்து நண்ணி
னே, னந்தி யருளாலே நானிருந் தேனே. (௨௦)

இருக்கி லிருக்கு மெண்ணிலி கோடி, யருக்கின்ற மூலத்து
ளாங்கே யிருக்கு, மருக்கனுஞ் சோமனு மாரழல் வீச, வுருக்கி யு
ரோம மொளிவிடுந் தானே. (௨௧)

பிதற்றுகின் றேனென்று மப்பேர் நந்தி தன்னை, யியற்றுவ
னெஞ்சத் திரவும் பகலு, முயற்றுவ னோங்கொளி வண்ணனெ
ம் மானை, யியற்றிகழ் சோதி யிறைவனு மாமே. (௨௨) ஆ-௨௨

---

## ஆசையடக்கம்.

ஆசறி வாரெங்க ளண்ணல் பெருமையை, யாரறி வாரிந்த
வகலமு நீளமும், பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதின், வேர
றி யாமை விளம்புகின் றேனே. (௧)

பாடவல் லார்நெறி பாட வறிகிலே, னாடவல் லார்நெறி
யாட வறிகிலே, னூடவல் லார்நெறி ஞான மறிகிலேன், றேடவ
ல் லார்நெறி தேடகில் லேனே. (௨)

மன்னிய வாய்மொழி யாலு மதித்தவ, ரின்னிசை யுள்ளே
யெழுகின்ற வீசனைப், பின்னை யுலகம் படைத்த பிரமனு, முன்னி
யவனை யுணராது மாமே. (௩)

தத்துவ ஞான முரைத்துத் தாழ்வரை, முத்திக் கிருந்த மு
னிவருந் தேவரு, மொத்துடன் வேறு யிருந்து தவஞ்செய்யும், ம
த்திறை யாரறிப் பயனறி யாரே. (௪) ஆ-௧௪

## திருமந்திரத் தொகைச்சிறப்பு.

மூல னுரைசெய்த மூவாயிரந் தமிழ், ஞால மறியவே நந்தி யருளது, காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின், ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. (௧)

வைத்த பரிசே வகைவகை நன்னூலின், முத்தி முடிவிது மூவா யிரத்திலே, புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது, வைத்த சிறப்பு தருமிவை தானே. (௨) ஆ ௪00

## குருமடவரலாறு.

வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின், முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரை, தந்திர மொன்பது சார்வு மூவாயிரஞ், சுந்தர வாகமச் சொன்மொழிந் தானே. (௧)

கலந்தருள் காலாங்கர் தம்பாற் கோரர், நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர், புலங்கொள் பரமா னந்தர் போகதேவர், நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. (௨) ஆ ௬௦௨

## திரிமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறைமை.

அளவி லிளமையு மந்தமு மீறு, மளவியல் காலமு நாலு முணரிற் றளர்விலன் சங்கரன் றன்னடி பார்சொல், லளவிற் பெருமை யரியயற் காமே. (௧)

ஆதிப் பிரானு மணிமணி வண்ணனு, மாதிக் கமலத் தலர்மிசை யானுஞ், சோதிக்கின் மூன்றுந் தொடர்ச்சியி லொன்றெனார், பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. (௨)

ஈச னிருக்கு மிருவினைக் கப்புறம், பீச முலகிற் பெருந்தெய்வ மானது, வீச னதுவிது வென்பார் நினைப்பிலார், தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. (௩)

செயற்கரி யாவரோ டைவர் சிறக்க, வயலுள வாதிரன் டொன்றெனொன் றாகு, மயலுறு சத்திவிந் துவு நாதமு மோங்கச், சயமுறு சங்கரன் றன்பெயர் தாமே. (௪)



பயனறிந் தவ்வழி யெண்ணு மளவில், வயனொடு மானமக் கன்னிய மில்லை, நயனங்கள் மூன்றுடை நந்தித் தமராம், வயன்பெறு வீரவ் வானவ ராமே. (௫)

ஒலக்கஞ் சூழ்ந்த வுலப்பிலி தேவர்கள், பாலொத்த மேனிப் பணிந்தடி யேன்றொழு, மாலுக்கு மாதிப் பிரமற்கு மொப்புநீ, ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. (௬)

வானவ ரென்று மனிதரிவ ரென்றுந், தேனமர் கொன்றைச் சிவனரு ளல்லது, தானமர்ந் தோருந் தனித்தெய்வ மற்றில்லை, யூனமர்ந் தோரை யுணர்வது தானே. (௭)

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற, வாதிக்கு ளாவ தறிகிலா தார்கள், நீதிக்க ணீச னெடுமா லயனென்று, பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே (௮)

பரத்திலே யொன்றா யுள்ளாய்ப் புறமாகி, வரத்தினுண் மாயவ னாயய னாகித், தரத்தினுட் டான்பல தன்மைய னாகிக், கரத்திரு ளின்று கழிவுசெய் தானே. (௯)

தானொரு கூறு சதாசிவ னெம்மிறை, வானொரு கூறு மருவியு மங்குளன், கோனொரு கூறுட லுண்ணின் றுயிர்க்கின்ற, தானொரு கூறு சலமய னாமே. (௧0)

ஆ அதிகாரம் - ௯ - இ-பாடல் - ௧௧௨.

சிறப்புப்பாயிரம் - முற்றும்.

## முதற்றந்திரம்—உபதேசம்.

விண்ணினி ழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு, தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து, வுண்ணின் றுருக்கியொ ரொப்பிலா வானந்தக், கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. (௧)

களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி, களிம்பறுத் தா

ளருட் கண்விழிப் பித்துக் களிம்பறு காத கதிரொளி காட்டிப், பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. (௨)

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற், பதியினைப் போற்பசு பாச மநாதி, பதியினைச் சென்றணு காப்பசு பாசம், பதியணு கிற்பசு பாச நிலாவே. (௩)

வேயி னெழுங்கனல் போலேயிம் மேனியுங், கோயி லிருந்து குடிகொண்ட கோனந்தி, தாயினு மும்மல மாற்றித் தயாவென்னுந், தோயம தாயெழுஞ் சூரிய னாமே. (௪)

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே, சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுடமாட்டாச், சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோ லாரியன் றோற்ற முனற்ற மலங்களே. (௫)

மலங்களைந் தாமென மாற்றி யருளித், தலங்களைந் தானற் சதாசிவ மான, புலங்களைந் தானப் பொறியினை வென்றியே, நலங்களைந் தானுள் ளயந்தா னறிந்தே. (௬)

அறிவைம் புலனுட னேநான் றதாகி, நெறியறி யாதுற்ற நீராழம் போல, வறிவறி வுள்ளே யழிந்தது போல, குறியறி விப்பான் குருபர னாமே. (௭)

ஆமேழு பாலைப் பிரிக்கின்ற வன்னம்போற், றோமே தனிமன்றிற் றன்னந் தனித்தநீ, போமே வுபல்கர ணங்களு மற்றன, தாமே பிறப்பெரி சேர்ந்தவித் தாமே. (௮)

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச், சுத்தத் துரியம் பிறந்து துடக்கற்று, வொத்துப் புலனுயி ரொன்றா யுடம்பொடு செத்திட் டிருப்பார் சிவயோ கியர்களே. (௯)

சிவயோக மாவது சித்தசித் தன்று, தவயோகத் துட்புகுந் தன்னொளி தாய, தவயோகஞ் சாராத வன்பதி போக. சிவயோக நந்தி தனக்களித் தானே. (௰)

அளித்தா னுலகெங்குந் தாரணை யுண்மை, யளித்தா னமரர் அறிய வுரைதந் தளித்தான் றிருமன்று ளாடுந் திருத்தாள், அளித்



தான் பேரின்பத் தருள்வெளி தானே. (௧௧)

வெளியில் வெளிபோய் விரவிய வாறு, மளியி னளிபோ யடங்கிய வாறு, மொளியி லொளிபோ யொடுங்கிய வாறுந், தெளியு மவரே சிவசித்தர் தாமே. (௧௨)

சித்தர் சிவலோக மிங்கே தரிசித்தோர், சத்தமுஞ் சத்த முடிவுந் தமிழ்கொண்டோர், சித்தர் நிமலர் நிராமயர் நின்பர முத்தர்த முத்தி முதன்முப்பத் தாறே. (௧௩)

முப்பது மாறும் படிமுத்தி யேணியா, மொப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச், செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந், தப்பரி சாக வமர்ந்திருந் தாரே. (௧௪)

இருந்தார் சிவமாகி யெங்குந் தாமாகி, யிருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி, யிருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங், கிருந்தா ரிழவுவந் தெய்திய சோம்பே. (௧௫)

சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே, சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே, சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ், சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டூக்கமே. (௧௬)

தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முள்ளே, தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முள்ளே, தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முள்ளே, தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. ( )

எவ்வாறு காண்பா னறிவு தனக்கெல்லை, யவ்வா றருட்செய்வா னாதியான் றானும், மவ்வாத மன்று ளனைகாண வாடுஞ் செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். (௧௮)

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய், மாணிக்கத் துள்ளே மரகத மாடமா, யாணிப்பொன் மன்றினி லாடுந் திருக்கூத்தைப், பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. (௧௯)

பெற்றுக் கிடைத்தரி யாப் பெருமைத்து, பெற்றுக் கிடைத்தற் கிறைவன் பெரும்பயன், பெற்றார் மந்திரத் தரியாப் பெறும்பேறு, பெற்ற குருவுடன் பேசாப் பெருமையே. (௨௰)

பெருமை சிறுமை யறிந்தெம் பிரான்போ, லருமை யெளிமை யறிந் தறிவாரா, ரொருமையு ளாமைபோ லுள்ளைந் தடக்கி யிருமையுங் கெட்டிருந் தார்புரை யற்றே. (௨௧)

புரையற்ற பாலினு ணெய்கலந் தாற்போற், றிரையற்ற சிந்தையு ளாரிய னென்செப்பு, முரையற் றுணர்வோ ருடம்பிங் கொழிந்தாற், கரையற்ற சோதி கலந்தசத் தாமே. (௨௨)

சத்த முதலைந்துந் தன்வழித் தான்சாரிற், சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ, சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரு, மத்த மிதுகுறித் தாண்டுகொ ளப்பிலே. (௨௩)

அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்மையா, லுப்பெனப் பேர்பெற் றுருச்செய்த வவ்வுரு, வப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற், செப்பினிற் சீவன் சிவத்து ளடங்குமே. (௨௪)

அடங்குபே ரண்டத் தணுவண்டஞ் சென்றங், கிடங்கொண்ட தில்லை யிதுவன்றி வேறுண்டோ, கடந்தொறு நின்ற வுயிர்கரை காணிற், றிடம்பெற நின்றான் றிருவடி தானே. (௨௫)

திருவடி யேசிவ மாவது தேரிற், றிருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கிற், றிருவடி யேசெல் கதியது செப்பிற், றிருவடி யேதஞ்ச முட்டெளி வார்க்கே. (௨௬)

தெளிவு குருவின் றிருமேனி காண்டல், றெளிவு குருவின் றிருநாமஞ் செப்பல், றெளிவு குருவின் றிருவார்த்தை கேட்டல், றெளிவு குருவுருச் சிந்தித்த றானே. (௨௭)

தானே புலனைந்துந் தன்வச மாயிடுந், தானே புலனைந்துந் தன்வசம் போயிடுந், தானே புலனைந்துந் தன்னில் மடைமாறுந், தானே தனித்தெம் பிரான்றனைச் சந்தித்தே. (௨௮)

சந்திப்பது நந்திதன் றிருத் தாளிணை, சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி, வந்திப்பது நந்தி நாமமே வாய்மையாற், புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே. (௨௯)

போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப், போதத்தினில்



வைத்துப் புண்ணிய ராயினார், நாத னடைந்தா னையானங் கனிக, வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே. (௩௰)

ஆ. ௱௪௨.

யாக்கை நிலையாமை.

மண்ணொன்று கண்டீ ரிருவினைப் பாத்திரந், திண்ணென் றிருந்தது தீவினைச் சேர்ந்தது, விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போ, லெண்ணின்றி மாந்த ரிறக்கின்ற வாறே. (க)

பண்டம்பெய் கூரை பழகி விழுதலு, முண்டவர் பெண்டிரு மக்களும் பின்செல்லார், கொண்ட விரதமு ஞானமு மல்லது, மண்டி யவருடன் வழிநட வாதே. (௨)

ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிட்டுப், பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச், சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு, நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. (௩)

காலு மிரண்டு முகட்டல கொன்றுள, பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள, மேலுள கூரை பிரியும் பிரிந்தபின், போகுயிர் மீளப் புகவறி யாதே. (௪)

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற, வாக்கை பிரிந்த வலகு பழுத்தது, மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க், காக்கைக்குப் பலி காட்டிய வாறே. (௫)

அடப்பண்ணி வைத்தா ரடிசிலை யுண்டார், மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டா, ரிடப்பக்க மேயிறை நொந்ததே யென்றார், கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. (௬)

மன்றத்தே நம்பி மாடமெடுத்தது, மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான், மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினன், சென்றத்தா வென்னத் திரிந்திலன் றானே. (௭)

வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி, நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை, யாசந்தி மேல்வைத் தமைய வழுதிட்டுப், பாசந்தி கட்டுப் பலியட்டி னார்களே. (௮)

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற, நெய்பட்டுச் சோறுண்ணு மைவரும் போயினார், மையிட்ட கண்ணாளு மாடு மிருக்கவே, மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. (௯)

பந்தற் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற, ஒன்பது வாசலு மொக்க வடைந்தன, தன்புறு காலந் துரிசவர் மேன்மே, லன்புடை யார்க ளழுதகன் றார்களே. (௧௦)

நாட்டுக்கு நாயக னம்மூர்த் தலைமகன், காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை, நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட, நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. (௧௧)

முப்பது முப்பது முப்பத் தறுவருஞ், செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர், செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின், ஒக்க வனைவரு மோட்டெடுத் தாரே. (௧௨)

மதுவூர் குழலியு மாடு மனையு, மிதுவூ ரொழிய விமான மேறிப், பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி, மதுவூர் வாங்கியே வைத்தகன் றார்களே. (௧௩)

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்க, ளச்சக லாதென நாடு மரும்பொருள், விச்சது வாயின் றொடர்வுறு மற்றவ, ரெச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. (௧௪)

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரு மக்களும், ஊர்த்துறை காலை யொழிவா ரொழிந்தபின், வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி, நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. (௧௫)

வளத்திடை முற்றத்தோர் மாநில முற்றுங், குளத்தின்மண் கொண்டு குயவன் வனைந்தால், குடமுடைந் தாலவை யோடென் றுவைப்ப, ருடலிறந் தாலிவைப் போதவை யாரே. ( )

ஐந்து தலைப்பறி யாறு சடையுள, சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப், பந்தலு மொன்பது பந்தி பதினைந்து, வெந்து கிடந்தது மேலறி யோமே. (௧௭)

அத்திப் பழமு மறைக்கீரை நல்வித்துங், கொத்தி யுலைப்பெய்து கூழட்டு வைத்தன, ரத்திப் பழத்தை யறைக்கீரை வித்தை துன்னக், கருத்தி யெடுத்தவர் காடுபுக் காரே. (௧௮)



மேலு முகட்டில்லை கீழும் வடிம்பில்லை, காலு மிரண்டு முகட்டல கொன்றுண்டு, வோலையான் மேய்ந்தவா யூடு வரியாமை, வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே (௧௯)

கூடங் கிடந்தது கோலங்க ளிங்கில்லை, யாடு மிலையமு மற்றன தறுதலும், பாடுகின் றார்சிலர் பண்ணை யழுதிட்டுத், தேடியே தீயினிற் றீயவைத் தார்களே. (௨௦)

முட்டை பிறந்தது முந்நூறு நாளினி, லிட்டது தானிலை யேதேனு மேழைகாள், பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற், கெட்ட தெழுபதிற் கேடறி யீரே. (௨௧)

இடிஞ்சி லிருக்க விளக்கெரி கொண்டான், முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர், விடிஞ்சிரு ளாவ தறியா வுலகம், படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. (௨௨)

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த, வுடலு முயிரு முருவந் தொழாம, லிடர்பட் டார்ந்தேழா நசித்திடப் பட்டுக், குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே. (௨௩)

குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண், டிடையுங் காலமிருந் து நடுவே, புடையு மனிதரும் போகும் போதே, யடையு மிடம்வல மாருயி ராமே. (௨௪)

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென், பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென், தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங், கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே. (௨௫)

அ. ௧௧.

---

செல்வ நிலையாமை.

அருளு மரசனு மானையுந் தேருர், பொருளும் பிறர்கொளப் போவதன் முன்னந், தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரின், மருளும் பிணையுமல் மாதவ மன்றே. (௧)

இயக்குறு திங்க ளிருட்பிழம் பொக்குந், துயக்குறுஞ் செல்வத்தைச் சொல்லவும் வேண்டா, மயக்கற நாடுமின் வானவர் கோனைப், பெயற்கொண்டல் பாலப் பெருஞ் செல்வ மாமே. (உ)

தன்னது சாயை தனக்குத வாதுகண், டென்னது மாடென் றிருப்பார்க ளேழைக, ளுன்னுயிர் போமுட லொக்கப் பிறந்தது, கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. (ந)

ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமுங், கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடு, மோட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக், காட்டிக் கொடுத்தவை கைவிட்ட வாறே. (ச)

தேற்றத் தெளிமின் றெளிந்தீர் கலங்கன்மி, னாற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே, மாற்றிக் களைவீர் மறித்துங்கள் செல்வத்தைக், கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே. (ரு)

மகிழ்கின்ற செல்வமு மாடு முடனே, கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போ, லவிழ்கின்ற வாக்கைக்கோர் வீடுபே றாகச், சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே. (சா)

வாழ்வு மனைவியு மக்க ளுடன்பிறந், தாரு மளவே துணைக்கொண்ட வொண்பொருண், மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக், கூவுந் துணையொன்று கூறலு மாமே. (எ)

வேட்கை மிகுத்தது மெய்கொள்வா ரிங்கில்லை, பூட்டுந் தறியொன்று போம்வழி யொன்பது, நாட்டிய தாய்தமர் வந்து வளைந்தபின், காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. (அ)

உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது, வடும்பரி சொன்றில்லை யண்ணலை யெண்ணும், விடும்பரி சாய்நின்ற மெய்நமன் றூதர், கடும்பரி சத்தையுங் கூழைசெய் யாரே. (கூ) ஆ. கஎக.

---

## இளமை நிலையாமை.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே, விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர், குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில், விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. (க)



ஆண்டு பலவுங் கழிந்தன வப்பனைப், பூண்டுகொண் டாரும் புகுந்தறி வாரில்லை, நீண்டன காலங்க ணீண்டு கொடுக்கினுந், தூண்டு விளக்கின் சுடரறி யார்களே. (உ)

தேய்ந்தற் றொழிந்த விளமை கடைமுறை, யாய்ந்தற்ற பின்னை யரிய கருமங்கள், பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை, யோர்ந்துற்றுக் கொள்ளு முயிருள்ள போதே. (ந)

விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர், கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போ, லரும்பொத்த மென்முலை யாயிழை யார்க்குக், கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத் தேனே. (ச)

பால னிளையன் விருத்த னெனநின்ற, காலங் கழிவன கண்டு மறிகிலார், ஞாலங் கடந்தண்ட மூடறுத் தானடி, மேலுங் கிடந்து விரும்புவ னானே. (ரு)

காலை யெழுந்தவர் நித்தலு நித்தலு, மாலை படுவதும் வாழ்நாட் கழிவது, சாலுமவ் வீசன் சலவிய னாகிலு, மேலு நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. (சா)

பருவூசி யைந்துமோர் பையினுள் வாழும், பருவூசி யைந்து பறக்கும் விருகம், பருவூசி யைந்தும் பனித்தலைப் பட்டாற், பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே. (எ)

கண்ணது காய்கதி ரோனு முலகினை, யுண்ணின் றளக்கின்ற தொன்று மறிகிலார், விண்ணுறு வாரையும் வினையுறு வாரையு, மெண்ணுறு முப்பதி லீர்ந்தொழிந் தாரே. (அ)

ஒன்றிய வீரெண் கலையு முடனுறை, நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள், கன்றிய காலன் கருக்குழி வைத்தபின், சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. (கூ)

எய்திய நாளி லிளமை கழியாமை, பெய்திய நாளி லினைமி னேத்துமி, னெய்திய நாளி லெறிவ தறியாம, லெய்திய நாளி லிருந்துகண் டேனே. (கo) ஆ. கஎஉ.

---

## உயிர் நிலையாமை.

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பு, விழைக்கின்ற தெல்லா மிறக்கின்ற கண்டும், பிழைப்பின்றி யெம்பெரு மானடி யேத்தா, ரழைக்கின்ற போதறி யாரவர் தாமே. (௧)

ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது, மைவரு மச்செய்யைக் காத்து வருவர்கள், ஐவர்க்கு நாயக னோலை வருதலால், மைவரு மச்செய்யைக் காவல்விட் டாரே. (௨)

மத்தளி யொன்றுள தாள மிரண்டுள, வத்துள்ளே வாழு மரசரு மஞ்சுள, வத்துள்ளே வாழு மரசன் புறப்பட்டான், மத்தளி மன்னும் மயங்கிய வாறே. (௩)

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை, வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை, வேங்கட மென்றே விரகறி யாதவர், தாங்கவல் லாருயிர் தானறி யாரே. (௪)

சென்றுணர் வான்றிசை பத்துந் திவாகரன், அன்றுணர் வாளக் கின்ற தறிகிலர், நின்றுணர் வாரிந் நிலத்தின் மனிதர்கள், பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. (௫)

மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை. பேறு மதனைப் பெரிதுணர்ந் தாரில்லை, கூறுங் கருமயிர் வெண்மயி ராவது, மீறும் பிறப்புமோ ராண்டெனு நீரே. (௬)

துடுப்பிடு பானைக்கு மொன்றே யரிசி, யடுப்பிடு மூன்றிற்கு மஞ்சரி கொள்ளி, யடுத்தெரி யாமற் கொடுமின் னரிசி, விடுத்தன நாட்களு மேற்சென் றனவே. (௭)

இன்புறு வண்டின் கிளமலர் மேற்போ, யுன்புறு வாசம துபோ லுயிர்நிலை, யின்புற நாடி நினைக்கிலு மன்னொருவன், கண்புற நின்ற கருத்துணில் லானே. (௮)

ஆம்விதி நாடி யறஞ்செய்மி னந்நிலம், போம்விதி நாடிப் புலிதனைப் போற்றுமின், நாம்விதி வேண்டுமென் றெண்சொல்லின் மாணுட, ராம்விதி பெற்ற வருமைவல் லார்க்கே. (௯)



அவ்வியம் பேசி யறங்கெட நில்லன்மின், வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின், செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு, தவ்விக்கொ டுண்மின் றலைப்பட்ட போதே. (௰)
ஆ ௧௧௯.

---

## கொல்லாமை.

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர், மற்றோ ரணுக்களைக் கொல்லாமை யொண்மலர், நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமு, முற்றுரு மாவி யமர்ந்திட மூர்த்தியே. (௧)

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை, வல்லிடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச், செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை, நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே. (௨) ஆ ௧௨௧.

---

## புலால் மறுத்தல்.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை, யெல்லாருங் காண வியமன்றன் றூதுவர், செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின், மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. (௧)

கொலையே களவுகட் காமம்பொய் கூறல், மலையான பாதக மாமவை நீக்கித், தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க், கிலையா மிவைஞானா னந்தத் திருத்தலே. (௨) ஆ ௧௨௩.

---

## பிறர்மனை நயவாமை.

ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே, காத்த மனையாளைக் காமுறுங் காளையர், காய்த்த பலாவின் கனியுண்ண மாட்டாமல், ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. (௧)

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை, யருத்தமென் றெண்ணி யறையிற் புதைத்துப், பொருத்த மிலாத புளிமாங் கொம்பேறிக், கருத்தறி யாதவர் காலற்ற வாறே. (௨)

பொருள்கொண்ட கண்டனும் போதகை யாளு, மிருள்கொ

ண்டமின் வெளிசொண்டுநின் றேரும், மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள், மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.

ஆ. ௨௱௩.

---

## மகளிரிழிவு.

இலைநல்ல வாயினு மெட்டி பழுத்தாற், குலைநல வாங்கனி கொண்டுண லாகா, முலைநலங் கொண்டு முறுவல்செய் வாரோல், விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. (௧)

மனைபுகு வார்கண் மனைவியை நாடிற், சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங், கனவது போலக் கசிந்தெழு மின்பம், நனவது போலவு நாடவொண் ணாதே. (௨)

இயலுறும் வாழ்க்கை யிளம்பிடி மாதர், புயலுறும் புல்லிற் புணர்ந்தவ ரேனும், மயலுறும் வானவர் சார விருமென்பா ரயலுறப் பேசி யகன்றொழிந் தாரே. (௩)

வையகத் தேமட வாரொடுங் கூடிபெண், மெய்யகத் தோருழை வைத்த விதியது, கையகத் தேகரும் பாலையின் சாறுகொண், டெய்யகத் தேபொரும் பாம்பது வாமே. (௪)

கோழை யொழுக்கங் குளமூடு பாசியி, லாழ நினையா ரனைப்புறு வார்களைத், தாழத் தடக்கித் தடுக்ககில் லாவிடிற், பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. (௫) ஆ. ௨௱௮

---

## நல்குரவு.

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை, யடையப்பட் டார்களு மன்பில ரானார், கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை, நடையில்லை நாட்டி லியங்குகின் றார்கட்கே.

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலர்தொறு, நக்குழி தூர்க்கு மருப்பண்டந் தேடுவீ, ரக்குழி தூர்த்து மிறைவனை யேத்துமி, னெக்குழி தூரு மழுக்கற்ற போதே. (௨)

கற்குழி தூரக் கனகமுந் தேடுவ, ரக்குழி தூர்க்கை யாவ



ர்க்கு மரியது, வக்குழி தூர்க்கு மறிவை யறிந்தபி, னக்குழி தூரு மழுக்கற்ற வாறே. (௩)

தொடர்ந்தெழுஞ் சுற்றம் வினையினுந் தீய, கடந்ததோ ராவி கழிவதன் முன்னே, யுடைந்தொரு காலத் துணர்விளக் கேற்றித், தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. (௪)

அறுத்தன வாறினு மாவின மேவி, யறுத்தன னைவரு மவ்வினை துன்ப, மொறுத்தன வல்வினை பொன்றுநல் வாழ்வை, வெறுத்தன னீசனை மேவண்டி நின்றேனே. (௫) ஆ. ௨௱௧௩

---

## அக்கினிகாரியம்.

வசையில் விழுப்பொருள் வானு நிலனுந், திசையுந் திசைபெறு தேவர் குழாமும், விசையம் பெருகிய வேத முதலா, மசைவிலா வந்தண ராகுதி வேட்கிலே. (௧)

ஆகுதி வேட்கு மருமறை யந்தணர், போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர், காம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி தாமறி வாலே தலைப்படு வாரே. (௨)

அணைதுணை யந்தண ரங்கி யளங்கி, அணைதுணை வைத்தனை யூட்டொரு ஞான, வினைதுணை யாழத் தயங்கும் பொழுதே, துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. (௩)

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு, மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந், தாதிரண் டாகிய தண்ணம் பரவைகள், ஓதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. (௪)

கொங்கின் றெரிய நெடுஞ்சுட ரோசென்று, வங்கின் றெரியும் வகையறி வார்கட்கு, மைங்கின் றவிழ்கரு மத்தின்மர பென்றுஞ், செய்கின்ற செல்வ மதியது வாமே. (௫)

பாழி யகலு மெரியுந் திரிபோலும், மூழி யகலு முறுவினை நோய்பல, வாழிசெய் தங்கி யுதிக்க வலைவிழும், வீழிசெய் தங்கி வினைகெடு மாமே. (௬)

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த, வருஞ்
செல்வந் தந்த தலைவனை நாடிர், வருஞ்செல்வத் தின்பம் வரவி
ருந் தெண்ணி, யருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே. (எ)

இச்சுட ராலே யுலப்பிலி நாதனை, யொண்சுட ராகியென்
னுள்ளத் திருக்கின்ற, கட்சுட ரோனுல கேழுங் கடந்தவன், த
ண்சுட ரோமத் தலைவனு மாமே. (அ)

ஓமத்து ளங்கியி லுள்ளானெம் மிறை, யிமத்து ளங்கி யி
ரதங்கொள் வானுமான், வேமத்து ளங்கி விளைவு வினைக்கடற்,
கோமத்து ளங்கி குரைகட லானே. (கூ)

அங்கி நிறுத்து மருந்தவ ராரணர், தங்கி யிருக்கும் வகை
யாறுள் செய்தவ, ரொங்கு நிறுத்தி யிளைப்பப் பெரும்பதி, யொங்
கி நிறுத்தும் புகழது மாமே. (க0) ஆ. உஉங

## அந்தணரொழுக்கம்.

அந்தண ராவோ ரறுதொழிற் பூண்டுளோர், செந்தழ
லோம்பிமுப் போது நியமஞ்செய், தந்தவ நற்கரு மத்துநின்
றங்கிட்டுச், சந்தியு மோதிச் சடங்கறுப் போர்களே. (க)

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப், போதாந்த
மான பிரணவத் துள்புக்கு, நாதாந்த வேதாந்த போதாந்த நா
தனை, யீதா மெனாதுகண் டின்புறு வோர்களே. (உ)

காயத் திரியே கருது சாவித்திரி, யாய்தற் குவப்பர் மந்
திர மாங்குன்னி, நேயத்தே ரோதி நினைவுற்று நேயத்தாய், மா
யத்துட் டோயா மறையோர்க ளாமே. (ங)

பெருநெறி யான பிரணவ மோர்ந்து, குருநெறி யாலுரை
கூடி நால் வேதத், திருநெறி யான திரிகை யிருந்திச், சொரூப
ம தானோர் துகளில்பார்ப் பாரே. (ச)

சத்திய முந்தவத் தானவ னுருவம், மெய்த்தகு மிந்திய மீ
ட்டியே வாட்டலு, மொத்த வுயிர்நட் டுண்டாக, புணர்வுற்றுப்
பெத்த மறுத்தலு மாகும் பிரமமே. (ரு)



வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர், வேதாந்தங் கே
ட்டுந்தம் வேட்கை யொழிந்திலர், வேதாந்த மாவது வேட்கை
யொழிந்திடம், வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. ()

நூலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ, நூலது கார்ப்பாச நு
ண்சிகை கேசமாம், நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்,
நூலுடை யந்தணர் காணு நுவலிலே. (எ)

சத்திய மின்றித் தனிஞானந் தானின்றி, யொத்த விடை
யம்விட் டோரு முணர்வின்றிப், பத்தியு மின்றிப் பரனுண்மை
யின்றியூண், பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே. (அ)

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக், குருநெறி யாலே கு
ருபதஞ் சேர்ந்து, கரும நியமாதி கைவிட்டுக் காணுந், அரிபச்
சமாதியாந் தூய்மறை யோர்க்கே. (கூ)

மறையோ ரவரே மறையவ ரானால், மறையோர்தம் வே
தாந்த வாய்மையிற் றூய்மை, குறையோர்தல் மற்றுள்ள கோ
லர் சலமென், றறிவோர் மறைநெறி யந்தண ராமே. (க0)

அந்தண்மை பூண்ட வருமறை யந்தத்துச், சிந்தைசெய்
யந்தணர் சேருஞ் செழும்புவி, நந்தாத வில்லை நரபதி நன்
று, மந்தியுஞ் சந்தியு மாகுதி பண்ணுமே. (கக)

வேதாந்த ஞானம் விளங்கு விதியிலோர், நாதாந்த போ
த நணுகிய போகத்துப், போதாந்த மாம்பரன் பாற்புகப் பு
க்கதால், நாதாந்த முத்தியுஞ் சித்தியு நண்ணுமே. (கஉ)

ஒன்று மிரண்டு மொடுங்கிய காலத்து, நன்று மிருந்து ந
லம்பல பேசினும், வென்று விளங்கும் விகிர்தனை நாடியர், செ
ன்று வணங்குந் திருவுடை யோரே. (கங)

தானே விடும்பற் றிரண்டுங் கரித்திடத், தானே விடப்ப
டுமேதொன்றை நாடாது, பூவேவு நான்முகன் புண்ணிய போ
கனு, யோமேவு மோமா குதியவி யுண்ணவே. (கச) ஆ. உஙஎ.

## இராசதோடம்.

கல்லா வரசனுங் காலனு நேரொக்குங், கல்லா வரசனிற் காலன் மிகநல்லன், கல்லா வரச னறமோரான் கொல்லென் பான், நல்லாரைக் கால னணுககி லானே. (க)

நாடொறு மன்னவ னாட்டிற் றவநெறி, நாடொறு நாடி யவனெறி நாடானேல், நாடொறு நாடு கெடுமுட னண்ணு, நாடொறுஞ் செல்வ நரபதி குன்றுமே. (உ)

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன், வேட நெறிநிற்போர் வேடமெய் வேடம், வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன், வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. ()

மூடங் கெடாதோர் சிகைநூன் முதற்கொள்ளில், வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும், பீடொன் றிலவாகு மாதலாற் பேர்த்துணர்ந், தாடம் பரநூற் சிகையறுத் தானன்றே. (௪)

ஞான மிலாதார் சடைசிகை நூனண்ணி, ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை, ஞானிக ளாலே நரபதி சோதித்து, ஞான முண்டாக்குத னலமாகு நாட்டிற்கே. (௫)

ஆவையும் பாவையு மற்றற வோரையுந், தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங், காவலன் காப்பவன் காவா தொழிவனேன், மேவு மறுமைக்கு மீளா நரகமே. (௬)

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின், மறந்து மநெறி பேயாற்றல் வேண்டுஞ், சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் மறையவர், மறைந்திடல் வேந்தனுக் காற்றலான் முற்றே. (௭)

வேந்த னுலகை மிகநன்று காப்பது, வாய்ந்த மனிதர்க ளவ்வழி யாநிற்பர், பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப், பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. (௮)

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப், பால்கொண்டு சோமன் முகம்பற்றி யுண்ணாதோர், மால்கொண்டு தேற லுண்ணு மருளரை, மேற்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. (௯)



சாத்திரஞ் சமயத் தகுதியில் லாதாரை, யத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி, யெத்தண் டமுஞ்செயு மம்மையி லிம்மைக்கே, மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. (௧௦)

ஆ. உசஎ.

---

## வான்சிறப்பு.

அமுதூறு மாமழை நீர தனாலே, யமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங், கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை, யமுதூறுங் காஞ்சிரை யாங்கசப் பாமே. (க)

வரையிடை நின்றிழி வானீ ரருவி, யுரையில்லை யுள்ளத் தகத்துநின் றூறு, நுரையில்லை மாசில்லை நுண்ணிதத் தெண்ணீர்க், கரையில்லை யெந்தைக் கழுமணி யாறே. (உ) ஆ. உசகூ.

---

## தானச்சிறப்பு.

ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின், பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின், வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின், காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே. (க) ஆ. உருo.

---

## இரந்தார்க் கீதல்.

தாமறி வாரண்ண றாள்பணி வாரவர், தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர், தாமறி வார்சில தத்துவ ராவர்கள், தாமறி வார்க்குத் தமர்பர னாமே. (க)

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை, யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை, யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி, யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. (உ)

அற்றுநின் றாருண்ணு மூணே யறனென்னுங், கற்றன போதங் கமழ்பவர் மானுட, ருற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தி, னீற்றப் புணரியந் தன்னும் பயனறி யாரே. (௩)

அழுக்கினை யோட்டி யறிவை நினைமின், இழுக்கின்றி நாளிற்
றருமமுஞ் செய்மின், விழித்திருந் தென்செய்தீர் வெம்மை பரந்
து, விழிக்கவன் றென்செய்வீ ரேழைநெஞ் சீரே. (௪)

தன்னை யறியாது தானல்ல னென்னுந், தன்மை யறியா
திளைய னென் றோராது, வண்ணை யில் வந்திடுங் கூற்றம் வருமுன்
னந், நின்னை யுநல்ல தவஞ்செய்யு நீரே. (௫)

அறந்தான் வழிமைக்குச் சுற்றமு மில்லை, பிறந்தான் வழிமு
றை யின்பமு மில்லை, மறந்தவன் வழிமுதல் வந்திலன் மீச, வறந்
தா னறியு மளவறி வாரே. (௬)

தான தவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி, மானிடர்
ம்ப மாக மதிக்கு மலிதர, ஞானத் தெய்வ மாக வுயிர்க்கின்ற வ
ழி, நான்றெய்வ மென்று நமனவரு வானே. (௭)

திளைக்கும் வினைக்கட் டீர்வுறு தோணி, யிளைப்பினை நீக்
கு மிருவழி யுண்டு, கிளைக்குந் தனக்குமக் கேடில் புகழோன்,
விளைக்குந் தவமற மேற்றுணை யாமே. (௮)

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மினோ, பற்றது முறைய
னை நெறிக் கல்லது, பற்றுமங் கொன்று [illegible],
பற்றவன் வைத்த வழிகொண்டு மாறே. (௯) ஆ. ௨௩

---

அறஞ்செயான்திறம்.

எட்டி பழுத்த விருங்கனி வீழ்ந்தன்ன, வொட்டிய நல்லற
ஞ் செய்யா தவர்செல்வம், வட்டிகொண் டீட்டியே மண்ணி
ன் முகந்திட்டுப், பட்டிப் பதகர் பயனறி யாரே. (௧)

ஒழிந்தன காலங்க ளூழியும் போயின, கழிந்தன கற்பனை
நாளுங் குறுகிப், பிழிந்தது போலத்தம் பேரிடர் யாக்கை, யழி
ந்தது கண்டு மறமறி யாரே. (௨)

அறமறி யாரண்ணல் பாத நினையுந், திறமறி யார்சிவ லோ
க நகர்க்குப், புறமறி யார்பலர் பொய்மொழி கேட்டு, மறமறி
வார்பகை மன்னிநின் றாரே. (௩)



இருமலுஞ் சோகையு மீளையும் வெப்புந், தருமஞ்செய்யா
தவர் தம்பால தாகு, முருமிடி நாக முரோணி கழலைத், தரும
ஞ் செய்வார்பக்கற் றழுகி லாவே. (௪)

பரவப் படுவார் பரமனை யேத்தா, ரிரவலர்க் கீதலை யாயி
னு மீயார், கரகத்தே நீராட்டிக் காவை வளர்க்கார், நரகத்தி
னிற்றிரோ நன்னெஞ்சி னீரே. (௫)

வழிநடப் பாரின்றி வானோ ருலகங், கழிநடப் பார்நடந்
தார்கரும் பாரு, மழிநடக் கும்வினை மாசற வோட்டிட், டொ
ழிநடப் பார்வினை யோங்கிநின் றாரே. (௬)

கனிந்தவ ரீசன் கழலடி காண்பர், துணிந்தவ ரீசன் றுற
க்கம தாள்வர், மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி, மெ
லிந்த சினத்துளே வீழ்ந்தொழிந் தாரே. (௭)

இன்ப மிடரென் றிரண்டுற வைத்தது, முன்பவர் செய்
கையி லேமுடிந் தது, வின்பமது கண்டு மீகலாய்ப் பேதைக,
ளன்பிலார் சிந்தை யறமறி யாரே. (௮)

கெடுவது மாவதுங் கேடில் புகழோ, னடுவல்ல செய்தின்
பநாட்ட வொட்டா, விடுவது மீவது மெண்ணுமி னின்பம், ப
டுவது செய்யிற் படுவது வாமே. (௯)

செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும், புல்லறி வாளரை
ப் போற்றிப் புலம்பாதே, யில்லங் கருதி யிறைவனை யேத்துமின்,
வில்லிற வெய்த விற்குறி யாமே. (௰) ஆ. ௨௯

---

அன்புடைமை.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா, ரன்பே சிவமா
வ தாரு மறிகிலா, ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி, னன்பே சி
வமா யமர்ந்திருந் தாரே. (௧)

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன், மின்னிக்
கிடந்து மிளிரு மிளம்பிறை, துன்னிக் கிடந்த சுடுபொடி யாடி
க்குப், பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. (௨)

என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப், பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு, மன்போ லுருகி யகங்குழை வார்க்கன்றி, யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே. (௩)

ஆர்வ முடையவர் காண்ப ரரன்றன்னை, யீர முடையவர் காண்ப ரிணையடி, பார முடையவர் காண்பார் பவந்தன்னைச், சோர நெருக்கொடு கொங்குபுக் காரே. (௪)

என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின், முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின், பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந், தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. (௫)

தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும், வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந், தேனொரு பாற்றிகழ் கொன்றை யணிசிவன், றானொரு வண்ணமெ னன்பினின் றானே. (௬)

முன்படைத் தின்பம் படைத்த முதல்வனை, யன்படைத் தெம்பெரு மானை யறிகிலார், வன்படைத் திந்த வகலிடம் வாழ்கின்றி, லன்படைத் தான்ற னகலிடந் தானே. (௭)

கருத்துறு செம்பொன்செய் காயத்திற் சோதி, யிருத்தியும் வைத்து மிறைவனென் றேத்தியு, மருத்தியு ளீசனை யாருரு யோர்மடல், விருத்தி கொடுத்திடு விண்ணவர் கோனே. (௮)

நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன், வைத்த பரிசறிந் தேயு மனிதர்க, ளிச்சையுளே வைப்ப வெந்தை பிரானென்று நச்சியே யன்னமை நாடுகின் றாரே. (௯)

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான், முன்பினுள் ளானொரு முனிவர்க்கும் பிரானவ, னன்பினுள் ளாகி யமரு மரும்பொரு ளன்பினுள் ளார்க்கே யணுகலு மாமே. (௧௦) ஆ. ௨௭௯.

---

அன்புசெய்வாரை யறிவன் சிவன்.

இகழ்ந்ததும் பெற்றது மீச னறியு, முகந்தருள் செய்திடு முத்தம நாதனைத், தொழுந்தன்பு செய்தருள் கூடவல் லார்க்கு, மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. (௧)



இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன், றுன்பப் பிறவித் தொழில்பல வென்னினு, மன்பிற் கலவிசெய் தாதிப் பிரானவைத்த, முன்பப் பிறவி முடிவது தானே. (௨)

அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி, யின்புறு கன்னியொ டேற விசைந்தன, துன்புறு கன்னியைக் கூடுந் துடக்கற்று, நன்புறு சிந்தையை நாடுமி னீரே. (௩)

புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல, வுணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்குக், குணர்ச்சி யில்லாது குலாவி யுலாவி, யணைந்தது மின்ப மதுவிது வாமே. (௪)

உற்றுநின் றாரொடு மத்தரு சோதியைச், சித்தர்க ளென்றுந் தெரிந்தறி வாரில்லை, பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ, முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே. (௫)

கண்டேன் கமழ்தரு கொன்றையி னானடி, கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை, கண்டேன் கமல மலருறை வானடி, கண்டேன் கழலதெ னன்பினுள் ளானே. (௬)

நம்பனை நாதனை நற்பொரு ளாகுமொன், றும்பரில் வானவ ரோதுந் தலைவனை, யின்பனை யின்பத் திடைநின் றிடுங்கு, மன்பனை யாரு மறியகி லாரே. (௭)

முன்பு பிறப்பு மிறப்பு மறியாதா, ரன்பி லிறைவனை யம்பி யோமென்ப, ரின்பப் பிறப்பு மிறப்பு மிலாதது, மன்பி லவனை யறியகி லாரே. (௮)

ஈச னறியு மிராப்பகலுந் தன்னைப், பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத், தேசுற் றறிந்து செயலற் றிருந்திடி, னீசன்வந் தெம்மிடை யீட்டிநின் றானே. (௯)

விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத், தொட்டுத் தொடர்வன் றலையாப் பெருமையை, யெட்டுமென் னாருயி ராயிநின்ற வீசனை, மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. (௧௦)

ஆ. ௨௮௯

## கல்வி.

குறிப்பறிந் தேனுட லுயிரது கூடிச், செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை, மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான், சறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே. (௧)

கற்றறி வாளர் கருதிய காலத்துக், கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு, கற்றறி வாளர் கருதி யுரைசெய்யுங், கற்றறி காட்டக் கயலுள வாக்குமே. (௨)

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழற், கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள், சொற்குன்ற லின்றித் தொழுமின் றொழுதபின், மற்றொன் றிலாத மணிவிளக் காமே. (௩)

கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார், பல்லி யுடையார் பாம்பரிந் துண்கின்றார், சொல்லியுங் காலையு மேத்து மிறைவனை, வல்லியுள் வாதித்த காயமு மாமே. (௪)

துணையது வாய்வருந் தூயநற் சோதி, துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந், துணையது வாய்வருந் தூயமலர்க் கந்தந், துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. (௫)

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார், பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங், கோலொன்று பற்றினாற் கூடாப் பறவைகண், மாலொன்று பற்றி மயங்குகின் றாரே. (௬)

ஆய்ந்துகொள் வார்க்கர னங்கே வெளிப்படுந், தோய்ந்த பெருப்பது தூய்மணி சிந்திடு, மேய்ந்த விளமதி யெட்டவல் லார்கட்கு, வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே. (௭)

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன், கழித்துணை யாக்கற் றிலாதவர் சிந்தை, பொழித்துணை யாமும் பர்முல சேரும், வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. (௮)

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின், முற்றது வெல்லா முதல்வ னருள்பெறிற், கிற்றெனின் மற்றிக் கிளரொளி வானவர், கற்றவர் பேரின்ப முற்றுநின் றாரே. (௯)



கடலிடை யான்மலை யானைந்து பூதத், துடலிடை யான்பல வூழிதொ றூழி, யடல்விடை யேறு மமரர்க ணாத, னிடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. (௧௦) ஆ. ௨௧௧.

---

## கேள்விகேட்டமைதல்.

அறங்கேட்டு மந்தண ராய்மொழி கேட்டு, மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும், புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் மீசன், றிறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. (௧)

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை, யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின், ஓதுமின் கேண்மி னுணர்மி னுணர்ந்தபின், ஓதி யுணர்ந்தவ ரோங்கிநின் றாரே. (௨)

மயன்பணி கேட்பது மாகந்தி கேட்டி, னயன்பணி கேட்ப தரன்பணி யாலே, சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர், பயன்பணி கேட்பது பற்றது வாமே. (௩)

பெருமா லிவனென்று பேசி யிருக்குந், திருமா னுடர்பின்னைத் தேவரு மாவ, ரருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யு, மருமா தவத்தெங்க ளாதிப் பிரானே. (௪)

ஈச னருளும் பிறப்பும் பிறப்பையும், பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி, நேசமு மாகு நிகழொளி யாய்நின்று, வாச மலர்க்கந்த மன்னிநின் றானே. (௫)

விழுப்பங் கெழுமிய மெய்ந்நின்ற ஞானத், தொழுக்கமுஞ் சிந்தை யுணர்கின்ற போது, வழுக்கி விடாவிடில் வானவர் கோனு, மிழுக்கின்றி யெண்ணிலி காலம தாமே. (௬)

சிறியார் மணற்சோற்றிற் றேக்கிடு மாபோற், செறிவா லனுபோகஞ் சித்திக்கு மென்னிற், குறியாத தொன்றைக் குறியா தார்தம்மை, யறியா திருந்தா ரவரா வரன்றே. (௭)

உறுதுணை யாவ துயிரு முடம்பு, முறுதுணை யாவ துலகுறு

கேள்வி, நெறிநினை யாவது சிவனடிச் சேர்கை, நெறிநினை கேட்கிற் பிறப்பில்லை தானே. (௮)

புகழநின் றார்க்கும் புராணனெம் மீச, னிகழநின் றார்க்கு மிடும்பைக் கிடமா, மகிழநின் றாதியை யோதி யுணராக், கழியநின் றார்க்கொரு கற்பக வாமே. (௯)

வைத்துணர்ந் தானைத் தோடும்வாய் பேசி, யொத்துணர்ந் தானுரு வொப்பிலொருவனை யச்சமுன் றவணிக ளங்கினு மாதிலை, நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே. (௧௰)

ஆ. ௩௱௬.

---

கல்லாமை.

கல்லா தவருங் கருத்தறி காட்சியை, வல்லா ரெவிலருட் கண்ணான் மதித்துளோர், கல்லாதா ருண்மைபற் றுநிற்பர் கற்றோருங், கல்லாதார் பேரின்பங் காணுகி லாரே. (௧)

வல்லார்க ளென்றும் வழியொன்றி வாழ்கின்ற, ரல்லாரு வர்களறிவு பலவென்பா, ரெல்லா விடத்து முளனெங்க ளெம்பிறை, கல்லா தவர்கள் கலப்பறி யாரே. (௨)

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து, நில்லாக் குரம்பை நிலையென் றுணர்ந்தீர்கா, ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங், கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே. (௩)

கில்லேன் வினைத்துய ரங்கு மயலானேன், கல்லேன் வசனெறி யறியாத் தகைமையின், வல்லேன் வழங்கும் பொருளேமனத்திருட், கல்லேன் கழியநின் றாடவல் லேனே. (௪)

நில்லாது சீவ னிலையன் றெனவெண்ணி, வல்லார் நெறித்துச் சிவத்துரை மாயிருர், கல்லா மனிதர் கயவ ருலகினிற், பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே. (௫)

விண்ணினி லுள்ளே விளைந்த விளக்கனி, கண்ணினி லுள்ளே கலந்தங் கிருந்தது, மண்ணினி லுள்ளே மதித்து மதித்தறி



ன், றெண்ணினி லுள்ளே யிளைத்துவிட் டாரே. (௬)

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது, கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி, கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங், கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. (௭)

கல்லாத மூடரைக் காணவு மாகாது, கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று, கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங், கல்லாத மூடர் கருத்தறி யாரே. (௮)

கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள், சுற்றமும் வீடார் குரிசனார் மூடர்கள், மற்றும் பலதிசை காணார்மதியிலோர், கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே. (௯)

ஆதிப் பிரானம ரர்க்கும் பரஞ்சுடர், சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வ, மோதி யுணரவல் லோமென்ப ருன்னின்று, சோதி தொடர்ந்துத் தொடர்பறி யாரே. (௧௰) ஆ. ௩௱௧௬

---

நடுவுநிலைமை.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை, நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை, நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர், நடுவுநின் றார்வழி நானுநின் றேனே. (௧)

நடுவுநின் றானல்ல கார்முகில் வண்ணன், நடுவுநின் றானல்ல நான்மறை யோதி, நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர், நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே. (௨)

நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர், நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர், நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர், நடுவுநின் றாரொடு நானுநின் றேனே. (௩)

தோன்றிய வெல்லாந் துடைப்பன வன்றிய, வொன்றுநின் றொன்று மீச னிணையடி, மூன்றுநின் றார்முதல் வன்றிரு நாமத்தை, நான்குநின் றார்நடு வாகிநின் றாரே. (௪) ஆ. ௩௱௨௰

---

கள்ளுண்ணாமை.

கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தொறுந் தேராக், கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கு, முழுநீர்க்கள் ளுண்போர் முறைமை யகன்றோர், செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. (௧)

சித்த முருக்கிச் சிவமாஞ் சமாதியி, லொத்தூச் சிவானந்த மோவாத தேறலைச், சுத்த மதுவுண்ணச் சிவானந்தம் விட்டிடா, நித்த லிருத்தல் கிடத்தல்கிழ்க் காலே. (௨)

காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகு, மாமல முஞ்சம யத்துள் மயலுறார், போமதி யாகும் புலிர வினையடி, யோமய வானந்தத் தேற லுணர்வுண்டே. (௩)

வாமத்தோர் தாமு மதவுண்டு மால்பவர், காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவ, ரோமத்தோ ருள்ளொளிக் குள்ளே யுணர்வர்கள், ஞமத்தோ ரன்றே ஞுறுகுவர் தாமே. (௪)

உள்ளுண்மை யோரா ருணரார் பசுபாசம், வள்ளன்மை நாத னருளினின் வாழ்வுறார், தெள்ளுண்மை ஞானச் சிவபோகஞ் சேர்வுறார், கள்ளுண்ணு மாந்தர் கருத்தறி யாரே. (௫)

மயக்குஞ் சமய மலமன்னு மூடர், மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார், மயக்குறு மாயையின் மாமாயை வீடு, மயக்கிற் றெளியின் மயக்குறு மன்றே. (௬)

மயங்குந் தியங்குங்கள் வாய்மை யழிக்கு, மியங்கு மடவார்தம் மின்பமே யெய்தி, முயங்கு நயங்கொண்ட ஞானத்து முந்தா, ரியங்கு மிடையறா வானந்த மெய்தமே. (௭)

இராப்பக லற்ற விடத்தே யிருந்து, பராக்கற வானந்தத் தேறல் பருகா, ரிராப்பக லற்ற விறையடி யின்பத், திராப்பகன் மாயை யிரண்டிட்டத் தேனே. (௮)

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர், சத்தி யழிந்தது தம்மை மறத்தலாற், சத்திச் சிவஞானந் தன்விற் ற



ப்பட்டுச், சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே. (௯)

சத்த னருளிற் சத்தி யருளுண்டாஞ், சத்தி யருளிற் சத்த னருளுண்டாஞ், சத்தி சிவமா மிரண்டுந்தன் னுள்வைக்கச், சத்தியு மெண்சித்தித் தன்மையு மாமே. (௧௦)

தத்துவ நீக்கி மருணீக்கித் தானாகிப், பொய்த்தவ நீக்கிமெய்ப் போகத்துட் போக்கியே, மெய்த்த சுகமுண்டு விட்டுப்பரானந்தச், சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே. (௧௧)

யோகிகள் கால்கட்டி யொண்மதி யானந்த, போக வமுதைப் புசிக்கவொண் சித்தி, மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற், றுகு மதத்தா லறிவழிக் தாரே. (௧௨)

உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறக், தெண்ணீர் குரவ னிணையடித் தாமரை, நண்ணீர் சமாதியி ஞடிவி ரானலங், கண்ணூறு டேசென்று கால்வழி காணுமே. (௧௩)

௧—தந்திர அதிகாரம்-௨௭இ - பாடல் - ௨௨௪.

முதற்றந்திர முற்றும்.

ஆ பாயிர முட்படவதிகாரம்

௩௩ - இ - திருமந்திரம் - ௩௩௪.

---

## இரண்டாந் தந்திரம்.

### அகத்தியம்.

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து, கெடுகின்ற தெம்பெரு மானென்ன வீச, னடுவுள வங்கி யகத்திய நீபோய், முடுகிய வையத்து முன்னிரென் றானே.

அங்கி யுதயம் வளர்க்கு மகத்திய, னங்கி யுதயஞ்செய் மேல்பா லவனொடு, மங்கி யுதயஞ்செய் வடபாற் றவமுனி, யெங்கும் வளங்கொள் ளிலங்கொளி தானே. (௨)

பதிவலியில் வீரட்டமெட்டு.

கருத்துறை யந்தகன் றன்போ லசுரன், வரத்தி னுலகத் துயிர்களை யெல்லாம், வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக், குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே. (௧)

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத், தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு, நிலையுல குக்கிவன் வேணுமென் றெண்ணித், தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே. (௨)

எங்கும் பரந்து மிருநிலந் தாங்கியுந், தங்கும் படித்தவன் றாளுணர் தேவர்கள், பொங்கு சினத்து ளயன்றலை முன்னற, வங்கச் சதத்தை யுதிரங்கொண் டானே. (௩)

எங்குங் கலந்து மென்னுள்ளத் தெழுகின்ற, வங்க முதல்வ னருமறை யோகிபாற், பொங்குஞ் சலந்தரன் போர்செல்ல நீர்மையி, னங்கு விரற்குறித் தாழிசெய் தானே. (௪)

அப்பணி செஞ்சடை யாதி புராதனன், முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண், முப்புர மாவது மும்மல காரிய, மப்புர மெய்தமை யாரறி வாரே. (௫)

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியு, ளத்தி யுரியர னாவ தறிகிலர், சத்திக் கருதிய தாம்பல தேவரு, மத்தியி லூனொழுந் தன்றிக் கொலையே. (௬)

மூலத் துவாரத்து மூளு மொருவனை, மேலைத் துவாரத்தின் மேலுற நோக்கிமுற், காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய், ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே. (௭)

இருந்த மனத்தை யிசைய விருத்திப், பொருந்திய லிங்க வெளியது போக்கித், திருந்திய காமன் செயலழித் தங்கண், கருத்தவ யோகங் கொறுக்கை யமர்ந்ததே. (௮) ஆ. ௩௰.

---

இலிங்கபுராணம்.

அடிசேர்வ னென்னவெம் மாதியை நோக்கி, முடிசேர் ம



லைமக னார்மக னாகித், திடமா தவஞ்செய்து தேவர் பிரியப், படியார வர்ச்சித்துப் பத்திசெய் தானே. (௧)

திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை, யரியனென் றெண்ணி யயர்வுற வேண்டாம், புரிவுடை யாளர்க்குப் பொய்யல னீசன், பரிவொடு நின்று பரிசறி வானே. (௨)

ஆழி வலங்கொண் டயன்மா லிருவரு, மூழி வலஞ்செய்ய வொண்சுட ராதியு, மாழி கொடுத்தன னச்சுதற் கவ்வழி, வாழிப் பிரமற்கும் வாள்கொடுத் தானே. (௩)

தாங்கிய விருபது தோளுந் தடவரை, யோங்க வெடுத்தவ னொப்பில் பெருவலி, யாங்கு நெரித்தம ராவென் றழைத்தபின், னீங்கா வருள்செய்தா னின்மலன் றானே. (௪)

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி, யறுவகை யானைக்கு மாட்டத்தன் றாதை, செறுவகை செய்து சிதைப்ப முனிந்து, மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே. (௫)

இடுவன் றெல்லா மொருங்கிய தேவர்கள், வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று, நாடி யிறைவா நமவென்று கும்பிட, வேடிப் புகழோ னெழுகவென் றானே. (௬) ஆ. ௧௬.

---

தக்கன்வேள்வி.

தந்தை பிரான்வெகுண் டான்றக்கன் வேள்வியை, வெந்தழ லூடே புறப்பட்ட விண்ணவர், முந்திய பூசை முடியார் முறைகெட்டுச், சிந்தின ரண்ணல் சினஞ்செய்த போதே. (௧)

சந்திசெய் கண்டெழு கின்றரி தானு, மெய்ம்மை யிவனல்ல னாமே யுலகினிற், பக்கஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய, வக்கழி லரனு மருள்புரிந் தானே. (௨)

அப்பரி சேயய னாபதி வேள்வியு, ளப்பரி சங்கி யதிசய மாகிலு, மப்பரி சேயது நீர்மையை யுள்கலந், தப்பரி சேசிவ னாலிக்கின் றானே. (௩)

அப்பரி சேயயன் மால்முதற் றேவர்க, ளப்பரி சேயவ ராகிய காரண, மப்பரி சங்கியு காருமுள் ளிட்ட, வப்பரி சாகி யலர்ந்திருந் தானே. (௪)

அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக், குலந்தருங் கீழங்கி கோளுற நோக்கிச், சிவந்த பரமிது சென்று கதுவ, வுலந்த பெருவூழி யோடிவந் தானே. (௫)

அரிபிரமன் றக்க னருக்க னுடனே, வருமதி வாலை வன்னி நல் லிந்திரன், சிரமுக நாசி சிறந்தகை தோள்தா, னரனரு ளின்றி யழிந்தகல் லோரே. (௬)

செவிமந்திரஞ் சொல்லுஞ் செய்தவத் தேவர், விதிமந்திரத்தி னடுக்களைக் கோவிந், செவி மந்திரஞ் செய்து தாமுற நோக்குங், குவி மந்திரங்கொல் கொடியது வாமே. (௭)

நல்லார் நவகுண மொன்பது மின்புறப், பல்லா ரமரர் பரிந்தருள் செய்கென, வில்லால் வளையை விளங்கொளி கொற்றவன், பொல்லா வசுரர்கள் பொன்றும் படிக்கே. (௮)

தெளிந்தார் கலங்கினு நீகலங் காதே, யளித்தாங் கடைவதெம் மாதிப் பிரானை, விளித்தானத் தக்கனவ் வேள்வியை வீயச், சுளித்தாங் கருள்செய்த தூய்மொழி யானே. (௯) ஆ. ௨௫.

---

## பிரளயம்.

கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத், திருவருங் கோவென் றிகல விறைவ, னொருவனு நீருற வோங்கொளி யாகி, யருவரை யாயங்கின் றருள்புரிந் தானே. (௧)

அலைகட லூடறுத் தண்டத்து வானோர், தலைவ னெனும்பெயர் தான்றலை மேற்கொண், டுலகா ரழற்கண் டுள்வீழா தோடி, யலைவாயில் வீழாம லஞ்சலென் றானே. (௨)

தண்கடல் விட்ட தமரருந் தேவரு, மெண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர், விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்



புறங், கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. (௩)

சமைக்க வல்லானைச் சயம்புவென் றேத்தி, யமைக்கவல் லாரிவ் வுலகத் துள்ளாரே, திகைத்த தெண்ணீரிற் கடலொலி யோசை, மிகைக்கொள வங்கி மிகாமைவைத் தானே. (௪)

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங், கண்பழி யாத கமலத் திருக்கின்ற, சண்பழி யாளனை காடிச்சென் ரச்சிரம், விண்பழி யாது விருத்திக்கொண் டானே. (௫) ஆ. ௩௦.

---

## சக்கரப்பேறு.

மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங், கால்போதங் கையினோ டந்தரச் சக்கர, மேல்போக வெள்ளி மலையம ராபதிப், பார்போக மேழும் படைத்துடை யானே. (௧)

சக்கரம் பெற்றுநற் றாமோதரன் றானுஞ், சக்கரந் தன்னைச் சரிக்கவொண் ணாமையால், மிக்கரன் றன்னை விருப்புட னர்ச்சிக்கத், தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. (௨)

கூறது வாகக் குறித்தநற் சக்கரங், கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக், கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குங், கூறது செய்து தரித்தனன் கோலமே. (௩)

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பாற், றக்கன்றன் வேள்வியிற் றாமோதரன் றானுஞ், சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட, வக்கி யுமிழ்ந்தது வாயுங் கரத்திலே. (௪) ஆ. ௩௪.

---

## எலும்புங்கபாலமும்.

எலும்புங் கபாலமு மேந்தி யெழுந்த, வலம்பன் மணிமுடி வானவ ராதி, யெலும்புங் கபாலமு மேந்திலனாகி, லெலும்புங் கபாலமு மிற்றுமண் ணாமே. (௧) ஆ. ௩௫.

---

அடிமுடி தேடல்.

பிரமனு மாலும் பிரானேநா னென்னப், பிரமன்மா றங்க
டம் பேதைமை யாலே, பரம னனலாய்ப் பரந்துமுன் னிற்க,
அரனடி தேடி யரற்றுகின் றாரே. (௧)

ஆமே முலகுற நின்றவெம் மண்ணலுந், தாமே முயற்
சிமுக்கிழும் பாய்கிற்கும், வானே மூலகுற மாமணிக் கண்டனை,
நானே யறிந்தேனவ னுண்மையி னாலே. (௨)

ஊனு யுயிரா யுணர்வங்கி யாய்முன்னஞ், சேணுவா னோ
ங்குந் திருவுரு வேயண்டத், தானுவு ளாயிருந் தன்மதி யுங்க
டந், தாண்முழு தண்டமு மாகிநின் றானே. (௩)

நின்று நிலமுழு தண்டத்து ளொளிய, வன்றே யயன்மால்
வணங்கின ராய்ந்தது, சென்று நிருவர் திருமுடி மேற்செல, நல்
லான் கழலடி காடவொண் ணாதே. (௪)

சேவடி யேத்துஞ் செறிவுடை யானவர், மூவடி யமெ
ன் றுரை முனிவரும், பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந், தாவ
டி யிட்டுத் தலைப்பெய்தும் வாறே. (௫)

நாணக் கமலத் திருந்த சதுமுகன், றானக் கருங்கட லூ
ழித் தலைவனு, மானத்தி னுள்ளே யுயிர்போ லுணர்கின்ற, தானை
ப் பெரும்பொருட் டன்மைய தாமே. (௬)

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர், மேலிங்ஙன்
வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்டு, டாலிங் கனஞ்செய் த
லம் வலம்வருங், கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே, (௭)

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்க, ளாள்கொடுத்
தெம்போ லரனை யறிகில, நாள்கொடுத் தின்பங் கொடுத்துக்
கோ னாகத், தாள்கொடுத் தானடி சாரகிலாரே. (௮)

ஊழி வலஞ்செய்தங் கோரு மொருவற்கு, வாழிச் சது
முகன் வந்து வெளிப்படும், வீழித் தலைநீர் விதித்தது காவெ
ன, ஆழிக் கதிரோ னொளியையவன் றானே. (௯) ஆ-௩௨.



சர்வ சிருஷ்டி.

ஆதியோ டந்த மிலாத பராபரம், போதம தாகப் புணரும்
பராபரை, சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாக, தீ
தெட்டுனையதன் பாற்றிகழ் நாதமே. (௧)

நாதத்தில் விந்துவு நாதவிந் துக்களில், றீதற் றகம்வந்த
வெஞ்சத்தி யென்னவே, பேதித்து ஞானங் கிரியை பிறக்கவ
ர், யாதித்த வித்தையில் வந்தெழும் விந்துவே. (௨)

இல்லது சத்தி யிடந்தனி லுண்டாகிச், சல்லொளி போல
கலந்துள் ளிருந்திடுஞ், வல்லது வாக வழிசெய்த வப்பொரு
ள், சொல்லது சொல்லிடிற் றூராதி யாமே. (௩)

ஆறந்தித் தோதி தொடர்ந்தொரு சத்தியாய், யார்வுந்து
ந மனைந்தொரு வித்தையாய்ப், பாரச் சதாசிவம் பார்முதலைக்
க்கு, மார்வந்த சத்தியோ ரைவது மாமே. (௪)

மாலிங்கன் வாத்தி வாரிவளர்க்கலிற், காலிங்க ளொருங்
கு நிருத்தைந்து பூ
லக்கு கடனமாய்த், தேவிங்க ளைந்தின் றோன்று (௫)
ர்ப், பூவிங்க ளன்று பொருந்தும் புவனமே.

புவனம் படைப்பா னொருவ னொருத்தி, புவனம் படைப்
பாக்கும் புத்திரர்கள், புவனம் படைப்பானும் பூவின்ச க
ளுய், புவனம் படைப்பானப் புண்ணியன் றானே. (௬)

புண்ணிய னந்தி பொருந்த மூலகெங்கும், மண்ணியல் பா
வனர்ந்திருத்த சந்தயுந், தண்ணியிற் பாகந் தரணி முழுதுமா
ய் கண்ணியிற் பாகக் கலந்தெழும் பூமியே. (௭)

நீரகத் தின்பம் பிறக்கு நெருப்பிடை, காயத்திற் சோதி
சக்குமக் காற்றிடை, யோர்வுடை நல்லுயிர்ப் பாத மொலி ச
தி, நீரிடை மண்ணி னிலைபிறப் பாமே. (௮)

உண்டில் கேழு ருமிழ்ந்த வண்டுநகி, யண்டத் தமரர் த
லைவ மாதியுங், கண்டச் சதுமுகக் காரணன் றன்னொடும்,
வன்றிழ் வுலகம் படைக்கும் பொருளே. (௯)

ஓங்கு பெருங்கட லுள்ளுறு வானொடும், பாங்கார் கயிலைப் பராபரன் றானும், வீங்கு கமல மலர்மிசை மேலய, னாங்குயிர் வைக்கு மதுவுணர்ந் தானே. (௧0)

காரண னன்பிற் கலந்தெங்கு நின்றவன், காரண னின்ற கடேட லாய்நிற்கும், பாரண னன்பிற் பதஞ்செய்யு நான்முக, னாரண மாயுல காயமர்ந் தானே. (௧௧)

பயனெளி தாம்பரு மாமணி செய்ய, நயனெளி தாகிய நம்பனென் றன்பு, வயனெளி யாயிருந் தங்கே படைக்கும், பயனெளி தாம்வய னந்தெளிந் தேனே. (௧௨)

போக்கும் வரவும் புனித னருள்புரி, யாக்கமுஞ் சிந்தை யதாகின்ற காலத்து, மேக்கு மிகநின்ற வெட்டுத் திசையொடுந், தாக்குங் கலக்குந் தயாபரன் றானே. (௧௩)

நின்றாயி ராக்கு நிமலனென் னுருயி, ரொன்றாயி ராக்கு மளவை யுடனுற, மூன்றாயி ராக்கு முடற்குந் துணையதா, நன்றாயிர்ப் பானே நடுவுநின் றானே. (௧௪)

ஆகின்ற தன்மையி லக்கணி கொன்றையன், வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன், போகின்ற சீவன் புகுந்திட லாயுள, னாகின்ற தன்மைசெய் யாண்டகை யானே. (௧௫)

ஒருவ னொருத்தி விளையாட லுற்று, மிருவர் விளையாட்டு மெய்ப்பயன் விளக்கும், பருவங்க டோறும் பயன்பல வான, திருவொன்றிற் செய்கை செசமுற்று மாமே. (௧௬)

புகுந்தறி வான்புவ னாபதி யண்ணல், புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல், புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள், புகுந்தறி யும்மூழ் காகிநின் றாரே. (௧௭)

ஆனவச் சத்தியு மாமதி லெவருங், காரிய காரண ஈசர் கடைமுறை, பேணிய வைக்கொழி லால்விந்து விற்பிறந், காணவ நீங்கா தவரென லாகுமே. (௧௮)

உற்றாய்ப் பாலொன்று மாயா ளுதயமா, மற்றைய மூன்று மா மாயோ தயம்பித்து, பெற்றவ னாதம் படையிற் பிரக்கலா, ரற்ற பரசிவ னல்வினை யாட்டதே. (௧௯)



ஆகாய மாதி சதாசிவ ராதிபொன், போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர், மாகாய வீச னரன்மால் பிரமனு, மாகாயம் பூமியுங் காண வளித்ததே. (௨0)

அளியார் முக்கோண வயிந்தவந் தன்னி, லளியார் சிவபுர யாமவ டானே, யளியார் சதாசிவ மாகி யமைவா, ளளியார்க் கருமங்க ளாந்துசெய் வாளே. (௨௧)

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி, காரணி காரிய மாகக் கலந்தவள், வாரணி யாரணி யானவம் மோகினி, பூரணி போதாதி போதமு மாமே. (௨௨)

நின்றது தானாய் நிறைக்க மகேசுரன், சென்றங் கிரண்டி யரன்திரு மாலவன், மன்றது செய்யு மலர்மிசை மேலய, னென்றிவ ராகவிசைந் திருந் தானே. (௨௩)

ஒருவனு மேயுல கேழும் படைத்தா, னொருவனு மேயுல கேழு மளந்தா, னொருவனு மேயுல கேழுங் கடந்தா, னொருவனு மேயுட லோடுயிர் தானே. (௨௪)

செந்தா மரைவண்ணன் றீவண்ண னெம்மிறை, மைந்தார் முகில்வண்ண னெம்மாயன் செய்பாசத்துக், கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்து, வைந்தார் பிறவி யமைத்துநின் றானே. (௨௫)

தேவர் திசைபெட்டெட் டேவ லுடலுயிர், கூவிப் பிறவிக் குவலுசெய்த மாசக்தி, பூவி மலர்மிசை யன்னத்தி லண்ணின்று, காவிற் வழுக்கறு நாணறிந் தேனே. (௨௬)

ஓராய மேயுல கேழும் படைப்பது, மோராய மேயுல கேழு மளிப்பது, மோராய மேயுல கேழு மிறப்பது, மோராய மேயுட லோடுயிர் தானே. (௨௭)

காத லொருவனைக் கண்டிருவருங், கோது குலத்தொடு கூடிக் குழைத்தனர், நேதுணையன் நிலையு மிருவருக், காதி யினை யுரைநின் றானே. (௨௮)

அப்பரி சைம்பத்தொன் றானது வாயிர, மெய்ப்பரி செய்தி விரித்துயி ராய்நிற்கு, மப்பரி சேசெய்து புகழு மலிதர்ச, மப்பரி சேயிருந் தோடியின் றானே. (௨௧)

ஆதித்தன் சந்திர னக்கினி யென்பவர், போதித்த வாறொளி பொங்கொளி நீர்புவி, வாதித்த சந்தாதி வாக்கு மனுதிக, ளோதத்து மாயையின் விந்துவின் றாதே. (௨௨) ஆ. எச.

## திதி.

புகுந்துநின் றான்வெளி யாயிரு ளாகிப், புகுந்துநின் றான்புக ழாயிகழ் வாகிப், புகுந்துநின் றானுட லாயுயி ராகிப், புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே. (௧)

தானே திசையொடு தேவரு மாயிருக்குந், தானே யுடலுயிர் தத்துவ மாயிருக்குந், தானே கடன்மலை யாதியு மாயிருக்குந், தானே யுலகிற் றலைவனு மாமே. (௨)

உடலா யுயிரா யுலகம தாகிக், கடலாய்க் கார்முகி னீர்பொழி வானா, யிடையா யுலப்பிலி யெங்குந் தானாகி, யடையார் பெருவழி யண்ணலின் றானே. (௩)

கேடில் திசையெட்டுந் தேவ னுடலுயிர், கடிமலர்க் குன்றஞ்செய்த மாகந்தி, நீடு மவர்தம துள்ளத்த னாகின்று, நடும் வழக்கமு மானநின் றேனே (௪)

தானொரு காலந் தளிர்ச்சுட ராயிருக்குந், தானொரு காலஞ் சண்ட மாருத மாயிருக்குந், தானொரு காலந் தண்மழை யாயிருக்குந், தானொரு காலந்தண் மாயனு மாமே. (௫)

அன்பு மறிவு மடக்கமு மாயிருந், தின்பமு மின்பக் கனிவு மாயிருந், தன்பொரு காலமு மூழியு மாயிருந், தன்புற வைத்திறை மர்ந்துநின் றானே. (௬)

உற்று வினைவா லவ்வினை யுலகினைப், பெற்ற வினைவா லவனே பிறவியைச், சுற்றிய சாலுங் குடமுந் திகிரியை, மற்று மவனே வினையணு கலாதே. (௭)



உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றானிறை, வெள்ளுயி ராகும் வெளியா யிலங்கொளி, யுள்ளுயிர்க் குள்முளை மேயுட னாய்ப், தெள்ளுயி ராவண்ணந் தாங்கிநின் றானே. (௮)

தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர், வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை, பொங்கி யெழுமைக்கும் போதக மய்வழி, தாங்கிநின் றானமத் தாரணி தானே. (௯)

அணுகினுஞ் சேயவ னங்கியிற் கூடி, நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும், பிணியினும் பார்க்கிசைப் பல்லுயிர்க் கோத், தணியினு மன்னுடை வண்ணமு மாமே. (௰) ஆ. அ.

## சங்காரம்.

அங்கிசெய் தீசனக லிடஞ் சுட்டது, அங்கிசெய் தீசன லகட்ற சுட்டது, அங்கிசெய் தீசனகரமுஞ் சுட்டது, அங்கி யவ் வீசற்குக் கையம்பு தானே. (௧)

இலயங்கண் மூன்றினு மொன்றாகற் பாந்த, நிலையன் றிது மெய்ப்பொருள் போதுதலைக், குலைமை நின்றானர்ந் தேறு, முலைதந்த மாதினந் தான்வெந் ததுவே. (௨)

பதஞ்செய்யும் பாரும் பனிவரை பெட்டு, முதஞ்செய்யு மேழ்கட லோர முதல்வானுளுஞ் செய்யு மங்கி கொளுவிய பாசம், விதஞ்செய்யு நெஞ்சின் விருப்பில்லை தானே. (௩)

கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி, மண்டலத் தூடு இருந்தென் முடைசயாறு, பொன்றிரன் பகற்செய்த வோலங்கு மென்ற வப்புறங், குண்டத்தின் மேலங்கக் கோயில்கொண் டானே. (௪)

நித்த சங்கார மொக்கத் துறக்கமுடன், வைத்த சங்காரமுஞ் சாக்கிரா தீதமாஞ், சுத்த சங்காரந் தொழிவற்ற தேயாமுப், பத்தசங் காரம் பரனரு ளாண்மையே. (௫)

நித்தசங் காரமி ரண்டுட லீவுதல், வைத்தசங் காரமு மாயாள சங்காரமாஞ், சுத்தசங் கார மதீதந் தோய்வித்த, லுய்த்தசங் காரஞ் சிவனரு ளுண்மையே. (௬)

நித்தசங் காரங் கருவிடர் நீக்கினு, லொத்தசங் கார முடலுயிர் நீவுதல், வைத்தசங் காரங் கேவல மான்மாவுக், குய்த்தசங் காரஞ் சிவமாகு முண்மையே. (௭)

நித்தசங் காரமு நீடிளைப் பாற்றுதல், வைத்தசங் காரமு மன்னு மருளொழி, சுத்தசங் காரமுந் தோயாப் பரனருள், வைத்தசங் காரமு நாலா மதிக்கிலே. (௮)

பாழே முதலா வெழும்பயி ரவ்விடம், பாழே யடங்கினும் பண்டைப்பா ழாகாவாம், வாழாச்சங் காரத்தின் மாயையுஞ் செய்தியாம், பாழாம் பயிரா யடங்குப் பாழிலே. (௯)

தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை, மாயம்வைத் தான்வைத்த வன்பதி யொன்றுண்டு, காயம்வைத் தான்கலந் தெங்கு நினைப்பதோ, ராயம்வைத் தாயுணர் வாரவைத் தானே.

ஆ. ௯௰.

---

## திரோபாவம்.

உள்ளத் தொருவனை யுள்ளுறு சோதியை, யுள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை, யுள்ளமுந் தானு முடனே யிருக்கினு, முள்ள மவனை யுருவறி யாதே. (௧)

இன்பப் பிரவி படைத்த விறைவனுந், துன்பஞ்செய் பாசத் துயருள் ளடைந்தன, னென்பிற் கொளுவி யிசைந்துறு தோத்ரசை, முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே. (௨)

இறையவன் மாதவ னின்பம் படைத்த, மறையவன் மூவரும் வந்துடன் கூடி, யிறையவன் செய்த விரும்பொறி யாக்கை, மறையவன் வைத்த பரிசறி யாரே. (௩)



காண்கின்ற கண்ணொளி காதற்செய் யீசனை, யாண்பெண் ணலியுரு வாய்நின்ற வாதியைப், பூணபடி நாவுடை நெஞ்ச முணர்த்திட்டீச், சேணபடி பொய்கைச் செயலணை யாரே. (௪)

தெருளு முலகிற்குந் தேவர்க்கு மின்ப, மருளும் வகைசெய்யு மாதிப் பிரானுஞ், சுருளுஞ் சுடருறு தூவெஞ் சுடரு, மிருளு மறநின் றிருட்டறை யாமே. (௫)

அறைக்கின றருட்டரு மங்கங்க ளானை, யுரைக்கின்ற வாயு மொன்றொன் றெவ்வாய், பரக்கு முருவமும் பாரக்கா ளுப்பக், காக்கின் றவைசெய்த காண்டகை யானே. (௬)

ஒளித்துவைத் தென்னுள் ளுறவுணர்ந் தீசனை, வெளிப்பட நின்றருள் செய்திடு மீண்டே, களிப்பொடுங் காதன்மை யென்னும் பெருமை, வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்கிய வாரே.

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன், சென்றங் கியங்கு மயன்றிரு மாலவ, னன்றது செய்யு மலர்மிசை மேலய, னென்றி வராகி யிசைந்திருந் தானே. (௮)

ஒருங்கிய பாசத் துளுத்தம சித்த, விருங்கனா மேலிருந் தின்புற காடி, வருங்கனா போதா வசையிவிற் கங்கை, யருங்கனா பேறு தழுக்கது வாமே. (௯)

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடு, முன்னின்ற பொலிக ளொல்லா மொருவனே, கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா, வண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே. (௧௦) ஆ. ௧௦௦

---

## அநுக்கிரகம்.

ஒட்டுந் திசையு மடக்கின்ற காற்றவன், வட்டத் திகாரனல் மாநில மாகாச, மொட்டி யுயிர்நிலை யென்னுமிக் காயப், பை கட்டி யவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே. (௧)

உச்சி லோங்கி யொளிதிகழ் காதத்தை, கச்சியே யின்

டங்கொள் வார்க்கு நமனில்லை, விச்சும் வயனொடு மூன்று மூல
குருக்கு, நச்சு மயனே சமைக்கவல் லானே. (௨)

குசவன் றிருத்தியி லேற்றிய மண்ணைக், குசவன் மனத்
துற்ற தெல்லாம் வனையுங், குசவனைப் போலெங்கள் கோனந்
தி வேண்டி, லசைவி லுலக மதுவிது வாமே. (௩)

விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப், படையுடை யா
னடி யேயுல காக்குங், கொடையுடை யான்குண மேகுண மா
குஞ், சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே. (௪)

உகந்துநின் றேபடைத் தானுல கேழு, முகந்துநின் றேப
டைத் தான்பல வூழி, யுகந்துநின் றேபடைத் தானைந்து பூத,
முகந்துநின் றேயுயி ருண்டுடைத் தானே. (௫)

படைத்துடை யான்பண் டிமையவர் கோனும், படைத்து
டை யான்பர தேவரை முன்னே, படைத்துடை யான்பல சீ
வரை முன்னே, படைத்துடை யான்பர மாகிநின் றானே. (௬)

ஆதி படைத்தன வைம்பெரும் பூதங்க, ளாதி படைத்த
ன ளைம்பல் லூழிக, ளாதி படைத்தன ளெண்ணிலி தேவரை
யாதி படைத்தவை தாங்கிநின் றானே. (௭)

அகன்றா னகலிட மேழுமொன் றாகி, யிவன்றா னொன்றில்லை
னொளியுறு மல்லன், சிவன்றான் பலபல சீவனு மாகி, நவின்றா
னுலகுறு கேள்வனு மாமே. (௮)

உண்ணின்ற சோதி யுறநின்ற வோருடல், விண்ணின்ற தம
ரர் விரும்பும் விழுப்பொருண், மண்ணின்ற வானோர் புகழ்ந்து
பேணியன், கண்ணின்ற மாமணி மாபோ தகமே. (௯)

ஆருயி ரான்வண்டத் திருவுருப், பார்முக மாசுப் பயி
லுங் கடத்திடை, நீர்நின்ற பால்போல் நிற்கின்ற கேள்வனைச்,
சோர்வற் றானுஞ் சுகாதித் தேனே. (௰) ஆக ௧௧௪.



## கர்ப்பக்கிரியை.

ஆக்குகின் றான்முன் பிரிந்த விருபத்தஞ், சாக்குகின் றான
வனுகிப்பயும் மாறுயி, ராக்குகின் றான்கர்ப்பக் கோளகை யுள்
ளிருந், தாக்குகின் றானவ னாவ தறிந்தே. (௧)

அறிகின்ற மூலத்தின் மேலங்கி யப்புச், செறிகின்ற னா
ந்துச் செந்தாள் தொழுவிப், பொறைநின்ற வின்னுயிர்ப் போ
ந்துறை நாடப், பதிகின்ற பத்தெனும் பாரெய்த் தானே. (௨)

இன்புறு காலத் திருவர்முன் பூறிய, துன்புறு பாசத் துய
ர்மனை வாழ்வனன், பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையு
மன்புறு காலத் தமைத்தொழிந் தானே. (௩)

கருவை யொழிந்தவர் கண்டநால் மூவெழு, புருடனுடை
ல்பொருந் தாதற் றெறுமார், திருவின் கருக்குழி தேடிப் புகுந்
துருவ மிரண்டாக வோடி விழுந்ததே. (௪)

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி, யொழிந்த முதலைந்
து மீரைந் தொடேறிப், பொழிந்த புனல்பூதம் போற்றுங் கா
லை, மொழிந்த நாதனுச்சி யுள்ளோ யொளித்தே. (௫)

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுஞ், சாவி யுடற்ற
ழிப்பித்த வாறுபோன், மேவிய சீவன் மெய்யாகி வாயுவுங்,
கூவி யவிழுங் குறித்துக்கொண்ட போதே. (௬)

போகின்ற வெட்டும் புகுகின்ற பத்தெட்டு, மாழ்கின்ற மூ
த்தை யொன்பது வாய்தது, நாகமு மெட்டுடன் றுலு புரவியு
பாகன் விடாவிடிற் பன்றியு மாமே. (௭)

ஏற வெதிர்க்கி னிறையவன் றானுரு, மாற வெதிர்க்கி லரி
யவன் றானுரு, நேரொக்க வைக்கி லிகர்போதத் தானும், பே
ராற்ற மைக்கலும் பேர சாகுமே. (௮)

வயங் கலக்கி நுவர்ந்து சாய்ந்தப், பாயுங் கருவு முரு
வா யெழுப்பல், காயுங் கலந்தது காணப் பதிகத்தே, மாய
க்கத்த மறைவைய மானதே. (௯)

சொற்பதக் கேவல மாயாள் கிளைகூட்ட, நிற்குந் துரிய பே தித்து நினைவெழு, வற்புறு காமிய மெட்டாதல் மாயேய ஞ், சொற்புறு தூய்மறை வாக்கினுஞ் சொல்லே. (௪௰)

என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச், செம்பா லிறைச் சித் திருந்த மனைசெய்து, வின்பா லுயிர்நிலை செய்த விறையோ ற்கு, அன்பா லொருவனை நாடுகின் றேனே. (௪௧)

பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோ, னிதஞ்செ ய்யு மொத்துட லெங்கும் புகுந்து, குதஞ்செய்யு மங்கியின் கோ பந் தணிப்பான், விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே. ()

ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே, வழிபல நீராட்டி வை த்தெழ வாங்கிப், பழிபல செய்கின்ற பாசக் கருவைச், சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே. (௪௩)

சுக்கில நாடியிற் றோன்றிய வெள்ளியு, மக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும், புக்கிடு மெண்விரற் புறப்பட்டு நா ல்விர, லொக்கர மெட்டுமென் சார்ந்த வாமே. (௪௪)

போகத்து ளாங்கே புகுந்த புளிகனுங், கோசத்து ளாக த் தொணர்ந்த கொடைத்தொழி, லேகத்து ளாங்கே யிரண்டெ ட்டு மூன்றைந்து, மோகத்து ளாய்ச்சொரு முட்டைசெய் தா னே. (௪௫)

பிண்டத்தி னுள்ளுறு பேதப் புலன்களும், பிண்டத்தி னூ டே பிறந்து மரித்தது, வண்டத்தி னுள்ளுறு சேயு மவ்வகை, யண்டத்து நாதத் தமர்ந்திடுந் தானே. (௪௬)

இலைப்பொறி யேற்றி யெனதுட லீசன், னலைப்பொறி யிற் கரு வைத்துட் லூட்டி, நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவிப், புலப்பொறி பொன்பதி லொன்றுசெய் தானே. (௪௭)

இன்புற் றிருந்தவ ரியல்பித்து வைத்தமன், றுன்பக் கலச மனைவா ரொருவனே, யொன்பது சேர்ச்சால் கலசம் பதினெட்டு, வெந்தது கூரை விளைந்தது தானே. (௪௮)



அறியீ ருடற்பிணி லாகிய வாறும், பிறியீ ரவிற் பெருகு ங் குணங்கள், செறியீ ரவற்றுட் சிக்கிக ளொட்ட, நறிகீ னா கிவ ளானது பிண்டமே. (௪௯)

உடல்வைத்த வாறு முயிர்வைத்த வாறு, மடைவைத்த வொன்பது வாய்தலும் வைத்துத், திடப்பட வைத்த தாயனைச் செ வ்வியு ளாக்கி, நடைவைத்த வீசனை நாடுகின் றேனே. (௫௰)

கேட்டுநின் றேனெங்குந் தேடிப் பெருஞ்சுடர், மூட்டுகின் றான்முதல் யோனி நயமவன், கூட்டுகின் றானுங் குழம்பிற் கரு வையுரு, காட்டிநின் றானுக்கு நேர்பட்ட வாறே. (௫௧)

பூவுடன் மொட்டுப் பொருந்த வலர்ந்தபின், காவுடைத் தீபங் கலந்து பிறந்திடு, நீரிடை நின்ற குமிழி நிமிர்த்தும், பாருட லெங்கும் பரக்கெட்டும் பற்றுமே. (௫௨)

எட்டினு ளொன்றாகு மிந்திரி யங்களுங், கட்டிய மூன்று கர ணமுமாய்விடு, மொட்டிய பாச வுணர்வென்னுங் காயப்பை, கட்டி யவிழ்த்திடுங் கண்ணுத லானே. (௫௩)

கண்ணுத லாமங் கலந்துடம் பாயிடப், பண்ணுதல் செய் து பசுபாச நீக்கிட, வெண்ணிய வேதமி சைத்த பரப்பினை, ம ண்ணுற லாக வகுத்துவைத் தானே. (௫௪)

அருளல்ல தில்லை யரனவ னன்றி, யருளில்லை யாதலி னரு ளோ ருயிர்க்குத், தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால், வ ருகின்ற தன்பு வகுத்திடுந் தானே. (௫௫)

வகுத்த பிறவியின் மாதுநல் லாளுந், தொகுத்திருள் நீக்கி ய சோதி யவனும், பகுத்துணர் வாகிய பல்வகை யெங்கும், வ குத்துள் நின்றதோர் மாண்பது வாமே. (௫௬)

மாண்பது வாக வளர்கின்ற வன்னியைக், காண்பது வா க ... பூண்பது மாதா பிதாவழி ... போலவே, யாம்பதி செய்தானைச் சேர்கின்ற நுண்மையே. ()

ஆண்மிகி லாணாகும் பெண்மிகிற் பெண்ணாகும், பூணிரண் டொத்துப் பொருந்தி லலியாகுந், தாண்மிகு மாகிற் றரணி முழுதாளும், பாண்வச மிக்கிடிற் பாய்ந்தது மில்லையே (௨௮)

பாய்ந்தபின் னஞ்சோடி லாயுளு நூறாகும், பாய்ந்தபின் னாலோடிற் பாரினி லெண்பதாம், பாய்ந்திடும் வாயு பகுத்தறி ந் தவ்வகை, பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. (௨௯)

பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும், பாய்கின்ற வா யு விளைக்கின் முடமாகும், பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனு கும், பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே. (௩௦)

மாதா வுதர மலமிகின் மந்தனாம், மாதாவுதரஞ் சலமி கின் மூகனாம், மாதா வுதர மிரண்டொக்கில் கண்ணில்லை, மா தா வுதரத்தில் வந்த குழவிக்கே. (௩௧)

குழவியு மாணாம் வலத்தது வாகில், குழவியும் பெண்ணா மிடத்தது வாகில், குழவி யிரண்டா மபான னெதிர்க்கில், கு ழவி யலியாகுங் கொண்டகா லொக்கிலே. (௩௨)

கொண்டநல் வாயு விருவர்க்கு மொத்தெழில், கொண்ட குழவியுங் கோமள மாயிடும், கொண்டநல் வாயு விருவர்க்கு ங் குறிப்படில், கொண்டது மில்லையாங் கோல்வளை யார்க்கே. ()

கோல்வளை யுந்தியிற் கொண்ட குழவியுந், தாய்வளை யுள் ளே தயங்கிய சோதியாம், பால்வளர்ந் துள்ளே பகலவன் போன்னுருப், போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே. ()

உருவம் வளர்ந்திடு மொண்டிங்கள் பத்திற், பருவம தா கவே பாரினில் வந்து, மருவி வளர்ந்திடு மாயையி னாலே, ப ருவம தாவதிங் காரறி வாரே. (௩௪)

இட்டா ரறிந்திலரேற்றவர் கண்டிலர், கட்டா ரறிந்து மொருவர்க் குரைத்திலன், பட்டாங்கு சொல்லும் பரமனு ம ங்நுளன், கெட்டே னிம் மாயையின் கிழமையெவ் வாறே ()

ஒன்புந் காடி யிருவஞ் சந்தித்துத் துன்புறு பாசத்திற் றோன்றி வளர்ந்தபின், முன்புற காடி நிலத்தின்முன் றோற்றிட, மொன்புற காடிநின் றேதனு மாமே. (௩௭)

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைதன் கூட்டிட்டால, யிற்பின் றிங் காக்கை வளர்க்கின் றதுபோல், வியக்கில்லை போக் கில்லை யேயென்ப தில்லை, மயக்கத்தா லாக்கை வளர்க்கின்ற வாறே. (௩௮)

முதற்கிழங் காய முளையாய் முளைப்பி, னதற்புத லாய்ப ல மாய்ப்பின் றனிக்கு, மதற்கது வாயின்ப மாவது போல, வத ற்கது வாய்நிற்கு மாதிப் பிரானே. (௩௯)

ஏனோர் பெருமைய னாகி யிறைமிறை, யூனே சிறுமையு ளுட்கலந் தாங்குளன், வானோ ரறியு மளவல்ல மாதேவன், றேனே யறியுந் தவத்தினி னானே. (௪௦)

பாத்திரற் பதிந்து பதிந்தநற் காய, முருத்தரித் திவ்வு லோங்கிட வேண்டிற், றிரைகட லுப்புத் திரண்டது போல, த், திரித்தும் பிறக்குந் திருவரு ளாலே. (௪௧) ஆட ௭ரு

---

## ஏகனகயாருயிர்வர்க்கம்.

சத்தி சிவன்விளை யாட்டா லுயிராக்கி, பொத்த விருள மா கூட்டத் திடையூட்டிச், சுத்தம தாகுந் துரியம் பிரிவித் துச், சித்தம் புகுந்து சிவமய மாக்குமே. (௧)

விஞ்ஞானர் கால்வரு மெய்ப்பிரள யாகலத், தஞ்ஞானர் மூவரு மாகும் பதி னெட்டாம், விஞ்ஞான ராதிகள் வேற்றுமை தானே. (௨)

விஞ்ஞானர் கேவலத் தாதது விட்டவ, ரஞ்ஞான ரட் டவித் தேசாஞ்சார்ந் தவோ, ரஞ்ஞான மேழ்கோடி மந்தி ரநாயகர், மெய்ஞ்ஞான ரஞ்ஞவம் விட்டவர் மூவரே. (௩)

இரண்டாவ தில்முத்தி யெய்துவ ரத்தனை, யிரண்டாவ துள்ளே யிருமல பெத்தர், இரண்டாகு நூற்றெட்டு ருத்திர ரென்பர், முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. (௪)

பெத்தத்தர் சித்தொடு பேண்முத்தி சித்தது, வொத்திட் டிரண்டிடை யூடுற்றார் சித்துமாய், மத்தத்து மும்மலம் வாட்டினை மாட்டாதார், சுத்தத் தமிழ்ந்து சகலத் துளாரே. (௫)

சிவமாதி யையவைத் திண்மலஞ் செற்று, நவமாகா சுத்தர்முத் தாந்தத்து வாழ்வார், பவமான தீர்வோர் பசுபாசமற்றோர், நவமான தத்துவ நாடிக்கொண் டாரே. (௬)

விஞ்ஞான ரணவங் கேவல மேவுவ, ரஞ்ஞானர் மாயையிற் றங்கு மிருமல, ரஞ்ஞான ரச்சக லத்தர் சகலராம், விஞ்ஞான ராதிக ளொன்பான்வே றுயிர்களே. (௭)

விஞ்ஞான கன்மத்தர் மெய்யகங் கூடிய, வஞ்ஞான கன்மத்தி னூர்சுவர் யோனிபுக், கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை விட்டுப்போய், மெஞ்ஞான ராகிச் சிவமேவ தன்மையே. (௮)

ஆணவந் துற்ற வவித்தா நனவற்றோர், காணிய விந்துவா காத சகலாதி, யாணவ மாதி யடைந்தோ ரவரன்றே, சேணுயர் சத்திசிவதத் துவமாமே.

(௯) ஆ. ௧௨௪.

பாத்திரம்.

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால், பலமுத்தி சித்தி பரபோக முந்தரும், நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால், பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. (௧)

கண்டிருந் தாருயி ருண்டிடுங் காலனைக், கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தினை, கண்டுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனை, சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. (௨)

கைவிட்டி லொன்கரு வீங்கிய காலத்து, மெய்விட்டி லேன்விகிர் தன்னடி தேடுவன், பொய்விட்டு நானே புரிசடை யானடி, மெய்விட்டிடாத விடுஞ்சீவ மாமே. (௩



ஆவன வாவ வழிய வழிவன, போவன போவ புகுவ புகுவன, காவலன் பேர்நந்தி காட்டித்தக் கண்டவை, சேவன செய்பு யிளந்தினை போனே.

(௪) ஆ. ௧௬.

அபாத்திரம்.

கோல வறட்டைக் குனித்துக் குளகிட்டுப், பாலைக் கறந்து பருகுவ தேயொக்குஞ், சீலமு நோன்பு மிலாதவர்க் கீந்தது, காலங் கழிந்த பயிரது வாமே. ()

ஈவது யோகவியம நியமங்கள், சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி, யாவ லறிந்தன்பு தங்கா தவர்களுக், கிவ பெரும்பிழை யென்றுகொள் வீரே. (௨)

ஆமா றறியா ரதிபஞ்ச பாதகர், தோமாறு மீசர்க்குந் தூய குரவற்குங், காமாதி விட்டோர்க்குந் தரல்தந் தகப்பிப் போன், போமா நரகிற் புகான்போதங் கற்கவே. (௩)

மண்மலை யத்தனை மாதன மீயினு, மண்ணை லிவனென் றஞ்சலி டத்தநு, மெண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த விருவரு, நண்ணுவ ரேழா நரகக் குழியிலே.

(௪) ஆ. ௧௭௨.

தீர்த்தம்.

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள், மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப், பள்ளமு மேடும் பரந்து திரிவரே, கள்ள மனமுடைக் கல்வியி லோரே. (௧)

களியறி வாளர்க்குத் தன்னெதிராய்த் தோன்றுங், குளியறி வாளர்க்குக் கூடவொண் ணான், வளியறி வாளர்க்கு வாய்க்கிடும் வாய்க்குந், தெளிவறி வாளர்தஞ் சிந்தையுள் ளானே. ()

உள்ளத்தி னுள்ளே யுளனொருவனைக், கள்ளத்தி ருக் கலக்கத்தி வாதிங்கே, வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப், பள்ளத்தி விட்டதோர் பத்தனு ளாமே. (௩)

அறிவா ரமரர்க ளாதிப் பிரானைச், செறிவா னுறைபதஞ்
சென்று வலங்கொண், மறிவார் வழிக்கை வருபுனற் கங்கைப்,
பொறியார் புனன்மூழ்கப் புண்ணிய ராமே. (௮)

கடலிற் கெடுத்துக் குளத்திலிற் காண்ட, துடலுறத்
தேடுவார் தம்மையொப் பாரிலர், திடமுற்ற நந்தி திருவரு ளா
ற்சென், றுடலிற் புகுந்தமை யொன்றறி யாரே. (௯)

கலந்தது நீர துடம்பிற் கறுக்குங், கலந்தது நீர துடம்பி
ற் சிவக்குங், கலந்தது நீர துடம்பில் வெளுக்குங், கலந்தது நீ
ர்நிலங் காற்றது வாமே. (௰)

ஆக ௪௭

---

திருக்கோயிலழிவு.

தாபர லிங்கம் பறித்தொன் றிற் றாபித்தா, லாவதன் முன்
னே யரசு நிலைகெடுஞ், சாவதன் முன்னே பெருநோ யடுத்திடு
ங், காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. (௧)

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில், வெட்டுவி
க்கும்மபி டேகத் தரசனை, முட்டுவிக் கும்முனி வேதிய ராயினு
ம், வெட்டுவித் தேவிடும் விண்ணவ னாணையே. (௨)

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப், போற்றரு மன்
னரும் போர்வலி குன்றுவர், கூற்றுதைத் தான்றிருக் கோயிற்
க ளானவை, சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே. (௩)

முன்னவ னார்கோயிற் பூசைகண் முட்டிடின், மன்னர்க்
கதீங்குள வாரி வளங்குன்றுங், கன்னங் களவு மிகுத்திடுங்
காசினி, யென்னரு நந்தி யெடுத்துரைத் தானே. (௪)

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்போ
ர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம், பார்கொண்
ட நாட்டிற்குப் பஞ்சமு மாமென்றே, சீர்கொண்ட நந்தி தெரி
ந்துரைத் தானே.

(௫) ஆக ௫௨



அதோமுக தெரிசனம்.

எம்பெருமா னிறைவா முறைபோ வென்று, வம்பவிழ் வா
னோ ரசுரன் வலிசொல்ல, வம்பவள மேவி யறுமுக போய
வர், தம்பகை கொல்லென்ற தற்பரன் றானே. (௧)

அண்டமொ டெண்டிசை தாங்கு மதோமுகங், கண்டங்
கறுத்த கருத்தறி வாரில்லை, யுண்டது நஞ்சென் றுரைப்ப ருணர்
வில்லோர், வெண்டலை மாலை விரிசடை யோற்கே. (௨)

செய்தா னறியுஞ் செழுங்கடல் வட்டத்துப், பொய்யே
யுரைக்கிற் புகுந்து பலிகொள்ளா, மெய்யே யுரைக்கில் விண்ணோ
ர் தொழச்செய்வன், மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே. ( )

நந்தி யெழுந்து நடுவுற வோங்கிய, செந்தீ கலந்துட் சிவ
னென நிற்கு, முந்திக் கலந்தங் குலகம் வலம்வரு, மந்தி யிறை
வ னதோமுக மாமே. (௪)

அதோமுகங் கீழண்ட மான புராண, னதோமுகந் தன்
னொடு மேங்கு முப்பதுஞ், சதோமுகத் தொண்மலர்க் கண்ணி
ப் பிரானு, மதோமுக ஞானத் தலைவனு மாமே. (௫)

அதோமுக மாமல ராயது கேளு, மதோமுகத் தாலொ
ரு தாமரைப் விரிந்து, வதோமுக மாகிய வத்தமிழ் சத்தி, யதோ
முக மாகி யமர்ந்திருந் தானே. (௬) ஆக ௪௨.

---

சிவலிங்கம்.

தெளிவுறு ஞானத்துச் சிந்தையி னுள்ளே, யளியுறு வாரமு
தாபதி நாத, னொளியமேனி யொண்சுடர்ச் சோதி கதிர்ப், களிபொன்று (௧)
புணைதாயிற் றிழந்து வாருமே.

முளிந்தவர் வானவர் தானவ ரெல்லாம், விளிந்தவர் மெ
ய்ந்நின்ற ஞான முனிவர், களிந்துடன் றாடிய வாதிப் பிரானைத், (௨)
தெளிந்தவர்க் கல்லது தாங்கவொண் ணாதே.

அப்பகை யாலே யசுரருந் தேவரு, நற்பகை செய்து கி
லே முடிந்தனர், எப்பகை யாகிலு மெய்தா திறைவனைப், பொ
ய்ப்பகை செய்யினு மொன்றுபத் தாமே. (௯)

போகமு மாதர் புலவி யதுநினைந், தாகமு முள்கலந் தங்
குநா ளாதலில், வேதிய ராயும் விகிர்தனு மென்கின்ற, நீதியு ளீச
னிந்தைபொழி வாரே. (௰) ஆ. ௨[illegible]

---

குருநிந்தை.

பெற்றிருந் தாயையும் பேறா கயவர்க, ளுற்றிருந் தாரை
யுள்ளவை சொல்லுவர், கற்றிருந் தார்வழி யுற்றிருந் தாரவர்,
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே. (௧)

ஓரெழுத் தொருபொரு ளுணரக் கூறிய, சீரெழுத் தாள
ரைச் சிதையச் செப்பினோர், நாயிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங்
கோருகம், பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே. (௨)

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள், சித்தங் கலங்கச்
சிதைவுகள் செய்தவ, ரத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்
த்திடுஞ், சத்திய மீது சதாநந்தி தாணை. (௩)

மந்திர மோரெழுத் துரைத்த மாதவர், சிந்தையில் நொந்
திடத் தீமைகள் செய்தவர், நந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூ
று, வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. (௪)

ஈச னடியார் இதயங் கலங்கிடத், தேசமு நாடுஞ் சிறப்பும
ழிந்திடும், வாசவன் பீடமு மாமன்னர் பீடமு, நாசமதாகு
மே நம்நந்தி யாணையே. (௫)

சன்மார்க்கச் சற்குரு சந்நிதி பொய்யவர், என்மார்க்க மு
ஞ்சுறா ஞானமுந் தங்காது, தொன்மார்க்க மாய சுவையும
ற்றிட்டுப், பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. (௬)

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு, வெப்பட்ட



கல்லிச் சுமப்போன் விதிபோன்றுங், கைப்பட்ட செய்பா ரமி
ர்ந்திக்கத் தானரக், கைப்பிட்டின் பான் போன்றுங் கன்மிரா (௭) ஆ. ௨௨௦.
வித்தொட்டே.

---

மயேசுரநிந்தை.

ஆண்டா னடியவ ரார்க்கும் விரோதிக, ளாண்டா னடிய
வ் வுரியமேற் றுன்பவ, ராண்டா னடியாரை வேண்டாது பே (௧)
சினோர், தாந்தாம் விழுவது தாழ்வா நரகமே. ஞானிய வந்தி
ஞானியை நிந்திப் பவனு நலனென்றே, கொடுவினை தீர்வா நவன்வயம்,
ப் பயனுமெய் நல்வினை, யான (௨) ஆ. ௨௨௨.
போன பொழுதே புகுஞ்சிவ போகமே

---

பொறையுடைமை.

பற்றிநின் றார்நெஞ்சிற் பல்லிதா னொன்றுண்டு, முற்றிக் கி
டந்தது மூக்கையு நாவையுந், தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சி (௧)
ந்தையுள், வற்று தொழிவது மாகமை யாமே.

ஓலக்கஞ் சூழ்ந்த வுலப்பிலி தேவர்கள், பாலொத்த மே
னியன் பாதம் பணிந்துய்ய, மாலுற்று மாதிரமற்று மன்னவ (௨)
ன, ஞாலத் துயர்மிக நல்லதொன் றுணே.

ஞானம் விளைந்தவர் நம்மிடை மன்னவர், சேனை வளைந்து
திசைதொறுங் கைதொழு தேனை விளைந்திடு முப்பர்க் மாதி (௩)
யை, யேனை விளைந்தரு ளெட்டது மாமே.

வஞ்சினை யாது மனையிலு மன்றிலும், பல்வகை யாலும் ப
ன்றிப் பதஞ்செயுங், கொல்லையி லின்று குதிகொள்ளுங் கூற் (௪) ஆ. ௨[illegible]
றனைச், செல்லை யிலாத விசயமுண் டாமே.

---

பெரியோரைத் துணைக்கோடல்.

ஓடவல் லார்தம ரோடு நடாவுவன், பாடவல் லாரொலி
பார்ப்பிக்க வாழ்குவன், தேடவல் லார்க்கருள் தேவர் பிரானொடு

பின், கூட லாரடி கூடுவன் யானே. (௧)

நாயிடர் பட்டுத் தளிர்போற் றயங்கிறு, மாமனத் தங்க
ன்பு வைத்த நிலையாரு, நீயிடர் பட்டிருந் தென்செய்வாய் நெ
ஞ்சே, நாமிடந் தெங்கெழுந் போதகன் டாயே. (௨)

சத்திவா னவர் தலைவனை நாடிச், சித்தர் பெறுவர்
சிவகதி துவக்கை, சித்தன் மிகுதிக நின்றருள் செய்யும், பே
சீயா ருடன்கூடல் பேரின்ப மதே. (௩)

சார்சடை யான்றன் றமரா யுலகினிற், போர்புகழ் வெ
ந்நெறியெனடி சேருவர், வாயடை யாவுள்ளந் தீயவர்க்க
ருள்செய்யும், கோவடைந் தன்னெறி கூடலுமாமே. (௪)

உடையா னடியா ரடியா ருடன்போயப், படையார ழுள்
போலிப் புகுந்து புக்கேன், கடையார நின்றவர் கண்டறிவி
ப்ப, உடையான் வருகென வோலமென் றாரே. (௫)

அருமைவல் லான்கலை ஞாலத்துட் டோன்றும், பெருமை
வல்லோன்பிற விச்சுழி நீந்தப், பொருமைவல் லானுனர்க் காதிபி
ருக்குந், திருமைவல் லாரொடுஞ் சேர்ந்தனன் யானே. (௬)

ஆக அதிகாரம்-௩௩-க்கு திருமந்திரம்-உ௧உ

இரண்டாந்தந்திர முற்றும்.

ஆக சிறப்புப்பாயிர முதலிய அதிகாரம்-௩௯-க்குக்
கூடிய திருமந்திரம்-௫௧௬.

---

## மூன்றாந்தந்திரம்.

### அட்டாங்க யோகம்.

உரைத்தன வற்சரி யொன்று முடிய, நிரைத்த விராசி நி
ரைமுறை யெண்ணிப், பிரச்சத மெட்டும் பேசிய நந்தி, நிரை
த்த வியம நியமஞ்செய் தானே. (௧)



செய்த வியம நியமஞ் சமாதிசென், றுய்யப் பராச
க்தி உத்தர பூருவ, மெய்த்த கவச வியாசங்கள் முத்திரை, யெய்த (௨)
அருள்செய்வ னிந்நிலை தானே.

அந்நெறி யிந்நெறி யென்னாதட் டாங்கத், தன்னெறி செ
ன்று சமாதியி லேநின்மின், நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி (௩)
லேகலாம், புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.

இயம நியமமே யெண்ணிலா வாதனம், நயமுறு பிராணா
யாமம் பிரத்தியா காரஞ், சயமிகு தாரணை தியானஞ் சமாதி,
யயமுறு மட்டாங்க மாவது மாமே. (௪) ஆக ௪.

---

### இயமம்.

எழுத்தகிர் பொய்யிறு மெட்டுத் தினையுஞ், செழுந்தனிய
மங்கத்து செய்மினென் றன்னார், கொழுந்தவ பவளக் குளிர்ச
டையோடே, யழுந்திய நால்வர்க் கருள்புரித் தானே. (௧)

கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குணன், நல்லா
னடக்க முடையா னடுச்செய்ய, வல்லான் பகுத்துண்பான் மா (௨)
சிலான் கட்காம மில்லா னியமத் திடையினின் றானே. ஆக ௨.

---

### நியமம்.

ஆதியை வேதத்தி னப்பொரு ளானானைச், சோதியை யங்
கே சுடுகின்ற வங்கியைப், பாதியுண் மன்னும் பராசக்தி யோ (௧)
டே, நீதி யுணர்ந்து நியமத்த னாமே.

தூய்மை யருளூண் சுருக்கம் பொறைசெம்மை, வாய்மை
நிலைமை வளர்த்தலே மற்றிவை, காமங் களவு கொலையெனக் (௨)
காண்பவை, நேமி யீரைந்து நியமத்த னாமே.

தவஞ் செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ், சிவன்றன் வி

...த்தாந்தக் கேள்வி, மகஞ்சிவ பூசையொண் மதிசொ லீரைந்து, நியமபல செய்யி னியமத்த னாமே. (ரு) ஆ. ச

---

## ஆதனம்.

பங்கயமாதி பரந்தபல் லாதன, மங்குள வாமிரு நாலு மவற்றுள், சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத், தங்க விருப்பத் தலைவனு மாமே. (க)

ஓரணைப் பாத மூருவின் மேலேறிட், டார வலித்ததன் மேல்வைத் தழுத்தச், சீர்திகழ் கைக ளதனைத்தன் மேல்வைக், கப், பார்திகழ் பத்மா சனமென லாகுமே. (உ)

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து, வரிய முழந்தாளி லங்கை களைநீட்டி, யுருசி யிடந்தொடைச் செவ்வே யிருந்திட், பரிசு பெறுமது பத்திரா சனமே. (ங)

ஒக்க வடியிணை யூருவி லேறிட்டு, முக்கி யுடலை முழங்கை தனிலேற்றித், தொக்க வறிந்து துளங்கா திருந்திடிற், குக்குட வாசனங் கொள்ளலு மாகுமே. (ச)

பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி, யாதர வோடும்வா யங்காந் தழகுறச், கோதி னயனங் கொடிமூக்கி லேயுறச், சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே. (ரு)

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி, சொத்திகம் வீரஞ் சுகாதன மோரேழு, முத்தம மாமுது வாசன மெட்டெட்டுப், பத்தொடு நூறு பலவா சனமே. (சு) ஆ. [illegible]

---

## பிராணாயாமம்.

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமக, னுய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு, மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப், பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. (க)



ஆரிய நல்ல குதிரை யிரண்டுள, வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை, கூரிய நாதன் குருவி னருள்பெற்றால், வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. (உ)

புள்ளினு மிக்க புரவியை மேற்கொண்டாற், கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந், துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கு, முள்ளது சொன்னோ முணர்வுடை யோர்க்கே. (ங)

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப், பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை, பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப், பிராண னடைபேறு பெற்றுண் டீரே. (ச)

ஏறுதல் பூரக மீரெட்டு வாமத்தா, லாறுதல் கும்பக மறுபத்து நாலதி, லூறுதல் முப்பத் திரண்டதி ரேசக, மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே. (ரு)

வளியினை வாங்கி வயத்தி லடக்கிற், பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாந், தெளியக் குருவின் திருவருள் பெற்றால், வளியினும் வேட்டு வளியனு மாமே. (சு)

எங்கே யிருக்கினும் பூரி யிடத்திலே, யங்கே யதுசெய்ய வாக்கைக் கழிவில்லை, யங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச், சங்கே குறிக்கத் தலைவனு மாமே. (எ)

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங், காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை, காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக், கூற்றை யுதைக்குங் குறியது வாமே. (அ)

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப், பாலா மிரேசகத் தாலுட் பதிவித்து, மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே, யாலால முண்டா னருள்பெற லாமே. (கூ)

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே, யேமுற்ற முப்பத் திரண்டு மிரேசித்துக், காமுற்ற பிங்கலைக் கண்ணாக விவ்விரண், டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க வுண்மையே. (௰)

இட்டது அவ்வீ டிளகா திரேசித்துப், பட்டது பக்கச நா டியும் பூரித்துக், கொட்டிய பிராண னபானனுங் கும்பித்துக், கட் டி யிருக்க நமனில்லை தானே. (௧௧)

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை, நெறிப்பட வுள் ளே நின்மல மாக்கில், உறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும், பு றப்பட்டுப் போகான் புரிசடை யோனே. (௧௨)

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கைய, ரோடுவர் மீளுவர் ப ன்னிரண் டங்குல, நீடுவ ரெண்விரற் கண்டிப்பர் நால்விரற், கூ டிக் கொளிற்கோல வஞ்செழுத் தாமே. (௧௩)

பன்னிரண் டானைக்குப் பகலிர வுள்ளது, பன்னிரண் டா னையைப் பாக னறிகிலன், பன்னிரண் டானையைப் பாக னறிந் தபின், பன்னிரண் டானைக்குப் பகலிர வில்லையே. (௧௪)

ஆக ௨௧.

---

## பிரத்தியாகாரம்.

கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடிற், கொண்டுகொ ண் டுள்ளே குணம்பல காணலாம், பண்டுகந் தெங்கும் பழம றை தேடியை, யின்றுகண் டிங்கே யிருக்கலு மாமே. (௧)

நாபிக்குங் கீழே பன்னிரண் டங்குலந், தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர், தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின், கூவி க்கொண் டீசன் குடிபுகுந் தானே. (௨)

மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற, பாலித்த யோனி க் கிருவிரற் கீழ்நின்ற, கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சு டர், ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே. (௩)

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல, நீசித்தம் வைத் து நினையவும் வல்லையேல், மாசித்தி மாயோகம் வந்து தலைப் பெய்துந், தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே. (௪)



சோதி யிரேகைச் சுடரொளி தோன்றிடிற், கோதில் பரா வத்தமென்றே குறிக்கொண்மின், நேர்திகழ் கண்டத்தே நில வொளி யெய்திடு, மோதிய ஞானத் துன்மத்த மாமே. (௫)

மூலத் துவாரத்தை மொக்கார மிட்டிரு, மேலைத் துவாரத் தின் மேன்மனம் வைத்திரு, வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு, காலத்தை வெல்லுங் கருத்திது தானே. (௬)

எருவிடும் வாச லிருவிரன் மேலே, கருவிடும் வாசலிருவி ரற் கீழே, யுருவிடு சோதியை யுள்கவல் லார்க்குக், கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே. (௭)

ஒருக்கா லுபாதியை யொண்சோதி தன்னைப், பிரித்துண ர வந்த வுபாதிப் பிரிவைக், கரைத்துணர் வுன்னல் கரைந்தொ ன்றேகல், பிரத்தியா காரப் பெருமைய தாமே. (௮)

புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந், திறப்பட்ட சிச்ச யஞ் சேர்ந்துட னின்று, றுறப்பட்டு நின்றது வுள்ளமு மங்கே, புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. (௯)

குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும், வெறுப்பிருணீ ங்கி விகிர்தனை நாடுஞ், செறிப்புறு சிந்தையைச் சிக்கென வண்ணி ல், அறிப்புறு காட்சி யமரரு மாமே. (௧௦) ஆக ௩௧.

---

## தாரணை.

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி, விணுத் த ண்டூடே வெளியுறத் தானோக்கிக், காணுக்கண் கேளாச் செ வியென் றிருப்பார்க்கு, வாணா ளடைக்கும் வழியது வாமே. (௧)

மலையார் சிரத்திடை வானீ ரருவி, நிலையாரப் பாயு நெடு நாடி யூடேபோய்ச், சிலையார் பொதுவிற் றிருநட மாடுந், தொ லையாத வானந்தச் சோதிகண் டேனே. (௨)

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை, மூல நிலத்தி

யெழுகின்ற மூர்த்தியை, யேய வெழுப்பி யவனுடன் சந்திக்கப், பாலனு மாவான் பார்நந்தி யாணையே. (௩)

கடைவாசலைக் கட்டிக் காலை யெழுப்பி, யிடைவாசனோக்கி யினிது விருத்தி, மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார், முடையாம லூழி யிருக்கலு மாமே. (௪)

கலந்த வுயிருடன் கால மறியிற், கலந்தலை யாது காலனெருக்கங், கலந்த வுயிரது காலது கட்டிக், கலந்த வுயிருடன் காலமு நிற்குமே. (௫)

வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு, வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர், வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர், சோய்திற வாவிடிற் கோணையு மாமே. (௬)

வாழலு மாம்பல காலு மனத்திடை, போழ்கின்ற வாயு புறப்படாப் பாய்ச்சலுட், டேழுசா லோக பிரமன்றன் பெருவாழ்வும், பாழி பெரியதோர் பள்ளி யறையிலே. (௭)

நிரம்பிய விரைத்தி லைந்தினை போறு, விரங்கி விழுந்திடுந் தென்செம்மை பேதாய், வரம்பினுட் கோலி வழிசெய்து வார்க்குச், சுரங்கிணைக் கோட்டைப் பொறியது மாமே. (௮)

முன்னம் வந்தன வெல்லா முடித்தனர், பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம் மூன்றுறு கோடி யுறுகதி பேசிடு, மென்மையா யிடிகரை நிற்குமே. (௯)

அரித்த வுடலை யைம்பூதத் தில்வைத்துப், பொருத்த வைம்பூதஞ் சத்தாதி யிற்போந்து, தெரித்த மனாதி சத்தாதி யிற்செல்லத், தரித்தது தாரணை தற்பரத் தோடே. (௧௦) ஆ ௨௪.

---

தியானம்.

வருமாறு யிரெட்டின் வந்த தியானம், பொருவாத புந்தி புலன்போக மேவ, லுருவாய சத்தி பரத்தியான முன்னுஞ், குருவாய் சிவத்தியானம் யோகத்திற் கூறே. (௧)



கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட், பண்ணாக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு, வண்ணாக்கி னுள்ளே யகன்ற வொளிகாட்டிப், புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. (௨)

கண்ணு நயனத்தி லுற்ற வொளிதன்னைக், கண்ணூடப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில், விண்ணூறு வந்த வெளிகண்டி டவாகிப், பண்ணாம லாரது பார்க்கலு மாமே. (௩)

ஒருபொழு துன்னா ருடலோ டுயிரை, யொருபொழு துன்னா ருயிருட் சிவனை, யொருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை, யொருபொழு துன்னார் சந்திரப் பூவையே. (௪)

மனத்து விளக்கினை மாண்பட வேற்றிச், சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி, யனத்து விளக்குந் திரியொக்கத் தூண்டி, மனத்து விளக்கது மாயா விளக்கே. (௫)

எண்ணாயிரத் தாண்டு யோக மிருக்கினுங், கண்ணாரமுதினைக் கண்டறி வாரில்லை, யுண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிற், கண்ணாடி போலக் கலந்திருந் தானே. (௬)

நாட்ட மிரண்டு நடுமூக்கில் வைத்திடில், வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை, யோட்டமு மில்லை யுணர்வில்லை, தேட்டமு மில்லை சிவனவ னாமே.

நயன மிரண்டு நாசிமேல் வைத்திட், டுயர்விழ யுள்ளே யடக்கித், துயரற நாடியே தூங்கவல் லவர்க்குக் காயம் பயமில்லை தானே.

மணிக்கடல் யானை வளர்குழல் மேக, மணிவண்டு பேரிகை யாழ், தமனிக்கை நாதங்க டாமிவை பண்ணிற்பவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே.

கடலொடு மேகங் களிறொடு மோசை, யடவொடு மவ்வீனை யண்டாண் டத்தாற், சுடர்மன்னு வேணு சுரிசங்கி னோசை, திடமுற்ற யோகிக் கல்லாற் றெரியாதே. (௧௦)

ஈச விபல்பு மிமையவ ரீட்டமும், பாச மிரங்கப் பரந்து வி ராய்நிற்கு, மோசை யதன்மணம் போல விடுவதோ, ரோசையு மீச னுணரவல் லார்க்கே. (௧௪)

நாத முடிவிலே நல்லா விருப்பது, நாத முடிவிலே நல் யோக மிருப்பது, நாத முடிவிலே நாட்ட மிருப்பது, நாதமு டிவிலே நஞ்சுண்ட கண்டனே. (௧௫)

உதிக்கின்ற வாறு முள்ளங்கி யைந்துந், துதிக்கின்ற சேனைத் தாங்கிரு வெங்கி, பதிக்கின்ற வைவரு ளுக மொழிந்துஞ், சதிக்கொன்றை யீசன் சமுற்சோ வாமே. (௧௬)

பள்ளி யறையிற் பகலே யிருளில்லை, கொள்ளி யறையிற் கொளுந்தாமற் காக்கலா, மொள்ளி றதிபிலோ சோசனை சுற்றிலு, வெள்ளி யறையில் விடிவில்லை தானே. (௧௭)

கொண்ட விரதங் குறையாமற் முன்றுந்தித், தண்டோடுக் கலப்பட்ட யோகிக்கு, மண்டல மூன்றினு மொன்ற வார்த்தபின், பிண்டமு மூழி பிறியா திருக்குமே. (௧௮)

அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றங்கு, வவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவரா, மவ்வவர் மண்டல மவ்வழி வழி, வவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே. (௧௯)

க்கின்ற செஞ்சத் திருட்டறை புள்ளே, முனைக்கின்ற மூன்றின் மொன்றித், தரிட்பெரும் பாசத் தறுதி லொப்பின்றி மார்கழி பெற்றம தாமே. (௨௦)

ருள மூடற வாயுவை மூலத்தே, கிக்கென மூடித் தி டபிடித்திட்டுத், தக்க வலமிட நாழிகை சாதிக்க, வையமுயிரில்லை வாலவர் கோனே. (௨௧)

கடலித்த நாபிக்கு கால்விரன் மேலே, மடலித்த வாசக் கிருவிர துள்ளே, கடலித் திருந்த கருதவல் லார்கள், தலத் தலைவனாந் தாமதித் தாரே. (௨௨)



அறிவா யசத்தென்று மாறு நகன்று, செறிவான மாயை சிதைத்தருளாலே, பிறியாத பேருளாயிடும் பெற்றி, நெறியான வன்பர் நிலையறிந் தாரே. (௨௩) ஆ-கக

சமாதி.

சமாதி யமாதியிற் றான்சொல்லக் கேட்கிற், சமாதி யமா திபிற் றனைட்டின் சித்தி, சமாதி யமாதியிற் றங்கினோர்க் கன்றே, சமாதி யமாதித் தலைப்படுந் தானே. (௧)

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற், சந்தியி லான சமாதியிற் கூடிடு, மந்த மிலாத வறிவி னரும்பொருள், சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. (௨)

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு, மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை, மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு, மன்மனத் துள்ளே மனோலய மாமே. (௩)

விண்டலர் கூடமும் விந்துச் சடவியுங், கண்டுணர் வாகக் கருதி யிருப்பார்கள், சென்று வெளியிற் செழுஞ்சுடர் யத்தி டை, கோயிலிற் குதிரைக் குளசச்செறுந் தானே. (௪)

மூல நாடி முக்கட் டலைச்சிறு, ளூது வாசல் வழியே யிருப் பிர்கள், மேலை வாசல் வெளியுறக் கண்டபின், காலன் வார்த்தை கருவிலு மில்லையே. (௫)

மண்டல மைந்து வாசகளுமீராறு, கொண்டிட சிற்குங் குறிப் பரு மாறெண்மர், கண்டிட நிற்குங் கருத்து நடுவாக, வுண்டு நிலாவிடு யோகம் பரத்தையே. (௬)

கூட்டொத்த மெய்யிற் பொதிப்பட்ட வாயுவைத், தேட்டற் றக்கினிலுஞ் சேரும் படிவைத்து, நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குக், கோட்டுத்த பாம்பும் அடங்குமா மே. (௭)

உருவதி புட்பதி சொன்னஞ்சு வாரேனர், கருவைப் பற்றி

க்கடைக்கரு துண்டா, கருவரை பேறி யமுதுண்ண மாட்டார், திருவரை யாமனத் தீர்த்தற்ற வாறே. (அ)

நம்பனை யாதியை நான்மறை யோதியைச், செம்பொனின் ளேயொ திகழ்கின்ற சோதியை, யன்பினை யாக்கி யருத்தி யெலும்பொடு செச்சிட்டுப்போய்க், கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. ()

மூலத் துமேலது முச்சது ரத்தது, காலத் திசையிற் கலக்கின்ற சந்தியில், மேலைப் பிறையினுள் நெற்றிநேர் நின்ற, கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. (௧௦)

கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று, சிற்பனை யெல்லாந் திருட்டித்த பேரொளிப், பொற்பினை நாடிப் புணர்மதி யோடிற்று, தற்பர மாகத் தகுந்தன் சமாதியே. (௧௧)

தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடிக், வலைப்பட் டிருந்திடு மாதுநல் லாளுங், குலைப்பட் டிருந்திடுங் கோபமகலுக், கலைப்பட் டிருந்திடுங் காங்கைமங் கைக்கே. (௧௨)

சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனு, மாதியு மூவரின் றுசிவனு மாகுமா, லாதிப் பிரமன் பெருங்கீடல் வண்ணனு, மோதி யடிபணிந் தன்புறு வாரே. (௧௩)

சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ், சமாதிகள் வேண்டா மிறையுட னேகிற், சமாதிதா னில்லைத் தானவ னாகிற், சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே. () ஆ. அ௯.

---

## அட்டாங்கயோகப்பேறு.

### இயமம்.

போதகந் தேறும் புரிசடை யானடி, யாதகத் தாரம ராபதிக் கேசெல்வ, ரோதகத் தாலிவ ரொன்றுஞ் செய்திடி, மாதகத் தாடிமா லவிடை யோனே. (௧)



### நியமம்.

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ், கற்றிருந் தாங்கே கருத்த மவர்கட்கு, முற்றெழுந் தாங்கே முனிவ ரெதிர்வரத், தெற்றுஞ் சிவபதஞ் சேர்தலு மாமே. (௨)

### ஆதனம்.

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த், திருந்தம ராபதிச் செல்வ னிவனெனத், தருந்தன் முழவங் குழல மியம்ப, விருந்தின்ப மெய்துவ ரீசனருளே. (௩)

### பிராணாயாமம்.

செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக், கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள, வெம்பொற் றலைவ னிவனென்று சொல்ல, வின்பக் கலவி யிருக்கலு மாமே. (௪)

### பிரத்தியாகாரம்.

சேருறு காலந் திசைநின்ற தேவர்க, ளாரிவ னென்ன வரனிவ னென்ன, வேருறு தேவர்க ளெல்லா மெதிர்கொள்ளக், காருறு கண்டனை மெய்கண்ட வாறே. (௫)

### தாரணை.

நல்வழி நாடி நமன்வழி மாற்றிச், சொல்வழி யாளர் சுருங்காப் பெருஞ்சொலை, யில்வழி யாளரிமையவ ரெண்டிசைப், பல்வழி யெய்தினும் பார்வழி யாகுமே. (௬)

### தியானம்.

இந்தவல் லார்க்குந் துணைபேறு புவனமும், வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத், தேக்கவல் லார்க்குந் திசைக்கு மருதமுந், தாங்கவல் லார்கட்குந் தன்னிட மாமே. ()

### சமாதி.

காரிய மான வுபாதியைத் தான்கடந், தாரிய காரண மேழுந்தன் பாலுற, வாரிய காரண மாயத் தவத்திடைத், தாரிய நற்பரஞ் சேர்தல் சமாதியே. (அ) ஆ. ௯௬.

## அட்டமாசித்தி.

### பரகாயப்பிரவேசம்.

பணிந்தெண் டிசையும் பரமனை நாடித், துணிந்தெண் டிசையுந் தொழுதெம் பிரானை, யணிந்தெண் டிசையு மட்டமா சித்தித், தணிந்தெண் டிசைச்சென்று தாபித்த வாறே. (க)

பரிசறி வானவர் பண்ப னடியெனத், துரிசற நாடியே தூவெளி கண்டேன், னரிய தெனக்கில்லை யட்டமா சித்தி, பெரிதரு ட் செய்து பிறப்பறுத் தானே. (உ)

குரவ னருளிற் குறிவழி மூலப், பரவையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத், தெரிதரு சாம்பவி கேசரி சேரப், பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. (ங)

காயாதி பூதங் கலைகால மாயையி, லாயாத கல வறிவொன் றறுதியே, யோயாப் பதியத னுண்மையைக் கூடினால்; வியாப் பரகாய மேவலு மாமே. (ச)

இருபதி னாயிரத் தெண்ணூறு பேத, மருவிய கன்ம மாமந்த யோகந், தருமிவை காய வுழைப்பாருந் தானே, யருமிரு நான்கா யடங்குமா சித்திக்கே. (ரு)

மதிதனி லீராறு மன்னுங் கலையி, னுதய மதுநா லொழியவோ ரெட்டுப், பதியு மீராறுண்டு பற்றறப் பார்க்கிற், றிகமா ன வீராறு சித்திக ளாமே. (சு)

நாடும் பிணியால் நஞ்சனஞ் சூழ்ந்தக்கால், நீடுங் கலைகள்வி னின்பேதை கூர்ஞானம், பிடொன்றி லவ்வா யாச்சத்தி பேதத்தி, னீடுந் தூரங்கேட்டல் நீண்முடி வீராறே. (எ)

ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந், தாழா நடைபல யோசனை சார்ந்திடுஞ், சூழான வோரெட்டிற் றோன்று நரைதிரை, தாழான வொன்பதிற் றன்பர காயமே. (அ)

ஈரைந்திற் பூரித் தியான வுருத்திர, னேரொன்று பன்னொன்றி லீராறு மென்சித்தி, சீரொன்று மேலேழ் கீழேழ் பு

ஒன்பது வாச லுடையதோர் பிண்டத்து, ளொன்பது நாடி யுடையதோ ரோரிடம், மொன்பது நாடி யொடுக்கவல் லார்கட்கு, வொன்பது வாச லுலகல வாமே. (௧௯)

ஓங்கிய வங்கிக்கீ ழொண்சுழு னைச்செல்ல, வாங்கி யிரவி மதிவழி யோடிடத், தாங்கி யுலகங்க ளேழுந் தரித்திட, வாங்கது சொன்னோ மறிவுடை யோர்க்கே. (௨௦)

தலைப்பட்ட வாறண்ணல் தையலை நாடி, வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போ, லலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால், விலைக்குண்ணை வைத்தோர் வித்தது வாமே. (௨௧)

ஓடிச்சென் றங்கே யொருபொருள் கண்டவர், நாடியி னுள்ளாக நாத மெழுப்புவர், தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு, பாடியு ளின்ற பறைவரைக் கட்டுமே. (௨௨)

கட்டிட்ட தாமரை நாளத்தி லொன்பது, மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர், கட்டிட்டு நின்று களங்கனி யூடுபோய், பொட்டிட்டு நின்றது பூரண மானதே. (௨௩)

பூரண சத்தி யெழுமூன் றறையாக, வேரணி கன்னிக ளொருநூற்றஞ் சாயினர், நாரண னன்முத லாதிய வைந்துக்குங், காரண னாகிக் கலந்து விரிந்ததே. (௨௪)

விரிந்து குவிந்து விளைந்த விம்மங்கை, கரந்து ளெழுந்து கரந்தங் கிருக்கிற், பரந்து குவிந்தது பார்முதற் பூத, மிரைந் தெழு வாயு விடத்தி லொடுங்கே. (௨௫)

இடையொடு பிங்கலை யென்னு மிரண்டு, மடைபடு வாயுவு மாறியே நிற்கு, நடையவை யாறெழுந் தன்கட ருள்ளே, மிடைவளர் மின்கொடி தன்னி லொடுங்கே. (௨௬)

ஒடுங்கி யொருங்கி யுணர்ந்தங் கிருக்கி, லடங்கி யடங்கிடும் வாயு வதனுள், மடங்கி மடங்கிடு முன்னுயி ருள்ளே, கடங்கொண்ட கூத்தனை நாடின் றேனே. (௨௭)



நாடியி னுள்ளே நாதத் தொலியுடன், றேடி யுடன்சென்றத் திருவினைக் கைக்கொண்டு, பாடியு ளின்ற பறைவரைக் கட்டிட்டு, மாடி லொருகை மணிவிளக் கானதே. (௨௮)

அணுமாதி சித்திக ளானவை கூறி, லணுவி லணுவின் பெருமையி னேர்மை, யிலகுகாத வேகார் பரகாய மேவ, லணுவத் தினையெங்குந் தானாத லென்றெட்டே. (௨௯)

எட்டாகிய சித்தி யோரெட் டியோகத்தாற், கிட்டாப் பிராணன் செய்தாற் கிடைத்திடு, மொட்டா நடுநாடி மூலத் தனற்பானு, விட்டான் மதியுண்ண வும்வரு மேலதே. (௩௦)

சித்திக ளெட்டன்றிச் சேரெட் டியோகத்தாற், புத்திக ளானவை யெல்லாம் புலப்படுஞ், சித்திக ளெண்சித்தித் தானாந் திரிபுரைச், சத்தி யருடரத் தானுள வாகுமே. (௩௧)

அணிமா.

எட்டிவை தன்னோ டெழிற்பரன் கைகூடப், பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலா, லிட்டம துள்ளே யிருக்கல் பரகாட்சி, யெட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே. (௩௨)

பந்தர மேறு மதிபானுவை மாற்றக், கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத், தந்தின்றி நற்காய யோகஞ்சார் வார்க்கு, மந்த வுலக மணுமாதி யாமே. (௩௩)

முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டி, லணிந்த வணுமாகைத் தானு மிவனுந், தணிந்தவப் பஞ்சினுந் தானொய்ய தாகி, மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே. (௩௪)

லகுமா.

ஆகின்ற வத்தனி காயநி தன்னுடன், போகின்ற தத்துவ மெங்கும் புகலதாய்ச், சாகின்ற காலங்க டன்வழி நின்றிடின், மாய்கின்ற வையாண்டின் மாலகு வாகுமே. (௩௫)

மாலகு வாகிய மாயனைக் கண்டபின், றுலொளி யாகித் தழைத்தங் கிருந்திடும், பாலொளி யாகிப் படர்ந்தெங்கு நின்றது, மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே. (௫௬)

மகிமா.

மெய்ப்பொருட் சொல்லிய மெல்லிய லாளுடன், றற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக், கைப்பொரு ளாகக் கலந்திடு போராண்டின், மெய்ப்பொரு ளாகு மகிமாவ தாகுமே. (௫௭)

ஆகின்ற காலொளி யாவது கண்டபின், போகின்ற காலங்கள் போவது மில்லையாம், மேனின்ற காலம் வெளியுற நின்றபின், தானின்ற காலங்க டன்வழி யாகுமே. (௫௮)

தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுந், தன்வழி மீதாகத் தழைத்திடும் வையமுந், தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாந், தன்வழித் தன்னரு ளாகின் றதே. (௫௯)

பிராத்தி.

நின்றன தத்துவ நாயகி தன்னுடன், கண்டன பூதப் படையா னவையெலாங், கொண்டவை யோராண்டுடல் கூடவிருந்திடுந், விண்டது வேகலா பிராத்திய தாகுமே. (௬௰)

கரிமா.

ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின், பாகின்ற பூவிற் பரப்பவை காணலா, மேகின்ற காலம் வெளியுற நின்றது, போகின்ற காலங்கள் போவது மில்லையே. (௬௧)

போவதொன் றில்லை வருவது தானில்லை, சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை, தாமத மில்லை நமரகத் தின்னொளி, யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே. (௬௨)

அறிந்த பராசக்தி யுள்ளே யமரிற், பறிந்தது பூதப் படையவை யெல்லாங், குறிக்கவை யோராண்டு கூட விருக்கில், விரிந்த பரகாய மேவலு மாமே. (௬௩)



பிராகாமியம்.

ஆன விளக்கொளி யாவ தறிகிலர், மூல விளக்கொளி முன்னே யுடையவர், கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு, மேலை விளக்கொளி வீடெளி தாகின்றே. (௬௪)

ஈசத்துவம்.

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன், கண்டன பூதப் படையவை யெல்லாங், கொண்டவை யோராண்டு கூடியிருந்திடிற், பண்டை யவ்வீசன் தத்துவ மாகுமே. (௬௫)

ஆகின்ற சந்திரன் றன்னொளி யாயவ, னாகின்ற சந்திரன் றட்பமு மாயிடு, மாகின்ற சந்திரன் றன்கலை கூடிட, லாகின்ற சந்திரன் றானவ னாகுமே. (௬௬)

தானே படைத்திட வல்லவ னாயிடுந், தானே யளித்திட வல்லவ னாயிடுந், தானே சங்காரத் தலைவனு மாயிடுந், தானே சிட்டனுந் தன்மைய னாகுமே. (௬௭)

தன்மைய தாகத் தழைத்த கலையினுள், பன்மைய தாகப் பரந்த வைம்பூதத்தை, வன்மைய தாக மறித்திடு மோராண்டில், மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. (௬௮)

வசித்துவம்.

மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனி, னற்பொரு ளாகிய நல்ல வசித்துவங், கைப்பொரு ளாகக் கலந்த வுயிர்கட்கெல்லாந், தற்பொரு ளாகிய தன்மைய னாகுமே. (௬௯)

தன்மைய தாகத் தழைத்த பகலவன், மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின், பொன்மைய தாகப் புலன்களும் போயிடும், நன்மைய தாகிய நற்கொடி காணுமே. (௭௰)

நற்கொடி யாகிய நாயகி தன்னுடன், னற்கொடி யாக மறிந்திடு மோராண்டு, பொற்கொடி யாகிய புவனங்கள் போயிடுங், கற்கொடி யாகிய காமரு மாமே. (௭௧)

காமரு தத்துவ மானது வந்தபின், பூமரு கந்தம் புவ

னமதாயிடு, மாமரு வுன்னிட மெட்டிடு மானதுப், நாமரு வு
ய்மொளி நாயக மானதே. (௫௨)

நாயக மாகிய நல்லொளி கண்டபின், றாயக மாகத் தழை
த்தங் கிருந்திடும், போயக மான புவனங்கள் கண்டபின், பே
யக மாகிய பேரொளி காணுமே. (௫௩)

பேரொளி யாகிய பெரியவவ் வேட்டையும், பாரொளி யா
சப் பகைப்பறக் கண்டவன், றாரொளி யாகத் தரணி முழுத
மா, மோரொளி யாகிய காலொளி காணுமே. (௫௪)

காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லி, னாலது வக்
கொடி நாயகி தன்னுடன், காலது வைஞ்ஞூற் றெருபத்து மூ
ன்றையுங், காலது பெண்மண்டிக் கொண்டவிவ் வாறே. (௫௫)

ஆறது வாகு மமிர்தத் தலையினு, மாறது வாயிர முன்னூ
ற்றொ டஞ்சுள, வாறது வாயிர மாறு மறுவழி, யாறது வாக
வளர்ப்ப திரண்டே. (௫௬)

இரண்டினின் மேலே சதாசிவ நாயகி, யிரண்டது கால்
கொண் டெழுவகை சொல்லி, யிரண்டது வாயிர மைம்பத்தோ
டொன்றுப்த், திரண்டது கால மெடுத்தது மஞ்சே. (௫௭)

அஞ்சுட னஞ்சு முகமுள நாயகி, யஞ்சுட னஞ்சது வாயு
மாவது, வஞ்சது வின்றி யிரண்டது வாயிர, மஞ்சது கால
மெடுத்துள தொன்றே. (௫௮)

ஒன்றது வாகிய தத்துவ நாயகி, யொன்றது கால்கொண்
டெழுவகை சொல்லிடு, மொன்றது வென்றிகொ ளாயிர மாயிர
மொன்றது கால மெடுத்துள முன்னே. (௫௯)

முன்னெழு மக்கலை நாயகி தன்னுடன், முன்னூறு வாயு மு
டிவகை சொல்லிடின், முன்னூறு மைம்பதோ டொன்றுட ன
ஞ்சுமாய், முன்னூறு வாயு முடிவகை யாமே. (௬௰)

ஐம்பது மத்தனி நாயகி தன்னுட, னைம்பது வாயு வளப்ப



து சொல்லிடு, லைம்பது மைஞ்ஞூற்று முப்பதோ டொன்பது,
மைம்பது வாயு வளப்புள் ளிருந்ததே. (௬௧)

இருந்தி யாகிய வெங்கை யிடத்து, விருந்தி வாயு வியங்கு
நெறியி, லிருநூற்று முப்பத்து மூன்றுட னஞ்சா, யிருந்தி வா
யு வியங்கு மெழுக்கே. (௬௨)

எழுகின்ற சோதியு ணாயகி தன்பா, லெழுகின்ற வாயு வி
டமது சொல்லி, லெழுநூற் றிருபத்தொன் பானது வாக, வெ
ழுந்துட னங்கி யிருந்ததிவ் வாறே. (௬௩)

ஆறது கால்கொண் டிரதம் விளங்கிடு, மேறுக கால்கொ
ண் டிரட்டி யிரட்டிட, வெட்டன சால்கொண் டெண்வகை யே
றடி, மொன்பது மாவில தொத்தது வாயுவே. (௬௪)

சந்திரன் சூரியன் றற்பரன் றானவன், சந்திரன் றானுந்
தலைப்படுந் தன்மையைச், சந்தியி லேகண்டு தானுஞ் சகமுகத்,
துந்திச் சமாதி யுடையொளி யோகியே. (௬௫)

அணங்கற்ற பாத லருஞ்சன நீவல், வணங்குற்ற கல்வி
மா ஞான மிகுத்தல், சிணங்குற்ற வாயர் சித்திதாங் கேட்டல்,
நுணங்கற் றிரோதல்கால் வேகத்து நாந்தலே. (௬௬)

மரணஞ் சிறைவிடல் வன்பர காய, மிரணஞ்சேர் பூமியி
ரங்கோர்க் களித்தலரணன் றிருவுரு வாதன்மூ வேழாங், கர
ணுறு கேள்விக் கணக்கறிந் தோனே. (௬௭)

ஓத வொலிக்கு மூவகை வலம்வீந்து, பாதங்க ளூவ க
ந்தும் பயனில்லை, காதலி லன்னலைக் காண விளிபவர், நாத
விருந்த நகரறி வோரே. (௬௮)

மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக், கோலிய வைம்
முகன் கூறப் பாவிந்து, சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்,
பாலித்த சத்தி பரைபரன் பாதமே. (௬௯)

ஆதார யோகத் ததிதே யொடுஞ்சென்று, மீதான தற்ப
ரை மேவும் பரனொடு, மேதாதி யீரெண் கலைசெல்ல மேலொளி,

யோகாவ சித்த மிரானந்த யோகமே. (எ௰)

மதியமு ஞாயிறும் வந்துடன் கூடித், துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள், விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப், பதியது காட்டும் பரமனின் றானே. (எக)

கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானாவர், மட்டவிழ் தாமரை யுள்ளே மனஞ்செய்து, பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு, நட்டறி வார்க்கு நமனில்லை தானே. (எஉ)

ஆ. [illegible]

---

கலைநிலை.

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக், காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற், காதல் வழிசெய்து கங்கை வழிதருங், காதல் வழிசெய்து காக்கலு மாமே. (க)

காக்கலு மாகுங் கரணங்க ளொன்றையுங், காக்கலு மாகுங் கலையதி னுள்ளையுங், காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவுங், காக்கலு மாகுங் கருத்துற நில்லே. (உ)

நிலைபெற நின்றது நேர்தரு வாயு, நிலைபெற நின்றது நீடு மொழிக்குக், கலைவழி நின்ற கலப்பை யறியில், மலைவழி வாரும் வழியிது வாமே. (ங)

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை, படையொன்றி நின்றிட வாய்த்த வழியிற், சடையொன்றி நின்றவச் சங்கர நாதன், விடையொன்றி யேறிய வித்திருந் தானே. (ச)

இருக்கின்ற காலங்க ளேது மறியார், பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கிப், பொருக்கின்ற வாயு வெளிப்பெற நிற்கத், தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே. (ரு)

சாதக மானவத் தன்மையை நோக்கியே, மாதன மாக வழிபாடு செய்திடிற், போதக மாகப் புகுநடப் பார்க்கிலே, வேதக மாக விளைந்து கிடக்குமே. (சா)



கிடந்தது தானே கிளர்பயன் மூன்று, நடந்தது தானே யுள்ளாடியை நோக்கிப், படர்ந்தது தானே பங்கய மாகத், தொடர்ந்தது தானேயச் சோதியு ளின்றே. (எ)

தானே யெழுந்தவத் தத்துவ நாயகி, ஊனே வழிசெய்தெம் முள்ளே யிருந்திடும், வானோ ருலகீன்ற வம்மை மதித்திடத், தேனே பருகிச் சிவாலய மாகுமே. (அ)

திகழும் படியே செறிதரு வாயு, வழியும் படியை யறிகில ராரு, மழியும் படியை யறிந்தபி னந்தி, திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே. (கூ)

சோதனை தன்னிற் றுரிசறக் காணலா, நாதனு நாயகி தன்னிற் பிரியுநாள், சாதக மாகுங் குருவழிப் பட்டு, மாதன மாக மதிக்கக்கொள் வீரே. (க௰)

ஏரா றுகாற்கொண் டெழுந்த புரவியைப், போராமற் கட்டிப் பெரிதுண வல்லிரேல், நீரா யிரமு நிலமா யிரத்தாண்டும், பேரா துகாயம் பிரானந்தி யாணையே. (கக)

ஓசையி லேழு மொளியின்க ணைந்து, நாசியின் மூன்று நாவி லிரண்டிற், தேசியுந் தேசனுந் தன்னிற் பிரியுநாள், மாசறு சோதி வகுத்துவைத் தானே. (கஉ) ஆ. கஎரு.

---

சரீரசித்தியுபாயம்.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர், திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார், உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே, யுடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே. (க)

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன், உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன், உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென், றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

சுழித்தகைக் கொடுக்கவே சுத்திக் கழியுங், கழுத்தி மலத்தைக் கமலத்தைப் பூரித், தழுத்திக் கொடுக்கு முபாய மறிவார்க்,

கழற்றிக் கவிழ்க்கடை வஞ்சன மாமே. (௩)

அஞ்சனம் போலுட லையறு மந்தியில், வஞ்சக வாத மறுமத் தியானத்திற், செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறு, நஞ்சற நாடி நரைதிரை நாசமே. (௪)

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள, வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குல, நான்றவிழ் முட்டை யிரண்டையுங் கட்டியிட், டூன்றி யிருக்க வுடலழி யாதே. (௫)

நூறு மறுபது மாறும் வலம்வர, நூறு மறுபது மாறு மிடம்வர, நூறு மறுபது மாறு மெதிரிட, நூறு மறுபது மாறும் புகுவரே. (௬)

சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான், மத்தியா னத்திலே வாக்கியங் கேட்கலாந், தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ், சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி யாணையே. ()

திறத்திறம் விந்து திகழு மகார, முறப்பற வேகினந் தோதுஞ் சகார, மறிப்பது மந்திர மன்னிய நாத, மறப்பற யோகிக் கறநெறி யாமே. (௮)

உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச், சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினுன், முந்தி முகட்டி னிறுத்தி யபானனைச், சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே. (௯)

மாறு மலக்குதக் தன்மே லிருவிரற், கூறு மிலிங்கத்தின் கீழே குறிக்கொண்மி, னூறு முடம்பிடை யண்ணலு மங்குளன், கூறு முபதேசங் கொண்டது காணுமே. (௰)

நிலைதிற னுடை நேரிழை யாளொடுஞ், சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு, ஞால மறிய நரைதிரை மாறிடும், பாலனு மாவர் பராநந்தி யாணையே. (௧௧)

அண்டஞ் சுருங்கி லதற்கோ ரழிவில்லை, பிண்டஞ் சுருங்கிற் பிராண னிலைபெறு, முண்டி சுருங்கி லுபாயம் பலவுள, கண்டங் கறுத்த கபாலியு மாமே. (௧௨)



பிண்டத்து ளுற்ற பிழக்கடை வாசலை, யண்டத்து ளூற்றை யடைத்தடுத் தேசிடில், வண்டிச் சிக்கு மலர்க்குழன் மாதரார், கண்டிச் சிக்குநற் காயமு மாமே. (௧௩)

சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி, யழலும் பிரசத் தாளங்கியு ளீசன், கழல்கொடி ருவடி காண்குறி லாங்கே, நிழலுந் தெற்றினு நிற்றது மாமே. (௧௪)

கான்கண்ட வன்னியு காலு கலையே முந், தான்கண்ட வாயுஞ் சரீர முழுதொடு, மூன்கண்டு கொண்ட வுணர்வு மருந்தாக, மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. (௧௫)

அருகுஞ் சமவேத சத்தியை யன்புற், றிகொளொளி னெல்லின் வளர்கின்ற கோணையைப், பாருடுத்திப் பல்கோடி களைந்திரு, ளாழ்கொண்ட மந்திரந் தன்னை யொடுக்கே. (௧௬) ஆக ௬௧௧

---

## காலசக்கரம்.

மதிவட்ட மாக வரையஞ்சு நாடி, யிரவிட்டுஞ் சோர மதிக்க வசனுற், பதிவட்டத் துண்ணின்று பாலிக்கு மாறு, மதிவிட்டுப் போமாறு மாயவுற் றேனே. (௧)

உற்றறி வைந்து முணர்ந்தறி வாறேழுங், கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும், பற்றிய பத்தும் பலவகை நாழிகை, யற்ற தறியா தழிகின்ற வாறே. (௨)

அழிகின்ற வாண்டவை யையஞ்சு மூன்று, மொழிகின்ற முப்பது மூன்றென்ப தாகுங், கழிகின்ற காலறு பத்திரண் டென்ப, தெழுகின்ற வீரைம்ப தெண்ணற் றிருந்தே. (௩)

திருந்து தினமத்தி னத்தினத் தோடின், திருந்தறி வாளனி ரண்டெட்டு மூன்று, பொருந்திய நாளொடு புக்கறிந் தோக்கி, வருந்துத லின்றி மனைபுக லாமே. (௪)

மனைபுகு வீரும் மனத்திடை நாடி, யெனைவிரு பத்தஞ்சு மீரா றதனுந், தினையுறக் கோலெட்டுத் தத்தறி யாறு, விளையறி யாத்தி விளங்கிய காலே. (௫)

நாளுங் கடந்தது காலன் வருநாளும், பாலுங் கடந்து
பதினஞ்சு, சேரலுங் கடந்து நுணுத்தா னதி மூவிரண்
டாலுங் கடந்தகொ லான் மூன்றி வாரே. (௬)

ஆறு மிருபது மையஞ்சு மூன்றுக்குந், தேறு மிரண்டு மிரு
பத்தொ டொன்றிவை, கூறு மதிபொன்றி ஐஞ்சிரு பத்தேழும், வே
றுபட்டங்க மனைவிதித் தானே. (௭)

விதித்த விருபத்தெட் டோடு மூன்றறை யாகத், தொகு
த்தறி முப்பத்து மூன்று தொரும் பின், பகுத்தறி பத்தெட்டுப்
பாரா திசையு, ஞுதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே. ()

முறைமுறை யாய்ந்து முயன்றில ராகி, லிறையிறை யா
ர்க்கு மிருக்க வரிது, மறையது காரண மற்றொன்று மில்லை, ப
றையறை யாது பணிந்து முடியே. (௯)

முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர், மிடைந்து மி ருக்க வி
னை செறி கொண்டு, கடந்தனன் மூலக் கருவலல் லார்க்கு, நட
ந்திடும் பாரினி னல்லது மதே. (௧௦)

கன்னுக் கிருவிர லுள்ள மூன்றுக்கும், பின்னிய மார்வி
டைப் போமா வொத்திருந்து, சென்னியின் மூன்றுக்குஞ் சேர
வே நின்றிடு, மன்னி யனைத்திடு மோவியந் தானே. (௧௧)

ஒவிய மான வுணர்வை யறிமின்கள், பாவிக ளித்தின் ப
யனறி வாரில்லை, தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும், பூ
வி லிருந்திடும் புண்ணியந் தண்டே. (௧௨)

தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு, மண்டல மூன்
று மகிழ்ந்துட னொத்திடுங், கண்டவர் கண்டனர் காணார் வி
னைப்பயன், பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே. (௧௩)

பிணங்கி யழிந்திடும் பேறது கேளீர், யணங்குற்ற நீத்
தாறு விரியின், வணங்குட னேவந்த வழிவு குலைந்து, சுணங்க
னுக் காகக் கழிகின்ற வாறே. (௧௪)

கழல்கின்ற வாறின் துணைமலர் காணான், றழலிடைப் புக்



கிடந்தன் றிலாமற், கழல்கண்டு போம்வழி காணவல் லார்
க்குக், குழல்வழி நின்றிடுங் கூத்தது மாமே. (௧௫)

கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர், சாத்திரந் தன்
னைத் தலைப்பெய்து நிற்பர்கள், பார்த்திருந் துள்ளே யபேத
கோத்திடு, மாத்தனை மாசி யலர்ந்திரு மொன்றே. (௧௬)

ஒன்றில் வளர்ச்சி யுலப்பில கேளினி, நன்றென்று மூன்று
க்கு நாளது சென்றிடுஞ், சென்றிடு முப்பதுஞ் சேர விருந்த
ர், குன்றிடைப் பொன்றிகழ் கூத்தது மாமே. (௧௭)

கூத்தவ னொன்றிடுங் கோள்மா மதித்தனு, கேட்டவர் பக்
தின் வெள்ளடையை தோன்றிடப், பார்த்து மகிழ்ந்து பதுமை
கோத்திடுஞ், சாத்திர நூல் தலைப்பெய்த வாமே. (௧௮)

சாத்திர நூல் தலைப்பெய்து நின்றவர், காத்துட னாயிர
வட்டறக் காண்பர்கள், சேர்த்துட னாயிரஞ் சேர விருந்தவ
ர், மூத்துடன் கூடி முயன்றது வாமே. (௧௯)

முதல்கோடி தண்டி மொழிவாகின்று, வகல்கோடி கண்டு ளை
யற்றுக் காண்பார்கள், சிவகோடி விட்டுச் செறிய விருந்தவ, ரு
கல்கோடி கண்டங் குயர்ந்த வாறே. (௨௦)

உயருமு வாறுள கந்தொடு கூடப், பயனது வாய்பவர்,
காமுறு யாமற், செய்துறு வார்சிவச் சிந்தை யிலாமற், பயனுறு
கண்ணிலை யக் காணகி லாரே. (௨௧)

காணகி லாதார் கழிந்தோடிப் போவர்க, ளூணகி லாதா
ர் நயம்பெறி விடுவர்கள், காணகி லாதார் கழிந்த பொருளெல்
லாம், காணகி லாமற் கழிகின்ற வாறே. (௨௨)

கழிகின்ற வப்பொருள் காணகி லாதார், கழிகின்ற வப்
பொருள் காணது மாகுங், கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்
கிற், கழியாத வப்பொருள் காணலு மாமே. (௨௩)

[illegible] பிறப்பினி லாணத்தி யாயுள்ளோ, மெய்யனுக் கி
[illegible] னாகத்த முயிர்க்கு, முன்னான் றிருக்குஞ் சிவகதி யா

நீர்க்கு, நன்னும் பதமிது நாடவல் லார்கட்கே. (௨௪)

நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை, நாடவல் லார்க ளரபதி யாய்நிற்பர், தேடவல் லார்க டெரிந்த பொருளிது, கூடவல் லார்கட்குக் கூறலு மாமே. (௨௫)

கூறும் பொருளி தகார வுகாரங்க, டேறும் பொருளிது சிந்தையு ளின்றிடக், கூறு மகாரங் குழல்வழி யோடிட, மாறு மமர்ந்திடு மன்னனு மாமே. (௨௬)

அன்ன விருப்பிட மாரு மறிகில, ரன்ன விருப்பிட மாய்ந்துகொள் வார்களுக், கன்ன வழியின்றி யுள்ளே யமர்ந்திடு, மன்னனைக் காணி லவனிவ னாகுமே. (௨௭)

அவனிவ னாகும் பரிசறி வாரில்லை, யவனிவ னாகும் பரிசது கேளீர், யவனிவ னோசை யொளியினு ளொன்றிடு, மவனிவ னட்டம தாகிநின் றானே. (௨௮)

வட்டங்க ளேழு மமர்ந்திடு மும்முறை, சிட்ட விருப்பிடஞ் சேர வறிகிலீர், ரொட்டி யிருந்துள் ளுபாய முணர்ந்திடக், கட்டி யிருப்பிடங் காணலு மாகுமே. (௨௯)

காணலு மாகும் பிரம னரியென்று, காணலு மாகுங் கறைக்கண்ட னீசனைக், காணலு மாகுஞ் சதாசிவ சத்தியுங், காணலு மாகுங் கலந்துடன் வைத்ததே. (௩௦) ஆ ௨௨௧)

ஆயுள்பரீட்சை.

வைத்தகை சென்னியி னேரிதாய்த் தோன்றிடி, லுத்தம மிக்கிடி லோரா றிங்களாம், மத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடி, லித்த வுயிர்க்கொரு திங்களி லோசையே. (௧)

ஓசையு மீசனு மொக்கு முணர்வின்கண், ணோசை பிறந்த வீசனை யுள்குவ, ரோசை பிறந்தவர் தெற்றினு மீசனு, மோசை யுணர்ந்த வுணர்விது வாமே. (௨)

ஆமே பிழிகின்ற வாயுவை நோக்கிடி, லாமே துலக்கிநின்



ற நன்மை யளித்திடும், பூமே லுறைகின்ற போதகம் வந்திடுந், தாமே யுலகிற் றலைவனு மாமே. (௩)

தலைவ னிடம்வலஞ் சாதிப்பா ரில்லை, தலைவ னிடம்வல மாயிடிற் றையற், றலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சிற், றலைவ னிடம்வலந் தன்வழி நாதே. (௪)

ஏறிய வாறினி லெண்பது சென்றிடுந், தேறிய வேழிற் சிறக்கும் வகையெண்ணி, லாறொரு பத்தா யமர்ந்த விரண்டையுந், தேறியே நின்று தெளியிவ் வகையே. (௫)

இவ்வகை யெட்டிடம் பெற வோடிடி, லவ்வகை யைம்பதே யென்ன வறியலாகுஞ், செவ்வகை யொன்பதுஞ் சேரவே நின்றிடின், முவ்வகை யாமது முப்பத்து மூன்றே. (௬)

முந்நூன்று மொன்று முடிவுற நின்றிடி, லென்றூன்றி லவ்வகை யாய்நிற்கு, மைம்மூன்று மோடி யகலவே நின்றிடிற், பன்மூன்றொ டீரறு பார்க்கலு மாமே. (௭)

பார்க்கலு மாகும் பகலோன் பதமாகி, லாக்கலு மாகு மாறிரண் டெட்டிற் போக்கலு மாகும் புகைவழி யொன்றி, னீக்கலு மாகு மிருந்திய பத்தே. (௮)

ஏயிரு நாளு மியல்புற வோடிடிற், பாயிரு நாளும் பகையற நின்றிடுந், தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடு, மாயுரு மென் றெனக்கலு மாமே. (௯)

அறக்கும் வகைநாலு மவ்வழி யோடிடின், விளக்கு மொருநாலு மெய்ப்பட நிற்குந், துளக்கும் வகையைந்துந் தப்பெதி ரோடிற், களக்க மறமூன்றிற் காணலு மாமே. (௧௦)

காணலு மாகுங் கருதிய பத்தோடிற், காணலு மாகுங் கலந்த விரண்டையுங், காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற், காணலு மாகுங் கருத்துற வொன்றே. (௧௧)

கருது மிருபதிற் காணலா குங், கருதிய வையைந்திற்

காண்பது மூன்றுங், கருது மிருப தூடனறு காணிற், கருது மீ
ரைம்பதோடைங் காட்டது மாமே. (௧௨)

காட்டது மாகுங் கலந்திரு பத்தேழிற், காட்டது மாகுங் கலந்தெழு மொன்றெனிற், காட்டது மாகுங் கலந்திரு பத்தெட்டிற், காட்டது மாகுங் கலந்தவி ரைக்கே. (௧௩)

ஈரைந்து மைந்து மிருமூன்று மெட்டொக்கும், பாரஞ்சி நின்ற பனைபத்து நானாறும், வாரஞ்செய் கின்ற வகையாறுஞ் சாமாகி, லோரஞ்செ டொன்றென் றனையொன்று நாளே. ()

ஒன்றிய நாள்க ளொருமூப்பத் தொன்றாகிற், கன்றிய நாளுங் கருத்துற மூன்றாகுஞ், சென்றுயிர் நாலெட்டிற் செர்கவ னின்றிடின், மன்றியல் பாகு மனைவி லிரண்டே. (௧௫)

மனையிலி லொன்றாகு மாதமு மூன்றாந், சுனையிலி லொன்றாகுஞ் சொகித்தனன் காணி, வினையற யோங்கி வெளிசெய்து நின்றாற், றினையுற நின்ற தலைவனு மாமே. (௧௬)

ஆரு மறியா ரளக்கின்ற வன்னியை, யாரு மறியா ரளக்கின்ற வாயுவை, யாரு மறியா ரறிகின்ற வப்பொரு, ளாரு மறியா ரறிவறிந் தேனே. (௧௭)

அறிவது வாயுவொ டைந்தறி வாய, தறிவா யதுநா லுகுவி ரத்தின், பிறிவுசெய் யாவகை பேணியுன் னோடித், செறிவது நின்று திகழு மதுவே. (௧௮)

அதுவரு ளம்மரு ளான துலகம், பொதுவரு ளம்புக பூாளர்க்கு நாளு, மதுவரு ளம்மவர் மங்கையர் செல்வி, யிதுவருள் செய்யு மிறையவ ளாமே. (௧௯)

பிறப்பது சூழ்ந்த பெறுக்கதை நந்தி, குறிப்பது கூடிய கோலக் குரம்பை, பழப்பதி யாவது பற்றறும் பாச, மழப்படி செய்வார்க் கதுமதியே. (௨௰) அ. ௨௫௪



ஆசாரம்.

வெள்ளிவெய் யவர்கள் விளக்கும் புகலிடம், கொள்ளிய மந்த விரதமெசல் வாய்மையும், வள்ளிய பொன்னேன வளரும் பிறையிடைத், தெள்ளிய தேய்பிறை தானவை மாமே. (௧)

வெள்ளிவெய் யவர்கள் விளங்கும் புகன்மூன்றுங், கள்ளியிடத்தே தயங்குமே யாமாகி, யொள்ளிய காயத் துக் கண்ணிலியன்ன, வள்ளன் மடக்கு மகிழ்ந்துரைத் தானே. (௨)

செய்யாய் வியாழஞ் சனிநாயி றேவன்று, மெய்யா ரதிக்கின்ற யோகி யிறைவனை, யொய்யாத வாயு வலத்துப் பதிய விட்டு, … தறிவார்க்கவ் வானந்த மாமே. (௩)

மாதி வருகிற பானமதி வெய்ய, வோதி … பிடைபி ன் கலையிடை, யுறு மூலிரண்டு வேயுமி ருச்சிறக், கேதி மதியின் தெரிந்து தெளிந்தே. (௪)

உதித்து வலத்திடம் போகின்ற போது, மதித்ததுள் போதி வாமனை யாரு மூலிந்தது வேயிக வேறுடு மாகி, நிதித்த வீரதெ யுயர்ந்துகொ ளுற்றே. (௫)

நதிவு மில்லாம லிடம்பல மோடு, மதிசென்ற வாயுவை மத்தலை கூடி, யிதிகின்ற வழுமெசன் றின்பனி சேர, முதக்கின்ற நிலத்தின் முன்னுடைக்கொண் டுளே. (௬)

ஆயும் பொருளு மணிபவர் மேலது, வாயு விதழும் பதிது நாள்வலி, பேயம் மனத்தைப் பொருகின்ற வக்கார, மாயுந் தானு முதிர்ந்தது மாமே. (௭) அ. ௨௬௧

வாரசூலம்.

வாரத்திற் சூலம் வருவழி கூறுங்கா, னேரொத்த திக்கின் … செய்யாகும், பாரொத்த செய்யுள் முந்தம் பராசுரர், கொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. (௧)

பொக்கன மாதும் வியாழுக்த தக் கேற்றினை, மக்களே …

மூ மாமிடம் பின்றுநிற், றக்கரு மில்லை வலமுன்னே தோன்றிடுன், மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே. () ஆட உடுப

## கேசரியோகம்.

கட்டிச் சழன்றுகீழ் நான்று விழாமல், வட்டத்திற் கட்டி வடுப்பை யுலைகோலி, விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து, நட்ட மிருக்க நமனில்லை தானே. (௧)

வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற், கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி, விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பிரு, லெண்ணாந்து பார்க்க வழுக்கற்ற வாறே. (௨)

இடக்கை வலக்கை யிரண்டையு மாற்றித், துதிக்கையுண் பார்க்குச் சோரவும் வேண்டா, முடக்கைத்தை நீக்கி யுரவல் லார்கட், கிறக்கவும் வேண்டா மிருக்கலு மாமே. (௩)

ஆய்ந்துரை செய்யி லமுதநின் றூறிடும், வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து, நேர்ந்துரை செய்யு நிலாமண் டலமதாய்ப், பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே. (௪)

நாவி னுனியை நடுவே சிவிறிடிற், சேவடைமங்கே சிவனு முறைவிட, மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர், சாவது மில்லை சதகோடி யூனே. (௫)

ஊனூறல் பாயு முபர்வரை யுச்சிமேல், வானூறல் பாயும் வகையறி வாரில்லை, வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத், தேனூற லுண்டு தெளிதலு மாமே. (௬)

மேலை யண்ணவில் விரைந்திரு காலிடிற், காலனு மில்லை கதவுந் திறந்திடு, ஞாலமறிய நரைதிரை மாறிடும், பாலனு மாவான் பராசக்தி யாணையே. (௭)

நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச், சந்தித் திருக்கிற் றவனி முழுதாளும், பந்தித் திருக்கும் பகலோனை வெளியாகச், சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே. (௮)



தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர், நாவினை நாடி னமனுக் கிடமில்லை, பாவினை நாடிப் பயனறக் கண்டவர், தேவினை யாடிய தீங்கரும் பாமே. (௯)

தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவை, ஈங்கரும் பாக வடையாக வேதிட்டுக், கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட, ஊன்கரும் பாகியே யூனீ ரருமே. (௰)

ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத், தேனீர் பருகிச் சிவாய நமவென்று, கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும், வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. (௧௧)

வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர், காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும், பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுச், சேய்ந்தறிந் தொன்றுறை கோயிலு மாமே. (௧௨)

கோயிலி னுள்ளே குடிசெய்து வாழ்பவர், தாயினு நல்லாத் தானே முழுதருள், காயினு நல்லவர் காய்ந்தவர் நம்முளார், தீயினுந் தீயர் தீவினை யாளர்க்கே. (௧௩)

தீவினை யாளர்தஞ் சென்னியி லுள்ளவன், பூவினை யாளர்கட் பொற்பதி யானவன், பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன், மாவினை யாளர்தம் மதியிலு ளானே. (௧௪)

மதியி னெழுங்கதிர் போலப் பதிற்றாய்ப், பதியினை நூற்றிருபத் தோராயக், குதிமினை புன்னை கலைகள் பரப்பி, யெதிர்மலை யாம விருந்தவன் றானே. (௧௫)

இருந்தனள் சத்தியு மக்கலை சூழ, விருந்தனள் கன்னியு மந்நிலை வாச, விருந்தனள் மாவை முசிவில வாச, விருந்தன டாளை மருந்து பொழிந்தே. (௧௬)

பொழிந்த விருவெள்ளி பொன்மண் ணடையில், வழிந்துள் ளிருந்தது வான்முதல் லங்குச், கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக், கொழுந்தது வாகுங் குணமது தானே. (௧௭)

குணமது வாகிய கோமள வல்லி, மணமது வாக மகிழ்ந் திருக்கின்ற, குணமது வாகிய தத்துவ ஞானப், பிணமது வாக விருந்தனன் றானே. (௧௭)

இருந்த பிராணனை முன்னே யெழுப்பப், பரிந்தவித் தண்டம் பரிய விரிந்த வப்புவுடன் மேலெழ வைக்கின், மரிந்தது மண்டலம் வாழ்ந்தது மாமே. (௧௮)

மண்டலத் துள்ளே மனவொட்டி யானைத்தைக், கண்டத் தங்கே கருதியே செழுக் கட்டிற், பண்டகத் துள்ளே பகலே யொளியாகக், குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே. (௧௯)

ஒழிகின்ற வாயு முன்னே யமருங், கழிகின்ற வாயுவுங் காலத்து மாகும், அழிகின்ற காலத்து அட்டக் கழிப்பப், பழிகின்ற காலத்துப் பையவே தீரே. (௨௦)

பையினி னுள்ளே படிக்கத வொன்றிடின், மெய்யினி னுள்ளே விளங்கு மொளியதாய், மையினின் வாயு கழிந்தங் கெழுந்திடின், மையணி கோயில் மணிவிளக் காமே. (௨௧)

விளங்கிடும் வாயுவை மேலெழ வுன்னி, நலங்கிடுங் கண்டத்து நாயகி தன்னோ, டிளங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச், சுளங்கிட நின்றவை சொல்லது மாமே. (௨௨)

சொல்லது மாயிடு மாகத்து வாயுவுஞ், சொல்லது மேலெழக் கடைமுறுஞ், சொல்லது மாகு மிவையிருக் கும்படிச், சொல்லது மார்த்துத் தரிசனந் தானே. (௨௩)

தானவ ளைக்கு செய்துயின் கானலாய், காதலுங் [illegible] முட்டி யோகரும் பேய்த்தெதிர்த், [illegible] பாரருவக்கும் பகர்முகன் தானே. (௨௪)

முலைமேல் காய்க்கு முன்னோர் விரற்கிசை, பலமேல் [illegible] புல் வெண்ணெய், [illegible] காதத்து [illegible], [illegible] தலைவனு மாமே. (௨௫)

உடல.



பரியங்கயோகம்.

பூசுவன வெல்லாம் பூசிப் புலர்த்திய, வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திய, காயக் குழலி கலவியொ டுங்கலந், தூசித் துவாரம் அறக்காது போகமே. (௧)

போகத்தை யுன்னவே போகாது வாயுவு, மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தின், [illegible] குளிகைக், [illegible] தலைக்கண்ட வாறே. (௨)

கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து, மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும், வண்டியை மேற்கொண்ட வாளி முறுக்குடன், தண்டொரு காலுந் தளராது அங்கமே.

அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ, மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப், பங்கப் படாமற் பரிசித் ததன்பின், [illegible] தலைவனு மாமே. (௩)

தலைவனு மாயிடுந் தன்வழி ஞானத், தலைவனு மாயிடுந் தன்வழி போகத், தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே, தலைவனு மாயிடுந் தன்வழி யந்தே. (௪)

அருந்த கடுவழி [illegible], [illegible], பஞ்சகடிகை பரியங்க யோகமே. (௫)

பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை, யரியவிவ் யோக மடைந்தவர்க் கல்லது, [illegible] சந்துரன் [illegible], புருடத் தருவ [illegible]. (௬)

ஒன்றுந் போகத்தை [illegible], [illegible] வைத்தவன், [illegible] கடிகையி, [illegible] விருக்கத் தலைவனே. (௭)

ஏய்ந்த பிராய மிருபது முப்பதும், வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்த, மாய்ந்த குழலியோ டேய்ந்து மன்ன

திடச், சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே. (௯)

வெள்ளி யுருக்கிப் பொன்வழி யோட்டாமுன், கள்ளத் தட்டாருங் கரியிட்டு மூடினார், கொள்ளி பறியக் குழல்வழி யே சென்று, வள்ளிய ருவி லடக்கிவைத் தாரே. (௧௰)

வைத்த விருவருந் தம்மின் மகிழ்ந்துடன், சித்தச் சுவர் காறு செய்கின்ற வாறுந்தம், பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும், வித்தக ராய்நிற்கும் வெங்கதி ரோனே. (௧௧)

வெங்கதி ருக்குஞ் சனிக்கு மிடைநின்ற, நங்கையைப் புல்கிய நம்பிக்கோ ரானந்தந், தங்களிற் பொன்னிடை வெள்ளி தாழாமுனந், திங்களிற் செவ்வாய்ப் புணர்த்திருந் தானே. (௧௨)

திருத்திப் புகலைத் திருத்தல்செய் வார்க்குக், கருத்தழ காலே கலந்தங் கிருக்கில், வருத்தமு மில்லையா மங்கை பங்கற்குந், துருத்தியுள் வெள்ளியுஞ் சோரா தெழுமே. (௧௩)

எழுகின்ற தீயின்முன் னேகொண்டு சென்றிட்டால், மெழுகுரு கும்பரி செய்திடு மெய்யை, யுழுகின்ற தில்லை யொளியை யறிந்தபின், விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. (௧௪)

வெளியை யறிந்து வெளியி னடுவே, யொளியை யறியி னுளிமுறி யாமே, தெளியை யறிந்து செழுந்தரியாலே, வெளியை யறிந்தனன் மேலறி யேனே. (௧௫)

மேலாந் தலத்தில் விரிந்தவ ராரொளிர், மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர், காலா நிலத்தி னொளிகண் டபொற்பின், மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே. (௧௬)

மின்னிடை யாளுமின் னாளுங் கூட்டத்துப், பொன்னிடை வட்டத்தி னுள்ளே புகப்பெய்து, தன்னொடு தன்னைத் தலைப்பெய்த வல்லீரேல், மன்னிடைப் பல்லூழி வாழலு மாகுமே. (௧௭)



வாங்க லிருந்த வாங்கலின் வாங்கிய, விங்க வலிக்குஞ் சிரகதிவா ரில்லை யிங்கவலிக்குஞ் சிரகதி வாளரு, மோங்கிய தன்னை யுதம் பண்ணுவரே. (௧௮)

உகமதிற் றங்கே பொருசுழிப் பட்டாற், சுகமதிற் றங்கே கபாலங் கறக்கு, மிகமதிற் சென்று மிருப்பா ரொருத்தி, யகமதிற் றம்முளே பார்க்கடிந் தாரே. (௧௯)

பரிதில்லை நீரில்லை பங்கய மொன்றுண்டு, தாளில்லை வேரில்லை தாமரை பூத்தது, ஞாலில்லை காணுமொளியது வொன்றுண்டு, கிளில்லை மேலில்லை கேள்வியிற் பூவே. (௨௰) சூ-௨௧௯.

---

அமுரிதாரணை.

உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க், கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கு, மடலி லொருவழி யொன்றுங் கிழக்கில், வடலைப் படாதுயிர் காடது மாமே. (௧)

தெளிதரு மிந்தச் சிவநீர் பருகி, லொளிதரு மோராண்டி லூனமொன் றில்லை, வெளியுறு மெட்டின் மனமு மொழிக்கும், களிதருங் காயங் கனகம தாமே. (௨)

நூறு மிளகு நவநெய் விதித்திடிர், மாறு பிறத்து மருந்தில்லை மாந்தர்க, டேறி யிதனைத் தெளியுரில் திப்பிடின், மாறும்பிற்கு மருமயி ராமே. (௩)

கரையரு கேநின்ற கன்னத் துவரி, வரைவரை பென்பர் மதியிலா மாந்தர், நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு நரைதிரை மாறு மறையுமங் கில்லையே. (௪)

அங்க நன்னூத லாலோ ரதிசயம், நங்காயங் காணக் காக்க நீங்கிமே, யிளகு நெய்யிடு மஞ்சளும் வேம்பும், விந்து மேனி யிருளுங் கபாலமே. (௫)

விளை மருந்தென்று விண்ணோர் மருந்தென்று, நாடு மருந்

றென்று நந்தி யருள்செய்தா, ரன்று மருந்தென் றறிவா ரகலிடத், தே சோதி மருந்திது சொல்லவொண் ணாதே. (௮) ஆ. ௧௨௪

---

சந்திரயோகம்.

எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே, யெய்துவ தூல மிருவகைப் பக்கத்து, ளெய்துங் கலைபோல வேறி யிறங்குமாந், துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே. (௧)

ஆகின்ற சந்திரன் சூரிய னங்கியு, ளேகின்ற விரட்டொ டாதிர னுடைந்து, போகின்ற வக்கலை யெல்லா மிடைவழி, யாகின்ற யோகி யறிந்த வறிவே. (௨)

ஆறா தாங்கலை யாதித்த சந்திர, னாறா நலங்கிளர் ஞாலங் கயர்கொளப், பேறுங் கலைமுற்றும் பெருங்கா லீரெட்டு, மாறுங் கதிர்கொள்ளு மற்றங்கி கூட்டவே. (௩)

பத்து மிரண்டும் பகலோ னுயர்கலை, பத்தினொ டாறு முயர்கலை யான்மதி, யொத்தநல் லங்கிய தெட்டெட் டுயர்கலை, யத்திற னின்றமை யாய்ந்துகொள் வீரே. (௪)

எட்டெட் டனலின் கலையாகு மீராறுஞ், சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை, கட்டப் படுமீரெட் டாகு மதிக்கலை, யொட்டப் படாவிவை யொன்றொடொன் றாவே. (௫)

எட்டெட்டு மீராறு மீரெட்டுந் தீக்கதிர், சுட்டிட்ட சோமனிற் றோன்றுங் கலையெனக், கட்டப் படுந்தா ரகைகதிர் நாலுள, விட்டிட்ட தொன்றொன்றொ டாறுங் கலாநிதியே. (௬)

எல்லாக் கலையு மிடைபிங் கலைநடு, சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ், செல்லா விழுப்பிச் சித்துடன் சேர்நிலா, வல்லோர் திருவடி கண்ணிற் போரே. (௭)

அங்கியிற் சின்ன கதிரிரண் டட்டத்துத், தங்கிய தாரகை யாகுஞ் சசிபாலு, மங்கியுந் தாரகை யாகும் பரையொளி, தங்கு மவசர மாகுந் தாரணிக்கே. (௮)



தரணி சலங்கனல் காற்றக்க வானம், பரணிய பானு வருந்திங்க ளங்கி, முரணிய தாரகை முன்னிய வொன்பான, பிரணவ மாகும் பெருநெறி தானே. (௯)

தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத், தாரகை மின்னுச் சசிவளர் பக்கத்துத், தாரகை யுள்ளுற சகத்திர யோனிகள், தாரகைத் தாரகை தானாஞ் சொருபமே. (௰)

முற்பதி னஞ்சின் முளைத்துப் பெருத்திடும், பிற்பதி னஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும், மப்பதி னஞ்சு மதியவன் வார்பக்குச், செப்பரி யாவையுஞ் சேர்ந்தது மதியே. (௧௧)

அங்கி யெழுப்பி யருங்கதி ரூட்டத்துத், தங்குஞ் சசியாற் றமனைச் சேர்த்தலைப், பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத், திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. (௧௨)

ஒன்றிய வீரெண் கலையு முடனுற, நின்ற கலைநினை வினைகிளர் தேர்ந்தகள், ஒன்றிய காலன் கருத்தழி வற்றுப், பொறியில் வீழ்வர் நினைப்பொழி யாரே. (௧௩)

அங்கி மதிகூட வாகுங் கதிரொளி, யங்கி கதிர்கூட வாகு மதியொளி, யங்கி சசிகதிர் கூடவத் தாரகைத், தங்கிய துவே சகலமு மாமே. (௧௪)

சாதக மெண்கலை யெண்ணிரண் டாங்கலை, போதமாய்ப் புக்குப் பிடித்துக் கொடுவக்கு, சேதகந் தோன்றச் செருப்புற வேயெய்தி, சாதகு மாணத்த மாகுமோ ணனே. (௧௫)

காணும் பருதியின் காலை யிடத்திட்டு, மாணு மதியதன் காலை வலத்திட்டுப், பேணி யிவ்வாறு பிழையாமற் செய்வரேல், ஆணி கலங்கா தாயிரத் தாண்டே. (௧௬)

பாலிக்கு நெஞ்சம் பறவையை யொன்பதி, லாலிக்கு மங்கே மகராப் பராபரன், மேலிக்கு முன்னே விளக்கொளி யாமிருத்தும், காலிக்குச் சங்கு கதிரவன் றானே. (௧௭)

கதிரவன் சந்திரன் காலமளக்கும், பொதிரவ னன்னே
பொழிமழை நிற்கு, மதிரவ னண்டப் புறஞ்சென் றடர்ப்ப,
வெதிரவ னீச னிடமது தானே. (௧௮)

உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை, யந்திக்கு மந்
திர மாரு மறிகில, ரந்திக்கு மந்திர மாரு மறிந்தபின், றந்தை
க்கு முன்னே மகன்பிறந் தானே. (௧௯)

ஊதிய மேது மறியா ருலைப்பினு,மோதிய மேது மறியா
ர் குமர்க, ளாதியுமந்தமு மந்திக்க வல்லிரேல்,வேதிய னங்கே
வெளிப்படுந் தானே. (௨0)

பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத், தீங்கு கதிரை
யுஞ் சோதித் தனலுறும், பாம்பு மதியும் பகைதீர்த் துடன்
கொளீஇ, நீங்கல்கொ டாதே நெடுந்தகை யானே. (௨௧)

அயின்றது வீழ்வள வுந்துயி லின்றிப், பயின்ற சசிவீழ்
பொழுதிற் றுயின்று, நயந்தரு பூரணை யுள்ள நடத்தி, வியந்த
ரு பூரணை மேவுஞ் சசியே. (௨௨)

சசியுதிக் குமள வுந்துயி லின்றிச், சசியுதித் தகே தனதா
ணெருந்திச், சசிசரிக் கின்றள வுந்துயி லாமற், சசிசரிப் பின்கட்
டன் கண்டுயில் கொண்டதே. (௨௩)

ஊழி திரியா திருக்கின்ற யோகிக, ளூழிகை யாக உமனே
யளப்பர்க, ளூழி முதலா யுயர்வர வுலகினிற், றூழல் வாரிச்
சசிவன்ன ராமே. (௨௪)

தண்மதி பானுச் சரிபூமி யேசென்று, மண்மதி காலங்க
ள் மூன்றும் வழிகண்டு, வெண்மதி தோன்றிய நாளில் விளை
ந்தபின். றண்மதி வீழ்வள விற்கலை யீன்றே. (௨௫)

வளர்கின்ற வாதித்தன் றன்கலை யாறுந், தளர்கின்ற சந்
திரன் றன்கலை யாறு, மலர்க்கெழு பவ்வமிரண் டக்குல மோ
டி, யலர்த்து விழுந்தமை யாரறி வாரே. (௨௬)



ஆருயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து, போம்வழி யெ
ங்கனும் போகாது யோகிக்குக், காமுற வின்மையிற் கட்டின்
று மூலத்தீ, யோமதி யத்துள்விட் டோரயுணர் வாரே. (௨௭)

வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாறெட்டுங், கூறுற காண்
டுக் கூடர்க்கது வேதிற்கு, மீதினி னங்கலை யீரைந்தோ டேமதி
த், தாறுள் கவியு ளகலுவா வாமே. (௨௮)

உணர்விந்துச் சோணி புணர்வினல் விந்தும், புணர்விந்து வி
ந்து மதிக் குறையில், லுணர்வு முடம்பு முனையொக்க நிற்கி, னு
ணர்வு முடம்பு மொருக்கால் விடாவே. (௨௯)

விடாத மனபவ னத்தொடு மேவி, நடாவு சிவசங்க நாதங்
கேட்டுவிக், கொடாவிடா வைப்புவன் கட்டின்றுஞ் சிவி, ப
டாதவு விப்பம் பருகா ரமுதமே. (௩0)

அமுதப் புனல்வரு மாற்றங் கரைமேற், குமிழிக்குட் சர
ட காரக்கையுங் கூட்டிச், சமையத்தண் டோட்டுத் தரிக்க
ல் லார்க்கு, நமனில்லை நற்கலை நாளில்லை தானே. (௩௧)

உண்ணீ ரமுத முறுமூற லைத்திறந், தெண்ணீ ரிணையடித்
தாமரைக் கேசெலுந், தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராசல
ம், கண்ணூர் சிறு தேசென்று காய்வழி மாறுமே. (௩௨)

மாறு மதியுமா தித்தனு மாறிக்கீழ், ஊறு படாமற்றன்
னோடே யடைப்படு, ஊறு படாதுடல் வேண்டு மூபாயமும்,
பாறு படாவின்பம் பார்மிசைப் பொங்குமே. (௩௩)

௮-து அதிகாரம் - சந்திரயோகம் - திருமந்திரம் - ௩௩.

* மூன்றாந்தந்திரம் - முற்றும்.

௮-து திருப்பாயிரமுட்பட - அதிகாரம்.

௯௪ - கூடிய - திருமந்திரம் - ௮௮௬.

## நாலாந் தந்திரம்.

### அசபை.

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகழ் ஞானத்தைத், தேற்றுகின் றேனென்றிருந்த நாயகன் சேவடி, சாற்றுகின் றேனறை யோசிவ யோகத்தை, யேற்றுகின் றேனெம் பிரானோ ரெழுத்தே. (௧)

ஓரெழுத் தாலே யுலகெங்குந் தானாகி, யீரெழுத் தாலே யிசைந்தங் கிருவராய், மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை, மாவெழுத் தாலே மயக்கமே யுற்றதே. (௨)

தேவ ருறைகின்ற சிற்றம் பலமென்றுந், தேவ ருறைகின்ற சிதம்பர மென்றுந், தேவ ருறைகின்ற திருவம் பலமென்றுந், தேவ ருறைகின்ற தென்பொது வாமே. (௩)

ஆமேபொன் னம்பல மற்புத மானந்த, மாமே திருக்கூத் தனவரத தாண்டவ, மாமே பிரளய மாகுமத் தாண்டவ, மாமே சங்காரத் தருந்தாண்ட வங்களே. (௪)

தாண்டவ மான தனியெழுத் தோரெழுத், தாண்டவ மான தனுக்கிர கத்தொழிற், றாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரந், தாண்டவக் கூத்துத் தமனியந் தானே. (௫)

தானே பரஞ்சுடர் தத்துவ மாயிருக்குந், தானே மகார வுகாரம தாயிருக்குந், தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குந், தானே தனக்குத் தராதலந் தானே. (௬)

தராதல மூலைக்குத் தற்பரா பரன், தராதலம் வெப்பு கலவா தியவாந், தராதலஞ் சொல்லிற் றானவ சியவாகுந், தராதல யோகந் தயாவாசி யாமே. (௭)

ஆமே சிவங்க ளகார வுகாரங்க, ளாமே பரங்க ளதியா விடமென்ப, வாமே திருக்கூத் தடங்கிய சித்தர, மாமே சிவா



னந்தி யானந்த மாமே. (௮)

ஆனந்த மூன்று மறிவிரண் டொன்றாகு, மானந்தஞ் சிவா யறிவார் பலரில்லை, யானந்த மோடு மறியவல் லார்க்கு, வானந்தக் கூத்தா யகப்பட்டான் றானே. (௯)

சிவாய விரண்டும் பலகலை வல்லார், சிவாய நோங்கார பஞ்சாக் கரங்கள், சிவாயந சக்கரத் தாண்டவப் பத்தி, சிவாய நோக்கம் பரந்திடு வாரே. (௧௦)

வாறே சதாசிவ மாதிலா வாகமம், வாறே சிவகதி வண் மறை புன்னையும், வாறே திருக்கூத்தா கமவகை யங்கள், வாறே பொதுவாகு மன்றி னமலமே. (௧௧)

அமலம் பதிபசு பாசங்க ளாகம, மமலந் திரோதாயி யமூலமாக் கமா, மமலஞ்செலாம் லாணவ மாயை காமிய, மமலந் திருக்கூத்தங் காடி யடக்கானே. (௧௨)

தானே தனக்குத் தலைவனு மாயிருக்குந், தானே தனக்குத் தன்மலை யாயிருக்குந், தானே தனக்குத் தன்மய மாயிருக்குந், தானே தனக்குத் தலைவனு மாமே. (௧௩)

தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத், தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத், தலைவனு மாய்நின்ற தாளவிழ் ஞானத், தலைவனு மாய்நின்ற தாளினை தானே. (௧௪)

இணையார் திருவடி யெட்டெழுத் தாகு, மிணையார் கழலிணை யீரைஞ்ச தாகு, மிணையார் கழலிணை யைம்பத்தொன் றாகு, மிணையார் கழலிணை யேழா யிரமே. (௧௫)

ஏழா யிரமா யிருபதாய் முப்பதா, யேழா யிரத்து மெழுகோடி தானாகி, யேழா யிரத்துயி ரெண்ணிலா மந்திர, மேழா யிரண்டா யிருக்கின்ற வாறே. (௧௬)

இருக்கின்ற மந்திர மேழா யிரமா, மிருக்கின்ற மந்திர மித்திர மில்லை, யிருக்கின்ற மந்திரஞ் சிவனடி மேனி, யிருக்கின்ற மந்திர மிவ்வண்ணந் தானே. (௧௭)

தானே தனக்குத் தகுநட்டந் தானாகுந், தானே யகார வு காரம தாய்நிற்குந், தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத், தானே யுலகிற் றனிநடந் தானே. (௧௮)

நடமிரண் டொன்றே நளினம தாகு, நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து, நடமிரண் டொன்றே நகைசெயா மந்திர, நடஞ்சிவ லிங்க நலஞ்செம்பு பொன்னே. (௧௯)

செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற், செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ், செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமென, செம்புபொன் னான திருவம் பலமே. (௨௰)

திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத், திருவம் பலமாக வீரா றிருத்தித், திருவம் பலமாக விருபத்தைஞ் சாக்கித், திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே. (௨௧)

வாறே சிவாய நமசிவா யநம, வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை, வாறே யருளால் வளர்கூத்துக் காணலாம், வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. (௨௨)

பொன்னான மந்திரம் புகலவு மொண்ணாது, பொன்னான மந்திரம் பொறிக்குஞ் சகத்தாரும், பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற், பொன்னாகும் வல்லார்க் குடம்புபொற் பாதமே. (௨௩)

பொற்பாதங் காணலாம் புத்திர ருண்டாகும், பொற்பாதந் தானேயே செம்புபொன் னாயிடும், பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும், பொற்பாதங் கண்டுஞ் சிந்தனை சொல்லுமே. (௨௪)

சொல்லு மொருகூட்டிற் புக்குச் சகிக்கலா, நல்ல மடவார் நயந்துட னேவருஞ், சொல்லிலும் பாசச் சடாப்பாம்பு நீங்கிடுஞ், சொல்லுந் திருக்கூத்தின் சூக்கமுந் தானே. (௨௫)



சூக்கும மெண்ணா யிரஞ்செபித் தாலுமே, சூக்கும மான வழியிடைக் காணலாஞ், சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ், சூக்கும மான சிவனதா னந்தமே. (௨௬)

ஆனந்த மென்றென் றறைந்திட லானந்த, மானந்தம் அ - இ - உ - எ - ஒமென் றறைந்திட, மானந்த மஞ்சு மாயிடு மானந்த, மானந்தம் அம் - ஹ்ரீம் அம் - க்ஷம் - ஹம் ஆகுமே. (௨௭)

மேனி யிரண்டும் விளங்காமற் போற்கொள்ள, மேனி யிரண்டுமே மிக்கார் விசாரியா, மேனி யிரண்டும் ஙம் - ஆம் - இ - எ - ஒ - என்று, மேனி யிரண்டும் இ - ஒ - ஊ - ஆ - எ - கூத்தமே. (௨௮)

கூத்தே சிவாய நமசி வாயிடுங், கூத்தே - இ - ஊ - ஆ எ ஓம் - சிவாய நமவாயிடுங், கூத்தே இ - ஊ - ஆ - எ ஓம் - சிவாய நமவாயிடுங், கூத்தே இஊஆஎ ஓம்நமசிவாய கோவொன்றும்வாறே. (௨௯)

ஒன்றிரண் டாட வோரொன்று முடனாட, வொன்றினின் மூன்றாட வோரேழு மொத்தாட, வொன்றினா லாடவோ ரொன்பது முடனாட, மன்றினி லாடினான் மாணிக்கக் கூத்தே. (௩௰)

---

திருவம்பலச்சக்கரம்.

இருந்தவிவ் வட்டங்க ளீரா றிரேகை, யிருந்தவி ரேகைமே லீரா றிருத்தி, யிருந்த மனைகளு மீரா றுபத்தொன், றிருந்த மனையொன்றி லெய்துவன் றானே. (௧)

தானொன்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந், தானொன்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந், தானொன்று கோணந் தன்னைத் தெழுத்தாகுந், தானொன்றி லேயொன்று மவ்வரன் றானே. (௨)

அரகர வென்ன வரியதொன் றில்லை, யரகர வென்ன வறிகிலர் மாந்தர், அரகர வென்ன வமரரு மாவர், அரகர வென்ன வறும்பிறப் பன்றே. (௩)

எட்டினிலெழு வெத்தோ விருப்பிட, லெட்டினி லொன்று மிருமூன்று நீரேழு, மொட்டியல் விந்துவு நாதமு மோங்கிடப், பட்டது மந்திரம் பான்மொழி யாலே. (௪)

மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன், கொட்டி யிருந்த வுபாய மறிகிலர், விட்ட வெழுத்தை விடாத வெழுத்துடன், கட்டவல் லாருயிர் காட்டவல் லாரே. (௫)

ஆலய மாக வமர்ந்த பஞ்சாக்கர, மாலய மாக வமர்ந்த வித் தாலம்மே, காலய மாக வருகின்ற குக்குமம், மாலய மாக வமர்ந்திருந் தானே. (௬)

இருந்தவிவ் வட்ட மிருமூன் றிரேகை, யிருந்த வதனு ளிரேகையைந் தாக, விருந்த வறைக ளிருபத்தைந் தாக, விருந்த வறையொன்றி லெய்து மகாரமே. (௭)

மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை, யொகாரம் வளைத்திட் டுப்பினைக் கேற்றி, யகாரத் தலைப்பிரு கண்ணிகொ ராயிரங், காரம் வகாரந்தற் காலது வாமே. (௮)

காலம் பிராண விரு பக்கமு, மாலி மவர்வா யமர்ந்தங்கு நின்றது, நாலி கலியு மூக்கமணி வாய், வாலிகு சிவாயநம புரவட்டத் தாருமே. (௯)

ஆயுஞ் சிவாய நமசி வயந, வாயு நமசி வயய நமசிவ, வாயுமே வயநம சிவயமந் திர, மாயுஞ் சிகாரத்தொட் டந்தத் தடைவிலே. (௧௰)

அடைவினி லைம்பத் தைம்பத் தறையிலே, யடைவு மகாரத்தி லொன்றாக வெழுத்தாக்கி, யடைவு மகாரத்தி லக்கமாம் பத்து, மடைவி னெழுத்தைம்பத் தொன்று மமர்ந்ததே. (௧௧)

அமர்ந்த வரகர மாம்புற வட்ட, மமர்ந்த வரிகரி யாமதனுள்வட்ட, மமர்ந்த வசவை யாமதனுள்வட்ட, மமர்ந்த விரேகையு மாகின்ற சூலமே. (௧௨)

சூலத் தலையினிற் றோற்றிடுஞ் சத்தியுஞ், சூலத் தலையினிற் சூழுமோங் காரத்தாள், சூலத் திடைவெளி தோற்றிடு மஞ்செழுத், தாலப் பதிக்கு மடைவது வாமே. (௧௩)

அதுவாம் அகார இகார உகாரம், அதுவாம் எகாரம் ஒகாரம தஞ்சா, மதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம், பொதுவா மிடைவெளி பொங்கும் பேரே. (௧௪)

பேர்பெற்ற மூல மந்திரம் பின்னது, சேர்வுற்ற சக்கர வட்டத்துட் சத்தியி, னோர்பெற் றிருந்திட நின்றது சக்கரம், பேர்பெற் றிருந்த வியப்பிது வாமே. (௧௫)

இயலுமிம் மந்திர மெய்தும் வழியின், செயலு மறியத் தெளிவிக்கு நாதன், புயலும் புனலும் பொருந்தங்கி மண்ணின், முயலு மெழுத்துக்கு முன்னு மிருந்ததே. (௧௬)

இரட் டெழுத்தின்மேலாகும் பதினாறு, மேலெட்டினின்மேலே விந்துவு நாதமுஞ், சிரிட்டி நின்று சிவாய நமவென்னக், கூடிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே. (௧௭)

அண்ணலை வஞ்சம் தவனைக் காத்தினை, வெண்ணிலவு வாரூம் பிரானைக் காத்துநீ, வென்னை யிருவ நினைக்குங் கிருந்திடம், புண்ணிய வாளர் பொருந்தி யாக்கமே. (௧௮)

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேலைவைத் தவ்விட்டுப் பார்க்கி லிலிங்கம தாயிற்று, அவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின், னெவ்விட்டு நின்ற கூடக்கொழுந் தாமே. (௧௯)

அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குண்டு, அவ்வுண்டு சிற்றுஞ் சருத்தி வாரர், அவ்வுண்டு சிருஞ் சருத்தி யானார்க்கு, அவ்வுடனே சத்தி சதாசிவன் றானே. (௨௰)

அஞ்செழுத் தாலே யமர்ந்தன னந்தியு, மஞ்செழுத் தாலே யமர்ந்த பஞ்சாக்கர, மஞ்செழுத் தாகிய வக்கர சக்கர, மஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந் தானே. (௨௧)

கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற், கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினார், கூத்தனொன் றாகிய கொள்கைய ராயிற்பர், கூத்தனைக் காணுங் குறியது வாமே. (௨௨)

அத்திசைக் குள்நின்ற னலனை யெழுப்பியே, யத்திசைக் குள்நின்ற வவ்வெழுத் தோதிடு, மத்திசைக் குள்நின்ற வந்த மறையனை, யத்திசைக் குள்ளுற வாக்கினன் றானே. (௨௩)

தானே யளித்திடுந் தையலை நோக்கினாற், றானே யளித்திட்டு மேலுற வைத்திடுந், தானே யளித்த மகாரத்தை யோதிடத், தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே. (௨௪)

கல்லொளி யேயென நின்ற வடதிசை, கல்லொளி யேயென நின்றனன் இந்திரன், கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக், கல்லொளி யேயெனக் காட்டினன் றானே. (௨௫)

தானே யெழுகுணந் தண்சுட ராய்நிற்குந், தானே யெழுகுண வேதமு மாய்நிற்குந், தானே யெழுகுண மாவது மோதிடிற், றானே யெழுந்த மறையவ னாமே. (௨௬)

மறையவ னாக மதித்த பிறவி, மறையவ னாக மதித்திடக் காண்பர், மறையவ னஞ்செழுத் துண்ணிற்கப் பெற்ற, மறையவ னஞ்செழுத் தாமது வாகுமே. (௨௭)

ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும், மாகின்ற நாபியு ளங்கே யகாரமா, மாகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின், னாகின்ற வச்சுடர் யவ்வியல் பாமே. (௨௮)

யவ்வியல் பாய விருவன் றெழுத்தையுஞ், செவ்வியல் பாகச் சிறந்தன னந்தியு, மொவ்வியல் பாக வொளியுற வோதிடிற், பவ்வியல் பாகப் பரந்தனன் றானே. (௨௯)



பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம், வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கிற், றுரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக, வுரந்தரு மந்திர மோமென் றெழுப்பே. (௩௦)

ஓமென் றெழுப்பித்தன் னுத்தம நந்தியை, நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை, யாமென் றெழுப்பியவ் வாறறி வார்கள், மாமன் றுகந்த மகிழ்ந்திருந் தாரே. (௩௧)

ஆகின்ற சக்கரத் துள்ளே யெழுத்தைந்தும், பாகொன்றி நின்ற பதங்களில் வத்திட்டு, மாகொன்ற மைம்பத் தொருவெழுத் துண்ணிற்கப், பாகொன்றி நிற்கும் பராபரன் றானே. ()

பரமாய வஞ்செழுத் துள்நடு வாக, பரமாய நவசிவ பார்க்கில் மவயநசி, பரமாய சியநம வாம்பரத் தோதிற், பரமாய வாசி மயநமாய் நின்றே. (௩௩)

நின்ற வெழுத்துக்கள் நேர்தரு பூதமு, நின்ற வெழுத்துக்கள் நேர்தரு வண்ணமு, நின்ற வெழுத்துக்கள் நேர்தரு நின்றிடு, நின்ற வெழுத்துள் நின்றவன் றானே. (௩௪)

நின்றனை சக்கர நீளும் புவியெலா, மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக், கண்டது வாகக் கருதின நந்தியுங், குன்றிடை நின்றிடு கொள்கைய னாமே. (௩௫)

கொண்டவிச் சக்கரத் துள்ளே குணம்பல, கொண்டவிச் சக்கரத் துள்ளே குறியைந்துங், கொண்டவிச் சக்கரங் கூத்த னெழுத்தைந்துங், கொண்டவிச் சக்கரத் துள்நின்ற கூத்தே.

வெளியில் விரேகை யிரேகையில் அத்தலை, யொளியி லுகாரமுஞ் சுற்றிய வவ்வாய், வெளிதரு நாற்கொம்பு கோணத்து நாதந், தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே. (௩௭)

அகார வுகார சிகார நடுவாய், வகாரமோ டாறும் வளியுடன் கூடச், சிகார முடனே சிவஞ்சிந்தை செய்யவே, யகார முதல்வ னுவந்துநின் றானே. (௩௮)

அற்ற விடத்தே யகார மதாவது, அற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச், செற்ற மறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள், குற்ற மறுத்தபொன் போலுங் குளிகையே. (௫௧)

அவ்வென்ற போதினி லுவ்வெழுந் தாலித்தா, லுவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடு, மவ்வென்றன் னுள்ளே வழிபட்ட நந்தியை, யெவ்வண்ணஞ் சொல்லுகே னெந்தை யியற்கையே. ()

நீரெழுத்திவ் வுலகா றறிவது, வானி லெழுத்தொன்று கண்டறி வாரில்லை, யாரிவ் வெழுத்தை யறிவா ரறிவர்க, ளூனி லெழுத்தை யுணர்கிலர் தாமே. (௫௩)

காலை நவிலுறக் காயத்திரி லக்கர, மாலை நவிலுற வைம்பத மாவன, மேலு நவிலுற வேதம் விளம்பிய, மூல நவிலுற முத்தி தந் தானே. (௫௪)

நாவியின் கீழது நல்லெழுத் தொன்று, பாவிக ளத்தின் பயனறி வாரில்லை, போவிய ராலு மறியவொண் ணாதது, சேவிபுத் தானுந் திகழ்ந்திருந் தானே. (௫௫)

அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திர, மவ்வொடு சவ்வென் றாரு மறிகிலர், அவ்வொடு சவ்வென் றாரு மறிந்தபின், னவ்வொடு சவ்வு மருவிய வாறே. (௫௬)

மந்திர மொன்று மலரா லிடுவது, சுந்தரி மின்னே யுடம்பன் குறிக்குஞ், சந்திசெய் பார்க்கப்பர் தாம தறிகிலர், சந்தி தொழுதுபோ யார்த்தகன் றார்களே. (௫௭)

சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற, வாவிக்கு மந்திர மாதார மாவன, பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடு, நாவிக்குள் மந்திர மங்குச மாமே. (௫௮)

அருவினி லம்பர மன்னெழு நாதம், பெருந் துடியிடை பேணிய விந்து, மருவி யகார சிகார நடுவே, யுருவிட் டூறு முமைக் கிடமே. (௫௯)



விந்துவு நாதமு மேவி யுடன்கூடிச், சந்திர னோடே தலைப்படு மாயிடு, லந்தர வானத் தமுதம்பூ றிடி, மந்திர மாகுதி யாமே. (௬௦)

ஓரெழுத் தோரு மறியா ரறிகிலா, ரீரெழுத் தொன்றுக வோதி யுணரார்கள், மூவெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு, நாவெழுத் தாலே யுயிர்பெற லாமே. (௬௧)

இல எழுத்தோ டிரிக்கலை மூவைந்து மாதி யெழுத்தை யைம்பத்தோ டொன்றென்பர், சோதி யெழுத்தி னிலை மூன்றன, நாத வெழுத்திட்டு காட்டுகின் றேனே. (௬௨)

விந்துவி லுந்துவு நாத மெழுந்திட, பந்தச் சுழிவி யுதிருஅ கவெய்திய தாய், தந்திர வாகரங் காந்தமும் யாவுறு, மந்திர மைம்பத்தொன் றாமே. (௬௩)

ஐம்ப தெழுத்தே யனைத்துவே தங்களு, மைம்ப தெழுத்தே யனைத்தாக மங்களு, மைம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபி, னைம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே. (௬௪)

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தன, அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தன, அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கின, அஞ்செழுத் தாலே யமர்ந்துநின் றானே. (௬௫)

வீழ்ந்தெழ லாமவிசன் றிருநாமத்தைச், சோர்ந்தொழி யாமற் றுடன்று தொழுவார்க்குத், தாழ்ந்த வினைந்துயர் போக்குந் தலைவனும், போக்கறு மென்னும் புரிசடை யோனே. (௬௬)

உண்ணுந் மருந்து முலப்பிலி காலமும், பண்ணுறு கேள்விப் பட்ட மாகிக்கும், விண்ணவர் நமர் விரும்பி யடிதொழுந், தெண்ணிவர் எழுத்தறி வாகின் றானே. (௬௭)

ஞானத்தின் பெருமை யளவிட லாவது, ஞானத் தளவையு மாவது, ஞானத்தின் பெருமை யுணர்ந்தோ ரழுந்தலு, ஞானத்தின் வகைசெப்ப பரானு மாமே. (௬௮)

வேறெழுத் தாய்விண்ணா யப்புற மாய்நிற்குஞ் சீரெழுத்
தாய்நிலந் தாங்கிய மந்திரன், சீரெழுத் தாயங்கி யாயுயி ராய
மெழுத், தோரெழுத் தீசனு மொன்றுட னாமே. (௮௭)

நாலா மெழுத்தோசை நாலு முருவது, நாலா மெழுத்தி
னொன் றால் மடங்கிற்று, நாலா மெழுத்தே நவிலவல் லார்கட்
கு, நாலா மெழுத்தது நன்னெறி தானே. (௮௮)

இமைந்தன கோசத்திமை யென்னுள்ள மேவி, யமைந்தன வ
ங்கே நமசி வயவென்னும், பயந்தன்னை யோரும் பதமது பற்
றும், பெயர்ந்தனன் மற்றும் பிறந்திறத் தேனே. (௮௯)

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை, யோமத்தி லேயுத
மன்னு மொருத்திதன், நாம நமசி வயவென் றிருப்பார்க்கு,
சேமத் துணைவி சிவனின் றுனே. (௯௦)

பட்டம் பரிசே பரமஞ் செழுத்ததே, விட்ட மதித்திட் டிர
வு பகல்வர, நட்டம தாடு நடுவே நிலயங்கொண், டட்டதே சு
ட்டொரு னாகின் றனே. (௯௧)

அகார முயிரே யுகாரம் பரமே, மகார மலமாய் வருமப்
படிமூன்றில், சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமா, யகார முயி
ரென் றறையலு மாமே. (௯௨)

நகார மகாரஞ் சிகார நடுவாய், வகார மிரண்டும் வளிபு
டன் கூடி, யோகார முதற்கொண் டொருக்கா லுரைக்க, ம
கார முதல்வன் மனத்தகத் தானே. (௯௩)

ஐந்தின் வினைப் படலியுள் வாழ்வனா, வஞ்சத்து மஞ்செ
ழுத் தங்குசம் மாவன, வஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்
கே, யஞ்சாதி யாதி யகம்புக லாமே. (௯௪)

ஐந்து கலையி லகராதி தன்னிலே, வந்த நகராதி மாற்றி ம
கராதி, நந்தியை மூலத்தே நாடிப் பரையொடுஞ், சந்திசெய்
வார்க்குச் சடக்கில்லை தானே. (௯௫)



நமழுவுஞ் சிவாயமே யென்னு முயிரு மந்தர யோகமு மா
மழு யாகும், வெருள்வந்த சிவனுர் செனநியர் முலோ, வருடன்
கியங்கிய மாவனதிதே. (௯௬)

அஞ்சக மஞ்செழுத் துண்டை யறிந்தபின், னெஞ்சகத் து
ள்ளே நிறையும் பராபரம், வஞ்சக மில்லை மனைக்கு மழிவில்லை,
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே. (௯௭)

சிவாயவொ டவ்வே தெளிந்துள்ளத் தோதச், சிவாயவொ
டவ்வே சிவனுரு வாகுஞ், சிவாயவொ டவ்வுந் தெளியவல் லா
ர்கள், சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே. (௯௮)

சிகார வகார யகார முடனே, நகார மகார நடுவுற நா
டி, யோகார முடனே யொருக்கா லுரைக்கு, மகார முதல்வ
ன் மதித்துநின் றானே. (௯௯)

ஐம்முத லோனாக்கி நாடுக் கருமசம், எம்முத லெத்தி ல
டங்கிய வல்வினை, யிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்,
தம்முத லாகுஞ் சதாசிவன் றானே. (௱)

நவழுத்து சிவமு முயிர்பா மாகுந், நவமொன்றி நிலாதன
நித்திய மாகுந், நவமொன்றி னாம்பய மாதர வாலந்தி
மெனப தாரு மெனத் தெளி வுற்றதே. (௱௧)

கூடிய வெட்டு மிரண்டுங் குவிந்தறிந், நாடிய நந்தியை ஞா
னத்தி னுலேயுந்து, வாடிய வையரு மக்குவ வாயகந் தேடு
மதனைத் தெளிந்தறி யீரே. (௱௨)

எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர், எட்டு மிரண்டு மறியா
த வேழையர், எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப், பட்ட
அடித்தலத் தைச்சொற்கப் பாற்றியே. (௱௩)

எட்டெழுத் தன்றே நெட்டின வொன்றிரு, மிட்ட கருணா கினறு
வ, தெனெழுத் தொன்றிடு, வட்டத்தி லேவைத் தடையத் தெரிந்ததை

ட்டித், திட்டஞ்செழுந்தஞ் சமிசிக்கிரமே. (எச)

நாலவர் கட்டச் சதுர திருவாக, நாலிலும் மூவரோ டாற் றவ நாதிக, ளேனைப் பதினேட்டும் விந்துவு நாதமுந், சேவி யுரு செய்திய சக்கரந் தானே. (எரு)

பட்டண மாதவ மாற்றும் பராபரம், விட்டனர் தம்மை வி சித்தாரமவென்ப, கொட்டின பாயிறு மீசன் றிருந்திற, மொட் டுவை செய்ய ஞொன்றதி யேனே. (எசா)

தானே யுறுதித் தனியவும் வல்லனாய்த், தானே நினைத்த வை சொல்லவும் வல்லனாய்த், தானே தவிடங் கண்டவ டனையுந், தானே வணங்கித் தவமறு மாமே. (௪௪)

ஆமே யனைத்துயி ராகிய வம்மையுந், தாமே சகலமு மின்றலத் தையது, மாமே யனாதி போற்றி வணங்கிடிற், போமே வினைகளும் புண்ணிய னாகுமே. (௪௫)

புண்ணிய னாகிப் பொருந்தி யுலகெங்குங், கண்ணிய னாகிக் கலந்தங் கிருந்திடுந், தன்னிய னாகித் தானே முழுதுக்கும், மண்ணிய னாக வமர்ந்திருந் தானே. (௪௬)

தானந் திகழ்ந் கொலநு ளிற், நானந்த சக்கர நன்றறிவார்க் கெலாங், கானந் கன்னி கலந்த பராசத்தி, கோனந் வைய மிடையொளி யாவதே. (௪௭)

ஒளிக்கும் பராசத்தி யுன்னே யயறிந், தளிக்குமிச் சிக்கை யிற் காரணங் காட்டிடுந், தெளிக்கு மனமுடன் செல்வ முண்டாக்கு, மளிக்கு மிவளை யறிந்துகொள் வார்க்கே. (௪௮)

அறிந்திடுஞ் சக்கர மர்ச்சனை யோடே, வெறிந்திடும் வையத் திடரவை காணல், மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யும், பொறிந்திடுஞ் சிந்தை புகையில்லை தானே. (௪௯)

புகையில்லை சொல்லிய பொன்னொளி யுண்டாம், நகையில்லை கொல்ல நிலாமையி னாலே, மிகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாந், திகையில்லை சக்கரஞ் சேர்ந்தவர் தாமே. (௫௦)

சேர்ந்தவ ரென்றுந் திசைபொளி யானவர், காய்ந்தெழு மோல்வினை காணகி லாதவர், பாய்ந்தெழு முன்னொளி பாரிற் பரந்த, மாய்ந்தது கண்டுளன் மாவொளி தானே. (௫௧)

ஒளியது வொன்று மிடமது வீரும், தெளியது சக்கரங் கட்டறி வார்க்குத், தெளிவது ஞானமுஞ் சிந்தையுந் தேறப், பளிவது பஞ்சாக் கரமது வாமே. (௫௨)

ஆமே சதாசிவ நாயகி யானவ ளாமே யகோசரத் தானதி யானவ ளாமே சுவையொளி யூறோசை கண்டவ ளாமே யனாதியுயிர் தன்னாரு மாமே. (௬௨)

தன்னாரு மாகித் தானே முழுதுங்கொண், டென்னாரு மாகி யிடம்பெற நின்றவள், மன்னாரு நிலைக் காதுளு மாகாருங், கன்னாரு மெய்யுளுங் காணாது மாமே. (௬௩)

காணாது மாருங் கலந்துயிர் செய்வன, காணாது மாருங் கருத்தி லிருந்திடுங், காணாது மாருங் கலந்த வழிசெயக், காணாது மாருங் கருத்தறி வில்லையே. (௬௪)

நின்றிடு மேரு புயமு மொன்றாக், கன்றிடு முன்னங் கலந்தெங்கு நாருகக், கொண்டிடு மையங் குளம்பல நன்னாயுங், விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே. (௬௫)

மெய்ப் பொருளாகம் மெளனத்து விருக், கைப்பொருளாகக் கலந்தெழு சக்கரர், தற்பொருளாகச் சமைந்தது சேர்வதி, கற்பொருளாக கலந்திருந்தானே. (௬௬)

தானாறி ஞானஞ் சமைந்தது சேர்வதி, காலது கொண்டு கலந்தறி விழ்ந்தில், நான்ற நாளும் புகலவன் கண்டபின், சேதாது காயமுங் கேடில்லை காணுமே. (௬௭)

கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின், நாடில்லை நானறு கண்ணுறை வற்றபின், மாடில்லை காணுங் கருவழி கண்டபின், காடில்லை காணுங் கருத்துற் றிடத்திலே. (௬௮)

உற்றிட மெல்லா முலப்பில்ப ராசக்தி, கற்றிட மெல்லாக் கதிரொளி யானது, மற்றிட மில்லை வழியில்லை தானில்லை, சற்றிட மில்லை சமைப்பற நின்றிடே. (௬௯)

நின்றிடு மேற்கட மேற்புவி மென்று, நின்றிடு முன்னே நினைத்தவை யாவருக்கு, நின்றிடுஞ் சக்தி நிகழ்பெறக் கண்டிடு-



ம் நின்றிடு மேலை விளக்கொளி தானே. (௭௦)

விளக்கொளி மேனுற்ற மெளனத்து விருக், விளக்கொளி சக்கர மெய்ப்பொரு ளாகும், விளக்கொளி யாகிய மின்னொளி யாகுமே, விளக்கொளி யாகி விளங்கி நின்றே. (௭௧)

விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின், விளங்கிடு மெல்லிய வானது வாகும், விளங்கிடு மெய்நின்ற ஞானப் பொருளை, விளங்கிடு வார்கள் விளங்கினார் தானே. (௭௨)

தானே வெளியென வெங்கு நிறைந்தவ, டானே பரவெளியதா னவ, டானே சகமுமா யுதித்தவ, டானே யகிலத்தை யண்டசக்தியே. (௭௩)

அண்டத்தி னுள்ளே யளப்பரி தானவள், பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள், குண்டத்தி னுள்ளே குணம்பல கண்டவள், அண்டத்தி லிறை கலப்பறி யாதவே. (௭௪)

கலப்பறி யார்கடல் சூழுல கெல்லாம், புலப்பறி யாருடல் பேருயிர் தன்னைச் சலப்பறி யாரிவை சேர்வது காடுத், தப்பறி யாரவர் சமைந்தவர் தானே. (௭௫)

தானே யெழுந்தவ சக்கரந் தாங்கிச், மானே மதிவர பக்கிடை வைத்தபின், தேனே மிதிரை சிற்பர வெளி, யானேந் தானே கலந்த வணிவெல்லாம் கொண்டதே. (௭௬)

நின்றிய சக்கர கோதிடம் வேறியில், வென்றிடு மேவி மதியட் பொன்னையாம், கன்றிய வேறு கலந்திருந்து செய்வாள், வெற்றிய வல்லமை யெழுத்தனைய பக்கமே. (௭௭)

எய்க்க மரவுறி தன்னி லெழுதிய காய்ந்தவிப் பொன்னொளி ஏய்பத் தொன்றில் நிறைந்தபின், காய்ந்துவிழ் செம்பட்டால் கூட்டிட மாதகால தானுழி யேழு பண்ணுமே. (௭௮)

பக்கவிய பொன்றிப் பசப்பற நீர்த்து, பெற்றிய ...

கனி யின்பமு மெய்திடு, மன்னிய காமமு மான்முக மொத்த பின், முன்னென நேயகற் சேர்க்கலு மாகுமே. (௪௯)

ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி, போகின்ற சாந்து சவாது புழுகுநெய், யாகின்ற கற்பூர மாகோ சனைகுங், சேர்கின்ற வொன்பதுஞ் சேரவைத் திட்டே. (௫௦)

வைத்திடும் பொன்னுடன் மாதவ னோக்கிடுந், கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத், தச்சிறு வாகச் சமைந்த விம் மந்திர, மர்ச்சனை யாயிர மாயிரஞ் சித்தியே. (௫௧)

சித்தியி லன்னே திகழ்தரு சோதியா, மெத்தை கரத்த விருந்தன்று முன்னாளு, பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு, முத்தி வீமெழு முன்னிரு தாளே. (௫௨)

இருந்தனர் சத்திக ளறுபத்து நால்வ, ரிருந்தனர் கன்னிக ளெண்வகை யெண்மர், இருந்தனர் சூழ வெதிர்சக் கரத்தே, யிருந்த கரமிரு வில்லம்பு கொண்டே. (௫௩)

கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க், கண்டவிம் முத்தங் கனல்திரு மேனியாய்ப், பண்டமர் சோதிப் படிகத் தாளவ, ளண்டங் கொருத்தி யுணரவல் லார்க்கே. (௫௪)

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கிற், கலந்திருந் தெங்குங் கருவ பொழியும், மணந்தெழு மோசை யொளியது காணுந், தணந்தெழு சக்கரந் தான்றரு வாளே. (௫௫)

திருவழி யாகிய தத்துவ ஞானங், குருவழி யாருங் குணங்களு மின்று, கருவழி யாகுங் கணக்கை யறுத்துப், பெருவழி யாக்கும் பேரொளி தானே. (௫௬)

பேரொளி யாய பெரிய பெருந்தட்டர், சீரொளி யாகித் திகழ்தரு நாயகி, காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம், பாரொளி யாகப் பரந்துநின் றாளே. (௫௭)

பரந்த கரமிரு பங்கய மேந்திக், குவிந்த கரமிரு கொய்த



யிரிப் பாணி, பரிந்தருள் கொங்கைகள் முத்தார் பவள, மிருந்தகல் லாடை மணிபொருந் தன்றே. (௫௮)

மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை, பணிபவ ரன்றி யருளில்லை யாருந், துணிபவர் நெஞ்சிடை யுன்னரு ளாகிப், பணிபவர்க் கன்றே பரகதி யாமே. (௫௯)

பரந்திருந் துள்ளே யறுபது சத்தி, கரந்தன கன்னிக ளப்படி சூழ, மலர்ந்திரு கையின் மலரவை யேந்திச், சிறந்தவ ரேத்துஞ் சிரீம்தன மாமே. (௬௦)

தனமது வாகிய வையத்தை நோக்கி, மனமது வோடி மதிக்கிலோ ராண்டிற், கனமவை யற்றுக் கருதிய நெஞ்சந், தினகர னிட செய்திய தாமே. (௬௧)

ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர், போகின்ற பேரொளி யாய மலர்ந்தாய், போகின்ற பூரண மாக நிறைந்தபின், சேர்கின்ற செந்தழன் மண்டல மானதே. (௬௨)

ஆகின்ற மண்டலத் துள்ளே யமர்ந்தவ, ளாகின்ற வைம்பத் தறுவகை யானவ, ளாகின்ற வைம்பத் தறுசத்தி நேர்தரு, வாகின்ற வைம்பத் தறுவகை சூழலே. (௬௩)

சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமா, யாங்கனி முத்த மழகிய மேனியுந், தாங்கிய கையவை நாற்கினி ஞானமா, யேந்து சரங்க ளெடுத்தமர் பாசமே. (௬௪)

பாசம தாகிய வேரை யறுத்திட்டு, நேசம தாக நினைந்திரு முப்போதும், நாசம தெல்லா நடந்திடு மையாண்டுற், காசினி மேலமர் கண்ணுத லாகுமே. (௬௫)

கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி, பண்ணுறு நாதம் பகையற நின்றபின், விண்ணமர் சோதி விளங்க ஹிரீங்கார, மண்ணுடை நாயகி மண்டல மாகுமே. (௬௬)

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக், கண்டகத்

தன்னே கருதி யிருந்திடும் விண்டகத் தன்னே விளங்கி வருதலாற், றண்டகத் துள்ளவை தாங்க ளுமாமே. (௬௭)

தாங்கிய நாபித் தடமலர் மண்டலத், தோங்கி யெழுங்கலைக் குள்ளுறை வாலை, யோங்க வரும்பிறப் பெண்ணை யறுத்திட, வாங்கிய நாதம் வலியுட லுறுமே. (௬௮)

நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம், பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம், பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தா, ளாவுக்கு நாயகி யங்கமர்ந் தாளே. (௬௯)

அன்றிரு கையி லளந்த பொருண்முறை, யின்றிரு கையி லெடுத்தவெண் குண்டிகை, மன்றது காணும் வழியது வாகவே, கண்டங் கிருந்தவர் காரணி காணுமே. (௭௰)

காரணி சத்திக ளைம்பத் திரண்டெனக், காரணி கன்னிக ளைம்பத் திருவராய்க், காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்குங், காரணி தன்னரு ளாகிநின் றாளே. (௭௧)

நின்றவிச் சத்தி நிலைபெற நின்றிடக், கண்டவிவ் வன்னி கலந்திடு மோராண்டிற், கொண்ட விரதநீர் குன்றுமை வின்றிடின், மன்றினி லாடு மணியது காணுமே. (௭௨)

கண்டவிச் சத்தி யிருதய பங்கயங், கொண்டவித் தத்துவ நாயகி யானவள், பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட, வின்றென் மனத்து ளினிதிருந் தாளே. (௭௩)

இருந்தவிச் சத்தி யிருநாலு கையிற், பரந்தவிப் பூங்கிளி பாச மழுவாள், கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங், கிருந்தவள் கூத்துகந் தாளே. (௭௪)

உகந்தனள் பொன்முடி முத்தார மாகப், பகந்த பவளமும் பட்டாடை சாத்தி, மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து, தழைந்தங் கிருந்தவ டான்பச்சை யாமே. (௭௫)

பச்சை யிவளுக்குப் பாங்கிமா ரெட்டுக், கொச்சைய



ரெண்மர்கள் கூடி வருதலாற், கச்சணி கொங்கைகள் கைவிரு காப்பதா, யெச்ச விடைச்சி யிலிருந் தாளே. (௭௬)

தாளதி னுள்ளே தாங்கிய சோதியைக், காலது வாகக் கலந்துகொ ளென்று, மாலது வாக வழிபாடு செய்துநீ, பாலது போலும் பரந்தெழு விண்ணிலே. (௭௭)

விண்ணமர் நாபி யிருதய மாங்கிடைக், கண்ணமர் கூபங் கலந்து வருதலாற், பண்ணமர் நாதத்த மண்டல மானது, தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே. (௭௮)

கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்தா, தாபத்துச் சத்தித் தியங்கி வருதலா, லாபத்துக் கைக ளடைந்தன தாமொத்து, பாச மறுக்கப் பரந்தன சூலமே. (௭௯)

சூலந்தண் டொள்வாள் சுடர்பறை ஞானமாய், வேலம் புதமரு காகிளி வில்கொண்டு, ஞாலம்பூப் பாச மழுகத்தி கைக்கொண்டு, கோலஞ்சேர் சங்கு குவிந்தகை யெண்ணென்றே. (௮௰)

எண்ணமர் சத்திக ளறுபத்து நாலுட, னெண்ணமர் சத்திக ளறுபத்து நால்வரா, மெண்ணிய பூவித ழுள்ளே யிருந்தவ, ளெண்ணிய வெண்ணங் கடந்துநின் றாளே. (௮௧)

கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு, தொடர்ந்தணி முத்து பவளங்கச் சாகப், படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு, மடக்கை நிதியவள் மன்றினின் றாளே. (௮௨)

நின்றவிச் சத்தி நிரந்தர மாகவே, கண்டிடு மேரு வலிமாதி நாலுடன், பண்டைய வாயின் பகட்டை யறுத்திட, வென்றிய தீப முனைந்தார்க் குண்டாமே. (௮௩)

உண்டோ ரதோமுக முத்தம மானது, கண்டவிச் சத்தி சதாசிவ நாயகி, கொண்ட முகமைந்து கூறுங் கரங்களும், பொன்றிரண் டாகவே முன்னதா னானதே. (௮௪)

நன்மணி சூலங் கபாலங் கிளியுடன், பன்மணி நாக மழு கத்தி பந்தாகும், கன்மணி தாமரைக் கையிற் றமருகம், பொன்மணி பூணாரம் பூசனை யானதே. (அ௫)

பூசனை சத்திக ளெண்ணைவர் சூழவே, நேசவன் கன்னிக ளற்பத்து நேரதாய்க், காசினி சக்கரத் துள்ளே கலந்தவள், மாசடை யாமன் மகிழ்ந்திருந் தார்களே. (அ௬)

தாரத்தி னுள்ளே தங்கிய சோதியைப், பாரத்தி னுள்ளே பரந்தெழுந் திட, வேரது வொன்றின் னெண்ணு மலருமாய், காரது போலக் கலந்தெழு மண்ணிலே. (அ௭)

மண்ணி லெழுந்த அகார உகாரங்கள், விண்ணி லெழுந்து சிவாய நமவென்று, கண்ணி லெழுந்தது காண்பரி தன்றுகொல், கண்ணி லெழுந்தது காட்சி தரவென்றே. (அ௮)

என்றங் கிருந்த வமுத கலையிடை, சென்றங் கிருந்த வமுத பயோதரி, கண்டங் கரியுரு வெள்ளிபொன் மன்னவை, கொண்டங் கிருந்தது வண்ண மமுதே. (அ௯)

அமுதம தாக வழகிய மேனி, படிகம தாகப் பரந்தெழு முள்ளே, குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்து, கெமுதம தாகிய கேடிலி தானே. (௯0)

கேடிலி சத்திகண் முப்பத் திருவரு, நாடிலி கன்னிக ளொன் பதின்மரும், பூவிலி பூவத னுள்ளே யிருந்தவர், நாவிலி தன்னை நணுகிநின் றார்க்கே. (௯௧)

நின்றது புத்தி நிறைந்திடும் வன்னியுங், கண்டது சோதி கருத்து ளிருந்திடக், கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு, விண்ட வௌகாரம் விளங்கின வன்றே. (௯௨)

விளங்கிடு வானிடை நின்றவை யெல்லாம், வணங்கிடு மண்டல மன்னுயி ராக, நலங்கிளர் நன்மைக ளான நேர்த்தச், சுளங்கிடை நின்றிவை சொல்லலு மாமே. (௯௩)



ஆமே யதோமுக மேலே யமுதமாய்த், தாமே யகாரந் தழைத்தெழுஞ் சோமனுங், காமேல் வருகின்ற கற்பக மானது, பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே. (௯௪)

பொற்கொடி யாளுடை பூசனை செய்திட, லக்கணி யாகிய வாங்காரம் போயிடு, மற்கட மாகிய மண்டலந் தன்னுளே, பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே. (௯௫)

பேதை யவளுக்குப் பெண்மை யழகாகுந், தாதை யவளுக்குத் தாணுவு மாயிற்று, மாதை யவளுக்கு மண்ணுந் திலதமாய்க், கோதையர் சூழக் குவிந்திடங் காணுமே. (௯௬)

குவிந்தன சத்திகண் முப்பத் திருவர், நடந்தனர் கன்னிக ளெண்மர் சூழப், பரந்திதழ் ஆகிய பங்கயத் துள்ளே, யிருந்தனள் காணு மிடம்பல கொண்டே. (௯௭)

கொண்டங் கிருந்தனர் கூத்த னொளியினைக், கண்டங் கிருந்தனர் காரணந் தன்னது, பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமா, லின்றென் மனத்துளே யில்லடைந் தானுமே. (௯௮)

இல்லடைந் தானுக்கு மில்லாத தொன்றில்லை, யில்லடைந் தானுக் கிரப்பது தானில்லை, யில்லடைந் தானைத் தெளியவர் தாமெவ்வா, யில்லடைந் தானுக்கு மில்லாதில் லானையே. ( )

ஆனை மயக்கு மறுபத்து நாற்றறி, யானை யிருக்கு மறுபத்து நாலொளி, யானை யிருக்கு மறுபத்து நாலறை, யானையுந் தோயு மறுபத்து நாலிலே. (௧00)

அ-வ அதிகாரம் - ௧௦௦-திருமந்திரம்-௫௩௯.

நாலாந்தந்திரம் முற்றும்.

அ-வ தொப்புப்பாயிரமுட்பட - அதிகாரம்-௪௨.

கூடிய திருமந்திரம்-௧௭௪௮.

## ஐந்தாந் தந்திரம்.

### சுத்தசைவம்.

ஊருமுலகமு மொக்கப் படைக்கின்ற, பேரறி வாளன் பெருமை குறித்திடின், மேருவு மூவுல காளி யிலங்கெழுந், தாரணி நால்வகைச் சைவமு மாமே. (க)

சத்து மசத்துஞ் சதசத்துந் தான்கண்டு, சித்து மசித்துஞ் சேர்வுறா மேநீத்து, சுத்த மசுத்தமுந் தோய்வுறா மேநின்று, நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு மேயமே. (உ)

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக, முற்பத ஞான முறைமுறை நண்ணியே, தொற்பத மேவித் துரிசற்று மேலான, தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. (ங)

வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த, நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர், பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய, நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே. (ச)

### அசுத்தசைவம்.

இணையார் திருவடி யேத்துஞ்சீ ரங்கத், திணையா ரிணைக்குழை யீரிணை முத்திரை, குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்றா, தினையாஞ் சரியை கிரியையி னார்க்கே. (க)

காதுப்பொ னார்ந்த கடுக்க னிரண்டுசேர்த், தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன், சோதனை செய்து துவாதச மார்க்கரா, யோதி யிருப்பா ரொருசைவ ராகுமே. (உ)

கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டனர், கண்டங்க ளொன்பதுங் கண்டா வரும்பொருள், கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டமாங், கண்டங்க ளொன்பதுங் கண்டோ ரசுத்தசைவரே. (ங)



ஞானி புவியெழு நல்லா லயத்துடன், மோன நிலையு முழுவெண்ணெய் சித்தியு, மேனா விலமு மெழுதா மறையீறுங், கோனுறு தன்னையுங் காணுங் குணத்தரே. (ச) அசு-அ.

### மார்க்கசைவம்.

பொன்னாற் சிவசா தனம்பூதி சாதன, நன்மார்க்க சாதன மாஞான சாதகந், துன்மார்க்க சாதகந் தோன்றாத சாதனஞ், சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே. (க)

கேடறு ஞானி கிளர்ஞான பூபதி, பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தி, லூடுறு ஞானோ தயனுண்மை முத்திபோன், பாடுறு சுத்தசை வப்பத்த சித்தனே. (உ)

ஆகம மொன்பா னதிலான நாலேழு, மோகமி லொன்று முப்பேத முற்றுடன், வேதமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன், றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே. (ங)

சுத்த மசுத்தந் துரியங்க ளேழொடுஞ், சுத்த மசுத்தந் தணந்த பராபரை, யுத்த பராபரை யுள்ளாம் பராபரை, யத்த னருட்சத்தி யாயெங்கு மாமே. (ச)

சத்து மசத்துந் தணந்தவர் தானாகிச், சித்த மசித்துந் தெரியாச் சிவோகமாய், முத்தியு ளானந்த சத்தியுண் மூழ்கினோர், சித்தியு மங்கே சிறந்துள தானே. (டு)

தன்னைப் பரனைச் சதாசிவ னென்கின்ற, மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற, முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை, யுன்னத் தருஞ்சுத்த சைவ வுபாயமே. (சா)

பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போத, மாரண மந்த மதித்தானந் தத்தேறித், தேரண வீராறிற் செடிப்போகங், காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. (எ)

மாறுத ஞான மதிப்பற மாயோகந், தேறுத லின்னைய

த் தேற்றிச் சிவமாக்கிப், பேரான பாவனை பேணி நெறிநிற்றல், கூறுரு ஞானி சரிதை குறிக்கிலே. (௮)

வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியர்தார், நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள், வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர், சாதாரண மன்ன சைவ ருபாயமே. (௯)

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள், கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள், எண்ணினைச் சென்றணு காமல வெண்பதம், மண்ணினைச் சென்றணு காப்பசு பாசமே. ()

ஒன்று மிரண்டு மிலதுமா யொன்றாக, நின்று சமய நிராகார நீங்கியே, நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற், சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. (௧௧) ஆ. ௧௧.

கடுஞ்சுத்தசைவம்.

வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி, யாடம் பரமின்றி யாசாபா சஞ்செற்று, பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச், சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே. (௧)

உடலான வைந்தையு மோரா றைந்து, மடலான மாமாயை மற்றுள்ள நீவப், படலான கேவல பாசந் துடைத்துத், திடமாய்த் தமையுற்றல் சித்தாந்த மார்க்கமே. (௨)

சுத்தச் சிவனுரை தானத்திற் றோயாமல், முத்தர் பதப்பொருண் முத்தியித் தாமூன்று, மத்தனை யான்மா வரனெறி யாமைக் கற்றுத், சுத்தச் சிவமாவர் சுத்த சைவரே. (௩)

நானென்றுந் தானென்று நாடினர் நாடோறு, நானென்ற தானென் றிரண்டிலாத் தற்பதந், தானென்று நானென் றுரைத்தவ ரத்தநர், நானென்று தானென்றுஞ் சாற்றகி லேனே. (௪)

சாற்றரி தாஞ்சிவ தத்துவஞ் சித்தித்தார், லாற்றரி தாகிய



வைத்து மடங்கிடி, மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும், பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. (௫) ஆ. ௨௪.

சரியை.

நேர்ந்திடு மூல சரியை நெறியிதென், றாய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமா, னேர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத், தோர்ந்திடுஞ் சுத்த சைவத் துயிரதே. (௧)

உயிர்க்குயி ராய்நிற்ற லொண்ஞான பூசை, யுயிர்க்கொளி நோக்கன் மகாயோக பூசை, யுயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை, செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே. (௨)

காடு கரான் கற்றிருக் கோயிலுந், தேடித் திரிந்து சிவபெருமானென்று, பாடிப் பணியின் பணிந்தபின், கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. (௩)

பத்தர் சரிதை படுவோர் கிரியையோ, ரத்தகு தொண்ட ருள்வேடத் தாகுவோர், சுத்த வியமாதி சாதகர் தூயோர்கள், சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே. (௪)

சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ ராயினோர், சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோ, ராய்ந்த கிரியையோ ரர்ச்சனை தப்பாதோர், நேர்ந்த சரிதையோர் நீணிலத் தோரே. (௫)

கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை, யரிய சிவனுரு வருவுரு மருபந், தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை, புரியணை நேயத் துயர்பூசை யாமே. (௬)

சரியாதி நான்குந் தருஞான நான்கும், விரிவான வேதாந்த சித்தாந்த மாறும், பொருளான நந்தி பொன்னகர் போந்து, மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. (௭)

சமையம் பலசுத்தித் தன்செய லற்றிடி, னமையும் விசே

டமு மரன்மக் திரகத்தி, சமைய திருவானந் கலாகத்தி யா
கு மமைமல்லு ஞான மார்க்கம் அபிடேகமே. (௯) ஆ. ௩௨.

---

## கிரியை.

பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண், டெத்திக் கில
லில்லை யென்பதி னமலர்க், கொத்துத் திருவடி நீழல் சரணெ
னத், தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. (௧)

காணுறு கோடி கடிகமழ் சந்தனம், வாணறு மாமலரிட்
டு வணங்கிடு, மூனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது, தேனமர் பூ
ங்குழல் சேரவொண் ணாதே. (௨)

கோனக்கன் றாயே குரைகழ லேத்துமின், ஞானக்கன்
றாயே நடுவே புகுந்தருள், வானக்கன் றாகிய வானவர் கைதொ
ழு மானக்கன் றீச னருள்வள்ள லாமே. (௩)

இதயபணித் தென்றிசை மண்டல மெல்லா, மறுபணி செ
ய்கின் றவனொரு கூற, விறுபணி மாறுடன் செய்பவ னீசன்,
பதிபணி செய்வது பத்திமை காணே. (௪)

பத்தன் கிரியை சரிதை பயில்வுற்றுச், சுத்த வருளாற் று
ரிசற்ற யோகத்தி, லுய்த்த நெறியு மணர்கின்ற ஞானத்தா
ற், சித்தங் குருவருளாற் சிவ மாகுமே. (௫)

அன்பி னுருகுவ னாளும் பணிசெய்வன், செம்பொ
ன் செய்மேனி கமலத் திருவடி, முன்புநின் றாங்கே மொ
ழிவ தெனக்கருள், என்பிலுட் சோதி யிலங்குகின் றானே. (௬)
ஆ. ௩௩.

---

## யோகம்.

நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித், தறியிருந்
தாற்போலத் தம்மை யிருத்திச், சொறியினுந் தாக்கினுந் து
ண்ணென் றுணராக், குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. ()



ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது, வூழிதோ றூழி யு
ணரவுந் தானொட்டா, னூழி யமரு மியைய வென்றுளா, னூழி
முயன்றுமோ ருச்சியு ளானே. (௨)

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற், சீவனுக் குள்
ளே சிவமணம் பூத்தது, வோவியம் போல வுணர்ந்தறி வாள
ர்க்கு, நாவி யணைந்த நடுதறி யாமே. (௩)

உய்ந்தன மென்றே குறியொருங் காண்கிலீர், கந்த மலர்த்
தரக்கின்ற சந்தியைச், சிந்தை புறமே தெளிந்திரு வீர்கிலால்
முந்தப் பிறவிக்கு மூலவித் தாகுமே. (௪)

எழுத்தொடு பாடலு மெண்ணெண் கலையும், பழித்தலைப்
பாசப் பிறவியு நீங்கா, வழித்தலைச் சோமனோ டங்கி யருக்கன்,
வழித்தலை செய்யும் வகை யுணர்ந் தேனே. (௫)

விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும், விரும்பிநின்
றேசெய்யின் மெய்யுரை யாகும், விரும்பிநின் றேசெய்யின் மெ
ய்த்தவ மாகும், விரும்பிநின் றேசெய்யில் விண்ணவ னாகுமே. ()

பேணிற் பிறவா வுலகருள் செய்திடுங், காணிற் றனது க
லவியு ளேநிற்கு, நாணி னரக நெறிக்கே வழிசெயு, மூணிற் சு
டுமங்கி யுத்தமன் றானே. (௭)

ஒத்தசெங் கோலா ருலப்பிலி மாதவ, ரெத்தனை யாயிரம்
வீழ்ந்தவ ரெண்ணிலி, சித்தர்க டேவர்கள் மூவர் பெருமையா
மத்தனை யீசனென்றே யன்புறு வார்களே. (௮)

யோகிக்கு யோகாதி மூன்றினைச் சொன்னிற்சே யோகத் தரு
ளீயாதி சரியையாந், தாகத்தை விட்ட சரியையோன் றாமெ
ன்று, மாதிந்தன் பத்தியு ளன்புவைத் தேனே. (௯)

யோகச் சமயமே யோகம் பலவுன்னல், யோக விசேடமே
யட்டாங்க யோகமாம், யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்,
யோகவபி டேகமே யொண்சித்தி யுற்றலே. (௧௦) ஆ. ௩௪.

---

## ஞானம்.

ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை, ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று, ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்கா, ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. (௧)

சத்தமுஞ் சத்த மனமுந் தருமன, முய்த்த வுணர்வு முணர்ந்த மகந்தையுஞ், சித்தமொன் றில்லாச் சித்திக்குஞ் செய்கையுஞ், சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. (௨)

தன்பா லுலகுந் தனக்கரு ளாவது, மன்பா லெனக்கரு ளாவது மாவன, வென்பார்கண் ஞானமு மெய்யுஞ் சிவோகமும், பின்பாலின் நேயமும் பெற்றிருந் தானே. (௩)

இருக்குஞ் செவ்வி யிடம்பிரம மாகும், வருக்கஞ் சராசர மாகு முலகந், தருக்கிய வாசார மெல்லாந் தருமே, திருக்கு மில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. (௪)

அறிவு மடக்கமு மன்பு முடனே, பிறியா நகர்மன்னும் பேருடை யாளன், குறியுங் குணமுங் குரைகழ லீசன், நெறியறி வார்க்கிது நிற்குமொளி யாமே. (௫)

ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையு, ளேனம் விளைந்தெதிர் கொள்வழி நேர்தருங், கூனல் மதிமண் டலத்தெதிர் நீர்கண்டு, வூன மறுத்துநின் றொண்சுட ராகுமே. (௬)

ஞானிக் குடன்குண ஞானத்தி லைந்துமா, மோனிக் கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து, மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுந், தானிக் குலத்தோர் சரியை கிரியையே. (௭)

ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு, ஞானத்தின் ஞானமே நானென தென்றும்விட், ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி, ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. (௮)

நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன், புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன், கண்ணிய கேவல ஞானக்கண் கண்டோன், திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. ()



ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல், ஞான விசேடமே நாடு பரோதயம், ஞான நிர்வாணமே நன்றறி வானருள், ஞானாபி டேகமே நற்குரு பாதமே. (௧௦) ஆ. ௲அ.

---

## சன்மார்க்கம்.

சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத், தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு, சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க், கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. (௧)

சைவப் பெருமைத் தனிநா யகனந்தி, யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு, தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய, வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. (௨)

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப், பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக், குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத், தருமுத்தி சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. (௩)

தெளிவறி யாதார் சிவனை யறியார், தெளிவறி யாதார் சீவனு மாகார், தெளிவறி யாதார் சிவமாக மாட்டார், தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. (௪)

தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று, மோனம தாமொழிப் பாலுற்ற ராவது, மீனமில் ஞானானு பூதியி லின்பமுந், தானவ னாயுற்ற லானசன் மார்க்கமே. (௫)

சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ், சன்மார்க்கத் தார்க்கு மிடத்தொடு தெய்வமுஞ், சன்மார்க்கத் தார்க்கு மியம்புவன் வேடமுஞ், சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தரிசனம். (௬)

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம், பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்குந், துன்மார்க்கம் விட்ட குருஞ்சன் மார்க்கத்திற், சன்மார்க்கத் தாலவ ரெய்துவர் மார்க்கமே. (௭)

சன்மார்க்க மெய்த வருமருந் தேடிக்கும், பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்று, சன்மார்க்கந் தானே சிவனெறி நாடலே, சொன்மார்க்க மென்னச் சுருதிகை கொள்ளுமே. (௮)

அன்னிய பாசமு மாகுங் கருமமு, முன்னு மலத்தசு மூலப் பகுதியும், பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந், தன்னெறிக் கண்டவர் சன்மார்க்கத் தோரே. (௯)

பசபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக், கசியாத நெஞ்சக் கசியக் கசிவித், தொசியாத வுண்மைச் சொருபோ தயத்துற், றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே. (௰)

மார்க்கஞ்சன் மார்க்கிகள் கிட்ட வருப்பது, மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை, மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர், மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே. (௧௧) ஆ. ௧௧.

---

சகமார்க்கம்.

சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது, மன்மார்க்க மாமுத்தி சித்திக்கு ளைய்பதாம், பின்மார்க்க மானது பேரப் பிறந்திறந், துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே. (௧)

மருவுந் துவாதச மார்க்கமில் லாதார், குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார், வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகு, முருவுங் கிளையு மொருங்கிழப் போரே. (௨)

யோகச் சமாதியி னுள்ளே யகலிடம், யோகச் சமாதியி னுள்ளே யுளரொளி, யோகச் சமாதியி னுள்ளே யுளசத்தி, யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே. (௩)

யோகமும் போகமும் யோகியர்க் காகுமால், யோகஞ் சிவருப முற்றிடு முள்ளத்தோர், போகம் புவியிற் புருடார்த்த சித்தியா, தாகு மிரண்டு மழியாத யோகிக்கே. (௪)



ஆதார சோதனை யானாடி சுத்திகள், மேதாதி யீரெண் கலாந்த விந்தொளி, போதா லயத்தப் புலன்கர ணம்புத்தி, சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. (௫)

பிணங்கிநிற் கின்றவை யைந்தையும் பின்னை, யணங்கி யெறிவ னயிர்மன வாளாற், கணம்பதி னெட்டுங் கருது மொருவன், வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே. (௬)

வளங்கனி யொக்கும் வளநீதந் தார்க்கும், வளங்கனி பொப்பதோர் வாய்மையு மாகு, மிளங்கனித் தன்ன முசுந்திருப் பார்க்கும், பழங்கனித் தன்னே பருந்தலின் றானே. (௭) ஆ. ௭௧.

---

சற்புத்திரமார்க்கம்.

மேவிய சற்புத்திர மார்க்கமே மெய்த்தொழி, றாவிய தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழி, லாவ திரண்டு மகன்று சகமார்க்கத், தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே, (௧)

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல், ஆசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை, நேசித் திட்டன்னமு நீசுத்தி செய்தன்மற், றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே. (௨)

அறுகாற் பறவை யலர்தேர்ந் தழுந்தி, மறுகா நறையுண ணந் தாமரை நிலத், துறுகா நறுமலர் கொய்பவ னன்றி, யறுகா லரநெறி சேரகி லாரே. (௩)

அருங்கரை யாவது வவ்வடி நீழற், பெருங்கரை யாவது பிஞ்ஞக னாணை, வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லா, மொருங்கரை யாயுல கேழினுந் தானே. (௪)

உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி, வியந்து மரனடிக் கேமுறை செய்யின், பயந்தும் பிறவிப் பயனது வாகும், பயந்து பரிக்கிலப் பான்மைய னாமே. (௫)

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்றன்னை, யென்றுந் தொழுவ னெழிற்பரஞ் சோதியைத், துன்று மலர்தூவித் தொழுமின் றொழுந்தோறுஞ், சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. (௬)

திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் சரியை, யுருமன்னி வாழு முலகத்தீர் கேண்மின், கருமன்னு பாசங்கை கூம்பத் தொழுது, விருமன்னு காலோறு மின்புற் றிருந்தே. (௭) ஆ- ௮௩.

---

தாசமார்க்கம்.

எளியன தீப மிடமலர் கொய்த, லளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல், பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி, தனிதொழில் செய்வது தான்றாச மார்க்கமே. (௧)

அதுவிது வாதிப் பரமென் றகல்வ, ரிதுவழி யென்றங் கிறைஞ்சின தில்லை, விதிவழி யேசென்று வேங்கையி னாடு, மதுவிது நெஞ்சிற் றணிக்கின்ற வாறே. (௨)

அந்திப்பன் றிங்களதன்பின்பு ஞாயிறு, சிந்திப்ப னென்று மொருவன் செறிகழல், வந்திப்ப வானவர் தேவனை நாடொறும், வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே. (௩)

அன்னலை வானவ ராயிரம் பேர்சொல்லி, யுன்னுவ ருள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக், கன்னவ னென்று கருது மவர்கட்குப், பன்னவன் பேரன்பு பற்றிநின் றானே. (௪)

வாசித்தும் பூசித்து மாமலர் கொய்தும், பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின், மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை, நேசத் திருந்த நினைவறி யாரே. (௫) ஆ- ௮௮.

---

சாலோகம்.

சாலோக மாதி சரிதாதி யிற்பெறுஞ், சாலோக சாமீபந் தக்குஞ் சரியையா, மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம், பாலோக மில்லாப் பரனுரு வாமே. (௧)



சமயங் கிரியையிற் றன்மனங் கோயில், சமய மனுமுறை தானே விசேடஞ், சமயத்து மூலந் தனைத்தேறல் மூன்றுஞ், சமயாபி டேகமே தானுஞ் சமாதியே. (௨) ஆ- ௯௰.

---

சாமீபம்.

பாசம் பசுவான தாகுமிச் சாலோகம், பாச மருளான தாகுமிச் சாமீபம், பாசஞ் சிவமான தாகுமிச் சாரூபம், பாசங் கரைபதி சாயுச் சியமே. (௧) ஆ- ௯௧.

---

சாரூபம்.

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந், தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா, வங்கத் துடல்சித்தி சாதக ராகுவ, ரிங்கிவ ராக விழிவற்ற யோகமே. (௧)

சயில லோகத்தினைச் சார்ந்த பொழுதே, சயிலம தாகுஞ் சராசரம் போலப், பயிலுங் குருவின் பதிப்புக்க போதே, கயிலை யிறைவன் கதிர்வடி வாமே. (௨) ஆ- ௯௩.

---

சாயுச்சியம்.

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது, சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல், சைவஞ் சிவந்தன்னைச் சாராம னீவுதல், சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே. (௧)

சாயுச் சியஞ்சாக்கி ராதீதஞ் சாருதல், சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல், சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச், சாயுச் சியமனத் தானந்த சத்தியே. (௨) ஆ- ௯௫.

---

சத்திநிபாதம்-மந்தம்.

இருட்டறை மூலை யிருந்த குமரி, குருட்டுக் கிழவனைக்

கூடற் குதித்துக், குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி, மரு
ட்டி யவனை மணம்புரிந் தானே. (௧)

தீம்புல னான திசையது சிந்திக்கி, லாம்புல னாயறி வா
ர்க்கமு தாய்நிற்குந், தேம்புல னான தெளிவறி வார்கட்குக்,
கோம்புல னாடிய கொல்லையு மாமே. (௨)

இருணீக்கி யெண்ணிற் பிறவி கடத்தி, யருணீங்கா வண்
ணமே யாதி யருளு, மருணீங்கா வானவர் கோனொடுங் கூடிப்,
பொருணீங்கா வின்பம் புலம்பயிற் றானே. (௩)

இருள்சூ ழறையி லிருந்தது நாடிற், பொருள்சூழ் விளக்
கது புக்கெரிந் தாப்போன், மருள்சூழ் மயக்கத்து மாமலர்
நந்தி, யருள்சூ ழிறைவனு மம்மையு மாமே. (௪) ஆ ௧௧

---

மந்தரம்.

மருட்டிப் புணர்ந்து மயக்கமு நீக்கி, வெருட்டி வினையறு
த் தின்பம் விளைத்துக், குருட்டினை நீக்கிக் குணம்பல காட்
டி, யருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே. (௧)

கன்னித் துறைபடிந் தாடிய வாடவர், கன்னித் துறை
படிந் தாடுங் கருத்திலர், கன்னித் துறைபடிந் தாடுங் கருத்
துண்டேற், பின்னைப் பிறவிப் பிறிதில்லை தானே. (௨)

செய்யன் கரியன் வெளியனற் பச்சைய, னெய்த வுணர்
ந்தவ ரெய்வ ரிறைவனை, மையென் றகன்ற பகுதி போர்த்த
வெம், மைய னிவனென்று காதல்செய் தீரே. (௩)

எய்திய காலங்க ளெத்தனை யாயினுந், தையலுந் தானுந்
தனிநா யகமென்பர், வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்,
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே. (௪)

கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி, ப
ண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர், வண்டுகொண் டாடு ம



லர்வார் சடையண்ண னின்றுகண் டார்க்கிருணீக்கி நின் றதே.
ஆ ௧௦௫.

---

தீவிரம்.

அன்னிக்கும் பெண்பிள்ளை யப்பனார் தோட்டத்தி, லெ
ன்னிக்கு மேழும் பிறவி யுணர்விக்கு, முன்னிற்ப தெல்லை
தொழிய முதல்வனைக், கன்னுற்று நின்ற கலியது வாகுமே.

பிறப்பை யறுக்கும் பெருந்தவ நல்கு, மறப்பை யறுக்கு
ம் வழிபட வைக்குங், குறப்பெண் குவிமுலை கோமள வல்லி,
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே. (௨)

தாங்குமி னெட்டுத் திசைக்குந் தலைமகன், பூங்கமழ்
கோதைப் புரிகுழ லாளொடு, மாங்கது சேரு மறிவுடை யார்
கட்குத், தங்கொளி நீலந் தொடர்ந்து மாமே. (௩)

நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும், பணிகினும்
பன்மலர் தூவிப் பணிவ, னணுகிய தொன்றறி யாத வொருவ
னணுகு முலகெங்கு மாவியு மாமே. (௪) ஆ ௧௦௮.

---

தீவிரதரம்.

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி, குருவென வந்து
குணம்பல நீக்கித், தருமெனு ஞானத்தாற் றன்செய லற்றுத்,
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. (௧)

இரவும் பகலு மிலாத விடத்தே, குரவஞ் செய்கின்ற கு
ழலியை யுன்னி, யரவஞ் செய்யாம லவளுடன் சேரப், பரிவொ
ன் றிலாளும் பராபரை தானே. (௨)

மாலை விளக்கு மதியமு ஞாயிறுஞ், சால விளக்குந் தனி
ச்சுட ரண்ணலுஞ், ஞானம் விளக்கிய நாதனென் னுள்புகுந்,
தூனை விளக்கி யுடனிருந் தானே. (௩) ஆ ௧௧௧

---

## புறச்சமய தூஷணம்.

ஆயத்து ணின்ற வறுசம யங்களுங், காயத் துணின்ற கடவுளைக் காண்கிலா, மாயக் குழியில் விழுவர் மனைமக்கள், பாசத்திற் சுற்றிப் படுகின்ற வாறே. (க)

உள்ளத்து ளேதான் கரந்தெங்கு நின்றவன், வள்ளற் றலைவன் மலருறை மாதவன், பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படுங், கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. (உ)

உள்ளத்து முள்ளன் புறத்துள னென்பவர்க், குள்ளத்து முள்ளன் புறத்துள னெம்மிறை, யுள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க், குள்ளத்து மில்லை புறத்தில்லை தானே. ()

ஆறு சமயமுங் கண்டவர் கண்டில, ராறு சமயப் பொருளும் பயனில்லை, தேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின், மாறுத லின்றி மனைபுக லாமே. (ச)

சிவமல்ல தில்லை யறையே சிவமாந், தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங், கவமல்ல தில்லை யறுசம யங்கள், தவமல்ல நந்திதாட் சார்ந்துய்ய நீரே. (ரு)

அண்ணலை நாடிய வாறு சமயமும், விண்ணவ ராக மிகவும் விரும்பியே, முண்ணின் றழியு முயன்றில ராதலான், மண்ணின் றொழியும் வகையறி யார்களே. (சா)

சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம், பவகதி பாசப் பிறவியொன் றுண்டு, தவகதி தன்னொடு நேரொன்று தோன்றி, லவகதி மூவரு மவ்வகை யாமே. (எ)

நூறு சமய முளவா நுவலுங்கா, லாறு சமயமவ் வாறுட் படுவன, கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா, வீறு பரநெறி யில்லா நெறியன்றே. (அ)

கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள், சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றான், குத்தந் தெரியாதார் குணங் கொண்டு கோதாட்டார், பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.



மயங்குகின் றாரு மதிதெளிந் தாரு, முயங்கி யிருவினை மூழைமுகப் பாச்சி, யியங்கிப் பெறுவரே லீறது காட்டிற், பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே. (கo)

சேய னணியன் பிணியிலன் பேர்நந்தி, தூயன் றுளக்கற நோக்கவல் லார்கட்கு, மாயன் மயக்கிய மானுட ராமவர், காயம் விளக்குங் கருத்தறி யார்களே. (கக)

வழியிரண் டுக்குமோர் வித்தது வான, பழியது பார்மிசை வாழ்தலுறுதல், சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின், றழிவறி வார்நெறி நாடநில் லாரே. (கஉ)

மாதவ ரெல்லாம மாதேவன் பிரானென்பர், நாதம தாக வறியப் படுநந்தி, பேதஞ்செய் யாதே பிரானென்று கைதொழி, லாதியு மந்நெறி யாகிநின் றானே. (கங)

அரநெறி யப்பனை யாதிப் பிரானை, யுரநெறி யாகி யுளம்புகுந் தானைப், பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம், பரனறி யாவிடிற் பல்வகை தூரமே. (கச)

பரிசற வானவன் பண்பன் பகலோன், பெரிசறி வானவர் பேற்றிற் றிகழுந், துரிசற நீநினை தூய்மணி வண்ணன், அரிசற வைத்த வறநெறி தானே. (கரு)

ஆன சமய மதுவிது நன்றெனு, மான மனிதர் மயக்க மறவொழி, கானங் கடந்த கடவுளை நாடுமின், ஞானங் கடந்த வுருவது வாமே. (கசா)

அந்நெறி நாடி யமரர் முனிவருஞ், சென்னெறி கண்டார் சிவனெனப் பெற்றார்பின், முன்னெறி நாடி முதல்வ னருளிலார், சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. (கஎ)

உறுமா றறிவது முள்நின்ற சோதி, பெறுமா றறியிற் பிணக்கொன்று மில்லை, யறுமா றதுவான வங்கியு ளாங்கே, யிறுமா றறிகிலர் ஏழைக ளாமே. (கஅ)

வழிகடக் கும்பரி சொன்றுண்டு வையங், கழிகடக் குண்டவர் கற்பனை கேட்பர், சுழிகடக் குந்துய ரம்மது நீக்கிப், பழிகடப் பார்க்குப் பரவனு மாமே. (க௯)

வழிசென்ற மாதவம் வைகின்ற போது, பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே, வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட், டழிசெல்லி லும்பர் தலைவன்முன் னாமே. (௨௰)

ஆ. சஙக.

---

நிராகாரம்.

இமையங்க ளாய்நின்ற தேவர்க ளாறு, சமையங்கள் பெற்றனர் சாத்திர மோதி, யமையறிந் தோமென்ப ராதிப் பிரானுஞ், சமையறிந் தாருட் கலந்துநின் றானே. (க)

பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி, தாங்கு மனிதர் தரணியி னேரொப்பர், நீங்கிய வண்ண நினைவுசெய் யாதவ, ரேங்கி யுலகி லிருந்தழு வாரே. (௨)

இருந்தழு வாரு மியல்புகெட் டாரு, மருந்தவ மேற்கொண் டங்கண் ணலைப்பாரும், வருந்தா வகைசெய்த வானவர் கோனும், பெருந்தன்மை நல்கும் பிறப்பிலி தானே. (௩)

ஆரறி வாளர் துறைவர் நினைப்பிலர், பாரறி வாளர் படுபயன் றுண்பர், காரறி வாளர் கலந்து பிறப்பார்கள், நீரறி வார்நெடு மாமுகி லாமே. (௪)

அறிவுடன் கூடி யழைத்ததோர் தோணி, பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங், குறியது கண்டுங் கொடுவினை யாளர், செறிய நினைக்கிலர் சேவடி தானே. (௫)

மன்று தொருவன் மருவு மனோமய, னென்னின் மனிதரி கழ்வரிவ் வேளுக, வுன்னி மனமே தொழுமின் றுணையிலி, தன்னையு மங்கே தலைப்பட லாமே. (௬)



ஓங்காரத் துள்ளொளி யுள்ளே யுதயமுற், றாங்கார மற்ற வநுபவங் கைகூடார், சாங்கால முன்னார் பிறவாமை சார்வுறார், நீங்காச் சமயத்து ளின்றொழிந் தார்களே. (௭) ஆ. சஙஎ

---

உட்சமயம்.

இமையவர் தம்மையு மெம்மையு முன்ன, மமைய வகுத்தவ னாதிப் புராணன், சமையங்க ளாறுந்தன் றுணிவிளக் காட, வமையங் குழல்நின்ற வாதிப் பிரானே. (க)

ஒன்றது பேரூர் வழியா றதற்குள, வென்றது போல விருமுச் சமயமு, நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள், குன்றுகுரைத் தெழு நாயையொத் தார்களே. (௨)

சைவப் பெருமைத் தனிநா யகன்றன்னை, யுய்ய வுயிர்க்கின்ற வொண்சுடர் நந்தியை, மெய்ய பெருமையர்க் கன்பனை யின்பஞ்செய், வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. (௩)

சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற், பவனவன் வைத்த பழவழி நாடி, யிவனவ னென்ப தறியவல் லார்கட், கவனவ னங்குள தாங்கட னாமே. (௪)

ஆமா றுரைக்கு மறுசம யாதிக்கும், போமா றதனிற் புல்லரிய மல்லதங், காமாம் வழியாக்கு மவ்வே றுயிர்க்கும், போமா றவ்வாதாரப் பூங்கொடி யாளே. (௫)

அந்நெறி யாவ தறிந்தேனு காணத், தந்நெறி தேடித் திரிந்தவக் காணு, முந்நெறி யுள்ளக் கடல்கடந் தேறத், தந்நெறி நின்ற தனிச்சுடர் தானே. (௬)

சேர்ந்த வருவினை யடைந்த செந்நெறி, பேர்ந்தவ ருன்னிப் பெயர்ந்த பெருவழி, யார்ந்தவ ரண்டத்துப் புக்க வருநெறி, பேர்ந்து புனைந்து புணர்நெறி யாமே. (௭)

ஈரு மனத்தை யிரண்டற வீசியின், னூறுஞ் சகாரத்தை யோதுமின் னோதியே, வாரு மரனெறி மன்னியே முன்னியத்,

தாருஞ் சுடரொளி தோன்றலு மாமே. (௮)

மினற்குறி யாளனை வேதியர் வேதத், தனற்குறி யாளனை யாதிப் பிரான்றன்னை, நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தி, னயக்குறி காணி லரனெறி யாமே. (௯)

ஆய்ந்துணர் வார்களி னுண்மைச் சதிர்பல, வாய்ந்துணர் வாவனே கநின்ற வரனெறி, பாய்ந்துணர் வாரரன் சேவடி கைதொழு, தேர்ந்துணர் செய்வதோ ரின்பமு மாமே. (௧௦)

சைவச் சமயத் தனிநா யகனந்தி, யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு, தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய, வையத் துளார்க்கு வகுத்துவைத் தானே. (௧௧)

இத்தவ மத்தவ மென்றிரு பேரிடும், பித்தரைக் காணி லருமெய்க்கன் பேர்நந்தி, யெத்தவ மாகிலென் னெங்குப் பிறக்கிலென், ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே. (௧௨)

ஆமே பிரான்முக மைந்தொடு மாருயி, ராமே பிரானுக்க தோமுக மாறுள, தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கு, நாமே பிரானுக்கு நரியல் பாமே. (௧௩)

ஆதிப் பிரானுல கேழு மளந்தவ, னோதக் கடலு முயிர்களு மாய்நிற்கும், பேதிப் பிலாமையி னின்ற பராசத்தி, யாதிக்கட் டெய்வமு மந்தமு மாமே. (௧௪)

ஆய்ந்தறி வார்களமரர் வித்தியாதர, ராய்ந்தறி யாவணம் நின்ற வரனெறி, வாய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழக், காய்ந்தறிந் தேனிம்மை யம்மைகண் டேனே. (௧௫)

அறியவொண் ணாதவு டம்பின் பயனே, யறியவொண் ணாத வறுவகை யாக்கி, யறியவொண் ணாத வறுவகை கோசத், தறியவொண் ணாததோ ரண்டம் பதிந்ததே. (௧௬)

ஆ. அதிகாரம் - உ௯௫ - திருமந்திரம் - ௧௫௪.

ஐந்தாந்தந்திர முற்றும்.

ஆ. சிறப்புப்பாயிரமுட்பட - அதிகாரம் - ௧௨௫.

கூடியதிருமந்திரம் - ௧௫௭௨.



# ஆறாந்தந்திரம்.

## சிவகுரு தரிசனம்.

பத்திப் பணித்துப் பரவு மடிநல்கிச், சுத்த வுரையாற் றுரிசறச் சோதித்துச், சத்து மசத்துஞ் சதசத்துங் காட்டலாற், சித்த மிறையே சிவகுரு வாமே. (௧)

பாசத்தைக் கட்டியே கட்டப் பறித்திட்டு, நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே, கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்த, தாசற்ற சற்குரு வம்பல மாமே. (௨)

சித்திக ளெட்டொடுந் திண்சிவ மாக்கிய, சுத்தியு மெண்சத்தித் தூய்மையும் யோகத்துச், சத்தியு மந்திர சாதக போதமும், பத்தியு நாதனருளிற் பயிலுமே. (௩)

எல்லா வுலகிற்கு மப்பாலோ னிப்பாலாய், நல்லா ருள்ளத்து மிக்கருள் நல்கலால், எல்லாரு முய்யக்கொண் டிங்கே யளித்தலாற், சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே. (௪)

தேனுந்து சுத்த குருவு முபாயத்துள், ளானவை மூன்று மகன்றொளி யாயமேல், ஆனாப் பசுபாச மாற்றியே முத்திப்பால், யானவை நற்குரு பரனன் புற்றே. (௫)

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய், தத்துவ நல்குன் றாளு மதிமுட்டப், பொய்த்தகு கண்ணான் மறுமென்பர் புண்ணிய, ரத்தி வியனெனா நடுபணி வோரே. (௬)

உண்மையிற் பொய்மை யொழித்தலு மொண்மைப்பார், இன்மையு மேன்மைச் சிவமாய வவ்வரன், வன்மையு மெட்டெட்டுச் சித்தி மயக்கமு, மன்மை யருளன்றி யாரறி வாரே. (௭)

சிவனே சிவஞானி யாதலாற் சுத்த, சிவனே யெனவடி சேரவல் லார்க்கு, நவமான தத்துவ நன்முத்தி நண்ணும், பவ

மான தின்றிப் பரலோக மாமே. (அ)

குருவே சிவமெனக் கூறினனந்தி, குருவே சிவமென் பது
குறித் தோரார், குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்குங், கு
ருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (கூ)

சித்த மியாவையுஞ் சிந்தித் திருந்திடு, மத்த னுணர்த்துவ
திருமருளாலே, சித்த மியாவையுந் திண்சிவ மானக்கா, லத்
தனுமவ்விடத் தேயமர்ந் தானே. (க0)

ஞானந்திச் சீர்மையுட் சந்தித்தச் சீர்வைத்த, கோனந்தி
யெந்தை குறிப்பறி வாரில்லை,வானந்தி யென்று மகிழுமொருவ
ர்க்குத், தானந்தி யங்கித் தனிச்சுட ராமே. (கக)

திருவாய சித்தியு முத்தியுஞ் சீர்மை, மருளா தருளு மயக்
கறும் வாய்மைப், பொருளாய வேதாந்தப் போதமு நாத, னு
ருவா யருளா விடிலோர வொண்ணாதே. (கஉ)

பத்தியு ஞானவை ராக்கிய மும்பர, சித்திக்கு வித்தாஞ்
சிவோகமே சேர்தலான், முத்தியின் ஞான முளைத்தலா லம்மு
ளை, சத்தி யருட்டந் தவன்னொளி தாமே. (கங)

இன்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை, முன்னெய்த
வைத்த முதல்வனை யெம்மிறை, தன்னெய்துங் காலத்துத் தா
னே வெளிப்படு, மன்னெய்த வைத்த மனமது தானே. (கச)

சிவமான ஞானந் தெளியவொண் சித்தி, சிவமான ஞான
ந் தெளியவொண் முத்தி, சிவமான ஞானஞ் சிவபரத் தேயேக
ச், சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. (கரு)

அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ், செறிந்துணர்ந்
தோதித் திருவருள் பெற்றேன், மறந்தொழிந் தேன்மதி மான்
டவர் வாழ்க்கைப், பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே. ()

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ, னிருக்கின்ற

திருமந்திரம். 

மைமையை பேது முணரார், பிரிக்கின்ற விந்தப் பிறைக்குருந்தெ
ல்லாங், கருக்கொண்ட சிந்தைக் கண்டுகொண் டேனே. (கஎ)

---

## திருவடிப்பேறு.

இசைந்தெழு மன்பி லெழுந்த படியே, பசைந்தெழு மீச
னைப் பரிசுத்த னெனச், சிவர்த குருவந்து செவ்விகை வைத்து
யுவந்த குருபத முள்ளத் துவந்ததே. (க)

நாடந்த போதத் தருந்த வெம்மிறை, வாடந்த ஞான
வலியையுந் தந்திட்டு, விடந்த மின்றிய யானென வீட்டு
ட், பாடின் முடி வைத்துப் பார்வந்து தந்ததே. (உ)

தானவ னாகித் சொருபத்து வந்திட்டு, வான சொருபங்க
ளுன்று மகற்றின, வேனைய முத்திரை யீந்தாண்ட நன்னந்தி,
தானடி முற்சூட்டித் தாபித்த தன்மையே. (ங)

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத், திரையற்ற நீர்
போற் சிவமாத லீர்த்துங், கரையற்ற சத்தாதி நான்குங் க
டந்த, சொருபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. (ச)

குரவ னுயிர்முச் சொருபமுங் கைக்கொண், டரிய பொரு
ண்முத் திரையாகக் கைக்கொண்டு, பெரிய பிரானடி நந்தி பேச்
சற்று, வுருகிட வென்னையங் குய்யக்கொண் டானே. (ரு)

பேச்சற்ற வின்பத்துப் பேரானந் தத்திலே, மாச்சற்ற
வென்னைச் சிவமாக்கி மாள்வித்துக், காச்சற்ற சோதி கடன்று
ன்றுங் கைக்கொண்டு, வாச்ச புகழ்மாளத் தாடென்று மன்றுமே.

இதயத்து நாட்டத்து மென்றன் சிரத்துப், பதிவித்த பா
தம் பராபர நந்தி, சதிவைத்த வாறுமெய் காட்டிய வாறும், வி
திவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. (எ)

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப், பெருவடி வைத்
தந்த பேர்நந்தி தன்னைக், குருவடி விற்கண்ட கோனையெங்
கோனைக், கருவழி மாற்றிடக் கண்டுகொண் டேனே. (அ)

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந், திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந், திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந், திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. (௯)

மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை, மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும், பால்வைத்த சென்னிப் படரொளி வானவன், முன்வைத்த வாறு தரிப்பித்த வாறே. (௧௦)

கழலார் கமலத் திருவடி யென்னு, நிழல்சேரப் பெற்றே னெடுமா லறியா, அழல்சேரு மங்கியு ளாதிப் பிரானுங், குழல்சேரு மின்னுயிர்க் கூடுங் குலத்ததே. (௧௧)

முடிமன்ன ராகின்ற மூவுலக மதாள்வ, ரடிமன்ன ரின்பத் தளவில்லை கேட்கின், முடிமன்ன ராய்நின்ற தேவர்க ளீசன், குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே. (௧௨)

வைத்தே னடிக்கண் மனத்தினுள் ளேநான், பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல், லெய்த்தே யுழலு மிருவினை மாற்றிட்டு, மெய்த்தே யெறிந்தெனை வேறுசெய் தானே. (௧௩)

அடிசார லாமண்ணல் பாத மிரண்டு, முடிசார வைத்தனர் முன்னை முனிவர், படிசார்ந்த வின்பப் பழவடி வெள்ளங், குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே. (௧௪)

மந்திர மாவது மாமருந் தாவதுந், தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ், சுந்தர மாவதுந் தூய்நெறி யாவது, மெந்தை பிரான்ற னிணையடி தானே. (௧௫) ஆ. ௧௨.

ஞாதுருஞானஞேயம்.

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப், பாங்கான பாசம் படராப் படரினு, மாங்கார நீங்கி யதனிலை நிற்கவே, நீங்கா வமுத நிலைபெற லாமே. (௧)

ஞேயத்தே நின்றோர்க்கு ஞாதுரு நின்றிடு, ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகு, ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்



தை யுற்றவ ராயத்தி னின்ற வறிவறி வாரே. (௨)

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந், தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு, தானென்ற பூவை யவனடி சாத்திறு, நானென் றவனென்கை நல்லதொன் றன்றே. (௩)

வைச்சன வாறுறு மாற்றி யெனைவைத்து, மெச்சப் பரன்றன் வியாபக மேலிட்டு, நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தா, லச்சங் கெடுத்தெனை யாண்டன னந்தியே. (௪)

முன்னை யறிவறி யாதவம் மூடர்போற், பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான், றன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத், தென்னை யறிவித் திருந்தன னந்தியே. (௫)

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங், கோணாத போகமுங் கூடாத கூட்டமு, நாணாத நாணமு நாதாந்த போதமுங், காணா வெனவந்து காட்டின னந்தியே. (௬)

மோனங் கைவந்தோர்க்கு முத்தியுங் கைகூடு, மோனங் கைவந்தோர்க்குச் சித்தியு முன்னிற்கு, மோனங் கைவந்தா மையமொழி முற்றுங்காண், மோனங் கைவந்தைங் கருமமு முன்னுமே. (௭)

முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின்பால், வைத்தா லகால் நான்மடங் காண்மாற்றி யுத்தயத் தானந்தத் தொன்குரு பாதத்தே, பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே. (௮)

மேலைச் சொரூபங்கண் மூன்று மிகுசத்தி, பாலித்த முத்திரை பற்றும் பரஞானி, யாலித்த கட்டமே ஞேயம் புகுந்தந்த, மேலைச் சொரூபன் மொழிஞா துருவனே. (௯) ஆ. ௩௧.

துறவு.

இறப்பும் பிறப்பு மிருமையு நீங்கித், துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை, மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்

கட், குறிப்பறி காட்டுமெய்யர் பிரானே. (௧)

பிறந்து பிறந்தும்பல் பேதைமை யாலே, மறந்து மலவிரு ளிச்சை மறைந்து, சிறந்த சிவனருட் சேர்பரு வத்துத், துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே. (௨)

அறவன் பிறப்பிலி யாருமி லாதா, னுறைவது காட்டக முண்பது பிச்சை, துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப், பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே. (௩)

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தா, னெறியில் வழுவி னெருஞ்சின்முட் பாயு, நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு, நெறியி னெருஞ்சின்முட் பாயகி லாவே. (௪)

கேடின் கடமையுங் கேட்டுவந் தைவரு, நாடி வளைந்து ஞான்கட வேனிலை, யோட்டும் விடையுடை யண்ணல் திருவடி, கூடுந் தவஞ்செய்த கொள்கையன் றானே. (௫)

உழவ னுழவுழ வானம் வழங்க, வுழவ னுழவினிற் பூத்த குவளை, யுழவ னுழத்தியர் கண்ணேறுக் கென்றிட், டுழவ னதனை யுழவொழிந் தானே. (௬)

மேல்துறந் தண்ணல் விளங்கொளி கூற்றவன், நாள்துறந் தார்க்கவ னன்பனல் லாவிலி, கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும், பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே ()

நாகமு மொன்று படமைந்து நாலது, போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது, வாகு மிரண்டும் படம்விரித் தாட்டொழிந், தேகப் படஞ்செய் துடம்பிட மாமே. (௮)

அகன்றார் வழிமுத லாதிப் பிரானு, மிவன்று னெனநின் றெளியனு மல்லன், சிவன்றான் பலபல சீவனு மாகு, நயன்றான் வரும்வழி நாமறி யோமே. (௯)

காம்பு திறந்தன வொன்பது வாய்தலு, மாம்பற் குழலியின் கஞ்சளிப் பட்டது, வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூ-



றையிற், கூம்பேறிக் கோயிலிற் பூக்கின்ற வாறே. (௧௦) ஆ. ௬௩.

தவம்.

ஒடுங்கி நிலைபெற்ற வுத்தம ருள்ள, நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை, யிடும்பையு மில்லை யிராப்பக லில்லை, படும்பய னில்லை பற்றுவிட் டோர்க்கே. (௧)

எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமுஞ், செம்மா தவத்தின் செயலின் பெருமையு, மம்மான் றிருவருட் பெற்றவர்க் கல்லா, லிம்மா தவத்தி னியல்பறி யாரே. (௨)

பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர், சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர், மறப்பில ராகிய மாதவஞ் செய்வார், பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. (௩)

இருந்து வருந்தி யெழிற்றவஞ் செய்யும், பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே, யிருந்திந் திரனே யெவரே வரினு, மிருந்தங் கவன்சிந்தை யிவனவன் பாலே. (௪)

கரந்துங் கரந்திலன் கண்ணுக்குத் தோன்றான், பரந்த சடையன் பசும்பொன் னிறத்த, னருந்தவர்க் கல்லா லணுகலு மாகான், விரைந்து தொழப்படும் வெண்மதி யானே. (௫)

இன்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை, முன்னெய்த வைத்த முதல்வனை யெம்மிறை, தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு, மன்னெய்த வைத்த மனமது தானே. (௬)

அமைச்சரு மானைக் குழாமு மரசும், பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே, யமைத்ததோர் ஞானமு மாத்தமு நோக்கி, யிமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே. (௭)

சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர், மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின், பார்த்தவிப் பார்வை பசுமரத் தாணிபோ, லார்த்த பிறவி யகலவிட் டோடுமே. (௮)

தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டித், தவம்வேண்டா ஞான சமாதிகை கூடிற், றவம்வேண்டா மச் சகசமார்க்கத்தோர்க்குத், தவம்வேண்டா, மாற்றந் தனையறி யாரே. (௬)

ஆ ௬௦.

தவதூடணம்.

ஓதலும் வேண்டா முயிர்க்குயி ருள்ளுற்றாற், காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற், சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற், போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே. (௧)

கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற், சுத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற், சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலாற், சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே.

வினைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார், வினைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார், வினைவறி வார்பண்டை மெய்யறஞ் செய்வார், வினைவறி வார்வினையின் மன்னின்மிக்காரே. (௩)

கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல், தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி, வாடித் தவஞ்செய்வ தேதவமிவைகளிங், காடிற் பலவுல கோரொத் தவரே. (௪)

மனத்துறை மாகட லேழுங்கை நீந்தித், தவத்திடை யாளர்தஞ் சார்வத் தவந்தார் பவத்திடை யாளரவர்பணி கேட்கின், முகத்திடை நந்தியை முந்தலு மாமே. (௫)

மனத்திடை நின்ற மதிவா ளுருவி, யினத்திடை நீக்கி யிரண்டற வீர்த்துப், புனத்திடை யஞ்சும் போகாமல் மறித்தாற், றவத்திடை யாரொளி தன்னொளி யாமே. (௬)

ஒத்த மிகுதியின் ஞான யுரைப்பது, பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ, முத்தி கொடுக்கு முனிவ னெனும்பகச்



சித்தானை செய்வதுந் தான்றவந் தானே. (௭)

இலைதொட்டுப் பூப்பறித் தெங்கைத்தென் றெண்ணி, மலர்தொட்டுக் கொண்டே வரும்புனல் காணேன், தலைதொட்ட நாற்கண்டு தாழ்ந்ததென் னுள்ளந், தலைதொட்டுக் கண்டேன் றவங்கண்ட வாறே. (௮)

படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க், கிடரடை யாவண்ண மீச னருளு, மிடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கி, லிடரடை செய்வ தொருமனத் தாமே. (௯)

அற்றிற் கிடந்த முசலைகண் டஞ்சிப்போ, யீற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கு, நோற்றுந் தவஞ்செய்யார் நூலறி யாதவர், சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. (௧௦)

பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங், குழக்கன்று கள்ளியக் கோணியைப் புல்காற், குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள், விழுக்காது நெஞ்சத் திடமொன்று மாமே. (௧௧)

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவாற், சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோ ருறவுண்டாற், சித்தஞ் சிவமாக வே சித்தி முத்தியாஞ், சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே. ()

(௧௨) ஆ ௭௨.

அருளுடைமையின் ஞானம்வருதல்.

பிரானரு ளுண்டெனி லுண்டுநற் செல்வம், பிரானரு ளுண்டெனி லுண்டுநன் ஞானம், பிரானரு ளிற்பெருந் தன்மையு முண்டு, பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே. (௧)

தமிழ்மண் டலமைந்துந் தாவிய ஞான, முமிழ்வது போலவுலகந் திரிவர், ரவிழு மனமுமெம் மாதி யறிவுந், தமிழ்மண் டலமைந்துந் தத்துவ மாமே. (௨)

புண்ணிய பாவ மிரண்டுள பூமியி, னண்ணும் பொழுதறி வார்சில ஞானிக, ளெண்ணி யிரண்டையும் வேரறுத் தப்புறத், தண்ண லிருப்பிட மாய்ந்துகொள் வீரே. (௩)

முன்னின் றருளு முடிகின்ற காலத்து, நன்னின் றுலகி னடுவுயி ராய்நிற்கும், பின்னின் றருளும் பிறவியை நீக்கிடு, முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே. (௪)

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர், சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர், சிவனரு ளால்வினை சேரகி லாமை, சிவனருட் கூறிலச் சிவலோக மாமே. (௫)

புண்ணிய னெந்தை புனித னிணையடி, நண்ணி விளக்கெனு ஞானம் விளைந்தது, மண்ணவ ராவதும் வானவ ராவது மண்ண லிறைவ னருட்பெற்ற போதே. (௬)

காலத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட, மாயத்தே ரேறி மயங்கு மவையுணர், நேயத்தே ரேறி நிமல னருட்பெற்று, லாயத்தே ரேறி யவனிவ னாமே. (௭)

அவ்வுல கத்தே பிறந்த வுடலொடு, மவ்வுல கத்தே யருந்தவர் நாடுவ, ரவ்வுல கத்தே யரனடி கூடுவ, ரவ்வுல கத்தே யருள்பெறு வாரே. (௮)

கதிர்கண்ட காந்தங் கனலின் வடிவா, மதிகண்ட காந்த மணிநீர் வடிவாஞ், சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவா, மதிகொண்ட ஈச னெழில்வடி வாமே. (௯)

நாடு முறவுங் கலந்தெங்க ணந்தியைத், தேடுவன் றேடிச் சிவபெருமானென்று, கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல, வீடு மளவும் விடுகின்றி லேனே. (௧௦) அ௯. அஉ

---

அவவேடம்.

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன், வேடங்கள்



கொண்டு வெருட்டிடும் பேதைகா, ளாடியும் பாடியு மழுது மரற்றியுந், தேடியுங் காணீர் சிவனவன் றாள்களே. (௧)

ஞான மிலார்வேடம் பூண்டிந்த நாட்டிடை, யீன மதே செய் திரந்துண் டிருப்பினு, மான நலங்கெடு மப்புவி யாதலா, லீனவர் வேடங் கழிப்பித்த லின்பமே. (௨)

இன்பமுந் துன்பமு நாட்டா ரிடத்துள, நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்கா, மென்ப விறைநாடி நாடொறு நாட்டிலின், மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே. (௩)

இழிகுலத் தார்வேடம் பூண்பர்மே லெய்த, வழிகுலத் தோர்வேடம் பூண்பர்தே வாகப், பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானோர், கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே. (௪)

பொய்த்தவஞ் செய்வார் புகுவார் நரகத்துப், பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகாரேற், பொய்த்தவ மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ், சத்திய ஞானத்தாற் றங்குந் தவங்களே. (௫)

பொய்வேடம் பூண்பர் பொசித்தற் பயனாக, மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர், பொய்வேட மெய்வேடம் போதவே பூணினு, முய்வேட மாகு முணர்ந்தறிந் தோர்க்கே. (௬) அடூ அசு.

---

தவவேடம்.

தவமிக் கவரே தலையான வேட, ரவமிக் கவரே யதிகொலை வேட, ரவமிக் கவர்வேடத் தாகார் வேடந், தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே. (௧)

பூதி யணிவது சாதன மாதியிற், காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை, யோதி யவர்க்கு முருத்திர சாதனந், தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. (௨)

யோகிக் கிடுமது வுட்கட்டு கஞ்சுளி, கோலக்குளப் பாத்தச் சுற்றுஞ் சடையதொன், றாகத்து நீறணி யாங்கக்க டலன்று, சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே. (௫)

காதணி குண்டலங் கண்டிகை காதமு, மூதுகற் சங்கு யர்கட்டிக் கப்பரை, யேதமில் பாதுக மியோகாக்க மாதல மேதமி லியோகப் படத்தண்ட மீனைத்தே. (௬) ஆ. ௧௬

---

## திரிகை.

ஆறுஞ் சிகையு முணரார்கின் மூடர்கள், நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம், பாலொன்று மந்தணர் பார்ப்பார் பரமுயி, ரோரொன் றிரண்டினி லோங்கார மோதிலே. (௧)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை, மங்காமற் பூச மகிழ்விரோ யாமாகிற், றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி, சிங்கார மான திருவடி சேர்வரே. (௨)

அரசுட னாலத்தி யாகுமக் காரம், விரவு கனலில் வியனுரு மாறி, நிரவய வின்மலன் றாள்பெற்ற நீத, ருருவம் பிரமவுயர்குல மாமே. (௩) ஆ. ௩

---

## ஞானவேடம்

ஞான மிலார்வேடம் பூண்டு நரகத்தர், ஞான முள்ளோர் வேடமின்றெனி னன்முத்தர், ஞான முளதாக வேண்டுவோர் நக்கன்பால், ஞான முளவேட நண்ணிநிற் பாரே. (௧)

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை, நன்ஞானத் தால்வேடம் பூணா ருருணன்னிற், றன்ஞானத் தோர்சமயத்துறி சன்னோர், பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லாரே. (௨)



சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கு, மவமான சாதக மானாது தேரி, லவமா மவர்க்கது சாதக நான்கு, முவமான மில்பொரு ளுள்ளுற லாமே. (௩)

கத்தித் திரிவர் கழுவடி நாய்போற், கொத்தித் திரிவர் குருக்களி னாவிக, வொத்தப் பொறியு முடலு மிருக்கவே செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே. (௪)

அடியா ரவரே யடியா ரலாதா, ரடியாரு மாகாரவ் வேடமு மாகா, ரடியார் சிவஞான மானது பெற்றோ, ரடியா ரலாதா ரடியார்க ளன்றே. (௫)

ஞானிக்குச் சுந்தர வேடமு நல்லவாந், தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே, யானவவ் வேட மருஞ்ஞான சாதந, மானது மாமொன்று மாகா தவனுக்கே. (௬)

ஞானத்தி னற்பத நண்ணுஞ் சிவஞானி, தானத்தில் வைத்த தனியா லயத்தனு, மோனத்த னாதலின் முத்தனுஞ் சித்தனு, மேனைத் தவசி யிவனென லாகுமே. (௭)

தானன்றித் தன்மையுந் தானவ னாதலு, மேனைய வச்சிவ மான வியற்கையுந், தானுறு சாதக முத்திரை சாத்தலு, மேனமு நந்தி பதமுத்தி பெற்றதே. (௮) ஆ. ௨௰௩

---

## சிவவேடம்.

அருளா லரனுக் கடிமைய தாகிப், பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி, யிருளான தின்றி யிருஞ்செய லற்றோர், தெருளா மடிமைச் சிவவேடத் தாரே. (௧)

உடலிற் றுவக்கிய வேடமுயிர்க் காகா, வுடல்கழன் றால்வேட முடனே கழலு, முடலுயி ருண்மையென் றோர்ந்துகொ ளாதார் ... (௨)

மயலற் றிருளற்று மாமல மற்றுக், கயலுற்ற கண்ணியர் கையிணை யற்றுத், தயலற் றவரோடுந் தாமேதா மாகிச், செயலற் றிருந்தார் சிவவேடத் தாரே. (௬)

ஓடிக் குதிரைக் குசைதின்னம் பற்றுமின், வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே, நாடுமி னந்தியை நம்பெருமான் றன்னைத், தேடுமின் பப்பொருள் சென்றெய்த லாமே. (௭) ஆ. ௩௭

---

அபக்குவன்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார், குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர், குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக், குருடுங் குருடுங் குழிவிழு மாறே. (௧)

மனத்தி லெழுந்ததோர் மாயக்கண் ணாடி, நினைப்பி னதனில் நிழலையுங் காணார், வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார், புறக்கடை யிச்சித்துப் போகின்ற வாறே. (௨)

ஏயெனி லென்னென மாட்டார் பிரசைகள், வாய்முலை பெய்ய மதுரநின் றூறிடுந், தாய்முலை யாவ தறியார் தமருளோ, ரூனிலை செய்யு முருவிலி தானே. (௩)

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க, நீயொன்று செய்ய வுறுதி நெருங்ககாய், நீயென்றிங் குன்னைத் தெளியன் றெளிந்தபின், பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. (௪)

பஞ்சத் துரோகத்துப் பாதகர் தம்மைப், பஞ்சச் சமயத்தோர் வேந்த னருந்தண்டம், விஞ்சச்செய் திப்புவி வேறே விடாவிடிற், பஞ்சத்து ளாய்புவி முற்றும்பா ழாகுமே. (௫)

தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ், சிவத்திடை நின்றது தேவ ரறியார், தவத்திடை நின்றறி யாதவ ரெல்லா, மவத்திடை நின்றதோர் பாடது வாமே. (௬)



கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலுந், தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும், பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலு, மென்றிவை யிறைபா லியற்கை யல்லவே. (௭)

வெடிவ தறியார் வெளிகாண மாட்டார், வெடியில் வெளியில் விழிக்கவு மாட்டார், கடியதோ ருண்ணிலை கட்டுமின் காண்மின், விடியாமை காக்கும் விளக்கது வாமே. (௮)

வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப், பெத்த மாமுத்த னாகிப் பிறழ்வுற்றுத், தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு, பித்தான சீடனுக் கீயப் பெறுதானே. (௯)

மன்னு மலமைந்து மாற்றும் வகையோரா, னன்னிய காமாதி நோயுந் தொழிலீக்கான், பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதா, னன்னிய னாவ னசற்சீட னாமே. (௧0) ஆ. ௧௭.

---

பக்குவன்.

தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப், பழுதறி யாத பரமகுருவை, வழிபடு வார்கள் வழிபடு வாளா, ரழிவறி வாளமற்றை யல்லா தவரே. (௧)

பதைத்தொழிந் தேன்பர மாவுன்னை நாடி, யதைத்தொழிந் தேனினி யாருடன் கூடேன், சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர, வுதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே. (௨)

பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை, விதைக்கின்ற வித்தினை மேலின்று நோக்கிச், சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி, யிசைக்கின்ற வன்பருக் கீயது மாமே. (௩)

கொள்ளினு நல்ல குருவினைக் கொள்க, வுள்ள பொருளுட லாவி யுடனீக, வெள்ளைக் கலைய மிடைவிடா தேகின்ற. தெ

ன்னி யறியச் சிவபதந் தானே. (௪)

சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்கண்டு, வோதிய நா
ளேயுணர்வது தானென்று, நீதியு ளேர்மை நினைந்தவர்க் கல்ல
து, வாதியு மேது மறியகி லாரே. (௫)

தொழிலார மாமணித் தூய்தான சிந்தை, யெழிலா லிறை
வ னிடங்கொண்ட போதே, விழலார் விறலாம் வினையது போ
கக், கழலார் திருவடி கண்டரு ளாமே. (௬)

சாத்திக ஞேயப்பர தத்துவந் தானன்னி, யாத்திக பேத
நெறிதோற்ற மாகியே, யார்த்த பிறவி யஞ்சி யறநெறி, சா
த்தவல் லானவன் சற்சீட னாமே. (௭)

சத்து மசத்துமெவ் வாறெனத் தானுன்னிச், சித்தை யுரு
க்கிச் சிவனருட் கைகாட்டப், பத்தியின் ஞானம் பெறப்பணித்
தானந்தச், சத்திய வித்தைத் தருவோன்சற் சீடனே. (௮)

அடிவைத் தருளுதி யாசானின் றன்று, மடிவைத்த மா
முடி மாயப் பிறவி, யடிவைத்த காய வருட்சத்தி யாலே, யடி
பெற்ற ஞானத்த னாசற்ற னோனே. (௯)

சீராரு ஞானத்தி னிச்சை செலச்செல்ல, வாராத காதற்
குருபரன் பாலாகச், சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோ,
னாராயு ஞானத்த னாமடி வைக்கவே. (௰)

உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி, யிணக்கிற் பராப
ரத் தெல்லையு ளிட்டுக், குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்
கொண்டு, வுணர்த்துமின் னாவுடை யான்றன்னை யுன்னியே. ()

இறையடி தாழ்ந்தை வணக்கமு மெய்திக், குறையது கூ
றிக் குணங்கொண்டு போற்றச், சிறையுட னீயறக் காட்டிச் சிவ
த்தோ, டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. (௧௨)

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால், வாழ்க்கைப் பு



லன்வழி மாற்றிச்சித் தாந்தத்து, வேட்கை விடுமிக்க வேதா
ந்தி பாதமே, தாழ்க்குந் தலைவிறைவன் சற்சீட னாமே. (௧௩)

சற்குணம் வாய்மை தயாவிவே கந்தன்மை, சற்குரு பாத
மே சாயைபோ னீங்காமே, சிற்பர ஞானந் தெளியத் தெளி
வோர்த, லற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. (௧௪)

ஆ அதிகாரம் கச-இ திருமந்திரம்-கஙக.

ஆறாந்தந்திர முற்றும்.

ஆ சிறப்புப்பாயிர முட்பட-அதிகாரம் கஉகூ-இ
கூடிய திருமந்திரம்-கஎ௦கூ.

---

## ஏழாந்தந்திரம்.

### ஆறாதாரம்.

நாலு மிருமூன்று மீரைந்து மீராறுங், கோலிமே னின்ற
குறிகள் பதினாறு, மூலங்கண் டாங்கே முடிந்து முதலிரண்டு
ங், காலங்கண் டானடி காணலு மாமே. (௧)

ஈராறு நாதத்தி லீரெட்டா மந்தத்தின், மேதாதி நாதாந்
த மீதாம் பராசத்தி, போதா லயத்த விகாரந் தனிற்போத,
மேதாதி யாதார மீதான வுண்மையே. (௨)

மேலென்றுங் கீழென் றிரண்டறக் காணுங்கால், தூனெ
ன்று நானென்றுந் தன்மைக ளோராறும், பாரெங்கு மாகிப்
பரந்த பராபரங், காரொன்று கற்பக மாகிநின் றானே. (௩)

ஆதார சோதனை யானாடி சுத்திகள், மேதாதி யீரெண்
கலந்தது வின்னொளி, போதா லயத்துப் புலன்கர ணம்புந்
தி, சாதா ரணங்கெட்டான் றன்சக மார்க்கமே. (௪)

மேதாதி யாலே விடாதோ மனந்தூண்டி, யாதார
சோதனை யத்துவா சோதனை, தாதார மாகவே தானெழச் சா
தித்தா, லாதாரஞ் செய்போக மாவது காயமே. (ரு)

ஆறந்த முங்கூடி யாகு முடம்பினிற், கூறிய வாதார மற்
றுங் குறிக்கொண்மின், ஆறிய வக்கர மன்பதின் மேலே, யூறிய
வாதாரத் தோரெழுத் தாமே. ( )

ஆகு முடம்பு மழிகின்ற வவ்வுடல், போகு முடம்பும்
பொருந்திய வாறுதா, னாகிய வக்கர மைம்பது தத்துவ, மாகு
முடம்புக்கு மாறந்த மாமே. (எ)

ஆயு மலரி னணிமலர் மேலது. வாய விதழும் பதினாறு ம
ங்குள, ஆய வறிவு சிவானந்த மாகிப்போய், மேய வறிவாய்
விளைந்தது தானே. (அ)

---

அண்டலிங்கம்.

இலிங்கம தாவ தியாரு மறியா, ரிலிங்கம தாவது வெ
ண்டிசை யெல்லா, மிலிங்கம தாவது வெண்ணெண் கலையு, மி
லிங்கம தாக வெடுத்த துலகே. (க)

உலகி லெடுத்தது சத்தி முதலா, வுலகி லெடுத்தது சத்தி
வடிவா, வுலகி லெடுத்தது சத்தி குணமா, வுலக லெடுத்த சதா
சிவன் றானே. (உ)

போகமு முத்தியும் புத்தியுஞ் சித்தியு, மாகமு மாறா
றத்துவத் தப்பாலா, மேகமு நல்கி யிருக்குஞ் சதாசிவ, மாகம
தத்துவ வாறுஞ் சிவமே. (ங)

ஏத்தின ரெண்ணிலி தேவரெம் மீசனை, வாழ்த்தினர் வா
சப் பசுந்தென்றல் வள்ளலென், றார்த்தன ரண்டங் கடந்தப்
புறநின்று, காத்தன னென்னுங் கருத்தறி யாரே. (ச)



ஒண்சுட ரோனயன் மால்பிர சாபதி, யொண்சுட ரான
விரவியோ டிந்திரன், கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்க,
டண்சுட ராயெங்குந் தற்பர மாமே. (ரு)

தாபரத் துண்ணின் றருளவல் லான்சிவன், மாபரத் து
ண்மை வழிபடு வாரில்லை, மாபரத் துண்மை வழிபடு வாளர்க்
கும், பூவகத் துண்ணின்ற பொற்கொடி யாகுமே. (சு)

ஆய விமானமுந் தூலம தாகுமா, லாய சதாசிவ மாகு
நற் சூக்குமம், பாய பலிபீடம் பத்திர லிங்கமா, மாய வர
னிலை யாய்ந்துகொள் வார்கட்கே. (எ)

முத்துடன் மாணிக்க மொய்த்த பவளமுங், கொத்தமக்
கொம்பு சிலைநீறு கோமள, மத்தன்றன் னாகம மன்ன மரிசியா,
முய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே. (அ)

துன்றுந் தயிர்நெய்பா லுய்ய மெழுகுடன், கன்றிய செ
ம்பு கனலிர தஞ்சலம், வன்றிறற் செங்கல் வடிவுடை வில்வ
ம்பொன், றென்றியங் கொன்றை தெளிசிவ லிங்கமே. (கூ)

மறையவ ரர்ச்சனை வண்படி கந்தா, னிறையவ ரர்ச்சனை
யேய்பொன் றாகுங், குறைவிலா வயிசி யர்க்குக் கோமளமாந்
துறையுடைச் சூத்திரர் சொல்வாண லிங்கமே. (க0)

அதுவுணர்ந் தோனொரு தன்மையை நாடி, யெதுவுணா
ராவகை நின்றன னீசன், புதுவுணர் வான புவனங்க ளெட்டு,
மிதுவுணர்ந் தென்னுடல் கோயில்கொண் டானே. (கக)

அகலிட மாயறி யாம லடங்கு, முகலிட மாய்நின்ற வூன
தி யுள்ளே, பகலிட மாமுனம் பாவ விநாசன், புகலிட மாய்
நின்ற புண்ணியன் றானே. (கஉ)

போது புனைகழற் பூமிய தாவது,மாது புனைமுடி வானக
மாவது, நீதியு ளீச னுடல்விசும் பாய்நிற்கு, மாதி யுறநின்ற த
ப்பரி சாமே. (கங)

திரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாந், திரைபெறு நீரா மஞ்சன சாலை, வரைதவழ் மஞ்சுநீர் வானுதி மாலை, கரையற்ற நந்திக் கலையுந்திக் காமே. (௧௪) ஆ. ௨௨.

---

பிண்டலிங்கம்.

மானுட ராக்கை வடிவு சிவலிங்க, மானுட ராக்கை வடிவு சிதம்பர, மானுட ராக்கை வடிவு சதாசிவ, மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. (௧)

உலர்ந்திலர் பின்னு முளரென நிற்பர், நிலந்தரு நீர்தெளி பூனவை செய்யப், புலந்தரு பூதங்க ளைந்துமொன் றாக, வலந்தரு தேவரை வந்துசெய் வீரே. (௨)

கோயில்கொண் டன்றே குடிகொண்ட டைவரும், வாயில்கொண் டாங்கே வழிநின் றருளுவீர், தாயில்கொண் டாற்போற் றலைவனென் னுட்புக, வாயில்கொண் டீசனு மாளவந் தானே. (௩)

கோயில்கொண் டானடி கொல்லைப் பெருமறை, வாயில்கொண் டானடி நாடிகள் பத்துள, பூசைகொண் டான்புல னைந்தும் பிறகிட்டு, வாயில்கொண் டானெங்கள் மாநந்தி தானே. (௪) ஆ. ௨௩.

---

சதாசிவலிங்கம்.

கூடிய பாத மிரண்டும் படிமிசை, பாடிய கையிரண் டெட்டும் பரந்தெழுந், தேடு முகமைந்து செங்கையின் மூவைந்து, நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே. (௧)

வேதா நெடுமா லுருத்திரன் மேலீசன், மீதான வைம்முகன் விந்துவு நாதமு, மாதாக சத்தியு மந்தச் சிவனொடுஞ், சாதா ரணமாகுஞ் சதாசிவந் தானே. (௨)



ஆகின்ற சத்தியி னுள்ளே கலைநிலை, யாகின்ற சத்தியி னுள்ளே கதிரெழ, வாகின்ற சத்தியி னுள்ளே யமர்ந்தபின், னாகின்ற சத்தியு ளத்திசை பத்தே. (௩)

அத்திசைக் குள்ளே யமர்ந்தன வாறங்க, மத்திசைக் குள்ளே யமர்ந்தன நால்வேத, மத்திசைக் குள்ளே யமர்ந்த சரிதையோ, டத்திசைக் குள்ளே யமர்ந்த சமயமே. (௪)

சமயத் தெழுந்த வவத்தையீ ரைந்துள, சமயத் தெழுந்த விராசியீ ராறுள, சமயத் தெழுந்த சரீரா றெட்டுள, சமயத் தெழுந்த சதாசிவந் தானே. (௫)

நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு, நடுவு படிகநற் குங்கும வன்ன, மடையுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பால், வடியேற் கருளிய முகமிவை யஞ்சே. (௬)

அஞ்சு முகமுள வைம்மூன்று கண்ணுள, வஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள, வஞ்சுட னஞ்சா யுதமுள நம்பியென், னெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. (௭)

சத்தி தராதல மண்டஞ் சதாசிவஞ், சத்தி சிவமிக்க தாபர சங்கமஞ், சத்தி யுருவ மருவஞ் சதாசிவஞ், சத்தி சிவதத் துவமுப்பத் தாறே. (௮)

தத்துவ மாவ தருவஞ் சராசரந், தத்துவ மாவ துருவஞ் சுகோதயந், தத்துவ மெல்லாஞ் சகலமு மாய்நிற்குந், தத்துவ மாகுஞ் சதாசிவன் றானே. (௯)

கூறுமி னூறு சதாசிவ னெம்மிறை, வேறே யுரைசெய்து மிகைப்பொரு ளாய்நிற்கு, மேறுரை செய்தொழில் வானவர் தம்மொடு, மாறுசெய் வானென் மனம்புகுந் தானே. (௧௦)

இருளார்ந்த கண்டமு மேந்து மழுவுஞ், சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையு, மருளார்ந்த சிந்தையெம் மாதிப் பிரானைத், தெருளார்ந்தென் னுள்ளே தெளிந்திருந் தேனே. ( )

சத்திதா னிற்கின்ற வைமுகஞ் சாற்றிடி, லுத்தமம் வாம முரையத் திருந்திடுந், தத்துவம் பூருவந் தற்புரு டன்சிர, மத்தரு கோர மகுடத்தி சானனே. (௧௨)

கானுகல் லீசான முடிவுச்சி தானாகுந், தானுவின் றன்முகந் தற்புரு டமாகுங், கானு மகோர மிருதயங் குய்யமாம், வானுற வாமமாஞ் சத்திநற் பாதமே. (௧௩)

செஞ்சு சிரஞ்சிகை நீள்கவசங் கண்ணும், வஞ்சமில் வத்து வளர்நிறம் பச்சையாஞ், செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னுருஞ், செஞ்சுடர் போலுந் தசாயுதந் தானே. (௧௪)

எண்ணி லிதய மிறைஞான சத்தியாம், விண்ணிற் பராசிர மிக்க சிகைபாதி, வண்ணக் கவசம் வனப்புடை யிச்சையாம், பண்ணுங் கிரிகை பரநேத் திரத்திலே. (௧௫)

சத்திநாற் கோணஞ் சலமுற்று நின்றிடுஞ், சத்தி யறுகோணஞ் சயனத்தை யுற்றிடுஞ், சத்திநல் வட்டஞ் சலமுற் றிருந்திடுஞ், சத்தி யுருவாஞ் சதாசிவன் றானே. (௧௬)

மானந்தி யெத்தனை கால மழைக்கினுந், தானந்தி யஞ்சின் றனிச்சுட ராய்நிற்குங், கானந்தி யுந்தி கடந்து கமலத்தின், மேனந்தி யொன்பதின் மேவிநின் றானே. (௧௭)

ஒன்றிய வாறு முடலி னுடன்கிடந், தென்றுமெம் மீசன் னடக்கு மியல்பது, தென்றலைக் கேறத் திருந்து சிவனடி, நின்று தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே. (௧௮)

உணர்ந்தே னுலகினி லொண்பொரு ளானைக், குணர்ந்தேன் குவலயங் கோயிலென் னெஞ்சம், புணர்ந்தேன் புவிதனும் பொய்யல்ல மெய்யே, பணிந்தேன் பகலவன் பாட்டு மொலியே. ()

ஆங்கவை மூன்றினு மாரழல் வீசிடத், தாங்கிடு மீரொ னானடு வானதி, லோங்கிய வாதியு மந்தமு மாமென, வீங்கிவை தம்முடல் விந்துவு மாமே. (௨௦)



தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந், தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந், தன்மேனி தற்சிவன் றற்சிவா னந்தமாந், தன்மேனி தானாகுந் தற்பரந் தானே. (௨௧)

ஆருமறியா ரகார மவனென்று, பாரு முகாரம் பரந்திட் டநாயகி, தார மிரண்டுந் தரணி முழுதுமாய், மாறி யெழுந்திடு மோசைய தாமே. (௨௨)

இலிங்கநற் பீட மிசையுமோங் கார, மிலிங்கநற் கண்ட நிறையு மகார, மிலிங்கத்துள் வட்ட நிறையு முகார, மிலிங்க மகார நிறைவிந்து நாதமே. (௨௩) ஆ. சங.

---

## ஆன்மலிங்கம்.

அகார முதலா யனைத்துமாய் நிற்கு, முகார முதலா வுயிர்ப்பெய்து நிற்கு, மகார வுகார மிரண்டு மறியி, லகார வுகார மிலிங்கம தாமே. (௧)

ஆதார மாதேய மாகின்ற விந்துவு, மேதாதி நாதமு மீதே விரிந்தன, வாதார விந்து வதிபீட நாதமே, போதா லிலிங்கப் புணர்ச்சிய தாமே. (௨)

சத்தி சிவமா மிலிங்கமே தாபரஞ், சத்தி சிவமா மிலிங்கமே சங்கமஞ், சத்தி சிவமா மிலிங்கஞ் சதாசிவஞ், சத்தி சிவமாகுந் தாபரந் தானே. (௩)

தானே யெழுகின்ற சோதியைக் காணலாம், வானே யெழுகின்ற வைம்பத மர்ந்திடம், பூனே யெழுகின்ற பொற்கொடி தன்னுடன், றானே யெழுகின்ற வகார மதாமே. (௪)

விந்துவு நாதமு மேவு மிலிங்கமாம், விந்துவ தேபீட நாத மிலிங்கமா, மந்த விரண்டையு மாதார தெய்வமாய், வந்த வுருவைந்துஞ் செய்யு மவையைந்தே. (௫)

சத்திநற் பீடந் தருநல்ல வான்மாச், சத்திநற் கண்டந்

தருவித்தை தானாகுஞ், சத்திநல் லிங்கந் தருஞ்சிவ தத்துவஞ், சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே. (௬)

மனம்புகுந் தென்றுயிர் மன்னிய வாழ்க்கை, மனம்புகுந் தின்பம் பொழிகின்ற போது, நலம்புகுந் தென்னொடு காதலி னாடி, யிலம்புகுந் தாதியு மேற்கொண்ட வாறே. (௭)

பராபர னெந்தை பனிமதி சூடி, தராபரன் றன்னடி யார்மனக் கோயிற், சிராபரன் றேவர்கள் சென்னியின் மன்னு, மராமரன் மன்னி மனத்துறைந் தானே. (௮)

பிரானல்ல நாமெனிற் பேதை யுலகங், குராலென்று மெல்மனக் கோயில்கொ ளீச, னிராநின்ற செஞ்சடை யங்கியு நீரும், பொராநின் றவர்செய்யப் புண்ணியன் றானே. (௯)

அன்றுநின் றன்கிடந் தானவ னென்று, சென்றுநின் றெண்டிசை யேத்துவர் தேவர்க, ளொன்றுநின் றேத்துவ னெம்பெரு மான்றன்னை, யொன்றியென் னுள்ளத்தி னுள்ளிருந் தானே.

ஆக ௫௯.

## ஞானலிங்கம்.

உருவு மருவு முருவோ டருவு, மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்குங், குருவு மெனநிற்குங் கொள்கைய னாகுந், தருவென நல்குஞ் சதாசிவன் றானே. (௧)

நாலான கீழ துருவ நடுநிற்க, மேலான நான்கு மருவு மிகுநாப்ப, ணூலான வொன்று மருவுரு நண்ணலாற், பாலா மிவையாம் பரசிவன் றானே. (௨)

தேவர் பிரானைத் திசைமுக நாதனை, நால்வர் பிரானை நவெற்ற நந்தியை, யேவர் பிரானென் றிறைஞ்சுவ ரவ்வழி, யாவர் பிரானடி யண்ணலு மாமே. (௩)

வேண்டிநின் றேதொழு தேன்வினை போயற, வாண்டொரு திங்களு நாளு மளக்கின்ற, காண்டகை யானொடுங் கன்னி புணரினு, மூண்டகை மாறினு மொன்றது வாமே. (௪)



ஆதி பரந்தெய்வ மண்டத்து நற்றெய்வஞ், சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வ, நீதியுள் மாதெய்வ நின்மல னெம்மிறை, பாதியுள் மன்னும் பராசத்தி யாமே. (௫)

சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே, சுத்தச் சிவபதந் தோயாத தூவொளி, யத்தன் றிருவடிக் கப்பாலைக் கப்பாலா, மொத்தவு மாமீசன் றானான வுண்மையே. (௬)

கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்று, மெழுந்திடங் காணி லிருக்கலு மாகும், பரந்திடங் காணிற் பார்ப்பதி மேலே, திரண்டெழக் கண்டவன் சிந்தையு ளானே. (௭)

எந்தை பரமனு மென்னம்மை கூட்டமு, முந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாஞ், சந்தித் திருந்த விடம்பெருங் கண்ணியை, யுந்தியின் மேல்வைத் துகந்திருந் தானே. (௮)

சத்தி சிவன்விளை யாட்டா முயிராகி, யொத்த விருமாயா கூட்டத் திடையூட்டிச், சுத்தம தாகுந் துரியம் பிறிவித்துச், சித்தம் புகுந்து சிவமக மாக்குமே. (௯)

சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி, சத்தி சிவமுமா மாண்சிவ லிங்கஞ் சிவஞ்சதாசிவந் திய தாகுஞ், சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை, சத்திதா னென்றுஞ் சமைந்துரு வாகுமே. (௧௰)

ஆக ௬௯.

## சிவலிங்கம்.

குரைக்கின்ற வாரிக் குவலய நீருட், பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயு, நிரைக்கின்ற வாநிவை நீண்டகன் றானை, வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. (௧)

வரைத்து வலஞ்செய்யு மாறிங்கொன் றுண்டு, நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி, யுரைத்தவ னாமமு முணரவல் லார்

குப், புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே. (௨)

ஒன்றெனக் கண்டேயெம் மீச னொருவனை, நன்றென நடி
யினை நானவ னைத்தொழ, வென்றைம் புலனு மிகக்கிடந் தின்பு
ற, வன்றென் றருள்செய்யு மாதிப் பிரானே. (௩)

மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன், பலந்தரு மைம்
முகன் பரவிந்து நாத, நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப், ப
லந்தரு லிங்கம் பராநந்தி யாமே. (௪)

மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென், றாவி யெழுமள வ
ன்றே யுடலுற, மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும், பாவித் த
டக்கிற் பரகதி தானே. (௫) ஆ. எச.

---

## சம்பிரதாயம்.

உடல்பொரு ளாவி யுதகத்தாற் கொண்டு, படர்வினைப் பற்
றறப் பார்த்தலை வைத்து, கொடியின் டிவைத்து நன்னுண
ர் வாக்கிக், கடியப் பிறப்பறக் காட்டின னந்தியே. (௧)

உயிருஞ் சரீரமு மொண்பொரு ளான, வியவார் பரமும்பி
ன் மேவும் பிராணன், செயலார் சிவமுஞ் சிற்சத்தி யாதிக்கே,
யுயலார் குருபர னுய்யக்கொண் டானே. (௨)

பச்சிம திக்கிலே வைச்சவா சாரிய, விச்சனு மென்னை வி
னையென்ற வப்பொரு, ளுச்சிக்குங் கீழது வுண்ணாக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே. (௩)

பொட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனைப், பொட்டடி
த் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின், றட்டொக்க மாறினன்
றன்னையு மென்னையும், வட்டம தொத்தது வாணிபம் வாய்த்த
தே. (௪)

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ, னிருக்கின்ற த
ன்மையை யேது முணரார், பிரிக்கின்ற விந்து பிணக்கறுத் தெல்
லாங், கருக்கொண்ட வீசனைக் கண்டுகொண் டானே. (௫)



கூடுமுடல்பொரு ளாவி குறிக்கொண்டு, நாடி யடிவைத்
தருண்ஞான சத்தியாற், பாட லுடலினிற் பற்றற நீக்கியே, கூ
டிய தானவ னுங்குளிக் கொண்டே. (௬)

கொண்டா னடியே னடிமை குறிக்கொள்ளக், கொண்டா
னுயிர்பொருள் காயக் குழாத்தினைக், கொண்டான் பலமுற்றுங்
தந்தவன் கோடலாற், கொண்டா னெனவொன்றுங் கூறகி
லேனே. (௭)

குறிக்கின்ற தேகமுந் தேகியுங் கூடி, நெறிக்கும் பிராண
னிலைபெற்ற சீவன், பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை, பி
றக்க வறியாதார் பேயுட னொப்பரே. (௮)

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்று, முணர்வுடை
யார்கட் குறுதுய ரில்லை, யுணர்வுடை யார்க ளுணர்ந்தவக் கா
ல, முணர்வுடை யார்க ளுணர்ந்துகண் டாரே. (௯)

காயப் பரப்பி லலைந்து துரியத்துச், சால விரிந்து குவிந்
து சகலத்தி, லாயவவ் வாறு மடைந்து திரிந்தோர்க்குத், தூ
ய வருடந்த நந்திக்கென் சொல்வதே. (௧௦)

நானென நீயென வேறில்லை நண்ணுத, லூனென வூனுயி
ரென்ன வுடனின்று, வானென வானவர் நின்று மனிதர்கள், தே
னென வின்பந் திளைக்கின்ற வாறே. (௧௧)

அவனு மவனு மவனை யறியா, ரவனை யறியி லறிவா னி
ல்லை, யவனு மவனு மவனை யறியி, லவனு மவனு மவனிவ
னாமே. (௧௨)

காலிது தானென கின்றிவ னோடாது, மூலிது தானுயிர்
போனவர் வானுளன், வாலிரு மாமுகில் போற்பொழி வானு
ள, ஞாலிது வம்பர நாதனு மாமே. (௧௩)

பெருந்தன்மை தானென யானென வேறு, யிருந்தது மி
ல்லைய தீச னறியும், பொருந்து முடலுயிர் போலுமை மெய்

யே, திருந்தமுன் செய்கின்றதேவர் பிரானே. (௩௪) ஆக அஅ.

---

## திருவருள்வைப்பு.

இருபத மாவ திரவும் பகலு, முருவது வாவ துயிரு முட
னு, மருளது வாவ துறமுந் தவமும், பொருளது வுண்ணின்ற
போகம தாமே. (௧)

காண்டற் கரியன் கருத்தில னந்தியுந், தீண்டற்குஞ் சார்
தற்குஞ் சேயனுந் தோன்றிடும், வேண்டிக் கிடந்து விளக்கொ
ளி யானெஞ்ச, மீண்டிக் கிடந்தங் கிருளறு மாமே. (௨)

குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும், வெறுப்பிரு ளி
ங்கில் விகிர்தனு நிற்குஞ், செறிப்புறு சிந்தையைச் சிக்கென நா
டி, லறிப்புறு காட்சி யமரரு மாமே. (௩)

தேர்ந்தறி யாமையின் சென்றன காலங்கள், பேர்ந்தறி
வாளெங்கள் பிஞ்ஞக னெம்மிறை, யார்ந்தறி வாரறி வேதனை
யாமெனச், சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே. (௪)

தானே யறியும் வினைகளழிந்தபி, னானே யறிகில னந்தி
யறியுங்கொல், ஊனே யுருகி யுணர்வை யுணர்ந்தபின், றேனே
யனையனந் தேவர் பிரானே. (௫)

நானறிந் தன்றே யிருக்கின்ற தீசனை, வானறிந் தாரறி யா
து மயங்கினர், ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற வொண்சுடர், தா
னறி யான்பின்னை யாரறி வாரே. (௬)

அருளெங்கு மான வளவை யறியா, ரருள நுகரமு தான
துந் தேரா, ரருளெங் கருமத் திருக்க முன்னு, ரருளெங்குங்
கண்ணுன தாரறி வாரே. (௭)

அறிவி லணுக வறிவது நல்கிப், பொறிவழி யாசை புகுத்
திப் புணர்ந்திட், டறிவது வாக்கி யடியரு ணல்குஞ், செறி
வொடு நின்றார் சிவமாயி னாரே. (௮)

அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட், டருளி லழிந்தி



ளைப்பாறி மறைந்திட், டருளான வானந்தத் தாரமு தூட்டி,
யருளாலென் னந்தி யகம்புகுந் தானே. (௯)

அருளா லமுதப் பெருங்கட லாட்டி, யருளா லடிபுனைந்
தார்வமுந் தந்திட், டருளான வானந்தத் தாரமு தூட்டி, ய
ருளாலென் னந்தி யகம்புகுந் தானே. (௧௦)

பாசத்தை விட்ட தருளாக்கப் பாசத்தி, னேசத்தை விட்ட
தருளாந்த நேசத்திற், கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தி,
னேசத்துத் தோன்று நிலையரு ளாமே. (௧௧)

பிறவா நெறிதந்த பேரரு ளாளன், மறவா வருடந்த மா
தவ னந்தி, யறவாழி யந்தண னாதிப் பராபர, னுறவாகி வந்
தென் னுளம்புகுந் தானே. (௧௨)

அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே, யகம்புகுந் தந்தெ
ரியானரு ளில்லோர்க், ககம்புகுந் தானந்த மாக்கிச் சிவமா, ய
கம்புகுந் தானந்தி யானந்தி யாமே. (௧௩)

ஆயு மறிவோ டறியாத மாமாயை, யாயகரணம் படைக்
குமைம் பூதமு, மாய பலவிந் திரிய மவற்றொடு, ஞ்ய வருளைந்
தாமாமருட் செய்கையே. (௧௪)

அருளே சகளமு மாய பவுதிக மருளே சராசர மாய வ
மலமே, யிருளே வெளியே யெனுமெங்கு மீச, னருளே சகளத்
தி னன்றியின் றாமே. (௧௫)

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து, தவமான வைம்முக
னீசனரனும், பவமுறு மாலும் பதுமத்தோ னீறு, நவமவை
யாகி நடிப்பவன் றானே. (௧௬)

அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா, வருட்க
ண்ணுளோர்க்கெதிர் தோன்று மரனே, யிருட்கண்ணி னோர்க்
கங் கிரவியுந் தோன்றாத், தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீ
ரொளி யாமே. (௧௭)

தானே படைத்திடுந் தானே யளித்திடுந், தானே துடை-

த்திடுந் தானே மறைத்திடுந், தானே யிவைசெய்து தான்முத்
தி தந்திடுந், தானே வியாபித் தலைவனு மாமே. (௧௭)

கலைபரா னான்குந் தனதரு வாகு, மலைபா வருவுரு வாகு
ஞ் சதாசிவ, நிலையான இந்நான்கு நீரு வாகுந், தலைபா வி
லைமுற்று மாயல்ல தொன்றே. (௧௮)

ஒன்றது வாலே யுலப்பிலி தானாகி, நின்றது தான்போ
லுயிர்க்குயி ராய்நிலை, யன்றி யுடையல்ல வாருந் தலையென்ன,
நின்றது தான்வினை யாட்டென்னு னையமே. (௧௯)

சேயத்தே நின்றிடி நின்மலன் சத்தியோ, டாயக் குடிலை
யுளதா யடைந்திட்டுப், போயக் கலைபல வாகப் புணர்ந்திட்டு
வியத் தகாவிந்து வாக விளையுமே. (௨௦)

விளையும் பரவிந்து தானே வியாபி, விளையுந் தனிமாயை
மிக்கமா மாயை, கிளையொன்று தேவர் கிளர்மறை வேத, மளை
யொன் றிலாவண்ட கோடிக ளாமே. (௨௧) ஆ. ௧௬௰.

அருளொளி.

அருளிற் றலைநின் றறிந்தழுந் தாது, ரருளிற் றலைநில்லா
ரைம்பாச நீங்கா, ரருளிற் பெருமை யறியார் செறிடா, ரரு
ளிற் பிறந்திட் டறிந்தறி வாரே. (௧)

வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி, யாரா வமுதளித்
தானந்தி பேர்நந்தி, போரா யிரமுடைப் பெம்மான்பே ரொ
ன்றிலி, லாரா வருட்கட லாழியென் றுனே. (௨)

ஆடியும் பாடியு மழுது மரற்றியுந், தேடியுங் கண்டேன்
சிவன்பெருந் தன்மையைக், கூடிய வாறே குறியாக் குறிதந்
தென், னூடிநின் றானவன் றன்னரு ளுற்றே. (௩)

உற்ற பிறப்பு முறுமல மானதும், பற்றிய மாயாப் படல
மெனப்பண்ணி, யத்தனை நீயென் றடிவைத்தான் பேர்நந்தி,



கத்தனை விட்டேன் கழல்பணித் தேனே. (௪)

விளக்கினை யேற்றி வெளியை யறிமின், விளக்கினின் மு
ன்னே வேதனை மாறும், விளக்கை விளக்கும் விளக்குடை யா
ர்கள், விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே. (௫)

ஒளியு மிருளு மொருக்கா லுந் தீர, வொளியுளோர்க் கன்
றோ வொழியா தொளியு, மொளியிருள் கண்டகண் போலவே
றயுந், தொளியிரு ணீங்க வுயிர்சிவ மாமே. (௬)

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி, நிறமே புகுந்
தென்னை நின்மல னாக்கி, யறமே புகுந்தெனக் காரமு தீந்த,
திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே. (௭)

அருளது வென்ற வகலிட மொன்றும், பொருளது வென்
ற புகலிட மொன்று, மருளது நீங்க மனம்புகுந் தானைத், தெ
ருளாறும் பின்னைச் சிவகதி யாமே. (௮)

கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை, வெவ்வொரு தெய்
வத்தின் மெய்ப்பொரு ணீக்கிடும், பாறணி யும்முடல் வீழவிட்
டாருயிர், தேறணி வோமிது செப்பவல் லீரே. () ஆ. ௧௬௯.

சிவபூசை.

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம், வள்ளற் பிரா
னுக்கு வாய்கோ புரவாசற், றெள்ளத் தெளிந்தார்க்குச் சீ
வன் சிவலிங்கங், கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக், காட்டவுங் காயி
லங் காலையு மாலையு, மூட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்,
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே. (௨)

பான்மொழி பாகன் பராபரன் றானாகு, மான சதாசிவ
ன் றன்னையா வாகித்து, மேன்முக மீசான மாகவே கைக்கொ

னோடு, சின்முகஞ் செய்யச் சிவனவ னாகுமே. (௩)

நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற், கனைகழ லீ
சனைக் காண வரிதாங், கனைகழ லீசனைக் காண்குற வல்லார்,
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. (௪)

மஞ்சன மாலை நிலாவிய வானவர், நெஞ்சினுள் ளீச னி
லைபெறு காரண, மஞ்சமு தாமுப சாரமெட் டெட்டோடு, மஞ்
சலி யோடுங் கலந்தர்ச் சித்தார்களே. (௫)

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு, வண்ண லு
றுகண் டருள்புரி யாநிற்கு, மெண்ணிலி பாவிக ளெம்மிறை யீ
சனை, நண்ணறி யாமனழுவகின் றாரே. (௬)

அத்த னவதீர்த்த மாடும் பரிசகே, யொத்த மெய்ஞ்ஞா
னத் துயர்ந்தார் பதத்தைச், சுத்தம தாக விளக்கித் தெளிக்க
வே, முத்திய மென்றுநம் மூலன் மொழிந்ததே. (௭)

மறப்புற்று இவ்வழி மன்னிநின் றாலுஞ், சிறப்பொடு பூநீ
ர் திருந்தமுன் னேந்தி, மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்,
மறப்பெற வேண்டு மமரர் பிரானே. (௮)

ஆரா தனையு மமர் குழாங்களுந், தீராக் கடலு நிலத்து
டதாய்நிற்கும், பேரா யிரமும் பிரான்திரு நாமமு, மாரா வழி
யெங்க ளாதிப் பிரானே. (௯)

ஆனந்த மாட்டி யமரர் கணந்தொழத், தானந்த மில்லாத்
த் தலைவ னருளாது, தேனுந்து மாமல ருள்ளே தெளிந்தோர்,
பாரைங் குணமும் படைத்துநின் றானே. (௧0)

உழைக்கொண்ட பூநீ ரொருங்குட னேந்தி, மழைக்கொ
ண்ட மாமுகின் மேற்சென்று வானோர், தழைக்கொண்ட பாசந்
தயங்கிநின் றேத்திப், பிழைப்பின்றி யெம்பெரு மானரு ளாமே,



வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு, வுள்ளக் கடற்புக்கு
வார்சுமை பூக்கொண்டு, கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்
டாதார், ளள்ளக் கடலு ளழுந்துகின் றாரே. (௧௨)

கழிப்படுந் தண்கடற் கௌவை யுடைத்து, வழிப்படு வார்
மலர் மொட்டறி யார்கள், பழிப்படு வார்பல ரும்பழி வீழ,
வெளிப்படு வோருச்சி மேவிநின் றானே. (௧௩)

பயனறிந் தொன்றுண்டு பன்மலர் தூவிப், பயனறி வார்க்
கரன் றானே பயிலும், நயனங்கள் மூன்றுடை யானடி சேர,
வயனங்க ளாலென்றும் வந்துநின் றானே. (௧௪)

ஒத்தவர் மாமலர் தூவித் தொழுதுநின், றத்தமை நீ
சனருட் சே வடியென்றன், மூர்த்தியை மூவா முதலுரு வாய்
நின்ற, தீர்த்தனை யாருந் துதித்துணர் ராரே. (௧௫)

தேவர்க ளோடிசை வந்தமண் ணோடும், பூவொடு நீர்
சுமந் தேத்திப் புனிதனை, மூவரிற் பன்மை முதல்வனாய் நின்ற
ரு, ளோர்மையை யாவர் நினைக்கவல் லாரே. (௧௬)

உழைக்கவல் லோர்நடு நீர்மல ரேந்திப், பிழைப்பின்றி யீ
சன் பெருந்தவம் பேணி, யிழைக்கொண்ட பாகத் தினமலர்
தூவி, மழைக்கொண்டல் போலவே மன்னிநிற் லீரே. (௧௭)

வென்று விரைந்து விரைப்பணி யென்றனர், நின்று
பொருந்த விறைபணி நேர்பட, நின்று சலமலர் தூவித்
தொழுதிடற், கொண்டிடு நித்தலுங் கூறிய வன்றே. (௧௮)

சாத்தியும் வைத்துஞ் சயம்புவென் றேத்தியு, மேத்தியு
நாளு நினையை யறிகிலா, ராத்தி மலக்கிட் டகத்திழுக் கற்ற
க்கான், மாத்திக்கே செல்லும் வழியது வாமே. (௧௯)

ஆவிக் கமலத்தி னப்புறத் தின்புற, மேவித் திரியும் விரி
சடை நந்தியைக், கூவிக் கருதிக் கொடுபோய் சிவத்திடை,
தாவிக்கு மந்திரந் தாமறி யாரே. (௨0)

சாணூகத் துள்ளே யழுந்திய மாணிக்கங், காணு மளவுங் கருத்தறி வாரில்லை, பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க், கு மாணிக்க மாகி மனம்புகுந் தானே. (உக)

பெருந்தன்மை நந்தி பிணங்கிரு ளோவி, யிருந்தன்மை யாதுமென் னெஞ்சிடங் கொள்ள, வருந்தன்மை யாளனை வானவர் தேவர், தருந்தன்மை யாளனைத் தாங்கிநின் றாரே. (உஉ)

சமய மலசுத்தி தன்செய லற்றிடு, மமையும் விசேடமு மானமந் திரசுத்தி, சமைய நிர்வாணங் கலாசுத்தி யாகு, மமைமன்னு ஞானமார்க் கபிடேகமே. (உங)

ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது, வூழி முயினா வுணரவுந் தாமொட்டா, வாழி யமரு மரிய னென்றுளோ, ரூழி கடந்துமோ ருச்சியு ளானே. (உச) ஆ. கசங.

---

குருபூசை

ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப், போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையு, மாகின்ற வாதார மாறு நதவின்மேற், போகின்ற பொற்பையும் போற்றுவ னியானே. (க)

வானுறு கோடி கடிகமழ் சந்தனம், வானுற மாமல ரிட்டு வணங்கினு, மூனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது, தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. (உ)

மேவிய ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பர, னாவயின் ஞான நெறிநிற்ற லர்ச்சனை, யோவற வுட்பூசனை செய்யி னாத்தமன், சேவடி சேரல் செயலற்ற றுமே. (ங)

உச்சியுங் காலையு மாலையு மீசனை, நச்சுமி னச்சி நமவென் றுநாமத்தை, விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினு, நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே. (ச)

புண்ணிய மண்டலம் பூசைநன் றாகுமாம், பண்ணிய மேனியும் பத்தனா குருமா, மெண்ணிலிக் கையிடிற் கோடியா குமாற், பண்ணிடிற் ஞாலிபூன் பார்க்கில் விசேடமே. (ரு)



இந்துவும் பானு விலங்குந் தலத்திடை, வந்தித்த தெல்லா மசுரர்க்கு வாரிபா, மிந்துவும் பானு மிலங்காத் தலத்திடை, வந்தித்த நந்திக்கு மாபூசை யாமே. (சு)

இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர், விந்துவு நாதமு மாகியே தானத்தே, சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு, நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. (எ)

மனபவ நங்களை மூலத்தான் மாற்றி, யனித வுடற்பூச மாக்கி யகற்றிப், புனித னருளினிற் புக்கிருந் தின்பத், தனியுறு பூசை சதாசிவற் காமே. (அ)

பகலு மிரவும் பயில்கின்ற பூசை, யியல்புடை யீசர்க் கிணைமல ராகப், பகலு மிரவும் பயிலாத பூசை, சகலமுந் தான்கொள்வன் றாழ்சடை யோனே. (கூ)

இராப்பக லற்ற விடத்தே யிருந்து, பராக்கற வானந்தத் தேறல் பருகி, யிராப்பக லற்ற விறையடி யின்பத், திராப்பகன் மாயை யிரண்டடித் தேனே. (கo) ஆ. சருங.

---

மயேசுரபூசை.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயி, னடமாடக் கோயி னம்பர்க்க தாகா, நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற், படமாடக் கோயிற் பகவற்க தாமே. (க)

தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந், துண்டது மூன்று புவனமு முண்டது, கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென், றெண்டிசை நந்தி யெடுத்துரைத் தானே. (உ)

மாத்திரை யொன்றினின் மன்வி யமர்ந்துறை, யாத்தனுக் கீந்த வரும்பெரு ஞானவை, மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந், தீர்த்தமு தாமது தேர்ந்துகொள் ளீரே. (உ)

அரசாயிர மந்தரர்க் கிறைவன், சிவமாயிருந் தெய்யுத முடிக்கின்றவன், பசு ஞானி பசுவுண் பலத்துக்குக் கிகளில் வென்பது நிச்சயந் தானே. (௪)

அறிவிச் செல்வி யருமறை ஞானவர், கூறிய மந்தனர் கோடிய குலப்பதி, வீதியிற் றொண்டர் வினையின் பயனில்லை, பேரிகலி கோள்போற் பெறுவதாமே. (௫)

எமது பாயினை வாவெம் பிரானென்று, சீரிய வாரதியார்கிழ் தேவர்க ளாதனி செஞ்சடை யண்ணலை விடயோன்று, வேறணி வார்க்கு வினையிலை தானே. (௬)

சித்தி கொண்டு திருமுக மாய்விட்ட, பேர்த்தி யென்றாம் பிறந்து சடையனை, காதொருக்கு கொக்கு வருமனை வந்சொல்லப், பேர்த்தி யென்றும் பிறந்தருளி பேசினே. (௭)

அழிதக வில்லா வரனடி யாளைத், தொழுதகை ஞானத்தன் ஞானிக்கு வீசுறும், பழுது படாவண்ணம் பண்பினை காட்டும், தொழுதெழு வையகத் தோரின்ப மாமே. (௮)

பகவற்கே தாகினும் பண்பில ராகிப், புகுந்த ரவியின்ற பூசனை செய்யு, முகமத்தோ டொத்துக்கின் ஞானிதோ நழி, யகமத்த ராகினு முய்ந்தொழிந் தாரே. (௯)

அர்த்தக மாகிய வேடத்த ருண்டது, வேத்த வயன்மா வருத்திய வண்ணமாக்குச் சித்தத் தெளிந்தவர் சேடம் பருகிடல், முத்திய மென்னு மகம் மூலம் மொழிந்ததே. (௧௰)

தாழ்விலர் பின்னை முயல்வ ரருந்தவ, மாழ்வினை யாழுவ வர்க்கே யறஞ்செய்யு மாழ்வினை நீக்கி யருளினை நின்றெழுந் போழ்வினை நீக்கும் பொன்னா கமே. (௧௧) [illegible]

அடியார் பெருமை.

இனைக்குறி யாதொரு தேவனை காமிக், வனைக்குறி யாதொரு வாதி யிருக்கிற், பனைக்குறி யாதெவ பார்மழை பெய்யு, மகக்குறை கேடில்லை யப்புவ லுக்கே. (௧)



அவ்வுல கத்தே பிறந்தவ் வுடலொடு, மவ்வுல கத்தே யருந்தவ மாகவ, வவ்வுல கத்தே யரனடி கூடுவ, ரவ்வுல கத்தே யருள்பெறு வாரே. (௨)

கொண்ட குறியுங் குலவரை யுச்சியு, மண்டரு மண்டத் தமரரு மாதியு, மெண்டிசை யோருமெ தென்னைத் தலைத்திரு ளுன்றெனி ஞானி யுய்க்கொழிக் கோரயே. (௩)

அண்டங்க ளேழு மகண்டமு மாவியுங், கொண்ட சராசர முற்றுங் குணங்களும், பண்டை மறையும் படைத்தளிப் பாதியுங், கண்ட சிவனுமெ னன்னியி லில்லையே. (௪)

பெண்ணல்ல வாணல்ல பேடல்ல மூடத்து, ளுண்ணின்ற சோதி யொருவர்க் கறிவொண்ணாக், கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடு, மண்ணற் பெருமையை யாய்ந்தது மூப்பே. (௫)

இயங்கு முலகினி லீச னடியார், மயங்கா வழிசெல்வர் வானவ ரென்பர், புயங்களு மெய்ஞ்ஞான பேர்நயர் தானமக்கப் பகிரண்ட மாமுந் தானே. (௬)

அகம்படி கின்றநம் மையனை யோரு, மகம்படி கண்டவர் வல்வினைக் கோரா, ரகம்படி யுள்புக் கறிகின்ற நெஞ்ச, மகம்படி கண்டா ரழிக்கலு மாமே. (௭)

உழவு முதலுங் காசற் றதனை, யழிவும தாய்நின்ற வாதிப் பிரானை, பழியும் புகழும் புகழ்பெறு முற்று, மொழியுமென் ஞானி யுழவுகொண் டானே. (௮)

என்றுயோ டென்னப்ப னேழேழ் பிறவியு, மன்றே சிவனைக் கெழுதிய வாவனை, யொன்று யுலகம் படைத்தா னெழுதின்று, நின்றுன் குறிப்பண்ண னேரெழுந் தாயே. (௯)

ஞானிக்கு நகப்படி ஞன்னி புரையும், ஞானிக்கு நகம்படி

பாற்பட் டொழுகு மணிக்தா ரகம்படி யாதிப் பிரானைச், சனி
ந்தா ரொருவர்க்குக் கைவிட லாமே. (க0)

தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி, நிலைமிசை வைத்த
னன் மெய்ப்பணி செய்யப், புலைமிசை நீக்கிய பொன்னுல கா
ளும், பலமிசை செய்யும் படர்சடை யோனே. (கக)

அறியாப் பருவத் தரனடி யாரைக், குறியா லறிந்தின்பங்
கொண்ட தடிமை, குறியார் சடைமுடி கட்டி நடப்பார், மறி
யார் புனல்மூழ்க மாதவ மாமே. (கஉ)

அவன்பா லணுகியே யன்புசெய் வார்கள், சிவன்பா லணு
குதற் செய்யவும் வல்ல, னவன்பா லணுகியே நாடி மடியா, ரி
வன்பாற் பெருமை யிலயம தாமே. (கங)

முன்னிருந் தார்முழு தெய்கணத் தேவர்க, ளெண்ணிற
ந் தன்பால் வருவ ரிருநிலத், தெண்ணிரு நாலு திசையந் தர
மொக்கப், பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே. (கச)

சிவயோகி ஞானி செறிந்தவத் தேச, மவயோக மின்றி ய
றிவோருண் டாகு, நவபோகங் கைகூடு நல்லியல் காணும், பவ
யோக மின்றிப் பரலோக மாமே. (கரு)

மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன், மேலுணர்
வான்மிகு ஞாலங் கடந்தவன், மேலுணர் வார்மிகு ஞாலத் த
மரர்கள், மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே. (கசு)

கஅ

## போசனவிதி.

எட்டுத் திசையு மிறைவ னடியவர்க், கட்ட வடிசி லமு
தென் றெதிர்கொள்வ, ரொட்டி யொருசில நாள்பல ரந்நிலம்,
விட்டுக் கிடக்கில் விருப்பறி யாரே. (க)



அச்சிவ ஞானலின்ற வருளை யறிந்தவருச்சியம் போதா
வுள்ளமர் கோவிற்குப், பிச்சை பிடித்துண்டு பேத மறநினை
த், திச்சைகெட் டேகாந்தத் தேறி யிருப்பரோ. ( ) ஆ சஅஉ.

## பிக்ஷாவிதி.

விச்சுக் கலமுண்டு வேலிச்செய் யொன்றுண்டு, வுச்சிக்கு
முன்னே யுழவு சரைந்தது, வச்சங்கெட் டச்செய் யறுத்துண்
ண மாட்டாதா, ரிச்சைக்குப் பிச்சை யிரக்கின்ற வாறே. (க)

பிச்சைய தேற்றான் பிரமன் றலைதன்னில், பிச்சைய தேற்
றான் பிரியா வறஞ்செய்யப், பிச்சைய தேற்றான் பிரமன் சிரங்
காட்டிப், பிச்சைய தேற்றான் பிரமன்பர மாகவே. (உ)

பாந்தல மேழும் படைத்த பிரானை, யிரந்துணி யென்
பர்களொற்றுக் கிரக்கு, நிரந்தர மாக நினையு மடியா, ரிரந்
துண்டு தன்கழ லெட்டச்செய் தானே. (ங)

வரவிருந் தான்வழி நின்றிடு மீசன், றரவிருந் தான்றன்
னை நல்லவர்க் கின்பம், பொரவிருந் தான்புக லேடிமலாக, வ
ரவிருந் தாலறி யாரென்ப தாமே. (ச)

அங்கார் பசியு மவாவும் வெகுளியுந், தங்கார் சிவனடி
யார்சரீ ரத்திடைப், பொங்கார் புவனத்தும் புண்ணிய லோக
த்துந், தங்கார் சிவனைத் தலைப்படு வாரே. (ரு)

மெய்யக ஞான மிகத்தெளிந் தார்களுங், கையக நின்ற
டார் தலைத்தலைச் சேசெல்வ, ரையம் புகாம லிருந்த தவசி
யார், வையக மெல்லாம் வரவிருந் தாரே. (சு) ஆ சஅசு.

## முத்திரைபேதம்.

காலேழு மாதவே கன்னிய முத்திரை, பாலான மோன
மொழியிற் பதிவித்து, மேலான நந்தி திருவடி மீதுய்யக்

கோலா கலங்கேட்டுக் கூடுநன் முத்தியே. (௧)

துரியங்கண் மூன்றுஞ் சொருகிட்ட தாகி, யரிய வுரைத்தார மங்கே யடக்கி, மருவிய சாம்பவி கேசரி யுண்மை, பெருகிய ஞானம் பிறழ்முத் திரையே. (௨)

சாம்பவி நந்தி தன்னருட் பார்வையா, மாம்பவ மில்லா வருட்பாணி முத்திரை, யோம்பயி லோங்கிய யுண்மைய கேசரி, நாம்பயி லுநன்மெய்ஞ் ஞானமுத் திரையே. (௩)

தானத்தி தன்னோ சதாசிவ னாயிடும், ஞானத்தி தன்னோ நற்சிவ மாதலா, லேனைச் சிவமாஞ் சொருப மறைந்திட்ட, மோனத்த முத்திரை முத்தாந்த முத்தியே. (௪)

வாக்கு மனமு மிரண்டு மவுனமாம், வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம், வாக்கு மனமு மவுனமா சுத்தரே, யாக்கு மச்சுத்தத்தை யாரறி வார்களே. (௫)

யோகத்தின் முத்திரை யோரட்ட சித்தியா, மேசுத்த ஞானத்து முத்திரை யென்னுங்கா, லாகத் தருவேத கேசரி சாம்பவி, யோகத்து கேசரி யோகமுத் திரையே. (௬)

யோகியென் சித்தி யருளொளி வாதனை, போகிதன் புத்தி புருடார்த்த நன்னெறி, யாகுநன் சத்தியு மாதார சோதனை, யேகமுங் கண்டொன் றெய்திநின் றானே, (௭)

துவாதச மார்க்கமேன் சோடச மார்க்கமா, மவாவறு மீரை வகையங்க மாறு, தவாவறு வேதாந்த சித்தாந்தத் தன்மை, நவாவக மோடுன்ன னநசுத்த சைவமே. (௮)

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை, ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை, தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை, காவிக்கு முத்திரை கண்ட சமையமே. (௯)

அநெறி கண்ட சவடு நடுவெழும், பூநெறி கண்டது பொ



னைக மாய்நிற்கு, மேனெறி கண்டது வெண்மதி மேதினி, நெறி கண்டோ னின்மல னாமே. (௰) ஆ. உகஅ

---

பூரணக்குகைநெறிச்சமாதி.

வளர்பிறை யிற்றேவர் தம்பாலின் மன்னி, யுளரொளி பா தவி யுன்னோ யொடுங்கித், தளர்விற் பதிர்பதந் தங்கிச் சசியு, ளொளிதரும் யோகி யுடல்விட்டாற் றானே. (௧)

நாலுமை பொக்குஞ் சமாதிகை கூடாது, போன வியோகி புகலிடம் போந்தபின், ஞானவை நிரந்தர மாயோக மா னவை சேர்வா ரருளின்சார் வாகியே. (௨)

ஞானிவ் வகையே புவியோர் நெறிநக்கி, யான சிவயோகத் தாமாறு மவ்வித்து, தானறி லக்கச் சிவயோகி யாகுமுன், ஞானந்தோர் சித்திவர் தோர்கயே மாகுமே. (௩)

சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டாற், றவலோகஞ் சேர்ந்தபின் றுன்வந்து கூடிச், சிவயோக ஞானத்தாற் சேர்ந்தவர் சித்தர், புவலோகம் போற்றுனர் புண்ணியத் தோரே.

னமின் ஞானிநல் யோகி யுடல்விட்டாற், றான போ சமாதியுட் டங்கியே, தானவ னாகும் பரகாயஞ் சாராதே, னமின் முத்தராய் மீளா ருணர்வுற்றே. (௫)

த்தநுர் பெரும்பய னுவந்த வேதெளிந், செத்தங்கிர் சே வந்த சித்திகைக் கூடிடிற், செத்தா ரிருந்தார் செகத்திற் றிரி ல்ந், செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே. (௬)

உன்னக் கருவிட் டோவா னானருட், பன்னப் பானே ய ட்குலம் பாலிப்ப, மென்னப் புதல்வர்க்கும் வேண்டி யிடுநா னி, நன்லிச்சைக் கிசையுஞ் செய்யுந் தானே. (௭)

எந்துஞ் சிவமா யிருந்தா மிதயத்துத், தங்குஞ் சிவஞானி

க்கெங்குமாந் தற்பர, மங்காங் கெனநின்ற சகமுண்ட வான்
றேய்த, லிங்கே யிறந்தெங்கு மாய்நிற்கு மீசனே. (௮)

ஆக ௨௭௬

---

சமாதிக்கிரியை.

அந்தமின் ஞானிதன் னாகந் தீயினிற், வெந்திடி னாடெலா
ம் வெப்புத் தீயினி, னொந்தது நாய்நரி நாகரி னூண்செறு, வந்து
நாய்நரிக் குணவாகும் வையமே. (௧)

எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடி, லண்ணலங் கோயி
லழிவிட்ட தாங்கொக்கு, மண்ணின் மழைவிழா வையகம் பஞ்
சமா, மெண்ணரு மன்ன ரிழப்பா ரரசே. (௨)

புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது, நண்ணி யனல்
கோக்கி னாட்டி லழிவாகு, மண்ணி லழியி லலங்கார பங்கமா,
மண்ணுல கெல்லா மயங்குமன் மண்டியே. (௩)

அந்தமின் ஞானி யருளி யடைந்தக்கா, லந்த வுடலுங் கு
கைசெய் திருந்திடிற், சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோ
ரு, முந்தமி லின்ப வருள்பெறு வாரே. (௪)

நவமிகு சாலைமேல் நல்லாழஞ் செய்து, குவைமிகு குழி
வைஞ் சானுகக் கோட்டித்தீ, தவமிகு குகைமுக் கோணமுஞ் சா
ணுக்கிப், பவமறு நற்குகை பத்மா சனமே. (௫)

தன்மனை சாலை குளுங்கரை யாற்றிடை, நன்மலர்ச் சோ
லை நகரிநற் பூமி, யுன்னருங் கான முயர்ந்த மலைச்சார, லிந்நில
ந் தான்குகைக் கெய்து மிடங்களே. (௬)

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய், நிற்கின்ற
பாத நவபாத நேர்விழப், பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூ
ன்றணி, நிற்பவர் தாஞ்செய்யு நேர்மைய தாமே. (௭)

பஞ்ச லோகங்க ளையமுணி பாரித்து, விஞ்சப் படுத்ததன்



மேலா சனமிட்டு, முஞ்சிப் படுத்துவெண் ணீறிட் டதன்மே
லே, பொன்செய்நற் சுண்ணம் பொதிபலு மாமே. (௮)

நல்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக், கள்ளவி
ழ் தாமங் களபங்கத் தூரியுந், தெள்ளிய சாந்து புழுகுபன் னீ
ர்சேர்த்து, வொள்ளிய தூப முவந்திடு வீரே. (௯)

ஓதிடும் வெண்ணீற்று ளுத்தூளங் குப்பாய, மீதினி லிட்
டா சனத்தினின் மேல்வைத்துப், போதறு சுண்ணமு நீறும்
பொலிவித்து, மீதி லிருத்தி யிருத்திடு வீரே. (௧0)

விரித்தபின் னற்சாரு மேவுகஞ் செய்து, பொரித்த சுதி
போ னகமினா நீருங், குருத்தலம் வைத்தோர் குகைமுகம் பா
ர்வை, சுரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே. (௧௧)

மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும், போதுப
லகொண்டு தர்ப்பைப்புல் வில்லமும், பாத வுதகத்தான் மஞ்ச
னஞ் செய்துபார், மீதுமுன் னாக்குமுன் றணிநிலஞ் செய்யுமே.

ஆதன மீதி லாசு சிவலிங்கம், போது மிரண்டினி லொன்
றைத்தா பித்து, மேதகு சந்நிதி மேவுந் தாம்பூர்வங், காதலிற்
சொட்சங் காணுப சாரமே. (௧௩) ஆக ௨௪௯

---

விந்துற்பனம்.

உதயத்தில் விந்துவி லோங்குண் டலியு, முதயக் குடிலில்
வயிந்தவ மோன்பான், விதியிற் பிரமாதி கள்மிகு சத்தி, கதி
யிற் சிரணுங் கலைவை கரியே. (௧)

செய்திடும் விந்துபே தத்திர னையந்துஞ், செய்திடு நா
தபே தத்திற னாலாறுஞ், செய்திடு மற்றிவை யீரண் டிற்றிற
ஞ், செய்திடு மாறுறு சேர்தத் துவங்களே. (௨)

வந்திடும் பேத மெலாம்பர விந்து, தந்திடு மாமாயை வா
கேசி தற்பரை, யுந்து குடிலைபோ ரேமுறு குண்டலி, விந்துவி
லிந்நான்கு மேவா விளங்குமே. (௩)

விளங்கு நிவிர்த்தாதி மேவக ராதி, வளங்கொ ளுகார மகாரத்தான் விந்து, களங்கமி லாதாந்தங் கண்ணினு ளன்னி, யுளங்கொள் மருதியு ளக்கமு மாமே. (௬)

அக்கமு மாதியு மாகிப் பராபரன், வக்க வியாபி யெனவா யவக்கெறி, கக்கம தாகிய காரண காரியக், தக்கைதங் கருமமுந் தான்செய்யும் விபமே. (௫)

வியம தாகிய விக்துவின் சத்தியா, லாய வகண்டமு மண்டமும் பாரிப்பக், காயமைம் பூதமுங் காரிய மாயையி, லாயிட விக்து வகம்புற மாகுமே. (௬

புறமக மெங்கும் புகுந்தொளிர் விந்து, நிறமது வெண்மை நிகழ்காதஞ் செம்மை, யுரமகிழ் சத்தி சிவபாத மாயுட், டிற மொருமி வீட்டளிக் குஞ்செயற் கொண்டே. (எ)

கொண்டவிவ் விந்து பரமப்போற் கோதர, சென்ற படங்கட மாய்நிலை நிற்றலிற், கண்ட கலாதியின் காரண காரியத், தண்ட மனைத்துமாய் மாமாயை யாகுமே. (அ)

அதுவிந்தி லேநின்றங் கண்ணிக்கு நந்தி, யிதுவிந்தி லேயுள வாறை யுணரார், மதுவிந்தி லேமல ரன்னம தாகிப், பொதுவிந்தி லேநின்ற புண்ணியன் முனே. (௯)

விந்தினி லன்றி மூலையில்லை யம்முளை, விந்தினி லன்றி வெளிப்படு மாறில்லை, விந்து முளையு முடனல்ல வேறில்லை, யந்தன்மை யாகு மரனெறி காணுமே. (௧௦)

அருந்திய வன்னு மனைமூன்று கூறும், பொருந்து முடல்மனம் போமல மென்னத், திருந்து முடன்மன மாங்கூறு சேர்ந்திட், டிருந்தன மூன்று ளிரதம தாகுமே. (௧௧)

இரத முதலான வேழ்காது மூன்றி, னரிய தினத்தி லொருபுற் பனிபோ, லரிய துளிவிந்து மாகுமேழ் மூன்றில், மருவிய விந்து வளருங்க ரத்திலே. (௧௨)



காயத்திலேமூன்று ளிரற் கலக்கட்டுக், காயத்துட் டன்மன மாகுங் கலாவிந்து, நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின், மாயத்தே செல்வோர் மனத்தோ டழியுமே. (௧௩)

அழிகின்ற விந்து வளமை யறியார், கழிகின்ற தன்னையுங் காக்கலுந் தேரா, ரழிகின்ற காயத் தழிந்தயர் வுற்றோ, ரழிகின்ற தன்மை யறிந்தொழி யாரே. (௧௪) ஆ. உ௩௫

---

### விந்துஜயம்-போகசரவோட்டம்

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோ, யோர்க்கின் றவுள்ள முருக வழல்மூட்டிப், பார்க்கின்ற கண்ணுளை பாழ்பட வூலத்தே, சேர்க்கின்ற போகி சிவயோகி தானே. (௧)

தானே யருளாற் சிவபோகந் தங்காது, தானேயக் காமாதி தங்குமோ ராமூட்டுந், தானே யதிகாரந் தங்கிற் சடங்கெடு, மூனே யவற்றுள் ளுயிரோம்பா மாயுமே. (௨)

மாயாள் வசத்தே சென்றி வரவேண்டி, லோயா விருபக்கத் துள்வளர் பக்கத்து, ளேயாவென் றுளின்ப மேற்பனி மூன்றிரண், டாயா வபரத்து ளாதிநா ளாகுமே. (௩)

ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம், வேரன்பு வேண்டுவோர் பூவிற் பின்னந்தோ, டேறு மிருபத் தொருநாளிடைத் தோங்கு, மாறின் மிகுத்தோங்கு மக்காலஞ் செய்யவே. (௪)

செய்யு மனவிற் றிருகான் முகூர்த்தமே, யெய்யுங் கலைகால மிந்துப் பருதிகா, லையு மிடத்தோடி லன்காம ஞானெறி, செய்க வலமிடந் தீர்ந்து விடுக்கவே. (௫)

விடுங்கான் முனைந்திந் திரியங் களைப்போ, னடுங்கா திருவையிர்ந்து கன்னப், படுங்காதன் மாதின்பாற் பற்றகடுங்காற் கரணங் கருத்துறக் கொண்டே. (௬)

கொண்ட குணனே நலனே நற் கோமளப், பண்டை யுருவே பகர்வாய் பவளமே, விண்டு தனமே மிடைய விடும்போதிற், கண்ட கரணமுட் செல்லக்கண் டேவிடே. (௭)

விட்டபின் கர்ப்பவுற் பத்தி விதியிலே, தொட்டுறுங் காலங்க டோன்றக் கருதிய, கட்டிய வாறுஞ்சா நாள்குணங் கீழ்மைசீர்ப், பட்ட நெறியிதென் றெண்ணியும் பார்க்கவே. (௮)

பார்த்திட்டு வையத்துப் பரப்பற் றுருப்பெற்று, வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீக்கியே, சேர்த்தற் றிருதிங்கள் சேரா வகலினு, மூப்புற்றே பின்றுளி லாமெல்லா முள்ளவே. (௯)

வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை, வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை, வித்தினில் வித்தை விதற வுணர்வரேல், மத்தி லிருந்ததோர் மாங்கனி யாமே. (௧௦)

கருத்தில் லக்கர மாயுவு ழியாவுங், கருத்துள வீசன் கருவுயி ரோடுங், கருத்தது வித்தாய்க் காரண காரியங், கருத்துற மாறிவை கற்பனை தானே. (௧௧)

ஒழியாத விந்து வுடனிற்க நிற்கு, மழியாப் பிராண மதிபலஞ் சத்தி, யொழியாத புத்தி தபஞ்செப மோன, மழியாத சித்தியுண் டாம்விந்து வற்றிலே. (௧௨)

வற்ற வனலைக் கொளுவி மதித்தேறித், துற்ற சுழியனல் சொருகிச் சுடருற்று, முற்று மதியத் தமுதை முறைமுறை, செற்றுண் பவரே சிவயோகி யாவரே. (௧௩)

யோகியு ஞானியு முத்தம சித்தனும், யோகியு ஞான புரந்தர னவோனு, மோக முறினு முறையமிர் துண்போனு, மாகிய விந்து வழியாத வண்ணலே. (௧௪)

அண்ண லுடலாகி யவ்வனல் விந்துவு, மண்ணிடைச் கும் பிராணனும் விந்துவுஞ், சண்ணுங் கனலிடைச்



கலக்கெறித், துண்ணி லுயிர்தாகி யோகிக் கறிவாமே. (௧௫)

அரியா தழிகின்ற வாதலா லாளும், பொறியா லழிந்து புலம்புகின் றார்க, ளறிவாய் நனவி லதிதம் புரியச், செறிவா யிருந்து சேரவே மாயுமே. (௧௬)

மாதரை மாய வருங்கூற்ற மென்றன்னக், காதல தாகிய காமங் கழிந்திடுஞ், சாதலு மில்லை சதகோடி யாண்டிருஞ், சோதியி னுள்ளே துரிசறுங் காலமே. (௧௭)

காலங் கடந்தவன் காண்விந்து செற்றவன், காலங் கடந்தழிந் தான்விந்து செற்றவன், காலங்க ளின்விந்து செற்றுற்ற காரிகை, காலின்கண் வந்த கலப்பறி யாரவரோ. (௧௮)

கலக்குநாள் முன்னு டன்னிடைக் காதல், னிலத்திக வெண்டிலக் காரி யுதரக், கலத்தின் மலத்தைத்தன் சித்தத்தைப் பித்தை, விலக்கு வனசெய்து மேவலை வீரே. (௧௯)

மேலா நிலத்தெழு விந்துவு நாதமுங், கோலா லடைத்திக் குறிவழி யேசென்று, பாலா மமிர்துண்டு பற்றறப் பற்றினான், மாலா னதுமான மாளுமவ் விந்தே. (௨௦)

விந்து விளைவும் விளைவின் பயனுமுற்று, மந்த வழிவு மடக்கத்தி லாக்கமு, நந்தி பகாசமு நாதத்தாற் பேதமுந், தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே. (௨௧)

விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து, நந்திய வங்கியி னாலே நயந்தெறித், தந்தயில் பாது வதிகண்ட மேலேற்றிச், சந்திரன் சார்புறத் தன்னமு தாமே. (௨௨)

அமுதச் சசிவிந்து வாம்விந்து மாள, வமுதப் புனலோடி யங்கியின் மாள, வமுதச் சிவபோக மாதலாற் சித்தி, யமுதப் பலாவன மாக்குறும் யோகிக்கே. (௨௩)

யோகமவ் விந்து வொழியா வகைபுணர், ராக மிரண்டு

ங் கலந்தாலு மாங்கிருப், போகஞ் சிவபோகம் போகிநற்
போகமா, மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே. (௨௪)

மாத ரிடத்தே செலுத்திடு மவ்விந்து, காதலி னால்விடா
ர் யோகங் கலந்தவர், மாத ருயிரானைக் கைக்கொண்டே வா
ங்குவர், காதலர் போன்றங்கன் காதலாஞ் சாற்றிலே. (௨௫)

சாற்றிய விந்து சயமாகுஞ் சத்தியா, லேற்றிய மூலத்
தழலை யெழமூட்டி, நாற்றிசை யோடா நடுநாடி நாதத்தோ,
டாற்றி யமுத மருந்தவிந் தாமே. (௨௬)

விந்துவு நாதமு மேவக் கனன்மூல, வந்த வனன்மயிர்க்
காலூடு மன்னிடச், சிந்தனை மாறச் சிவமக மாகவே, விந்து
வு மாளுமெய்க் காயத்தில் வித்திலே. (௨௭)

வித்துக்குற் றன்பான் விளைவறி யாதவன், வித்துக்குற்
றன்னுமல் வித்துச்சுட் டென்பவன், வித்துக்குற் றன்பாவி
ல் வேறல னீற்றவன், வித்துக்குற் றன்னுமவ் வித்துவித்
தானன்றே. (௨௮)

அன்னத்தில் விந்து வடங்கும் படிகண்டு, மன்னப் பிரா
ணனும், விந்து மறித்திட்டு, பின்னெடுத்த விந்தா தாக்கத்
து விட்டிட, வன்னத் திருவிந்து மாயுங்கா யத்திலே. (௨௯)

அன்னம் பிராணனென் றூர்க்கு மிருவிந்து, தன்னை யறிந்
தன்றி சாதிக்க வல்லார்க்குச், சொன்னமு மாமுருத் தோன்
றுமென் சித்திபா, மன்னவ ரெல்லா மழிவற நின்றதே. (௩௰)

நின்றசொ ரூப நினைக்கும் பிரணவ, பொன்று மகார மொ
ருமூன் றொ டொன்றவை, சென்று பராசத்தி விந்து சயத்தன்
னை, யொன்ற வுரைக்க வுபதேசந் தானே. (௩௧)

தானே யுபதேசந் தானல்லா தொன்றில்லை, வானே யுபா
விந்து வந்த பதினொனு, மானே நடங்க வனம்பின்பு புத்தியுந்,
தானே சிவநதி தன்மையு மாமே. (௩௨)



விந்துவு நாதமும் விளைய விளைந்தது, வந்தவிப் பல்லுயி
ர் மன்னுயி ருங்கொலா, மந்தமு மாதியு மாமக் கிரங்களும், விந்
தா வட்டக விளையுஞ் சிவோகமே. (௩௩)

வறுக்கின்ற வாறு மனத்தலா வெற்றி, திறக்கின்ற வாறு
மக் கின்வரை யொட்டிப், பொறிக்கின்ற வாறுமப் பொல்லா வி
னை, யறுக்கின்ற நான்வரு மத்திப் பழமே. (௩௪)

விந்துவு நாதமு மேவி யுடன்கூடிச், சந்திர னோடே த
லைப்படு மாயிடைச், சுந்தர வானத் தமுதம்வந் தூறிடு, மங்குசி ம
ந்திர மாகுதி யாகுமே. (௩௫)

மனத்தொடு சத்து மனஞ்செவி யென்ன, வினத்தெழு வா
ர்க வினைக்கன நாடி, மனத்தி லெழுகின்ற வாக்கு வசனங், க
னத்த விரதமக் காமத்தை நாடிலே. (௩௬)

சத்தமுஞ் சத்த மனமு மனக்கருத், தொத்தறி கின்ற வி
டமு மறிகிலர், மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு, வந்த
விருப்பிட மவ்விடந் தானே. (௩௭)

உரமடி மேதினி யுந்தியி லப்பாம், விரவிய தன்முலை மே
விய கிழங்கி, கருமுலை மீமிசை கைக்கிழுக் காரும், விரவிய க
ந்தர மேல்வெளி யாமே. (௩௮) ஆ உளக

---

ஆதித்தநிலை-அண்டாதித்தன்.

செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கள், மஞ்சடை மேரு
வலம்வருங் காரண, மெஞ்சுட ரீச னிறைவ னிணையடி, தன்சு
டராக வுணங்குந் தவமே. (௧)

பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம், புகலவ னாய்
நின்ற புண்ணிய நாத, னிகலற வேழுல குற்முற வோங்கும்,
பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே. (௨)

ஆதித்த னன்பினோ டாயிர நாமமுஞ், சோதியி னங்கே
சுடரொளி யாய்நிற்கும், வேதியர் வேண்டிநாம் விண்ணவர்

சொல்லினும், பாதியி லன்பு பழுக்கின்ற வாறே. (௩)
தானே யுலகுக்குத் தத்துவ னாய்நிற்குந், தானே யுலகுக்
குத் தலைவனு மாய்நிற்குந், தானே யுலகுக்குச் சம்பவு மாய்நி
ற்குந், தானே யுலகுக்குத் தன்சுட ராகுமே. (௪)
வலைய முக்கோணம் விட்ட மறுகோணந், தலையிரு வட்
டந் தய்ய விதமெட்டி, லலையுற்ற வட்டத்தி லிரெட்டி தழா,
மலைவற் றுதித்தன னுதித்த னாமே. (௫)
ஆதித்த னுள்ளி லானமுக் கோணத்திற், சோதித் திரங்கு
கற் சூரிய னுலாங், கேத முறுங்கோணி சூரியனெட்டிற், சோ
தினன் னிட்டிற் சோடசந் தானே. (௬)
ஆதித்த னோடே யவனி யிருண்டது, பேதித்த நாலும் பி
றந்திக் கழிந்தது, சோதிக்கு ளொன்று துடியிடை செய்கின்ற,
வேதப் பொருளை விளங்குகி லீரோ. (௭)
பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி, யாருக்குங் காணா
வொண் ணாத வரும்பொருள், னீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவ,
னூருக்கு மெட்டாத வாதித்தன் றானே. (௮)
முன்னை யிடந்ததின் கீழொடு மாதித்தன், விண்ணை யிட
ந்து வெளிசெய்து நின்றிடுங், கண்ணை யிடந்து களிதந்த வா
னந்த, மெண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே. (௯)
பாரை யிடந்து பகலோன் வரும்வழி, யாரு மறியா ரருங்
கடை நூலவர், நீர விருக்க நெருமலை சூழென்பார், நூனை யுண
ர்ந்தா ருணர்ந்திருந் தாரே. (௰) ஆக ௨௮௧.

பிண்டாதித்தன்.

நின்று மிருந்துங் கிடந்து நடந்தோறுங், கன்றிய நக்கிக்
கருத்து ளிருந்தனன், கொன்று மலங்கள் குழல்வழி யோட,
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே. (௧)
ஆதித்த னோடி யடங்கு மிடங்கண்டு, சாதிக்க வல்லவர்,



தம்மை யுணர்ந்தவர், பேதித் துலகம் பிதற்றும் பிதற்றலா,
மாதித்த னோடே யடங்குகின் றாரே. (௨)
உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து, சொருகிக் கிடக்கு
ந் துறையறி வாரில்லை, சொருகிக் கிடக்குந் துறையறி வாளர்
க், குருகிக் கிடக்குமென் னுள்ளன்பு தானே. (௩) ஆ. ௨௮௪.

மனவாதித்தன்.

எறிகதிர் ஞாயிறு மின்பனி சோரு, மெறிகதிர் சோமனெ
திர்நின் றெறிப்ப, விரிகதி ருள்ளே வியங்குமென் னுவி, யொரு
கதி ராகி யுவாவது வாமே. (௧)
சந்திரன் சூரியன் றன்வழிப் பூசனை, முந்திய பானுவி லி
ந்துவந் தேய்முறை, யந்த விரண்டு முபய நிலத்திற், சிந்தை
தெளிந்தார் சிவமாயி னாரே. (௨)
ஆங்கு கலையோ டருக்க னனன்மதி, யாங்கு கலையிடை
நான்கென லாமென்பா, ராங்கு மருக்க னனல்மதி யோடொ
ன்ற, வாங்குமப் பூரணை யாமென் றறியுமே. (௩)
ஈரெண்டத் தப்பா லியங்கிய வவ்வொளி, யோரெண்டத்
தார்க்கு முணரா வுணர்வது, பேரெண்டத் தூடே பிறங்கொளி
யாய்நின்ற, தாரெண்டத் தக்கா ரறியத்தக் காரே. (௪)
ஒன்பதின் மேவி யுலகம் வலம்வரு, மொன்பது மீசனிய
லறி வாரில்லை, முன்பதின் மேவி முதல்வ னருளிலா, லின்ப மிலா
ரிருள் சூழநின் றாரே. (௫) ஆ. ௨௮௯.

ஞானாதித்தன்.

விந்து வபரம் பரமிரண் டாய்விரிந், தந்த வபரம் பார
த மாகியே, வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத், தந்த மரு
னேறு தடமென்ன வுள்ளத்தே. (௧)

உள்ள வருணேறு கயத்தெழு மோனைசதான், றென்றும் பர
காசத் தின்செய வென்பதால், வள்ளல் பரவிக்கு வைகரி யாதி
யாக், குள்ளனை வைக்கலைக் கொன்று முதயமே. (உ)

தேவர் பிரான்றிசை பத்துத யஞ்செய்யு, மூவர் பிரானெ
ன முன்னொருகாலத்து, நால்வர் பிரானடு வாயுறை யாகிற்கு,
மேவு பிரானென்பர் விண்ணவர் தாமே. (௩)

பொய்யிலன் மெய்யன் புவனா பதியெங்கை, மெய்யிரு ளி
க்கு மதியங்கி ஞாயிறு, செய்யிரு ளிக்குந் திருவுடை நந்தியெ
ன், கையிரு ளிக்கக் கலந்தெழுந் தானே. (௪)

தலிச்சடை ரெற்றித் தயங்கிரு ளீங்க, வலித்திடு கேவல ய
ருக்கவி ழுறல், கலிச்சடை ராயநின்ற கயிலையி லீச, னலிச்சட
ர் மேல்கொண்ட வண்ணமு மாமே. (௫)

சோதி வாக நிரம்பிய பேரொளி, போரதி யாத புவனங்
கள் போய்வருஞ், சோதி யாத திசையொளி யாயிடு, மாறி
லாதிலு காயக மாமே. (௬)

மண்டலத் தன்னை மலர்க்கெழு மாதித்தன், கண்டடத்
தன்னை கதிரொளி யாயிருந், சென்றிடத் தெட்டுத் திசையெ
ங்கும் போய்வரு, நின்றிடத் தேங்கு சோதி வார்க்கே. (௭)

நாபிக்கண் ணுமி நயன கிவிஞ்சு, தாமிபோ டைந்தறு
சடர்விடு சோதியைத், தேவர்க ளீசன் திருமால் பிரமனு, மு
வரு மாக வுணர்ந்திருந் தாரே. (௮) ௮௰ உகூ

---

சிவாதித்தன்.

அந்திய பாச விருளுஞ் ஞானமுந், சென்றிடு ஞான
சிவப்பிர காசத்தா, லொன்று பிருசுடை ராமரு ளேதயங், தன்
திரு ளிங்குதல் போலத் தொலைக்கதே. (க)

கடங்கடந் தோறுங் கதிரவன் றோன்றி, லட்டுங்கிடற



லவற்றி லடங்கான், விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்,
தடங்கிட நின்றது மப்படி சாமே. (உ)

தானே விரிசுடர் மூன்றுமொன் றாய்நிற்குந், தானே யய
ன்மா லெனநின்று தாமிக்குந், தானே யுடலுயிர் வேறன்றி
நின்றுளன், றானே வெளியொளி தானிருட் டாமே. (௩)

தெய்வச் சுடரங்கி ஞாயிறுந் திங்களும், வையம் புனலன
ல் மாருதம் வானகஞ், சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயி,
ரைவர்க் கிடமிடை யாறங்க மாமே. (௪) ௮௰ கூ௩.

---

பஞ்சலக்கணம்-பிராணன்.

உன்னு மனவி லுலாரு மொருவனைப், பன்னு மறைகள் ப
யிலும் பரமனை, யென்னு ளிருந்திடு மின்னொளி விளக்கினை, யன்ன
மயமென் றறிந்துகொண் டேனே. (க)

அன்ன விரண்டினி லாற்றங் கரையினிற், றுன்னி யிரண்
டு துணைப்பிரி யாதன்னந், தன்னிலை யன்னந் தனியொன்ற
நென்றக்கால், பின்ன மடவன்னம் போறுது காதே. (உ) ௮௰ கூ௫.

---

புருடன்.

பொய்கரி யான புரு
வைகரி யாதியு மாயா மலாதியும், மெய்கரி ஞானங் கிரியா விசேடத்தச், செய
ாதி பேதமு, மெய்கரி யீச னருதிய செய்கதே. (க) ௮௰ கூ௬.

---

அணு.

அணுவி லணுவினை யாதிப் பிரானை, யணுவி லணுவினை யா
யிரங் கூறிட், டணுவி லணுவை யணுகவல் லார்கட், கணுவி

லனுறவை யனுகது மாமே. (௧)

படர்கொண்ட வாலதின் வித்தது போலச், சுடர்கொண்டணுவினைத் தூவழி செய்ய, விடர்கொண்ட பாச விருளறவோட்டிப், படர்கொண்ட நல்வழி நாடவு மாமே. (௨)

அணுவு ளவனு மவனு ளணுவுங், கணுவற நின்ற கலப்ப துணரார், இணையிலி யீச னவனெங்கு மாகித், தணிவற நின்ற சராசரந் தானே.

(௩) ஆ. ௩௦௭.

---

சிவன்.

மேவிய சீவன் வடிவது சொல்லிடிற், கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு மேவிய கூறது வாயிர மாயினு, மாவியின் கூறது நூறாயிரத் தொன்றே. (௧)

ஏனோர் பெருமைய னாயினு மெம்பிறை, யூனே யிருளவிழ்க் கலந் தங்குளான், வானோ ரறியு மளவல்லன் மாதேவன், றானே யறியுந் தவத்தி னளவே. (௨)

உண்டு தெளிவ துரைக்க வியோகமே, கொண்டு பழிவுங் குணமில்லை யாயினும், பண்டு பயிலும் பயில்சிவ னார்பின்னைக், கண்டு சிவனுருக் கொள்வர் கருத்துளே. (௩)

மாயா வுபாதி வசத்தாகுஞ் சேதனத், தாய குருவருளாலே யதிற்றண்ட, வோயு முபாதியோ டொன்றிடெனுந் துரிய, நாய அரியம் புகுத்தறி வாகுமே.

(௪) ஆ. ௩௧௧.

---

பசு.

கற்ற பசுக்கள் கதறித் திரியினுங், கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு, முற்ற பசுக்க ளொருகுடம் பால்போது, மற்றைப் பசுக்கள் வறட்பசு தானே. (௧)



கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்வதென், னெல்லைக் கட்பித் திறைவ னடிசூட்டி, வல்லசெய் தாற்ற மறிந்தயி னுய்வது, கொல்லைசெய் தெஞ்சக் குறிப்பறி யாதே. (௨) ஆ. ௩௧௩.

---

போதன்.

சிவ னெனச்சிவ னென்னவே தில்லை, சிவனார் சிவனை யறிகிலர், சிவனார் சிவனை யறிந்தபின், சிவனார் சிவனா யிட்டிருப்பரே. (௧)

குணவிளக் காகிய கூத்தப் பிரானு, மணவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம், பணவிளக் காகிய பல்கலை நாதனுங், கணவிளக் காகிய கண்காணி யாகுமே. (௨)

அறிவா யறியாமை நீங்கி யவனே, பொறிவா யொழிந்தெய்ங் குத் தானான போத, மறிவா யவற்றினுட் டானு மறிவன், செறிவாகி நின்றவச் சிவனு மாகுமே. (௩)

அருளின் றன்மை யறியா திருந்தேனைக், காருளின் றன்மை யறிவித்தான் பேர்நந்தி, யாருளின் றன்மை யருளா லறிந்தபி, னொருருங் கம்புற மாகின் றனே. (௪)

சிவமா கியவரு ளின்றறிந் தோரார், தவமா மலமாய மாயவ தறியார், தவமான செய்யு நலப்பதி இன்றார், நவமான தத்துவ நாடகி லாரே. (௫)

நாடோறு மீச னடித்தொழு வன்றார், நாடோறு மீச னல்லோர்க்கரு ளெனச் சனைக்கீட்ட குருடார், நாடோறு நாடார்க ளன்வினை யாளரே. (௬)

ஆ. ௩௨௧.

---

இந்திரிய மடக்குமுறைமை.

அக மதத்தனை வைத்து வளிமாரு, வாக பதத்ததி யோட

வினை கின்றில, பாசனு மெய்த்தலை தானு மினைத்தபின், யோகு
இருந்தானை யொன்றறி யோமே. (௧)

கருத்தினன் ஐங்கற்றுக் கால்கொத்திப் பாகன், திருத்
தலும் பயமாத் தினைத்தன்றிப் பாயா, வெருத்தற வெறி யி
ருக்கினு மாங்கே, வருத்தினு மம்மா வழிநடவாதே. (௨)

புலமைந்து புள்ளைந்து புட்சென்று மேய, நிலமைந்து நி
ரைந்து நீர்மையு மைந்து, குலமொன்று கோல்கொண்டு மேய்
ப்பா னொருவ, னலம்வந்து போம்வழி யொன்பது தானே. ( )

அஞ்சுள சிங்க மடவியில் வாழ்வன, வஞ்சும்போய் மேய்
ந்தகம் மஞ்சுக மேபுகு, மஞ்சி னகிரு மெயிறு மறுத்திட்டா,
லெஞ்சா திறைவனை யெய்தலு மாமே. (௪)

ஐவ ரமைச்சருட் டொன்னூற்றறுவர்க, ளைவரு மைந்
திரு மாளக் கருதுவ, ரைவரு மைந்த சினத்தோடே நின்றிட,
லைவர்க் கிறையிறுத் தாற்றகி லோமே. (௫)

சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடோறுஞ், சொல்
லகில் லேன்திரு மங்கையு மங்குள, வெல்லகில் லேன்புல னைந்
தன் றன்மையுங், கொல்லவின் றேடுங் குதிரையொத் தேனே. ( )

எண்ணிலி யில்லி யுடைத்தவ் விருட்டறை, யெண்ணிலி யி
ல்லியோ டேகிற் பிழைதரு, மெண்ணிலி யில்லியோ டேகா
மை காக்குமே, லெண்ணிலி யில்லிநோ யின்பம தாமே. (௭)

விதியின் பெருவலி வேலைசூழ் வையந், துதியின் பெருவ
லி தொல்வா னுலகு, மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை,
நெதியின் பெருவலி நீர்வலி தானே. (௮) ஆ. கஉஎ.

---

இந்திரியமடக்கு முறைமை.

குட்ட மொருமுழ முள்ள தரைமுழம், வட்ட மமைந்த
தோர் வாவியுள் வாழ்வன, பட்டன மீன்பல பரவின் வலை



கொணர்ந், திட்டன மியாமினி யேதமி லோமே. (௧)

கிடக்கு முடலிற் கிளரிந் திரிய, மடக்க அறுமவன் றானே
யமரன், விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை, நடக்கி னடக்
கு நடக்கு மளவே. (௨)

அஞ்ச மடக்கடக் கென்ப ரறிவிலா, ரஞ்ச மடக்கு மமர
ரு மங்கிலை, யஞ்ச மடக்கிலசேதன மாமென்றிட், டஞ்ச மடக்
கா வறிவறிந் தேனே. (௩)

முழக்கி யெழுவன மும்மத வேழ, மடக்க வறிவென்னுங்
கோட்டலை வைத்தேன், பிழைத்தன வோடிப் பெருங்கே
டு மண்டிக், கொழுத்தன வேழங் குலைக்கின்ற வாறே. (௪)

ஐந்தி லொடுங்கி லகலிட மாவது, மைந்தி லொடுங்கி ல
ருந்தவ மாவது, மைந்தி லொடுங்கிலரன்பத மாவது, மைந்தி
லொடுங்கி லருளுடை யாரே. (௫)

பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென், விரி
ந்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம், பெருக்கிற் பெருக்
குஞ் சுருங்கிற் சுருக்கு, மருத்தமு மத்தனை யாய்ந்துகொள் வா
ர்க்கே. (௬)

இளைக்கின்ற வாறறிந் தின்னுயிர் வைத்த, கிளைக்கொன்று
பிசனைக் கேடில் புகழோன், றனக்கொன்ற நாகமுஞ் சாட
லொடுக்கத், துளைக்கொண்ட தவ்வழி யாக்கும் படைத்தே. ( )

பாய்ந்தன பூதங்க ளைந்தும் படரொளி, சார்ந்திடு ஞான
த் தறியினிற் பூட்டிட்டு, வாய்ந்துகொ ளானந்த மென்னு மரு
ன்செயில், வேய்ந்துகொண் மேலை விதியது தானே. (௮)

நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னிற், பார்க்கின்ற
சிந்தையைப் பைய வொடுக்கிக், குறிக்கொண்ட சிந்தை குறிவ
ழி நோக்கில், வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே. (௯)

சென்றன நாழிகை நாள்கள் சிலபல, நின்றது நீள்பொரு

ளர்மே னெருப்பொத்து, வென்று புலன்கள் விளைந்து விடுதி லர்கள், குன்று விழுவதிற் குங்கலு மாமே. (௧௦)

போற்றிசைத் தும்புனி தன்றிரு மேனியைப், போற்றிசெய் மீண்டே புலனைந்தும் புத்தியா, லாற்றிசைக் கும்பின்னை யாருக்கு நாதனை, யூற்றுகை யுள்ளத் தொருங்கலு மாமே. (௧௧)

அரிக்கின்ற நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே, யரிக்கின்ற வைவுரை யாரு முணரார், கிரிக்கின்ற வாறு சிலபல பேசில், வரிக்கொண்ட மைகுழ் வளையறு வாமே. (௧௨)

கைவிட் டாலொரு நில்லை கருத்தினுள், ளெய்தி யவனை யிசைவிரு லேத்தும், மாவ ருடைய வவாவினிற் றோன்றியே, பொய்வ ருடைய புலன்களு மைந்தே. (௧௩) ஆ ௫௦.

---

அசற்குருநெறி.

உணர்வொன் றிலாமூட னுண்மையோ ராதோன், கணுவின்றி வேதா கமநெறி காணான், பணிவொன் றிலாதோன் பரசிந்தை செய்யோ, னணுவின் குணத்தோ னசற்குரு வாமே. ()

மந்திர தந்திர மாயோக ஞானமும், பந்தமும் வீடுந் தரிசித்துப் பார்ப்பவர், சிந்தனை செய்யாத் தெளிவியா தான்பொருட், டந்தக ராவோ ரசற்குரு வாமே. (௨)

ஆமா றறியாதோன் மூட னதிமூடன், காமாதி நீங்காக் கலதி கலதிகட், காமா றசத்தறி விப்போ னறிவிலான், கோமா னலசத் தருங் குரவனே. (௨)

கற்பாய கற்பங்க ணீக்காமற் கற்பித்தாற், றற்பாவங் குன்றுந் தனக்கே பகையாகு, நற்பா லரசுக்கு நாட்டுக்குங் கேடென்றே, முற்பாலே நந்தி மொழிந்துவைத் தானே. (௪)

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர், முரணும்



பழங்குழி வீழ்வரா முன்பின், குருடரும் வீழ்வார் முன்பின்னறவே, குருடரும் வீழ்வார் குருடரோ டாகவே. () ஆ ௩௫௫.

---

சற்குருநெறி.

பாடங் களிக்குந் தலைவனே சற்குரு, பாடந்து தன்னை யறிபந் தாவல்லோன், றடைந்து தத்துவா தீதத்தைச் சார்சிவன், றடைந்து பாசந் தவிர்க்கு மவன்சத்தே. (௧)

தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோ, டவிரவைத் தான்சிரந் தோடுதன் பாதந், தவிரவைத் தான்மன் றாதவர் கூட்டந், தவிரவைத் தான்பிற வித்துயர் தானே. (௨)

கறுத்த விருப்பே கனகம தானான், மறித்திரும் பாகா வளையது போலக், குறித்தவப் போதே குருவருள் பெற்றான், மறித்துப் பிறவியில் வந்தணு காரே. (௩)

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையு, நேசத்து நாடி மலமற நீக்குவோ, ராசற்ற சற்குரு வாவோ ரறிவற்றுப், பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே. (௪)

நேயத்தே நிற்கு நிமலன் மலமற்ற, நேயத்த நல்கவல் லோனித்த னத்தனே, யாயத்து வாதத் தவமுணர்ந் தாங்கற்று, நேயர்க் களிப்பவ னீடுங் குரவனே. (௫)

பரிசன வேதி பரிசித்த தெல்லாம், வரிசை தரும்பொன் வணையாகு மாபோற், குருபரி சித்த குவலய மெல்லாந், திமலந் தீர்ந்து சிவகதி யாமே. (௬)

தானே யெனநின்ற சற்குரு சந்நிதி, தானே யெனநின்ற தன்மை வெளிப்படிற், றானே தனைப்பெற வேண்டுஞ் சதிர்பெற, வானே யெனநின்னஞ் சேர்ந்துகொ ளுந்நிலை. (௭)

வரும்வழி போம்வழி மாயா வழியைக், கருவழி கண்டவர் காணு வழியை, பெரும்வழி யாகத்தி பேசும் வழியைக், குருவழி யேசென்று கூடலு மாமே. (௮)

குருவென் பவனேவே தாகமங் கூறும், பரவின்ப னாகி
ச் சிவயோகம் பாவித், தொருசிந்தை யின்றி யுயர்பாச நீக்கி,
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே. (௯)

சத்து மசத்துஞ் சதசத்துந் தான்காட்டிச், சித்து மசித்
துஞ் சிவபரத் தேசேர்த்துச், சுத்த மசுத்த மறச்சுக மானசொ,
லத்த னருட்குரு வாமவன் கூறிலே. (௧௦)

உற்றிடு மைம்மலம் பாச வுணர்விறுத், பற்றறு நாத னடி
யிற் பணிதலாற், சுற்றிய பேதந் துரியமுன் சொல்வாய்ப்பிடித், தற்
பரமேவுவோர் சாதக ராமே. (௧௧)

எல்லா மிறைவ னிறைவி யுடனின்ப, மல்லார் புலனும் வ
ருங்கா லுயிர்தோன்றிச், சொல்லா மலமைந் தடங்கியிட் டோ
ங்கியே, செல்லாச் சிவகதி சேர்தல் விளையாட்டே. (௧௨)

ஈனப் பிறவியி லிட்டது மீட்டிட்டுத், தானத்து ளிட்டுத்
தனையூட்டித் தாழ்த்தலு, ஞானத்தின் மீட்டலுங் காட்டலும் வீ
டுற்று, மோனத்துள் வைத்தலு முத்தன்றன் செய்கையே. ()

அந்த னருளின் விளையாட் டிடஞ்சடஞ், சிந்தொ டசித்
தைத் தெளிவித்துச் சிவனைச், சுத்தனு மாக்கித் துடைத்து ம
லத்தினைச், சந்த டனக்கரு மந்திடுந் தன்மையே. (௧௪)

ஈசன் அவங்கடந் தில்லையென் றப்புறம், பாசத்து ளேபெ
ன்றும் பாவியு மன்னலை, நேசத்து ளேநின்ற நின்மல னெம்மி
றை, தேசத்தை யெல்லாந் தெளியவைத் தானே. (௧௫)

மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டல, மாணிப்பொ னின்
றங் கமுகம் விளக்கது, பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றி
ருந்தார்கள், ஊணுக் கிருந்தா ருணராத மாக்களே. (௧௬)

அசத்தொடு சத்து மசத்சத்து நீங்க, விசைத்திடு பாசப்
பற் றீங்கது மாறே, யசைத்திரு மாயை யணுத்தானு மாங்கே,
யிசைத்தானு மொன்றறி விப்போ னிறையே. (௧௭)

ஏறு நெறியே மலத்தை யெரித்தலா, லீறி லுரையா லிரு



ளை யறுத்தலான், மாறில் பசுபாசம் வாட்டலால் வீடே, வேறு
பரனே குருவா மியம்பிலே. (௧௮) ஆக ௩௬௩.

கூடா வொழுக்கம்.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார், கண்காணி
யில்லை யிடமில்லை காணுங்கால், கண்காணி யாகக் கலந்தெங்கு
நின்றானைக், கண்காணி கண்டார் களவொழிந் தாரே. (௧)

செய்தா னறியுஞ் செழுங்கடல் வட்டத்துப், பொய்தா
ன் மிகவும் புலம்பு மனிதர்கள், மெய்தா னுரைக்கில் வினைகெ
ட்டொழுகச் செய்வன், மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே.

பத்தினிற் றண்டு பகலைக் கழிவிடு, பத்தர்கட் கன்றே ம
அமிறப் புள்ளது, வித்துக்குற் றண்டு வினைபுயம் பாழ்செய்யு (௩)
ம், பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே.

வடக்கு வடக்கென்பர் வைச்சதொன் றில்லை, நடக்க வு
ருவரே ஞான மிலாதார், வடக்கி லடங்கிய வையக மெல்லா (௪)
மகத்தி லடங்கு மறிவுடை யோர்க்கே.

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக், காயத்தி னுள்ளே
மழ்கின்ற நந்தியைத், தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவர் (௫)
கள், காயத்து ணின்ற கருத்தறி யாரே.

கண்காணி யாகவே கையகத் தேயெழுங், கண்காணி யா
கக் கருத்து ளிருந்திடுங், கண்காணி யாகக் கலந்து வழிசெய்யு (௬)
ம், கண்காணி யாகிய காதலன் றானே.

கன்னி யொருசிறை கற்றோ ரொருசிறை, மன்னிய மாத
வஞ் செய்வோ ரொருசிறை, தன்னியல் புன்னி யுணர்ந்தோர் (௭)
ருஞ்சிறை, யென்னிது வீச னியல்பறி யாரே.

காணாத கண்ணிற் படலமே கண்ணொளி, காணா தவர்கட்
கும் காணாத வவ்வொளி, காணா தவர்கட்குங் கண்ணும் பெரு (௮)
ங்கண்ணைக், காணாது கண்டார் களவொழிந் தாரே.

பித்தான் மருந்தாற் றெளிந்து பிறந்திருந்தி, யுய்த்தொன்று மாபோல் விழியந்தன் கண்ணொளி, யத்தன்மை யாதல்போ லத்தி யருடரச், சித்தந் தெளிந்தேன் செயலொழிந் தேனே. ()

பிராண்மய மாகப் பெயர்ந்தன வெட்டும்பராமய மென் றெண்ணிப் பள்ளி புணரார், சராமய முன்னிய சூழ்வினை யாளர், பிராமய மாக நினைப்பொழிந் தாரே. (௰)

ஐந்திரன் டாகின்றொன் றியொன் றுயிர்க்குக், கொன்று மிரண்டு மொருக்காலுங் கூடடா, வொன்றிரண் டென்றே புணர்ந்து போர்க்கெல்லா, மொன்றிரண் டாய்நிற்கு மொன்றே றொன் றுணர்தே. (௧௧)

உயிரது நின்று ணர்வெங்கு நிற்கு, மயரறி வில்லையா லாருடல் வீழு, முயிரு முடலு மொருங்கிக் கிடக்கும், பயிருங் கிடந்தன்னம் பாங்கறி யாரே. (௧௨)

உயிரது வேறு புணர்வெங்கு மாகு, முயிரை யறிவி லுணர்வறி வாகு, முயிரன் றுடலை விழுங்கு முணர்வை, யயரும் பெரும்பொரு ளாங்கறி யாரே. (௧௩)

உலகாணி பொன்கூட் டுத்தம சித்த, னிலவாணி யைத்தி ன்னோருற நிற்குஞ், சிலவாணி யாகிய தேவர் பிரானைத், தலைவாணி செய்வது தன்னை யறிவதே. (௧௪)

சானந்த மாமென நின்ற தனிச்சுட, ரானந்த மாயுந காய்நின்ற வொண்சுடர், தேனந்த மாய்நின்ற சிற்றின்ப நீவொழி, கோனந்த மில்லாக் குணந்தரு ளாமே. (௧௫)

உன்முத லாகிய வுணர்வி ருண்டெனுங், கன்முதலீசன் கருத்தறி வாரில்லை, நன்முத லேறிய நாம மறந்தின்றுற், றன்முத லாகிய தத்துவ மாமே. (௧௬)

இந்திய மந்தக் கரண மிவையுயிர், வந்தன குக்க வுடல்



ன்று மானது, தந்திர மைவிதத் தாற்றற் புருடனு, முந்தை மன்னுமா றுமு முடிவிலே (௧௭) ஆ. ௩௬௯

---

## கேடுகண்டிரங்கல்.

வித்துப் பொறிவார் விளைவிட்டு நாற்றுவார், பத்தும் வாறுணர்ந் திலராய் பாவிக, ளுற்ற வினைத்துய ரொன்று மறிகிலார், முற்றொளி தீயின் முனிகின்ற வாறே. (௧)

வேது சடங்கெனப் போகின் றதுகண்டுஞ், சாது செய்தென்றோ மனிதர் பெறுவது, நீதியுள் ளேநின்று நின்மலன் றுணைசிந், தாதியை யன்பி லறியகில் லார்களே. (௨)

கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி, யுடம்பினைப் போம்பி யுயிரார் இரிவர், குடங்கொண்ட சாற்றுழன் முருட்டி, யிடங்கொண் டிடலார் கிடக்கின்ற வாறே. (௩)

விளைந்தன்று காவ்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து, புரந்தகல் லாவிழற் புண்ணியன் சொன்ன, பரந்தன்னை யோராப் பழமொழி யாளர், சுரந்தன்மை யாக வொருங்கிகின் றார்களே. (௪)

நின்ற புகழு நிறைதவத் தன்மையு, மென்றுமெம் மீசன டியவர்க் கேதல்கு, மன்றி புலசு மறுவிது தேவென்று, குன்றுகை யாலே குறைப்பட்ட வாறே. (௫)

இல்பத்து ளேயிருந் தின்புற்று ளவனர்க், கின்பத்து ளேகிரக் கின்ற திருமறச், அன்பத்து ளேசிவர் சேர்விருப்பு டையன், துன்பத்து ளேநின்று தூங்குகின் றார்களே. (௬)

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும், பெறுதற் கரிய பிரானடி பேணார், பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம், பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. (௭)

ஊர்வ மனமு மனைவி விளையு, மீரமு நல்லொன் றிப்புந காலத்துத், திர வருவதோர் காமத் தொழிலின்று, மாநல வி

ன்ப மறந்தொழிந் தார்களே. (அ)

இப்பரி சேயிள ஞாயிறு போலுரு, வப்பரி சங்கியி னுள்ளு
றை யம்மனை, யிப்பரி சேகம லத்துறை யீசனை, மெய்ப்பரி சே
வின வாதிருந் தோமே. (௯)

கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு, நாடகில் லார்நயம்
பேசித் திரிவர்கள், பாடகில் லாரவன் செய்த பரிசறிந், தாட
வல் லாரவர் பேறெறு வாமே. (௰)

நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர், நஞ்செம் பிரானெ
ன்று நாதனை நாடொறுந், துஞ்சு மளவுந் தொழுமின் றொழா
விடி, னஞ்சற்று விட்டதோ ரானையு மாமே. (கக)

மிருக மனிதர் மிக்கோர் பரவை, யொருவர்செய் தன்பு
வைத் துன்னுத லில்லை, பருகுவ ரோடுவர் பார்பயன் கொள்
வர், திருமரு மாதவஞ் சேர்ந்துணர்ந் தாரே. (கஉ)

நிதியி லோர்பெற்ற பொன்போ லிறைவனைச், சோதியி
லாருந் துடர்ந்தறி வாரில்லை, யாதி யயனென் றமரர் பிரானெ
ன்று, நாதியே வைத்தது நாடுகின் றேனே. (கங)

இருந்தேன் மலர்களைத் தின்புற வண்டு, பெருந்தே னிழை
க்கின்ற பெற்றிமை யோரார், வருந்தே னுகராது வாய்புகு தே
னை, யருந்தேனை யாரு மறியகி லாரே. (கச)

கருத்தறி யாது கழிந்தன காலம், மருத்தியுள் ஞானம ராப
தி நாத, னொருத்தனுள் ளானுங்கத் துயிர்க் கெல்லாம், வருத்
திகில் லாது வழுக்குகின் றாரே. (கரு)

குதித்தோடிப் போகின்ற கூற்றமுஞ் சார்வாய், விதித்த
ன நாட்களும் வீழ்ந்து கழிந்த, வதிர்த்திருந் தென்செய்தீ ரா
றுதி ராகிற், கொதிக்கின்ற கூழிற் றுடுப்பிட லாமே. (கசா)

கனாயரு காருக் கழனி விளைந்த, தினாயரு காமுன்னக்



நேர்ந்தின்ப மெய்தும், வளையரு கூறிய மாதவ கோக்கி, வ
ளையுரு வாச்செல்லு நாளில வாமே. (கஎ)

வரவறி வானை மயங்கிருள் ஞாலத், திரவறி வானைச் செ
முஞ்சுடர்ச் சோதியை, யறவறி வார்முன் னொருதெய்வ மென்
று, விரவறி யாமலே மேல்வைத்த வாறே. (கஅ) ஆ. [illegible]

---

## இதோபதேசம்.

மறந்தொழி மண்மிசை மண்ணுப் பிறவி, யிறந்தொழி கா
லத்து மீசனை யுள்ளும், பறந்தலை மர்ந்து பிறையர் திப்பான்,
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே. (க)

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை, வல்ல பரிசா
லுரையின்கள் வாய்மையை, யில்லை யெனினும் பெரியரா னெ
ம்மிறை, நல்ல வரனெறி நாடியே வீரே. (உ)

ஒன்றே குலமு மொருவனே தேவனு, நன்றே நினைமி னம
னில்லை நாணுமே, சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து,
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே. (ங)

யோற்றிசெ யத்தன் கயிலைப் பொருப்பனை, நாற்றிசைக்
குக்கடி வாய்நின்ற நம்பனைக், காற்றிசைக் குங்கடி யாக்கை
யைக் கைக்கொண்டு, கூற்றுதைத் தானைக் கூறிநின் று
ய்ம்மினே. (ச)

இக்காய நீக்கி யினியொரு காயத்திற், புக்குப் பிறவாமற்
போம்வழி தேடுமி, னெக்காலத் திவ்வுடல் வந்தெமக் கான
தென், றக்கால முன்ன வருள்பெற லாமே. (ரு)

போகின்ற வாறே புகுகின்ற வப்பொரு, ளாகின்ற போ
து மரணறி வாளுளன், சாகின்ற போதுந் தலைவனை நாடு,
மாகின்ற வப்பொரு ளக்கரை யாகுமே. (சா)

பறக்கின்ற வொன்று பயனுற வேண்டி, லிறக்கின்ற காலத்து மீசனை யுன்னுஞ், சிறப்பொடு சேருஞ் சிவகதி பின்னைப், பிறப்பொன் றிலாமையும் பெறுல காமே. (௭)

கூடியு நின்றுந் தொழுதெம் மிறைவனைப், பாடியு மேவின்று பாதம் பணிமின்க, ளாடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு, நீடிய வீற்றுப் பசுவது வாகுமே. (௮)

விடுகின்ற சீவனார் மேலெழும் போது, நடுநின்று நாடுவி னாதன்றன் பாதங், கெடுகின்ற வல்வினை கேடில் புகழோ, விடுகின்ற தம்மை யிமையவ ரோடே. (௯)

ஏறுடை யாயிறை வாவெம் பிரானென்று, சீறிலி வாரடி யார்திகழ் தேவர்க, ளாரணி செஞ்சடை யண்ணல் திருவடி, வேறணி வார்க்கு வினையில்லை தானே. (௧௦)

இன்புறு வீரர்க் கேயெம் மிறைவனை; யன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப், பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று, துன்புறு பாசத் துழைத்தொழிக் கீரோ. (௧௧)

மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவ மொன்றுண்டு, மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாரு மொன்றுண்டு, மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி யொன்றுண்டு, மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் றோர்க்கே. (௧௨)

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ண, னேர்ந்தவர் கின்றுப் பிறவி கொடுத்திடுங், கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ், சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. (௧௩)

முத்தியை ஞானமு முத்தமி ழோசையை, யெத்தனை காலமு மேத்துவ னீசனை, தெத்தனை பால்போ லிமலனு மங்குள, னத்தகு சோதி யதுவிரும் பாரே. (௧௪)

நியமத்த னாகிய நின்மலன் வைத்த, வுகமெத் தனையென்



றொருவருந் தேறார், பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லாற், சிவமத்தை யொன்றுந் தெளியகில் லாரே. (௧௫)

இங்கித்தை வாழ்வு மெய்யென்றிரா நிற்கும், அஞ்சோதி காலத்துத் தூய்மணி வண்ணனை, விஞ்சத் துறையும் விகிர்தனை யென்னின்னை, நஞ்சத் தவர்க்கன்றி நாடவொண் ணாதே. (௧௬)

பஞ்சமா மாம்புலி சற்குரு பான்முன்னி, வஞ்சக ரானவர் வைகி லவர்தம்மை, யஞ்சவ நாத னருகா சத்திருந், தெஞ்சிற் போராத் தரிசிக்கச் சித்தியே. (௧௭)

சிவனை வழிபட்டா ரெண்ணிலி தேவ, ரவனை வழிபட்டங் காமாறொன் றில்லை, யவனை வழிபட்டங் காமாறு காட்டிடங், குருவை வழிபடிற் கூடலு மாமே. (௧௮)

நரருஞ் சுரரும் பசுபாச நண்ணிக், கருமங்க ளாலே கழிதலிற் கண்டு, குருவென் பவன்ஞானி கோதில னானாற், பரனென்ற லன்றிப் பகர்வொன்று மின்றே. (௧௯)

ஆட்கொண் டவர்தனி நாயக னன்புற, மேற்கொண் டவர்வினை போயற நாடோறு, நீர்க்கின்ற செஞ்சடை நீளனு ருவத்தின், மேற்கொண்ட வாறலை வீவித்த வானே. (௨௦)

ஆ அதிகாரம் ௧௯-ம் திருமந்திரம். ௪௧௯.
ஏழாந்தந்திர முற்றும்.
ஆ சிறப்புப்பாயிர முட்பட அதிகாரம் ௧௨௮-ம்
கூடிய திருமந்திரம்-௨௪௨௧.

---

# எட்டாந்தந்திரம்.

## உடலிற்பஞ்சபேதம்.

காயப்பை யொன்று சரக்குப் பலவுள, மாயப் படைத்தவில் மற்றுமோர் பையுண்டு, காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டான், மாயப்பை மண்ணு மயங்கிய வாறே. (௧)

அத்த னமைத்த வுடலிரு கூறினிற், சுத்தம தாகிய சூக்கு மஞ்சொல்லுங்காற், சத்த பரிச ரூப ரசகந்தம், புத்திமா னாங் காரம் புரியட்ட காயமே. (௨)

எட்டினி லைந்தாகு மிந்திரி யங்களுங், கட்டிய மூன்று கரணமு மாயிடு, மொட்டிய பாச முணர்வது வாகவே, கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. (௩)

இரத முதிர மிறைச்சிதோன் மேதை, மருவிய வத்தி வழும்பொடு மச்சை, பரவிய சுக்கிலம் பாழா மூபாதி, யுருவ மலாவுட லொன்றென லாமே. (௪)

ஆரோ யறிவா ரடியின் பெருமையை, யாரோ யறிவா ரங்கவர் நின்றது, வாரோ யறிவா ரறுபத்தோ டாக்கையை, யாரே யறிவா ரடிக்காவ லானதே. (௫)

எண்சா ணளவா யெடுத்த வுடம்புக்குட், கண்கா லுடலிற் கலக்கின்ற கைகளிற், புண்கா லறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற, நண்பா லுடம்புதன் னாலுடம் பாகுமே. (௬)

உடம்புக்கு நாலுக்கு முயிராய சீவ, னொடுங்கும் பரனோ டொழியாப் பிரமங், கடந்தோறு நின்ற கணக்கது காட்டி, யடங்கியே யற்றது வாரறி வாரே. (௭)

ஆறந்த மாகி நடுவுடன் கூடினாற், றேறிய மூவாறுஞ் சிக்கென் றிருந்திடுங், கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே, யூறு முடம்பை யுயிருடம் பென்னுமே. (௮)

மெய்யினிற் றூல மிகுத்த வுகத்தையும், பொய்யினிற் சூக்கம் பொருந்து முடலையுங், கையினிற் றுல்லியங் காட்டு முடலையு, மையனடிக்கு ளடங்கு முடம்பே. (௯)

காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற், சேய விடமெண்ணஞ் செல்லவும் வல்லது, காயத் துகிற்போர்வை யொன்றுவிட் டாங்கொன்றிட், டேயு மவனென்ன வேய்ந்திடுங் காயமே. (௰)



நாக முட்டுரி போலுநல் லண்டச, மாக நனாவிற் கனாமறந் தல்லது, போகலு மாகு மனரு ளாலேசென், றேகு மிடஞ்சென் றிருபய னுண்ணுமே. (௧௧)

உண்டு நரக சுவர்க்கத்தி லுள்ளன, கண்டு விடுஞ்சூக் கங்காரண னுச்செலப், பண்டு தொடரப் பரகாய யோகிபோற், பிண்ட மெடுக்கும் பிறப்பிறப் பெய்தியே. (௧௨)

தானவ னாகிய தற்பரந் தாங்கினோ, னானவை மாற்றிப் பரமந் தடைந்திடு, மேனை யுயிர்வினைச் செய்து மிடஞ்சென்றம், வானு நிலனும் புகுந்தும் வருந்துமே. (௧௩)

ஞானிக்குக் காயஞ் சிவமே தனுவாகும், ஞானிக்குக் காய முடம்பே யதுவாகு, மேனிற்கும் யோகிக்கு விந்துவு நாதமு, மோனிக்குக் காயமும் பாழ்கெட்ட முத்தியே. (௧௪)

விஞ்ஞானத் தோர்க்கா ணவமே யிருப்பது, வெஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப, வஞ்ஞானத் தோர்க்குங் கன்ம தனுவாகு, மெய்ஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே. (௧௫)

மலமென் றுடம்பை மதியாத வூமர், தலமொன்று வேறு தரித்தமை கண்டீர், நலமென் றினையே நாடி யிருக்கிற், பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே. (௧௬)

நல்ல வசனத்து வாக்கு மனாதிகள், மெல்ல விளையாடும் விமல னகத்திலே, யல்ல செவிசத்த மாதி மனத்தையு, மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே. (௧௭)

---

## உடல்விடல்.

பண்ணாருங் காமம் பயிலும் வசனமும், விண்ணாம் பிராணன் விளங்கிய சத்தமும், புண்ணாரு முடலிற் பொருந்து மனத்தையு, மண்ணுாந்து பார்க்க வழியு முடம்பே. (௧)

அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண், கழிகின்ற கால
வ் விரதங்க டான, மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி, யொ
ழிகின்ற வூனுக் குறுதுணை யில்லையே. (௨)

இலையா மிடையி லெழுகின்ற காம, முலையாய் நெஞ்சத்து
மூழ்கு மூளக்குத், தலையாய மின்னுடற் றங்கித் திரியுஞ், சிலை
யாய சித்தஞ் சிவமுன் விடைக்கே. (௩) ஆக உ௰

---

அவத்தைபேதம்-கீழாலவத்தை.

ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங், கைகண்ட பன்
னொன்றிற் கண்டங் கனவென்பர், பொய்கண் டிலாத புருட வி
தயஞ் சுழுனை, மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே. (௧)

முப்பதோ டாறின் முதனனா வைந்தாகச், செப்பதி னான்
காய்த் திகழ்ந்திரண் டொன்றாகி, யப்பதி யாகு நியதி முதலா
கச், செப்புஞ் சிவமீறுப்த் தேர்ந்துகொள் ளீரே. (௨)

இந்திய மீரைந் தீரைந்து மாத்திரை, மந்திர மாய்நின்ற
மாருத மீரைந்து, மந்தக் கரண மொருநான்கு மான்மாவும்,
பந்தவச் சக்கரப் பாலது வாகுமே. (௩)

பாரது பொன்மை பசுமை யுடையது, நீரது வெண்மை செ
ம்மை நெருப்பது, காரது மாருதங் கருப்பை யுடையது,
வானகந் தூம மறைந்துநின் றதே. (௪)

பூதங்க ளைந்தாம் பொறியவை யைந்துள, மேதினி படுஞ்
செப் பிருந்த புறநிலை, போது மலங்குண மாகுமா காரமோ,
டாதி யவத்தைக் கருவிதொண் ணூற்றாறே. (௫)

இடவகை சொல்லி லிருபத்தஞ் சாணை, படுபர சேனையு
ம் பாய்பரி யைந்து, முடையவன் மத்திமை யுள்ளுறு நால்வ
ரடைய நெடுங்கடை யைத்தொடு கன்றே. (௬)



உடம்பு முடம்பு முடம்பைத் தழுவி, யுடம்பிடை நின்ற வு
யிரை யறியா, ருடம்பொ டுயிரிடை நட்பறி யாதார், மடம்புகு
நாய்போன் மயங்குகின் றாரே. (௭)

இருக்கின்ற வாறொன் றறிகிலா ரேழைகள், முருக்கு மச
வைப் மாற்றி முகந்து, கருக்கொண்டு காமாரி சார முகந்தே
ந், துருக்கொண்டு தொக்க வுடலொழி யாதே. (௮)

ஒளித்திட் டிருக்கு மொருபதி னாலை, யளித்தன னென்னு
ள்ளே யாரியன் வந்து, வளிக்குங் கலைகளி னாலுயத்து, வெ
ளித்திட்டு வைத்தா னொடுங்கிய சித்தே. (௯)

மண்ணினி லொன்று மலர்நீரு மங்காகும், பொன்னினி
லங்கி புகழ்வளி யாகாய, மன்னு மனோபுத்தி யாங்கார மோ
ரொன்று, புன்னி முடிக்கது பூத சமயமே. (௰)

முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர், வன்னிக்கு மூவர்
வதுவைக்கு நால்வர், கன்னிக்குப் பிள்ளைக ளைவரு முளில்லை,
கன்னியைக் கன்னியே காதலித் தாளே. (௧௧)

கண்ட கனவைந்துங் கலந்தன காணோந்துஞ், சென்றுண்
டனான்கு மொருங்கியுணர்ந்தபின், பண்டைய தாகிப் பரந்த வி
யாக்கிரத், தண்டமுந் தானு மயர்ந்துநின் றனே. (௧௨)

நின்றவ விற்பப் பதினுவிற் பதிநதித், தொன்றிய வந்தக்
கரணங்க ளான்குடன், மன்று கலந்த மனவாழ்க்கை வாதனை,
கன்றிய கண்டத்திற் கண்டான் கனவதே. (௧௩)

நாலை யிழந்து தவிபுச் சிதைபத்து, மான மழிந்து மதிகெட்
டு மாலாகி, யான விரிவறி யாவவ் வியத்ததின், மேனி யழிக்
து சுழுத்திய தாமே. (௧௪)

சுழுனையைச் சேர்ந்துள மூன்றுடன் காட்சி, கெழுமிய சி
த்தம் பிராணன்றன் போத, மொழுகக் கமலத்தி னுள்ளே யிரு
ந்து, விழுமப் பொருளுடன் மேவிநின் றனே. (௧௫)

தானத் தெழுந்து தருக்குந் துரியத்தின், வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக், கானத் தெழுந்த கருத்தின் றலையிலே, யூனத்த வித்தையிட் டேமினின் றானே. (கசா)

ஊமை யெழுத்தொடு பேசு மெழுத்துறி, லாமை யகத்தினி லஞ்சு மடங்கிடு, மோமய முற்றது வுள்ளொளி பெற்றது, நாமய மற்றது நாமறி யோமே. (கஎ)

துரிய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே, நரிகள் பதினாறு நஞ்சுண்டு செத்தது, பரிய புரவியும் பாரிற் பறந்தது, துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே. (கஅ)

மாறு மலமைந்தான் மன்னு மவத்தையின், வேறுய மாயா தநுகர ணாதிக்கிங், கூறுகா தேயெவ் வுயிரும் பிறந்திறந், தாறுத வல்வினை யாலடி யுண்ணுமே. (ககூ)

உண்ணுந்தன் னாடாட் டாட்டிடு மாயையு, மண்ணல ருட்பெற்ற முத்திய தாவது, நண்ணலி லாவுயிர் ஞானத்தி னாற்பிறந், தெண்ணுறு ஞானத்தி னேர்முத்தி யெய்துமே. (உ௦)

அதிமூட நித்திரை யாணவ நந்த, வதனு லுணர்வோ னருங்கன்ம முன்னித், திதமான கேவல மித்திறஞ் சென்று, பர மாகா வையவத் தைப்படு வானே. (உக)

ஆசான்முன் னேதுயில் மாண வகரைத், தேசாய தண்டா லெழுப்புஞ் செயல்போ, னேசாய விசனு நீடா ணவத்தரை, யே சாத மாயாடன் றூலே யெழுப்புமே. (உஉ)

மஞ்சொடு மந்தா கினிகுட மாமென, விஞ்சநி வில்வே ன் விளம்பு மிருமதி, யெஞ்சலி லொன்றெனு மாறென விவ் ட, லஞ்சுனு மன்னவன் றேபோ மனவே. (உங)

படையுடை மன்னவன் பாய்பரி யேறி, வடிவுடை மாநக தான்வரும் போது, வடியுடை மைவரு மங்குறை வோருந், டியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. (உச)



நேரா மலத்தை நீடைந் தவத்தையி, னேரான வாறுன்னி நீடு நனவினின், னேரா மலமைந்து நேரே தரிசித்து, நேராம் பரத்துட னிற்பது நித்தமே. (உரு) ஆ. சடு.

---

### மத்தியசாக்கிராவத்தை.

சாக்கிர சாக்கிரந் தன்னிற் றிரோதாயி, சாக்கிர சொற்பனந் தன்னிடை மாமாயை, சாக்கிரந் தன்னிற் சுழுத்திற் காமியஞ், சாக்கிரந் தன்னிற் றுரியத்து மாயையே. (க)

மாயை யெழுப்புங் கலாதியை மற்றது, னேய விராகாதி யேய்ந்த துரியத்துத், தோயுஞ் சுழுனை கலாந்த வுந்துன்னி, யாயின வந்தச் சகலத்து ளானே. (உ)

மேவிய வந்தகன் விழிகட் குருடனு, மாவையின் முன்னடிக் காணு மதுகண்டு, மேவுந் தடிகொண்டு செல்லும் விழிபெற, மூவையி னன்மா முயலுங் கருமமே. (ங)

மத்திம மொத்த சிலந்தி வலயத்து, ளொத்தங் கிருந்துயி ருண்ணு மாறுபோ, லத்தனு மைம்பொறி யாடகத் துள்நின் றொன்று, சத்த முதலைந்துந் தானுண்ணு மாறே. (ச)

வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சு, மூச்சு முடன்மன வாறொரு வன்றுள்ளன், பிச்சன் பெரியன் பிறப்பிலி யென்றென், றுநச்சி யவனரு ளானுய்ந்த வாறே. (ரு)

நாலா றுடன்புருட னற்றத் துவமுடன், வேறான வைந்து மெய்ப்புரு டன்பரங், கூறு வியோமம் பரமெனக் கொண்டனன், வேறான நாலேழு வேதாந்த தத்வமே. (சா)

வலங்கொண் டாங்கே யிடையொடு பிங்கலை, கோலங்கொண் டாங்கே குலத்தி னுடன்புக்கு, மூலங்கொண் டாங்

கே முறுக்கிமுக் கோணிலுங், காலங்கொண் டானடி காணலு மாமே. (எ)

நாடிகள் பத்து நலந்திகழ் வாயுவு, மோடிய காலி லொடுங்கி யிருந்திடுங், கூடிய காமங் குளிக்கு மிரதமு, நாடிய நல்ல மனமு முடலிலே. (அ)

ஆனவ வாவ வழிவ வழிவன, போவன போவ புகுவ புகுவன, காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவ, னேவலின் செய்யு மிளங்கிளி யோனே. (௯)

பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியு, மொத்த தரிய முமுன்னுள்ளோர் காலமு, மெய்த்த வியோமமு மேலைத் துரியமு ந், தத்துவ நாலே மொனவுள்ளத் தக்கதே. (க0)

விளங்கிடு முந்நூற்று முப்பதோ டொன்பான், றளங்கொ ளிரட்டிய தாறு நடந்தால், வணங்கிடு மைம்மலம் வாயு வெழுந்து, விளங்கிடு மவ்வழி தத்துவ நின்றே. (கக)

நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிர, மேலுமோ ரைந்து வேறு யடங்கிடும், பாலவை தொண்ணூறொ டாறு ட்படுமவை, கோலிய வையைந்து ளாகுந் தூரிக்கிலே. (கஉ)

ஆகின்ற தொண்ணூற்றொ டாறும் பொதுவென்ப, ராகின்ற வாறு ருத்திசைவர் தத்துவ, மாகின்ற நாலேழ்வே தாந்தி வயிணவர்ச், காகின்ற நாலாறை யைந்துமயா வாதிக்கே. ()

தத்துவ மானது தன்வழி நின்றிடில், வித்தக னாகி விளங்கி யிருக்கலாம், பொய்த்தவ மாமவை போயிடுமவ்வழி, தத்துவ மாவ தகார வெழுத்தே. (கச)

அறிவொன் றிலாதன வையேழு மொன்று, மறிகின்ற வென்னை யறியா திருந்தே, னறிகின்றாய் நீயென் றருள்செய் தார் நந்தி, யறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. (கரு)

சாக்கிர சாக்கிர மாதி தனிலைந்து, மாக்கு மலாவத்தை



யைந்து ளனவாதி, போக்கி யிவற்றொடும் பொய்யான வாறு விடுக்கி நெறிநின்றொன் றுசியே நிற்குமே. (கசு)

ஆனவ மாதி மலமைந் தலரோதுங், கானவ மாதிநால் காமாற் காணுக்கு, வானவ மாதிமுன் றீசர்க் கிரண்டென்ப, வானவ மொன்றே சகலிவற் காவதே. (கஎ) ஆ. கஉ.

---

அத்துவாக்கள்.

தத்துவ மாறுது தன்மனு வேழ்கோடி, மெய்த்தரு வன்னமைம் பானென்று மேதினி, யொத்திரு நாற்றிரு பானொன் றெண்பானென் றுவைத்த பதங்களை யோரைந்தும் வந்ததே.

நாடிய மண்டல மூன்று கலந்தெரிந், தோடு மவரோடு ம்ளிரு பத்தைந்துகள், கூடியோர் கூடி குறிவழி டேசென்று, தேடிய பின்னர்த் திகைத்திருந் தார்சனே. (உ)

சாக்கிர சாக்கிர மாதித் தலைபாகி, யாக்கிய வாறு மலாக்கி யதிகத்தத், தாக்கிய வல்லான தாண்டவஞ் சார்ந்தது, நோக்குஞ் சிவமாத லந்தஞ் சிவமே. (ந) ஆ. கடு.

---

சுத்தநனவாதிபருவம்.

நனவாதி நாலமே முக்கப் பகுதி, யனதான வையைந்து ம் விந்துவின் சத்தி, தனதா மாயிவிந்து தாவின்று போகம், னவா நனவிற் கலந்ததிவ் வாறே. (க)

நனவி லுதிதம் பிறந்தார் கிடந்தார், நனவிற் றிய நகழ்ந்தார் கவழ்ந்தார், நனவிற் சுழுனை நடந்தார் வளர்ந்தார், நனவிற் நனவோட னன்செய்தி யானதே. (உ)

தெரியுங் கிரியை சிவதத் துவமாம், பிறிவிற் சுகயோகம் பேரருள் கல்வி, குறிநந் திருமேனி குணம்பல வாகு மறிவிற் சராசர மண்டத் தவே,

ஆதி பரஞ்சிவஞ் சத்தி சதாசிவ, மேதமி லீசனல் வித்தியா தத்துவம், போதங் கலைகால நியதிமா மாயை, நீதியீ ருக நிறுத்தின னென்னே. (௪)

தேச திகழ்சிவஞ் சத்தி சதாசிவ, மீச னனல்வித்தை யிராகங் கலைகால, மாசகல் வித்தை நியதி மகாமாயை, யாசில் புருடாதி யான்மாவி ருநே. (௫)

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங், காணு முளைக்குத் தவிடுமி யான்மாவுந், தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிதும், பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. (௬)

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம், பசுக்களை மேய்க்கின்ற வாய னொருவண்ணம், பசுக்களை மேய்க்கின்ற வாயன்கோல் போடிற், பசுக்க டலைவனைப் பற்றி விடாவே.

உடலிந் திரியமன மொண்புத்தி சித்த, மடலொண் ணகங்கை யறியாமை மன்னிக், கெடுமவ் வுயிர்மயல் மேலுமிங் கீசத்தா, லடைவது தானேழ் நரகத்து ளாயே. (௮)

தற்றெரி யாத வதீதந்தற் காணவுஞ், சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காயமும், பெற்ற சுழுத்திப்பின் பேசுறுங் காதலா, மற்றது வுண்டிக் கனுநன வாதலே. (௯)

நனவிற் கனவில்லை யைந்து நனவிற், கனவிலாச் சூக்குமங் காணுஞ் சுழுத்தி, கனவுங் பகுதியே தத்கூட்டு மாயை, கனவிற் றுரிய மதீதந் தலைவந்தே. (௧௦)

ஆறுறி லையைந் தகல நனவு, வாறு மகைவிட வாகு கனவுக்கு, வேறுள வைந்தும் விடவே கனவினி, லீறுஞ் சுழுனை யிதின்மாயை தானே. (௧௧)

மாயையில் வந்த புருடன் றுரியத்தி, லாய முறைவிட் டவுந்தா னன்றுசெச், சேய கேவலவிந் துடன்செல்லச் சென்



றக்கா, லாய தறுவின் பயனில்லை யாகுமே. (௧௨)

அதீதத் துரியத் தறிவனு மான்மா, வதீதத் துரிய மதனாற் புரிந்தா, லதீதத தெழுந்தறி வாகிய மானன், முதிய வனலிற் றுரியத்து முற்றுமே. (௧௩)

ஐயைந்து பத்துட னானது சாக்கிரங், கைகண் டனவுஞ்சிற் கண்டங் கனவென்பர், பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையின், மெய்கண் டவனுந்தி மேவ லிருவரே. (௧௪)

புரியட் டகமே பொருந்த னனவு, புரியட் டகந்தன்னின் மூன்று கனவு, புரியட் டகத்தி லிரண்டு சுழுத்தி, புரியட் டகத்தொன்று புக்க துரியமே. (௧௫)

நனவி னனவு புலனில் வழக்க, நனவிற் கனவு நினைத்தன் மறத்த, னனவிற் சுழுனையுண் ணாட விலாமை, நனவிற் றுரிய மதீதத்து நந்தியே. (௧௬)

கனவி னனவுபோற் கண்ட நனவாங், கனவினிற் கண்டு மறைத்தற் கனவாங், கனவிற் சுழுத்தியுங் காணாமை காண, லனுமாதி செய்தலி லான துரியமே. (௧௭)

சுழுத்தி நனவொன்றுந் தோன்றாமை தோன்றற், சுழுத்தி கனவதன் னுண்மை சுழுத்தியிற், சுழுத்தி யறிவறி வாலே யழிதல், சுழுத்தித் துரியமாஞ் சொல்லறும் பாழே. (௧௮)

துரிய நனவா மிதமுணர் போதந், துரியக் கனவா மகமுணர் போதந், துரியச் சுழுத்தி வியோமந் துரியந், துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே. (௧௯)

அறிவறி கின்ற வறிவு நனவா, மறிவறி யாமை யடையக் கனவா, மறிவறி யவ்வறி யாமை சுழுத்தி, யறிவறி வாகு மான துரியமே. (௨௰)

தானெங்கு மாயவ னைம்மலந் நான்விட்டு, ஞானந் தனது

றுவாகி நயந்தபின், றனெங்கு மாய்நெறி நின்றது தான்விட்டு,
மேனந்தச் சுத்த மலவவன்ன மேலிட்டே. (௨௧)

ஐயைந்து மாறுமோ ரைந்து நனவினி, லெய்யு நனவு கன
வு சுழுத்தியா, மெய்யும்பின் சுக்கமு மெய்ப்பகுதி மாயை, யை
யமுந் தானவ னந்துரி யத்தனே. (௨௨)

ஈதென் றறிந்தில னித்தனை காலமு, மீதென் றறிந்தபி னே
து மறிந்திலே, னீதென் றறியு மறிவை யறிந்தபி, னீதென் றறி
யு மியல்புடை யோனே. (௨௩)

உயிர்க்குயி ராகி யுருவா யருவா, யயற்புண ராகி யறிவா
ய்ச் செறிவாய், நயப்புறு சத்தியு நாத னுலகாதி, யியற்பின்றி
யெல்லா மிருண்மூட மாமே. (௨௪)

சத்தி யிராகத்திற் றனல் லுயிராகி, யொத்துறு பாச ம
லமைந்தோ டாறுறு, தத்துவ பேதஞ் சமைத்துக் கருவியுஞ்,
வைத்தன னீசன் மயமது மாறே. (௨௫)

சாக்கிரா தீதத்தி லானவந் தன்னுண்மை, சாக்கிரா தீத
ந் துரியத்திற் றுறைச், சாக்கிரா தீதத்தி லானவந் தான்விடாச்,
சாக்கிரா தீதம் பரனுண்மை தன்றே. (௨௬)

மலக்கலப் பாலே மறைந்தது சத்தி, மலக்கலப் பாலே
மறைந்தது ஞான, மலக்கலப் பாலே மறைந்தன் றறு, மலக்
கலப் பற்றுண் மதியொளி யாமே. (௨௭)

திகைக்கின்ற சிந்தையுட் சிக்கங்கன் மூன்றும், நகைக்கின்
ற நெஞ்ச மெரிச்சுட்டி காது, வகைக்கின்ற நெஞ்சினு ளானைக்க
ன் றறந்து, பகைக்கின்ற நெஞ்சக்குப் பாவிரண் டாமே. (௨௮)

கதறு பதினெட்டுக் கண்களும் போகச், சிதறி யெழுந்திரு
ஞ் சிக்கையை தீரும், விதறு படாமுன்ன மெய்வழி நின்று
லதிர வருவதோ ரானைய மாமே. (௨௯)



கனவகத் தேயொரு நாலைந் தும்விடக், கனவகத் தேயுட்
ரனைந்த தோடு, நனவகத் தேசின் றுதரியுள் புக்கு, நினைவக
த் தின்றிச் சுழுத்திநின் றனே. (௩௰)

நின்றவ னாசா விகழ்துரி யத்தனு, மொன்றி யுலகி னிய
மா திகளுற்றுச், சென்று துரியாதி தத்தே சிலகால, நின்று பர
றாய் நின்மல னாமே. (௩௧)

ஆனவ னீச னதீதத்தில் வித்தையாய், தானுல குண்டு ச
தாசிவ மாசத்தி, மேனிக ளைந்தும்போய் விட்டுச் சிவமாகி,
மோன மடைந்தொளி மூலத்த னாமே. (௩௨)

மண்டல மூன்றினுள் மாயநன் னாடனைக், கண்டுகொண்
டுள்ளே கருதிக் கழிகின்ற, விண்டலர் தாமரை மேலொன்றுங்
கிழாகத், தண்டமுந் தானு யகத்தினுள் ளாமே (௩௩)

போதறி யாது புலம்பின புள்ளின, மாதறி யாவகை நின்
று மயங்கின, வேதறி யாவணை நின்றன னெம்மிறை, சூதறி வா
ருச்சி சூடிநின் றாரே. (௩௪)

கருத்தறிந் தொன்பது கண்டமு மாங்கே, பொருத்தறிந்
தோன்புவ னாபதி காடித், திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரா
னை, வருத்தறிந் தேன்மன நன்கறிந் தேனே. (௩௫)

ஆன விளக்கொளி தூண்டு மவனென்னத், தான விளக்
கொளி யாமூல சாதகத், தான விமூலத் தானத்தி லவ்விளக்,
கேனை மதிமண் டலங்கொண் டெரியுமே. (௩௬)

உண்ணாடு மைவர்க்கு மண்டை பொதுங்கிய, விண்ணாடு நி
ன்ற வெளியை வினவுறி, லண்ணாந்து பார்த்தைவர் கூடிய சத்
தியிற், கண்ணாடி காணுங் கருத்ததென் றேனே. (௩௭)

அறியா தவற்றை யறிவா னறிவா, னறிவா னறியாதான்
றன்னறி வாகா, லறியா தவத்தை யறிவானைக் கூட்டி, யறியா
தறிவானை யாரறி வாரே. (௩௮)

துரிய தரிசனஞ் சொற்றோம் வியாத்த, மரியன தூடண மங்கனவாதி, பெரியன கால பரம்பிற் றுரிய, மரிய வதீத மதீதத்த தாமே. (௩௯)

மாயையிற் சேதனன் மன்னு பகுதியோன், மாயையின் மற்றது சேதனன் மாயையாய்க் கேவல மாகுஞ் சகலமா யோனியுட், டோயு மவர்தர் துரியத்துட் சிவனே. (௪௦) ஆக ௩௦௫.

---

## கேவலசகலசுத்தம்.

தன்னை யறிசுத்தன் றற்கே வலன்முத்தம், பின்ன முறநின்ற பேத சகலனு, மன்னிய சுத்தசத் தச்சத் தசத்துடன், றன்னவர் தத்தந் தொழிற்கள வாகவே. (௧)

தானே தனக்குப் பகைவனு நட்டானுந், தானே தனக்கு மறுமையு மிம்மையுந், தானேதான் செய்த வினைப்பயன் றுய்ப்பானுந், தானே தனக்குத் தலைவனு மாமே. (௨)

ஆருயிர் கேவல மாமாயை யின்னடந், தாருயிர் மாயை யெறிப்ப வறிவுற்றுக், காமிய மாயேய முங்கல வாகிற்பத், தா முறு பாசஞ் சகலத்த தாமே. (௩)

சகல வவத்தையிற் சார்ந்தோர் சகலர், புகலு மலமூ வகையும் புணர்ந்தோர், நிகரின் மலரோன்மா லீறுபல் தேவர், நிகழ்நரர் கீட மந்தமு மாமே. (௪)

தாவிய மாயையிற் றங்கும் பிரளய, மேவிய மற்றது மடம்பாய் மிக்குள்ளான், மேவ விலக்கண றொன்றிய சீகண்ட, ராவயி னூற்றெட் டுருத்திர ராகுமே. (௫)

ஆகின்ற கேவலத் தாணவத் தானவ, ராகின்ற வித்தேச ராமனந் தாதிய, ராகின்ற வெண்மரெழுகோடி மந்திர, ராகின்ற வீச ரனேகரு மாமே. (௬)

ஆமாயிற் சிவ னாருள் பெற்றவர்ளோர், போமலந் தன்னாற்



புகழ்விந்து நாதம்விட், டோய மாக்கி யொடுங்கலி னின்மலன், றோமறு சுத்தா வவத்தைத் தொழிலே. (௭)

ஓரினு மூவகை நால்வகை யும்முள, தேரி லிவைகே வல மாயை சேரிச்சை, சாரிய லாயவை தானே தனைப்பவை, வாரி வைத் தீசன் மலமறுத் தானே. (௮)

மெய்யான போதாந்த மாமுற விட்டகன், றெய்யாமை நீங்கவே யெய்தவன் றானாகி, மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக், கெய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை யென்பவே. (௯)

அநாதி பசுவியாத்தி யாகு மிவனை, யநாதியில் வந்த மலமைந்த லாட்டி, யநாதியிற் கேவல மச்சக லத்திட், டநாதி பிறப்பறச் சுத்தத்த னாகுமே. (௧௦)

அந்தரஞ் சுத்தா வத்தைகே வலத்தாறு, தந்தோர்தஞ் சுத்தகே வலத்தற்ற தற்பரத், தின்பாற்றுரியத் திடையே யறிவுறாத், தன்பாற் றனையறி தத்துவந் தானே. (௧௧)

ஐயைந் தொடுங்கு மான்மாவி லான்மாவு, மெய்கண்டு சுத்த வவத்தையில் வீடாகுங், கையவவ் வித்தை முதன்மூன்றுந் தொல்சத்தி, யைய சிவஞ்சித்தி யாந்தோற்ற மவ்வாறே. (௧௨)

ஐயைந்து மானவி லாறே டடங்கிடு, மெய்கண்ட மென்மூன்று மேவுமெய் யோகத்தில், கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண, வெய்யும் படியடங் குங்கோலே மெய்தியே. (௧௩)

ஆணவத் தாரொன் றறியாத கேவலர், பேணிய மாயை பிரளயா கலராகுங், காணு முருவினர் காணாமை காண்பவே, பூணுஞ் சகலமும் பாசமும் புக்கோரே. (௧௪)

ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப், பேணிய மாயை பிரளயா கலராகு, மாணவ மாயையுங் கன்ம மூன்றுமே, காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே. (௧௫)

கேவலந் தன்னிற் கிளர்ந்தவிந் நாதலர், கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியா, லாவையிற் கேவலந் தச்சகலத்தை யு, மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே. (௧௬)

மாயையின் மன்னும் பிரளயா கலர்வந்து, மாயையுந் தோன்று வகைநிற்க வானவ, மாய சகலத்துக் காமிய மாமாயை, யேயமன் னாற்றெட் டுருத்திர ரென்பவே. (௧௭)

மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர், ரம்மெய்ச் சகலர்தோர் தேவர் சுரர்நரர், மெய்ம்மையில் வேதா விரிமிருகாதிகடோர்ந் தன், தம்முறை யோனியுட் டார்க்குஞ் சகலரே. (௧௮)

சுத்த அவத்தையிற் றோய்ந்தவர் மும்மலச், சத்தாதத்தோடத் தவிர்த்தவர் பாசமும், மத்த விருள்சிவ னான கதிரால், தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே. (௧௯)

தற்கே வலமுத்தி தானே தனிமையாம், பிற்பாற் சகலங் கலாதிப் பிறிவதாஞ், சொற்பாற் புரிசுத்த கேவலஞ் சாக்கிரந், தற்பாற் புரிவது தற்சுத்த மாமே. (௨௰)

அறிவின்றி முத்தோ ரராகாதி சேரான், குறிபொன்றி லாதிந்தன் கூடான் கலாதி, செறியுஞ் செயலிலான் றினங்கத்த வல்லோன், சிறியன் மலவியாயி கேவலந் தானே. (௨௧)

விந்துவு மாயையு மேவுங் கிரியையுஞ், சந்தத ஞான பரையுந் தநுச்சத்தி, விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர், வந்த சகலத்தா னாக்கள் வையத்தே. (௨௨)

கேவல மாதியிற் பேதஞ் சிவக்குறிற், கேவல மூன்றுஞ் சிவருஞ் சகலத்து, மாவையின் மூன்று மதிசுத்த மூட்டிய, வோவிலா வொன்பா னற்றுணர் வோர்கட்கே. (௨௩)

கேவலத்திற் கேவல மதீதா தீதம், கேவலத் திற்சகலங்களை யதிதவங், கேவலத் திற்சுத்தந் தேடில்விஞ் ஞாகலர்த், தாவையிற் றுரிய வருண்மூர்த்தி தானே. (௨௪)

சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ், சகல சகலமே சகல சாக்கிரஞ், சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை, சகலத்தி லிப்மூன்று தன்மையு மாமே. (௨௫)



சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல், சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாஞ், சுத்த சகலந் துரிய விலாசமாஞ், சுத்தத்தி லிம்மூன்றுஞ் சொல்லலு மாமே. (௨௬)

சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடுஞ், சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே, சாக்கிரா தீதந் தனிற்சுகா னந்தமே, யாக்கு மறையாதி யைம்மல பாசமே. (௨௭)

சாக்கிரா தீதத்திற் றானுறு மாணவஞ், சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது, யாக்கு பரோபாதி யாமுப சாந்தத்தை, நோக்கு மலங்குணம் நோக்குத லாகுமே. (௨௮)

பெத்தமு முத்தியும் பெறுந் துரியமுஞ், சுத்த வதீதமுந் தோன்றாமற் றானுணு, மத்த வருளென் றருளா லறிந்தபின், சித்தமு மில்லை செயலில்லை தானே. (௨௯)

எய்திய பெத்தமு முத்தமு மென்பன, மெய்த்த மாணுமேலினை யாட்டோ, டெய்தி யுயிர்சுத்தத் திடனெறி யென்னவே, மெய்த்த முயிரிறை பாலதி வாமே. (௩௰)

ஐம்மலத் தாரு மதித்த சகலத்த, ரைம்மலத் தாரு மருவினைப் பாசத்தா, ரைம்மலத் தார்சுவர்க் கந்நெறி யாள்பவ, ரைம்மலத் தாரா ரர்க்கறி வோரே. (௩௧)

கருவி லதீதங் கலப்பிக்கு மாயை, யரிய துரிய மதிதுன்ன முதையு, முரிய சுழுனை முதலெட்டுஞ் சூக்கத், துரிய கனவு மந்தன வாகுமே. (௩௨)

ஆணவ மாகு மதீதமேன் மாயையும், பூணுந் துரியஞ் சுழுத்திப்பொய்க் காமியம், பேணுங் கனவுமா மாயை திரோதாயி, காணு நனவின் மலக்கலப் பாகுமே. (௩௩)

அரன்முத லாக வறிவோ னதீதத்த, னரன்முத லாமாயை

தங்கிச் சுழினை, கரும முணர்ந்துமா மாயைக்கைக் கொண்டோ, ரருளு மறைவார் சகலத்துற் றோரே. (௩௪)

உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று, மருவுற்றுப் பூத மனாதியான் மன்னி, வருமச் செயல்பற்றிச் சத்தாதி வைகிக், கருவுற் றிடுஞ்சீவன் காணுஞ் சகலத்தே. (௩௫)

இருவினை யொத்திட வின்னருட் சத்தி, மருவிட ஞானத்தி லாதனை மன்னிக், குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப், பெருமல நீக்கிப் பிறவாமை சுத்தமே. (௩௬)

ஆறாறு மாறதி னைபந் தவத்தையோ, டீறு மதிதத் துரியத் திவனெய்தப், பேறெனவைவரும் போம்பிர காசத்து, நீற்ற பரஞ்சிவ மாதேய மாகுமே. (௩௭)

தன்னை யறியா துடலைமுன் றானென்றான், றன்னைமுன் கண்டான் றுரியந் தனைக்கண்டான், றுன்னுந் துரியமு மீசனொ டொன்றாக்காற், பின்னையும் வந்து பிறந்திடுந் தானே. (௩௮)

சாக்கிரந் தன்னி லதீதந் தலைப்படி, லாக்கிய வந்த வயிந்தவ மானந்த, நோக்கும் பிறப்பறு நோன்முத்தி சித்தியாம், வாக்கு மனமு மருவல்செய் யாவே. (௩௯)

அப்பு மனலு மகலத்து ளேவரு, மப்பு மனலு மகலத்து ளேவரா, வப்பு மனலு மகலத்து ளேதெனி, லப்பு மனலுங் கலந்தவல் லாறே. (௪௰)

ஆறுநான்கு சுத்த மதிசுத்தா சுத்த, முறுமேழு மாயை யுளைந்தே சுத்தம், பெறுமா நிலைமூன்றுங் கண்டத்தாற் பேத், தறுமாயை மாமாயை யான்மாவி னூடே. (௪௧)

மாயைகைத், தாயாக மாமாயை யீன்றிட, வாய பரசிவன் றந்தையாய் நிற்கவே, யாயு முயிர்க்கே வலசகலத் தெய்தி, யாய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே. (௪௨) ஆ. கசஎ.



பராவத்தை.

அஞ்சுங் கடந்தவ னாதி பரந்தெய்வ, நெஞ்சம துய விமலன் பிறப்பிலி, விஞ்சு முடலுயிர் வேறு படுத்திட, வஞ்சத் திருந்த வகையறிந் தேனே. (௧)

சத்தி பராபரஞ் சாத்தி தனிர்ணா, சத்தி பராசுத்தந் தன்னிற் சடர்விந்து, சத்திய மாயை தனுச்சத்தி யைந்துடன், சத்தி பெறுமுயிர் தானங்கத் தாறுமே. (௨)

அருளுக் கப்பா லறிவா ரறியவ, ரருளுக் கப்பா லருளார் பெறுபவ, ரருளுக் கப்பா லறிவா மவர்கட்கே, யருளுக் கப்பா லருளின்றி தாமே. (௩)

அஞ்சொடு நான்குங் கடந்தக மேபுக்குப், பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற, விஞ்சையர் வேந்தனு மெல்லிய லாளொடு, நஞ்சற நாடி நயஞ்செய்யு மாறே. (௪)

உரிய நனத்துரி யத்தி லிவனாம், பரிய துரிய நனவாதி மூன்றிற், பரிய பரதுரி யத்திற் பரனாம், திரிய வருந்துரி யத்திற் சிவமே. (௫)

பரமா மதீதமே பற்றறப் பற்றப், பரமா மதீதம் பயிலப் பயிலப், பரமா மதீதம் பயிலாத் தபோதனர், பரமாகார் பாசமும் பற்றொன் றறுதே. (௬)

ஐயும்பொய் மாயை யகம்புற மாய்நிற்கும், வாயு மனமுங் கடந்த மயக்கறின், தூய வறிவு சிவானந்த மாகிப்போய், வேயும் பொருளாய் விளங்கது தானே. (௭)

ஊசிப் பரிசி லிருந்தவச் சீவனைப், பெரிய வியாக்கிரந் தன்னை புகவிட்டு, நரிகளை யோட்டத் துரத்திய காதற், குரிய வினைகளின் கூடுமிட் டன்றே. (௮)

நின்றவிச் சாக்கிர நீளுறி யத்தினின், மன்றனு மங்கே மனஞ்செய்ய நின்றிடும், மன்றன் மனஞ்செய்ய மாயை மறைந்திடு,

மன்றே யிவனு மவன்வடி வாமே. (௯)

விரித்திடிற் சாக்கிர மேலும் விளக்கா, யிருந்த விடத்திடை யீடான மாயை, பொருந்துந் துரியம் புரியிற்று ளுருக், கெரித்த துரியத்துத் தீதக லாதே. (௧௦)

உன்னை யறியா துடலைமுன் னென்று, யுன்னை யறிந்து துரியத் ததனிலாய், தன்னை யறிந்தும் பிறவி தணவாதா, லன்னைப் பாத்த னடலனென் றுறுதியே. (௧௧)

கருவரம் பாகிய காயந் துரிய, மிருவருங் கண்டோர் பிறப்பிறப் புற்றார், குருபரம் பெற்றவர் கூடிய பின்னை, யிருவரு மின்றிப்பொன் றுவிந்தன் றாரே. (௧௨)

அணுவின் துரியத்தி லான நனவு, மணுவசை யின்கண்ணான கனவு, மணுவசை விற்பரா தீதஞ் சுழுத்தி, பணியிற் பரதுரி யம்பர மாமே. (௧௩)

பரதுரி யத்து நனவும் பரந்து, விரிசக முண்ட கனவுமெய்ச் சாந்தி, யுருவு இன்ற சுழுனையு மோவத், தெரியுஞ் சிவதுரி யத்தனு மாமே. (௧௪)

பரமா நனவின்பின் பாற்சக முண்ட, வரமார் கனவுஞ் சிறந்த சுழுத்தி, யுரமா முபசாந்த முற்றத் துரவே, தரமாஞ் சிவதுரி யத்தனு மாமே. (௧௫)

சிவன் துரிய முதலாகத் தோன்ற, வாவ சிவன் துரி யாதீத மவத்தைபடத், தோவும் பாநந்தி யுண்மைக்குள் ளொழிகியே, மேவிய நாலேழ் விடுத்தநின் றானே. (௧௬)

பரஞ்சிவன் மேலாம் பிரமம் பரத்திற், பரம்பரன் மேலாம் பரநன வாக, விரிந்த கனவிடர் வீட்டுஞ் சுழுனை, யுரீந்ததுரி நந்தி யாமுன்மை தானே. (௧௭)

சார்வாம் பரசிவஞ் சத்தி பரநாத, மோவாய விந்து சதாசிவ மிக்கோங்கிப், பாலாய்ப் பிரம னரியமரா பதி, தேவர் முரு



த்திர னீசனுங் காணிலே. (௧௮)

கலப்பறி யார்கடல் சூழுல கேழு, மலப்பறி யாருட லோடுயிர் தன்னை, யலப்பறிந் திங்கர சாளகி லாதார், குறிப்பது கோல மடலது வாமே. (௧௯)

பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய், தன்னை யறிவிற் றயாபர னெம்மிறை, முன்னை யறிவு முடிகின்ற காலமுந், தன்னை யறியலுற் றின்புற்ற வாறே. (௨௦)

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம், பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந், தன்னை மறைத்தது தன்கர ணங்களாந், தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. (௨௧)

மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தின் மறைந்தது மாமத யானை, பரத்தை மறைத்தது பார்முதற் பூதம், பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. (௨௨)

ஆறு தகன்று நமவிட் டறிவாகி, வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி, யீறார் பரையி னிருளற்ற தற்பரன், பேறார் சிவாய வடங்கும்பின் முத்தியே. (௨௩)

துரியத்தி லோரைந்துஞ் சொல்லகா ராதி, விரியப் பரையின் மிகுநாத மந்தம், புரியப் பரையின் பராவத்தை போதந், திரியப் பரமந் துரியந் தெரியவே. (௨௪)

ஐந்துஞ் சகலத் தருளாற் புரிவுற்று, பந்திடுஞ் சுத்த வலத்தைப் பகைப்பினி, னந்தி பராவத்தை நாடச் சுடருண, மந்தி யிருள்போலு மைம்மல மாறுமே. (௨௫)

ஐயைந்து மட்டுப் பகுதி மாயையும், பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கள், மெய்யும் படியா பெவற்றுமா யொன்றாகி, யுய்யும் பராவத்தை யுள்ளுறல் சுத்தமே. (௨௬)

நின்ற வநாதி பரமுமுன் னேயமு, மொன்றாய் மருவு மு

ருவு முபாதியுஞ், சென்று னெனைவிடுத் தாங்கிற்செல் லாமையு,
நல்குண ஞானத்தி னுதப்பிரானே. (உஎ) ஆ. கஎச.

---

## முக்குணநிர்க்குணம்.

சாத்திக மெய்து நனவெனச் சாற்றுங்கால், வாய்த்த வி
ராசத மன்னுங் கனவென்ப, வோய்த்திடுந் தாமத முற்ற சுழு
த்தியா,மாய்த்திடு நிர்க்குண மாசி றுரியமே. (க) ஆ. கஎரு.

---

## அண்டாதிபேதம்.

பெறுபகி ரண்டம் பேதித்த வண்ட, மெறிகட லேழின்
மணலள வாகப், பொறியொளி பொன்னணி யென்ன விளங்
கிச், செறியுமண் டாசனத் தேவர் பிரானே. (க)

அனந்த தத்துவ மண்டா சலத்திஞ்மேன், மேனிலைப்
பாக வியாத்தமுப் பத்தாறுய்த், தானந்த மில்லாத தத்துவ
மானவை, யீனமி லாவண்டத் தெண்மடங் காமே. (உ)

ஆ. கஎஎ.

---

## பதினொராந்தானமு மவத்தையெனக்காணல்.

அஞ்சிலமுந்தோ ரேழின்க ளைந்த, முஞ்சிலோங் கா
ரமோ ரொன்பான் பதினொன்றில், வஞ்சக மேநின்று வைத்
திடுங் காயமாங், கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே. ()

புருட னுடனே பொருந்திய சித்த, மருவமொ டாறு ம
தீதத் துரியம், விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள வெட்டு, மரிய
பதினொன்று மாமவ் வவத்தையே. (உ)

காட்டும் பதினொன்றுங் கைகலந் தோடு, மோட்டி யமுக்
திடு சக்தியல் லாவில்லை, யாட்டுஞ்செய் யாத வதுவிது வே
யீனா, யீட்டு மதிட மென்னனு மாமே. (ங) ஆ. கஎஅ.



## கலவுசெலவு.

கேவலந் தன்னிற் கலவச் சகலத்தின், மேவுஞ் செலவு வி
டவருஞ் சுத்தமப், பாவுந் தனக்காண்டன் மூன்றும் படர்வற்
ற, தீதறு சாக்கிர தீதத்திற் சுத்தமே. (க)

வெல்லு மளவில் விடுமின் வெகுளியைச், செல்லு மளவுஞ்
செலுத்துமின் சிந்தையை, யல்லும் பகலு மருளுடன் றூங்கி
னுற், கல்லும் பிளந்து கடுவெளி யாமே. (உ) ஆ. கஎகூ.

---

## நின்மலாவத்தை.

ஊமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோ, ராமையி னு
ள்ளே யழுவைக ளைந்துள, வாய்மையி னுள்ளே வழுவா தொடு
வருமே, லாமையின் மேலுமோ ராயிரத் தாண்டே. (க)

காலங்கி நீர்பூக் கலந்தவா காய, மாலங்கி யீசன் பிரமன்
சதாசிவன், மேலஞ்சு மோடி விரவல் லார்கட்குக், காலனு
மில்லை கருத்தில்லை தானே. (உ)

ஆன்மாவே மைந்த னுயின னென்பது, தான்மா மறைய
றை தன்மை யறிகிலர், ரான்மாவே மைந்த னாறுக் கியைன்ற,
லான்மாவு மில்லையா லைபந்து மில்லையே. (ங)

உதய மழுங்க லொடுங்கலிம் மூன்றின, கதிசாக் கிரங்க
ன வாதி சுழுத்தி, பதிதரு சேதனன் பற்றுந் துரியத், ததிச
ய முயலந் தானந்த யாகுமே. (ச)

எல்லாந்தன் னுட்புக யாவுளுந் தானுகி, நல்லாந் துரிய
ம் புரிந்தக்கா னல்லுயிர், பொல்லாத வாறாறும் போகாது
போதமாய்ச், செல்லாச் சிவகதி சேர்தலு மன்றே. (ரு)

சாய்ந்த விரும்பு கனலை யகன்றனும், வாய்ந்த கனலென
வாநின்ற நின்றப்போ,லேய்ந்த கரண மிறந்த துரியத்து, தோ
ய்ந்த கருமந் துரிசக லாதே. (சா)

ஆன மறையாதி யாமுரு நற்றிவர், தேனை யருள்செய் தெ
ரிசனு வத்தையி, லான வகையை விடுமடைத் தாய்விட, வான
மலாதீத மப்பரந் தானே. (௭)

சுத்த வதீதஞ் சகலத்திற் றேய்வுறி, லத்த னருணீங்கா
வாங்கனிற் றுறுகச், சித்தச் சுகத்தைத் தீண்டாச் சமாதி
செய், தத்தனோ டொன்றற் கருண்முத லாமே. (௮)

வேறுசெய் தானிரு பாதியின் மெய்த்தொகை, வேறுசெ
ய் தானென்னை யெங்கணும் விட்டுய்த்தான், வேறுசெய் யாவ
ருட் கேவலத் தேவிட்டு, வேறுசெய் யாவத்தன் மேவிநின்
றனே. (௯)

சேர்க்கோலை கொள்ளி வட்டங் கடலிற், றிரைதிரண் டே
ர்மத்தின் மலத்திவி னின்ற, திரங்காண் சுவர்க்க நரகம் பு
விசேர்க், கிரங்கர்வ்வீரு ளாலிவை நீங்குமே. (௧0)

தானே சிவமான தன்மை தலைப்பட, வான மலமும்ப
பாச பேதமு, மான குணமும் பரான்ம வுபாதியும், பானவி
ன் முன்னர் மதிபோற் படாவே. (௧௧)

நெருப்புண்டு நீருண்டு வாயுவு முண்டங், கருக்கனுஞ் சோ
மனு மங்கே யமருந், திருத்தக்க மாலுந் திசைமுகன் றானு, மு
ருத்திர சோதியு முள்ளத்து ளாரே. (௧௨)

ஆனைக ளைந்து மடக்கி யறிவென்னு, ஞானத் திரியைக் கொ
ளுவி யதனுள்புக், கூனை யிருளற நோக்கு மொருவற்கு, வானக
மேற வழியெளி தாமே. (௧௩)

ஆடிய காலி னசைக்கின்ற வாயுவுங், காடித் தெழுந்த தம
ருக வோசையும், பாடி யெழுகின்ற வேதாக மங்களு, நாடியி
னுள்ளாக நான்கண்ட வாறே. (௧௪)

முன்னை யறிவினிற் செய்த முதுதவம், பின்னை யறிவினைப்
பெற்ற லறியலாக், தன்னை யறிய தறிவா மறிந்தபின் பின்



னை யறிவது பேயறி வாகுமே. (௧௫)

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ், செயலற் றிருப்பா
ர் சிவபோகந் தேடார், செயலற் றிருப்பார் செகத்தோடுங் கூ
டார், செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாகுமே. (௧௬)

தானவ னாகுஞ் சமாதிகை கூடினு, லான மலமறு மப்ப
சுத தன்மைபோ, மீனமில் காய மிருக்கு மிருநிலத், தானந்த
மேட்டு மொழித்தொன்று மோர்கட்கே. (௧௭)

தொலைப்பா வரனடி தோன்றுமஞ் சத்தி, தொலையா விரு
ளொளி தோற்ற வனுவுந், தொலையாத் தொழின்ஞான தொ
ன்மையி னண்ணித், தொலையாத பெத்தமுத் திக்கிடை தோ
யுமே. (௧௮)

தோன்றிய பெத்தமு முத்தியுஞ் சூழ்சத்தி, மான்றுங்
கெருண்டு முயிர்பெறு மற்றவை, தான்றரு ஞானந்தன் சத்திக்
குச் சாதனு, மூன்றவில் லாவுன் னொளிக்கொளி யாமே. (௧௯)

அறிகின் றிலாதா னனைபெறு மொன்று, மறிகின்ற வென்
னை யறியா திருந்தே, னறிகின்ற நீயென் னருள்செய்தா னா
கி, யறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. (௨0)

தானவ னாகிய ஞானத் தலைவனை, வானவ ராதியை மா
மணிச் சோதியை, யீனமில் ஞானத் தின்னருட் சத்தியைப், பூ
னமி லாடன்றனை யுள்ளடைக் கண்டதே. (௨௧)

ஒளியு மிருளு முறையும் பரையுள், ளளிய தெனலாகு மா
னந்தமாயன்றி, யளியு மருளுந் தெருளுங் கடந்து, தெளிய
வருளே சிவானந்த மாகுமே. (௨௨)

ஆனந்த மாகு மரனருட் சத்தியிற், றானந்த மாமுயிர்த் தா
னே சமாதிசெய், தானந்த மாயுளர் வாயுள் ளுணர்வுறிற், கோ
னந்த வாய்க்கு மகாவாக்கிய மாமே. (௨௩)

அறிவிக்க வேண்டா மறிவற் றயர்வோர்க்கு, மறிவிக்க வேண்டா மறிவிற் செறிவோர்க்கு, மறிவுற் றறிப்பாமை யெய்தி நிற் போர்க்கே, யறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. (௨௪)

சத்து மசத்துஞ் சதசத்துந் தான் கூடிச், சித்து மசித்துஞ் சிவசித்த தாய்நிற்குஞ், சுத்த மசுத்தந் தடங்காத் துரிய த்துச், சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே. (௨௫)

தானே யறியா னறிவிலோன் றானல்லன், றானே யறிவா னறிவு சதசத்தென், றானு மிரண்டு மாவரு ளாய்நிற்குந், தானே யறிந்து சிவத்துடன் றங்குமே. (௨௬)

தத்துவ ஞானந் தலைப்பட் டவர்கட்கே, தத்துவ ஞானந் தலைப்பட லாய்நிற்குந், தத்துவ ஞானத்துத் தானவ னாகவே, தத்துவ ஞானானந் தந்தான் றொடங்குமே. (௨௭)

தன்னை யறிந்து சிவனுடன் றானாக, மன்னு மலங்குணை மாளும் பிறப்பறும், பின்னாது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி, நன்னாது ஞானத்து முத்திரை நண்ணுமே. (௨௮)

ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கந், தானுறு மிச்சை யுயிராகத் தற்பரன், மேனிகொண் டைங்கரு மத்துவித் தாதலான், மோனிகள் ஞானத்து முத்திரைபெற் றார்களே. (௨௯)

உயிர்க்கறி வுண்மை யுயிர்ச்சை மான, முயிர்க்குக் கிரியை யுயிர்மாயை சூக்க, முயிர்க்கிவை யூட்டுவோ னாட்டு மவனே, யுயிர்ச்செய லன்றியவ் வுள்ளத்து ளானே. (௩௦)

தொழிலிச்சை ஞானங்க டொல்சிவ சீவர், கழிவற்ற மாமாயை மாயையி னாகும், பழியற்ற காரண காரியம் பாழ்விட், டழிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே. (௩௧)

இல்லது முள்ளது மியாவையுந் தானாகி, யில்லது முள்ளது மாயன்று மன்னலைச், சொல்லது சொல்லிடிற் றூராதி தூமென், றெல்லை யுணர்ந்தா லுயிர்க்குயி ராகுமே. (௩௨)

திருமந்திரம்.

...ஒ, யுய... சை வாட்டி

உயிரிச்சை யூட்டி யுழிதரு மூட்டி யுடனுறை வாலே, யுயிரிச்
சையொழித் திடிஞான... (௩௩)
சை வாட்டி ...பந்துஞ் சேருமே.

...ருஞ் சிவமானு ரைம்மலந் தீர்ந்தவ, ரோரொன்றி லா
...ம மலவிரு ளுற்றவர், பாரிங்கண் விண்ணர கம்புகும் பா
மன்மையா, ராருங்கண் டோரா ரவையரு ளென்றே. (௩௪)

ஐந்தினர் செய்யு மிருமாயா சத்தியி, னைந்தினர் செய்யு
மிருஞான சத்தியி, னைந்தினர் செய்யு மிருஞால சத்தியி, னை
ந்தினர் செய்யு மிறையரு டானே. (௩௫)

இருந்தனர் விட்டார் திருவினா ரகந், திருந்தனர் விட்டா
ர் திருவார் சுவர்க்கந், திருந்தனர் விட்டார் செறிமலக் கூட்
டந், திருந்தனர் விட்டார் சிவமா யவமே. (௩௬)

அவமுஞ் சிவமு மறியா ரறியா, ரவமுஞ் சிவமு மறிவா ர
றிவா, ரவமுஞ் சிவமு மருளா லறிந்தா, லவமுஞ் சிவமு மவனரு
ளாமே. (௩௭)

அருளான சத்தி யனல்வெம்மை போலப், பொருளவ னு
சத்தான் போதம் புணரு, மிருளொளி யாய்மீண்டு மும்மல மா
குந், திருவரு ளாகந்தி செம்பொரு ளாமே. (௩௮)

ஆதித்தன் றோன்ற வரும்பது மாதிகள், பேதித்த தவ்வி
னை யார்செயல் சேதிப்ப, வாதித்தன் றன்கதி ராலவை சேட்
டிப்பப், பேதித்தப் பேறியா வாறருட் பேதமே. (௩௯)

பேத மபேதம் பிறழ்பேதா பேதமும், போதம் புனர்
போதம் போதமு நாதமு, நாத முடனாத நாதாதி நாதமு, மா
தி னருளி னருளிச்சை யாமே. (௪௦)

மேவிய பொய்க்கரி யாட்டும் வினையென்னப், பாவிய பூ
தங்கொண் டாட்டிப் படைப்பாதி, பூவியல் கூட்டித்தற்

போதம் பு

லைய காட்டு மருளாமே. (௩௧)

அருநெறி தன்னையற றாகி யாவினு மியா
வுந் தனிலெய்த, வெறும் வெளிபுக்கு மேரு, டேறுத்
தெளிவுற்றுத் தீண்டச் சிவ மாமே. (௩௨)

தீண்டற் கரிய திருவடி நேயத்தை, மீண்டற் கரு
விதிவழி யேசென்று, ஆண்டிச் சிவஞான மாவினைத் தாண்டி
றித், தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே. (௩௩)

சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர், சார்ந்தவர் மெ
ய்ஞ்ஞான தத்துவ சித்தியர், சார்ந்தவர் பேயுந் தலைப்பட்ட
வானந்தர், சார்ந்தவர் சத்த வருட்டன்மை யாரே. (௩௪)

தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவந், தானெ
ன் றவனென் றிரண்டற்ற தன்மையைத், தானென் றிரண்டு
ன்னார் கேவலத் தானவர், ஞானிக்கு நானுகந் தத்துவ
சுத்தமே. (௩௫)

தன்னினிற் றன்னை யறியுந் தலைமகன், றன்னினிற் றன்
னை யறியத் தலைப்படுந், தன்னினிற் றன்னைச் சார்கில னாகிற்,
றன்னினிற் றன்னையுஞ் சார்தற் கரியவே. (௩௬)

அறியகி லேனென் றரற்றாதே நீயு, மறிவறி பேசென்
று கோப்பட்ட பின்னை, யிருசுட ராகி யியற்றவல் லானு, மொ
ருசுட ராவந்தென் னுள்ளத் துள்ளாமே. (௩௭)

மன்றென்று தான்பல தத்துவ மாகிநின் றந்தப் போ
தகச் செல்லா பொருளினை, மன்றென்று தான்பல காலுங்
கருத்தினைக் காணு, வன்னமு மவ்வண்ண மாகிநின் றானே. (௩௮)

ஓம்புகின் றானுல கேழையு முன்னின்று, கூம்புகின் றார்
குணத் தின்னெறி கூறுவர், தேம்புகின் றார் சிவந் தெய்வமெ
ய்ய யாதவர், கூம்பலி லார்க்குக் கொள்ளலு மாமே. (௩௯)



குறியறி வார்கள் குறிகாண மாட்டார், குறியறி யார்கட்
கூடல் பெரிது, குறியறி யாவகை கூடுமின் கூடி, யறிவறி யா
விருந் தன்னரு மாமே. (௪௰)

ஊனே யுயிரா வுழல்கின்ற தேஇன்பம், வானோர் தலை
வி மயக்கத் துறநிற்கத், தானே பெரிதரு ளோனென் றுமா
றாற்,தாமே பிறப்போ டிறப்பறி யாரே. (௪௧) ஆ ௨௧௩௦

---

## அறிவுதயம்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை, தன்னை யறி
யாமற் றானே கெடுகின்றான், தன்னை யறியு மறிவை யறிந்தபி
ன், றன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. (௧)

அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச், சிங்கா
தனத்தே சிவனிருந் தானென்று, சங்கார் வளையுஞ் சிலம்புஞ்
சரேலெனப், பொங்கார் குழலியும் போற்றியென் றாளே. (௨)

அறிவு வடிவென் றறியாத வென்னை, யறிவு வடிவென்
றருள்செய்தா னந்தி, யறிவு வடிவென் றருளா லறிந்தே, யறி
வு வடிவென் றறிந்திருந் தேனே. (௩)

அறிவுக் கழிவில்லை யாக்கமு மில்லை, யறிவுக் கறிவல்ல
தாதார மில்லை, யறிவே யறிவை யறிகின்ற தென்றிட், டறைந்த
ன் னான்மறை யீறகத் தானே. (௪)

ஆயு மலரி னணிமலர் தன்மேலே, பாய விதழ்கள் பதினா
று மங்கே, தூய வறிவு சிவானந்த மாகியே, பேய வறிவாய்
ப் புணர்ந்திருந் தானே. (௫)

மன்னிநின் றாரிடை வந்தருண் மாயத்து,முன்னிநின் றானை
மொழிந்தேன் முதல்வனும், பொன்னின்வந் தானோர் புகழ்தி
ரு மேனியைப், பின்னிநின் றேனே பெரியனென் றானே. (௬)

அறிவறி வாக வறிந்தன்பு செய்மி, னறிவறி வாக வறிவு மிவ் வண்ணை, மறிவறி வாக வணிமாதி சித்தி, யறிவறி வாக வறிந்தன னந்தியே. (எ)

அறிவறி வென்றங் கரற்று முலகு, மறிவறி யாமை யாரு மறியா, ரறிவறி யாமை கடந்தறி வாளு, லறிவறி யாமை யழகிய வாறே. (அ)

அறிவறி யாமையை நீவி யவனே, பொறிவா யொழிந் தெங்குந் தானான போது, வறிவா யவற்றினுட் டானா யறிவின், செறிவாகி நின்றவன் சிவனு மாமே. (கூ)

அறிவுடை யார்நெஞ் சகலிட மாவ, தறிவுடை யார்நெஞ் சருங்கல மாவ, தறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானு, மறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் றானே. (ய)

மாயனு மாகி மலரோ னிறையுமாய்க், காயநன் னுட்பெருங் கருமுத லானவன், சேய னணியன் றித்திக்குந் தித்தரும், பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே. (கக)

என்னை யறிந்திலே னித்தனை காலமு, மென்னை யறிந்தபி னேனு மறிந்திலே, னென்னை யறிந்திட் டிருந்துமிவ் வைகிடா, தென்னையிட் டென்னை யுசாவுகின் றானே. (கஉ)

மாய விளக்கது நின்று மறைந்திடுந், தூய விளக்கது நின்று சுடர்விடுங், காய விளக்கது நின்று கனன்றிடுஞ், சேய விளக்கினைத் தேடுகின் றேனே. (கங)

தேடுகின் றேன்றிசை யெட்டோ டிரண்டையு, நாடுகின் றேனல மேயுடை யானடி, பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக், கூடுகின் றேனுரை யாமனத் தாலே. (கச)

முன்னை முதல்விளை யாட்டத்து முன்வந்தோர், பின்னைப் பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத், தன்னைத் தெரிந்து தன்



பண்டைத் தலைவனுண் மன்னிச் சிவமாக வாராப் பிறப்பே. (கரு) ஆக உஎஅ

---

## ஆறந்தம்.

வேதத்தி னந்தமு மிக்கசித் தாந்தமு, நாதத்தி னந்தமு நற்போத வந்தமு, மோதத் தகுமெட்டு யோகாந்த வந்தமு, மாதிக் கலாந்தமு மாறந்த மாமே. (க)

அந்தமோ ராறு மறியா ரதிசுத்த, ரந்தமோ ராறு மறிவா ரமலத்த, ரந்தமோ ராறு மறியா ரவர்தமக், கந்தமோ டாகி யறியவொண் ணாதே. (உ)

சாலும் வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்த, மாலு மரியத் துறவன் றனைக்கண்டு, சேருஞ் பராபரஞ் சேர்சிவ யோகமா, யாறு மலமறு நுந்தத்தி யாதலே. (ங)

நித்தம் பரனோ டுயிருற்று நின்மனஞ், சுத்த முதலிங்குந் தத்துவந் தானிக்கிச், சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந், தத்தன் பரன்பா லடைதல்சித் தாந்தமே. (ச)

மேவும் பிரமனே விண்டு வுருத்திரன், மேவுமெய் யீசன் சதாசிவன் மிக்கப்பால், மேவும் பரவிந்து நாதம் விடாவாறு, மேவும் பொருளு மொன்றுள தாகுமே. (ரு)

உள்ள வுயிராறா றாகு பரிசைத், தெள்ளி யகன்ற நாதாந்தத் தெரிசத் தெற்றுமே, யுள்ள விருணீங்க வோருணர் வாகுமே, வெள்ளலி னாதாந்தத் தெய்திநின் போர்களே. (சா)

ஏமு யம நியமாதி சென்றகன், றாதிந் சமாதியி லுற்றுப், படர்சிவன், பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக், கூடு முபசாந்தம் யோகாந்தக் கொள்கையே. (எ)

கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில், விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக், குள்ளன வாம்விந்து வுள்,

ளே யொடுங்கலுந்; தெள்ளி யறிந்தத் தெளிந்து மாமே. (அ)

தெளியு மிவையன்றித் தேரைங் கலைவே, றொளியுள வை
ந்துள்ள தோரயல் லார்கட், களியவ ராகிய மந்திரந் தந்திர
ந், தெளிவுப தேசஞா னத்தொடைந் தாமே. (கூ)

ஆகு மநாதி கலையா கமவேத, மாகுமத் தந்திர மந்நூல்
வழிநிற்ற, லாகு மநாதி யுடலல்லா மந்திர, மாகுஞ்சிவபோ
தகமுப தேசமே. (க0)

தேசார் சிவமாகுந் தன்ஞானத் தின்கலை, யாசார நேய
மறையுங் கலாந்தத்துப், பேசா வுரையுணர் வற்ற பெருந்த
கை, வாசா மகோசர மாநந்தி தானே. (கக)

தானவ னாகுஞ் சமாதி கைகூடிடி, லான கலாந்தநா தா
ந்தயோ காந்தமு, மேனைய போதாந்தஞ் சித்தாந்த மானது,
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே. (கஉ)

ஆறந்த முஞ்சென் றடங்குமந் நேயத்தே, யாறந்த நேய
மடங்கிடு ஞாதுரு, கூறிய ஞானக் குறியுடன் வீடவே, நேரிய
மோனஞ் சிவானந்த வுண்மையே. (கங)

உண்மைக் கலையாறொ ரைந்தா னடங்கிடு, முன்னாக் க
லாந்த மிரண்டைந்தோ டேழுந்த, முண்மைக் கலையொன்றி வீறு
ய நாதாந்தத், துண்மைக் கலைசொல்ல வோரந்த மாமே. (கச)

ஆவுடை யானை யரன்வந்து கொண்டபின், றேவுடை யா
னெங்கள் சிற்சத்தி தாடந்து, மூவறு வேதாந்த சித்தாந்த மே
ன்மையைக், கூவி யருளிய கோனைக் கருதுமே. (கரு)

கருது மவர்தங் கருத்தினுக் கொப்ப, வரனருள் செய்த
வாகமந் தன்னில், வருசம யப்புற மாயைமா மாயை, யுருவிய
வேதாந்த சித்தாந்த வுண்மையே. (கசா)

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை, போதாந்
த ஞானம் யோகாந்தம் பொதுஞேயம், நாதாந்த மானந்தஞ் சீ



ரோதய மாகு, மூதாந்த முத்திரை மோனந்த மூழ்கவே. ()

வேதாந்தந் தன்னி லுபாதிமே லேழ்விட, நாதாந்த பா
சம் விடுதல்ல தொம்பத, மீதாந்த காரணோ பாதியேழ் மெய்
ப்பரன, போதாந்த தற்பதம் போமசி யென்பவே. (கஅ)

அண்டங்க ளேழுங் கடந்தகன் றப்பாலு முண்டென்ற
பேரொளிக் குள்ளா முளவொளி, பண்டுறு நின்ற பராசத்தி
யென்னவே, கொண்டவ னன்றிநின் றானெங்கள் கோவே. ()

கோவுணர்த் தஞ்சத்தி யாலே குறிவைத்துத், தேவுணர்
த் தங்கரு மஞ்செய்தி செய்பவே, பாவனைத் தும்படைத் தர்
ச்சனை பாரிப்ப, மேவனைத் தன்னொடு மாய வொருவனே.

ஒருவனை யுன்னா துயிர்தன்னை யுன்னா, திருவினை யுன்னா தி
ருமாயை யுன்னா, தொருவனு மேயுள் ளுணர்ந்திடின் றாட்டி, ய (உக)
ருவனு மாகிய வாதாரந் தானே.

அரனன்பர் தானம தாகிச் சிவந்து, வருமல சுத்திகள்
மூன்று வருத்திட், டீறானா சத்தி சேட்டிப்ப வென்றுந், திர (உஉ)
னுறு தோயச் சிவானந்தி யாகுமே.

வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப, நாதாந்த பாச
ம் விடநின்ற நன்பதி, போதாந்த தற்பதம் போயிரண் டயி (உங)
க்கியஞ், சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே.

சிவமாய வேதாந்த சித்தாந்த மாகு, மவமல மாகு மவ
வவ் விரண்டுஞ், சிவமாஞ் சதாசிவன் செய்தொன்று றொன், (உச)
னவமாம் வேதாந்த ஞானசித் தாந்தமே.

சித்தாந்தத் தேசிவன் முத்திசித் திக்கலாற், சித்தாந்தத்
தேசித்தோர் முத்திசித் திக்கவர், சித்தாந்த வேதாந்தஞ் செ
ம்பொரு ளாதலாற், சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனை (உரு)
யே.

சிவனைப் பரமனுட் சீவனுட் காட்டு, மவமற்ற வேதாந்த

சித்தாந்த மாகு, மவமுற்ற வத்துவையின் ஞானஞ் சிவமாக், ஞயமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே. (௨௬)

தத்துவ மாகுஞ் சகள வகளங்கடத்துவ மாம்விந்து நாதஞ் சதாசிவந், தத்துவ மாகுஞ் சீவனறன் றற்பரந், தத்துவ மாஞ்சிவ சாயுச் சியமே. (௨௭)

வேதமோ டாகம மெய்யா மிறைவனூ, லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன, நாத னுரையவை நாடி லிரண்டந்தம், பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. (௨௮)

பராநந்தி மன்னுஞ் சிவானந்த மெல்லாம், பரானந்த மேன்மூன்றும் பாமுறு நந்தம், விராமுத்தி ரானந்த மென்ன டுனந்தம், பொராநின்ற வுள்ளமே பூரிப்பி யாமே. (௨௯)

அறுங் கலாந்த மிரண்டந்த நாதாந்தமாகும் பொழுதிற் கலையந்த மாதவி, லாகு மானே பஞ்சாந்தக முமென்ன, வாகு மறையா கமமொழிந் தனவே. (௩௦)

அன்றுரு மென்னுநை வகைபந்தந் தன்னை, யொன்றுன வேதாந்த சித்தாந்த முன்னிட்டு, நின்றுசுவ யோகாந்த நேர்பட்டு நேர்பட்டான், மன்றுடி பாத மருவது மாமே. (௩௧)

அநாதி சீவனைம் மலமற்றுப் பாலா, யநாதி யடக்கித் தனைக்கண் டரனாய்த், தனாதி மலங்கெடத் தத்துவா தீதம், வினாவிய பாலாதல் வேதாந்த வுண்மையே. (௩௨)

உயிரைப் பரனை யுயர்சிவன் றன்னை, யயர்வற் றறிதொந் தத்தசி யதனாற், செயலற் றறிவாகி யுஞ்சென் றடங்கியுயர்வற் ற வேதாந்த சித்தாந்த மாமே. (௩௩)

மன்னிய சோகமா மாமறை யாளர்க்குஞ், சென்னிய தானே சிவோகமா மீதென்ன, வன்னறு சித்தாந்த மாமறை யாய்பொருள், துன்னிய வாகம நூலெனத் தோன்றுமே. (௩௪)

முதலாகும் வேத முழுதா கமமாகப், பதியான வீசன ப



கர்ந்த திரண்டு, முதிதான வேத முறைமுறை யாலமர்ந், ததிகாதி வேதாந்த சித்தாந்த மாகவே. (௩௫) ஆ. ௨௩௫.

---

## பதிபசுபாசவேறின்மை.

அறிவறி வென்ற வறிவு மநாதி, யறிவுக் கறிவாம் பதியு மநாதி, யறிவினைக் கட்டிய பாச மநாதி, யறிவு பதியிற் பிறப்பறுந் தானே. (௧)

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப், பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு, பசுத்தன்மை நீக்கிப் பாச மறுத்தாற், பசுக்க டலைவனைப் பற்றி விடாவே. (௨)

கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று, நடக்கின்ற ஞானத்தை நாடோறு நோக்கித், தொடக்கொன்று மின்றித் தொழுமின் றொழுதாற், குடக்குன்றி லிட்ட விளக்கது வாமே. (௩)

பாசஞ்செய் தானைப் படர்சடை நந்தியை, நேசஞ்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலுங், கூசஞ்செய் துன்னிக் குறிக்கொள வுய்வனம், வாசஞ்செய் பாசத்துள் வைக்கின்ற வாறே. (௪)

விட்ட விடமேறு வாறுபோல் வேறாகி, விட்ட பசுபாச மெய்கண்டோன் மேவுறுங், கட்டிய கேவலங் காணுஞ் சகலத்தைச், சுட்டி நனவி லதீதத்துட் டோன்றுமே. (௫)

நாடும் பதியுட னற்பசு பாசமு, நீடுமா நித்த நிலையறி வாரில்லை, நீடிய நித்தம் பசுபாச நீக்கமு, நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே. (௬)

[illegible]பதிதா னருட்சிவ லிங்கமா, மாய பசுவு மடலேறு நந்தியா, மாய பலிபீட மாகுநற் பாசமா, மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. (௭)

பதிபசு பாசம் பயில்வியா நித்தம், பதிபசு பாசம் பகர்வோர்க் காருக்கிப், பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும், பதிய

சு பாசம் பயிலநி லாவே. (௮)

பதியும் பசுவொடு பாசமு மேலைக், கதியும் பசுபாச நீக்
கும் காட்டி, மதிதந்த வானந்த மாநந்தி காணுந், துதிதந்து
வைத்தனன் சுத்தசை வத்திலே. (௯)

அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாகு, மறிந்தணு மூன்று
மே யாங்கணு மாகி, யறிந்தவ ணுறு வியாத்தணு மாகி, யறிந்த
பதிபடைப் பானங் கவற்றையே. (௧௦)

படைப்பாதி யாவது பரஞ்சிவஞ் சத்தி, யிடைப்பா லுயி
ர்கட் கடைத்திவை யங்கல், படைப்பாதி சூக்கத்தைத் தற்
பரஞ் செய்யப், படைப்பாதி தூய மலமப் பூரத்திலே. (௧௧)

ஆகிய சூக்கத்தை யவ்வித்து காதமு, மாகிய சத்தி சிவபர
மேலைத்தா, லாகிய சூக்கத்தி லெய்தரு மத்தெய்வோ, ருகிய ஞா
ய விசானனு மாமே. (௧௨)

மேவும் பரசிவ மேற்சத்தி நாதமு, மேவும் பரவிந்து வை
ம்முகன் வேசன், மேவு முருத்திரன் மால்வேதா மேதினி,
யாகும் படிபடைப் போனர னாமே. (௧௩)

படைப்பு மளிப்பும் பயிலிளைப் பாற்றுந், துடைப்பு மறை
ப்புமுன் றேன்ற வருளுஞ், சடத்தை விடுத்த வருளுஞ் சகலத்,
தடைத்தவ னுதியை யைந்தென லாமே. (௧௪)

ஆறு குண்டலி தன்னி லகத்திட்டு, வேறு மாயையின்
முப்பான் மிகுத்திட்டங், கீறு கருவி யிவற்றால் வகுத்திட்டு,
வேறும் பதிடங் பாசம்வீ டாகுமே. (௧௫)

வீட்டும் பதிபசு பாசமு மீறு, வாட்டு மிருவினை யாக்க
வற் றாலுணர்க், தாட்டு நரக சுவர்க்கத்திற் றுய்வித்து, நாட்டு
ற நாலுறங் குற்பாச நண்ணுமே. (௧௬)

நண்ணிய பாசத்தி லுன்னன லாணவம், பண்ணிய மாயை
யி லாட்டிப் பதித்தனன், கண்ணிய சேதனன் கண்வந்த பேரொ



ளண்ண லடிசேரு பாயம தாகுமே. (௧௭)

ஆகு முபாயமே யன்றி யழுக்கற்று, மோக மறக்கத்த து
தற்கு மூலமே, யாகு மலமை யழுக்கேற்றி யேற்றல்போ, லா
குவ தெல்லா மருட்பாச மாகுமே. (௧௮)

பாசம் பயிலுயிர் தானே பசுநன், பாசம் பயிலுயிர் தா
னே பசுவென்ப, பாசம் பயிலப் பதிபர மாதலாற், பாசம் பயி
லப் பதிப்பதி யாருமே. (௧௯)

அத்தத்தி லுத்தரஞ் செட்ட வருத்தவ, ரத்தத்தி லுத்தர
மாரு மருண்மேவி, யத்தத்தி லுரோ மியாயப் பிடித்தது, மத்
தத்திற் றம்மை யடைத்தகின் றுரோ. (௨௦) ஆ. ௯௦௯.

---

அடி தலையறியுந்திறங்கூறல்.

காலுந் தலையு மறியார் கலதிகள், காலந்தச் சத்தி யருளெ
ன்பர் காரணம், பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்,
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே. (௧)

தலையடி யாவ தறியார் காயத்திற், றலையடி யுச்சியி லுள்
ளது மூலந், தலையடி யான வறிவை யறிந்தோர், தலையடி யாக
வே தானிருந் தாரே. (௨)

நின்று விலமுந் தண்டமு மேழா, வன்று னனா மொரு
மூய்த்திடப், பின்று லகம் படைத்தவன் பேர்நந்தி, தன்று ணி
லைபென் றலையிசை யானதே. (௩)

சிந்தையி னுள்ளே யெந்தை திருவடி, சிந்தையு மெந்தை தி
ருவடிக் கீழது, வெந்தையு மென்னை யறியகி லாதுகி, லெந்தை
யை யானு மறியகி லேனே. (௪)

பன்றுத பாரொளிக் கப்புறத் தப்பா, லென்று யகன்றி
னைந்தங் கிருந்திட, முன்று வெளியு மூணிசெய்ய மந்திரஞ்,
சொன்றான் கழலிணை சூடிநின் றேனே. (௫)

பதியது தோற்றும் பதமது வைம்மின், மதியது செய்து

ற்குருநந்தியுங், கன்று நினைந்தெழு தாயென வந்தபின், குன்றி நிறைந்த குணவிளக் காகுமே. (௨)

ஆறாறு தத்துவத் தப்புறத் தப்பரங், கூறு முபதேசங் கூறிற் சிவபரம், வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார், பேறாக வானந்தம் பேணும் பெருகவே. (௩)

பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது, பற்றறப் பற்றிற் பராபரம், பற்றறப் பற்றினிற் பற்றவல் லோர்கட்கே பற்றறப் பற்றிற் பரம்பர மாமே. (௪)

பரம்பர மான பதிபாசம் பற்றாப், பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப், பரம்பர மான பரசிவா னந்தம், பரம்பர மாகப் படைப்ப தறிவே. (௫)

கனவிற் கலாதியை காணாது கன்று, நனவுற்ற கேவலந் தன்னிற்றா னாகி, நினைவுற் றகன்ற வதீதத்து ளேயந், தனையுற் றிடத்தானே தற்பர மாமே. (௬)

தற்கண்ட தூயமுந் தன்னில் விசாரமும், பிற்காணுந் தூடணந் தானும் பிறழ்வுற்றுத், தற்பரன் கால பரமுங் கலந்தற்று, நற்பர ஞ்சுடர் காட்ட நாதியே. (௭) ஆ. கூ௩.

---

பரலக்கணம்.

அதீதத்து ளாகி யகன்றவ னந்தி, யதீதத்து ளாகிய ரறிவிலோனுன்மா, மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றாம், பதியிற் பதியும் பரவுயிர் தானே. (௧)

ஆதியு மந்தமு மில்லா வரும்பதி, சோதிப் பரஞ்சுடர் தோன்றத் தோன்றுமை யீவி, நீதிய தாய்நின்ற நீடிய வப்பரம், போத முணர்ந்தவர் புந்தியுட் தோர்களே. (௨)

துரியங் கடந்த துரியாதி தந்தே, யரிய வியோகங் கொ



ண்டம் பலத்தாடும், பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே, அரியவல் லார்க்குத் துரிசில்லை தானே. (௩)

செம்மைமுன் னிற்பச் சிவேதந் திரிவபோ, லம்மெய்ப்பதந்தோ டணுவனு னாயிடப், பொய்ம்மைச் சகமுண்ட போத வெறும்பாழிற், செம்மைச் சிவமேரு சேர்கொடி யாகுமே

வைச்ச கலாதி வருதந் துவக்கெட, வெச்ச விருமாயை யேகுக வோதத், துச்ச பசிவ மாமுண்மை யொன்றவே, யிச்ச மறுத்தென்னை யாண்டன னந்தியே. (௫)

என்னை யறிய விசைவித்த வென்னந்தி, யென்னை யறிந்தி யாத விடத்துய்த்துப், பின்னை யொளியிற் சொருகிப் புறப்பட்டுத், தன்னை யளித்தான் றற்பர மாகவே. (௬)

பரத்திற் கரைந்தும் பார்புனல் வாயு, நிரந்த வளிமொளி ஞாயிறு திங்க, ளரந்த வழிநெறி யாயது வாகித், தரந்த விசம்பொன்று தாங்கிநின் றானே. (௭)

சத்தி சிவனிற் றூனை சத்தியுஞ், சற்பரா யாய்நிற்குந் தானும் பராபரை, யுய்த்தது மிச்சையின் றூனதி பேதமாய், நித்த நடத்து நடிக்குமா றெய்த்தே. (௮)

மேலொடு கீழ்பக்க மெய்வாய்கண் ணாசிகள், பாலிய விந்து பறையுட் பலாயாகக், கோலிய நான்கவை ஞானங் குனிர்ந்து, சீல மிலாவனுஞ் செய்தியு தாமே. (௯)

வேறு மதன்றன்மை போலுமிக் காட்சி, லாறு முபாதி யினைத்தாருந் தத்துவம், பேறும் பரவொளி யுன்னிம்பிரகாசமா, யூறு முயிர்த்தன் னெழுகிரி மாளுமே. (௰)

நிற்பர மன்றுந் னிமுதற் பேரொளி, நிற்பாக் தானே செகமுஞ் சூழ்போதமுந், தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதியுக், கப்புற மற்றதின் கொப்பில்லை தானே (௧௧)

பண்டை மறைகள் பரவா னுடலென்றுங் கண்ட மதி

யோன் அரியாதி தக்கன்னைக், கண்டு பரமக் கடந்தோறு பரி
திச்சே, யிண்டி னவன்கத்த ருாகான் விளங்கிலே. (௧௨)
வெளிகால் கலப்பு மேவுமன் னின்று, தனியா தியதற்
பரங்கா னவன்றன், வெளிகால் கலப்பு மேவுமன் னின்
ற, வெளியாய சத்தி யவன்வடி வாமே. (௧௩)
மேருவி னோடே விரிகதிர் மண்டலம், மார நீரிப்பு மருந்த
வு யோகிக்குச், சேரார் தவஞ்செய்யிற் சிவனரு டாகுதும், பேர
நவும் வேண்டாம் பிறிதிங்கில் தானே. (௧௪) ஆ. ௩௭௪.

## முத்துரியம்.

சனவாதி மூன்றினிற் சீவ துரியந், தனதாதி மூன்றினிற்
பர துரியந்தா, னனவாதி மூன்றினிற் சிவ துரியமா, யினதாகுந்
தொக்கத் தசிபதத் திடே. (௧)
தாறு நனவிற் றுரியந்தன் னெம்பதந், தாணுந் துரியநன
வாதி தானமூன்றில், வாருப் பரபத மற்ற தருகனு வாருன
மேன்மூன்றுந் துரிய மலருமே. (௨)
அறுவின் துரியத்து நான்கும தாகிப் பணியும் பரதுரி
யம்பயி லுன்முந், தணிவிற் பரமாகிச் சார்முத் துரியங், சுழு
வில் நான்குங் கலந்தசி வானந்தே. (௩)
ஊரங் தவத்தை விசமுத் துரியத்து, கோர்ந்த மாகநெ
றிவழி யேசென்று, பாரந் துறான பராபரந் தயிக்கியந், தோ
ந்த மாயிரு பாதியைச் சேர்த்திடே. (௪)
கொட்டே யிருமின் றுரிய நிலத்திலை, வெட்டா தெலி
யின் ரெட்டு யிறைவனைப்பா பட்டாங் கதிந்திடிற் பன்னு வுக
தேன், கட்டர வொழிவதோர் தத்துவந் தானே. (௫)
அறிவா யசத்தென்று மாறு நவன்று, செறிவாய மாயை
சிதைத்தரு ளாலே, பிறியாத பேரு ளாயிடிப் பெற்றிச், செறி
யான வன்பா நிலைமுறித் தாரே. (௬)



கனவி னனவாதிகாலாந் துரியந், தனதுயிர் தொம்பத
மாயாது போல, வினைவது சீவ னனவாதி யாகத், தனைய பர
துரியத்தற் பதமே. (௭)
தொம்பதந் தற்பதந் தொன்றாந் துரியம்போ, லம்பிய
மூன்றுந் துரியத்து நற்றுமம் பம்புவி புன்று வதிருக்க மப்பா
லைச், செம்பொரு ளாண்டருள் சிக்கத் தானே. (௮)
ஆ. ௩௮௨.

## மும்முத்தி.

சேவ்றன் முத்தியதிகம் பரமுத்தி, யோகுப சாந்தஞ் சி
வமுத்தி யானந்த, மேவயின் முச்சொருப முத்திமுப் பாலதா,
யோவுறு காரந்தி யல்லுதா காக்கமே. (௧)
ரூவ ததியா குயிர்பிறப் பாதுமாவ தறிபு முயிரூட் பா
ணறு, மாவதொன் றிங்கிய கம்புறத் தென்றதன், மேவு சிவ
டென்றதன் முத்தியே. (௨)
சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத், தவமான மும்
முத்தி தத்துவத் தயிக்கியத், தவமா கியநெறி சோகமென்
போர்க்குஞ், சிவமா மமலன் சிறந்தது தானே. (௩)
சித்திய முத்தியுந் திண்சிவ மாகிய, சுத்திய முத்தித்தொ
லைக்குஞ் சுகாந்தத், சத்திய யோகச் சமாதிய மாயிடும், பெத்
த மறந்த பெரும்பெரு மானே. (௪) ஆ. ௩௮௬.

## முச்சொருபம்.

எதிய வாறே மலமக் திடையடைந், மறிய ஞானச் சி
லோக மடைந்திட்டு, மேது மெனமுச் சொருபத்து விதிந்தால்,
சிறிதிற் பண்டைப் பாநுண்மை செய்யுமே. (௧)
மூன்றுள மாளிகை மூவ ரிருப்பிட, மூன்றினின் முப்பத்தா

ள முதிப்புள, மூன்றின் முன்னே முளைத்தெழுஞ் சோதியைக்,
காண்டலுங் காயக் கலக்கற்ற வாறே. (௨)

உலகம் புடைபெயர்ந் தூழியும் போன, நிலவு சுடரொளி
மூன்று மொன்றாய, பலவும் புரிசொடு பான்மையுள் ளீச, ன
ளவும் பெருமையு மாரறி வாரே. (௩)

பெருவாய் முதலென்னும் பேதமே பேதித், தருவா யுரு
வா யருவுரு வாகிக், குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப் பன்
மை, யுருவா யுடனிருந் தொன்றுபன் றன்றே. (௪)

பனிமொழி சோமை யிலக்கணம் வாய்த்து, மனிமய
லாய்நின்ற வாறது போலத், தனிமுச் சொரூபாதி சத்தியா
தி சாரப், பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றியே. (௫)

கல்லொளி மாதிறஞ் சோமைக் கதிர்கட்ட, நல்ல மணி
பொன்றி நூடுபொன் மூப்பதஞ், சொல்லறு முப்பாழிச் சொ
ல்லறு பேருணர்த், தல்லது முத்திரைக் குத்தது புரியே. (௬)

உடந்தசெந் தாமரை யுள்ளுறு சோதி, நடந்தசெந் தாம
ரை நாதந் தரிக்க, லடைந்த பயோதரி யட்டி யடைத்தவ்
விடந்தரு வாசலை மேல்திற வீரே. (௭) ஆ. நசகூ.

முக்காரணம்.

இடந்தரு மூன்றி லியைந்த வொருவன், கடந்தரு மவ்வுரு
வேதெனக் காணுந், திடமது போலச் சிவபர சீவர் ருடனுறை
பேதமு மொன்றென லாமே. (௧)

இளியை யொள்செய்த வோமென் றெழுப்பி, வெளியை
வளிசெய்த வாய்த்திட வாங்கி, வெளியை வெளிசெய்து மே
லெழ வைத்துத், தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே. (௨)

முக்கா லங்களின் மூர்ச்சை தீர்ந்த சாலகத், தைக்கா ர
ணெமன்னத் தந்தனன் காணந்தி, மிக்க மறைஞ்சலி வேற



நவிர்த்தேக, வொக்கும வன்மலி யோகட் சமாதியே. (௩)
ஆ. நசஅ.

முச்சூனியம் - தொந்ததசி.

தற்பதந் தொம்பதந் தாமசி யத்துந், தொற்பத மூன்றுந்
துரியத்துத் தோற்றவே, நிற்ப துயிர்பர நிகழ்சிவ மும்மூன்
றில், சொற்பத மாகுந் தொந்தத் தசியே. (௧)

தொந்தத் தசிமூன்றிற் றொல்கா மியமாதி, தொந்தத்
தசிமூன்றிற் றொல்தா மதமாதி, வந்த மலக்குண மாளச் சிவஞ்
சொன்றி, யிந்துவின் முன்னிரு ளேகுத லொக்குமே. (௨)

தொந்தத் தசியைவ் வாசியிற் றேற்றியே, யந்த முறை
யீறாக் தாக மதித்திட்டு, வந்த மிலாத வசுத்தையவ் வாக்கிய
த், தந்த முறையிற் சிவமுன்வைத் தோதிடே. (௩)

வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத், துய்த்துப் பிர
ணவ மாமுப தேசத்தை, மெய்த்த வியர்த்து விட்டுவி மெய்யு
ணர்ந், தத்தற் கடிமை யடைந்துநின் றானே. (௪)

தொம்பத மாயையுட் டோன்றிடுந் தற்பத, மம்பரா தன்
னி லுதிக்கு மசிபத, நம்புறு சாந்தி யின்னுமவ் வாக்கிய, மு
ம்ப ருரைதொந்தத் தசிவாசி யாமே. (௫)

ஆகிய வச்சோமன் றெய்வது தன்னிடத், தாகிய வவ்விட்
டா காயமுபா தானம், மேகிய தொந்தத் தசியென்ப மெய்யறி
வாகிய சிவன் பரசிவ னாமே. (௬)

ஈரமது காமிய மாகித் தகுகுண, மாமல மூன்று மகார வு
காரத்தோ, டாமறும் யவ்வுமவ் வாயுடன் மூன்றிற், றுமாங்
கரியுறுந் தொந்தத் தசியவே. (௭) ஆ. நசக.

முப்பாழ்.

காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக், காரண மேழ்வ

ன் டறம்போதப் பாழ்விடக், காரிய காரண வாதனை கள்ட் டாந், சொருப சாக்கிரப் பாழ்விடத் திருமே. (க)

மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன், சேயமுப் பாழெனச் சிவசக்தி யிற்சிவ, ஞேய வியாப்த மெனமுப்பா ழா டுந்தத், தூய சொருபத்தன் சொன்முடி வாகுமே. (உ)

ஏறிற காரு மெருவங் தெறும், பதியெனு சக்தி பரம் அ கூடக், எதிமெனப் பாழைக் கடந்தக் கற்பனை, யுதறிய பாழி லொழிக்குகின் றேனே. (௩)

தூரிய மடங்கிய சொல்லறும் பாழை, யரிய பரம்பர மெ ன்பர்க ளாக, மரிய பரம்பர மென்றே துதிக்கு, மருவில மெ ன்பதை யாருதி வரரோ. (௪)

துரிய நீங்க நமவாதி யகன்றிட்டு, வேறு சியபரை யா வென்று மெய்ப்பர, விருள வாசியிற் கூட்டு மதுவன்றே, தே முச் சியாய நமவெனத் தேறிலே. (௫)

உள்ள முருவென்று முருவ முளமென்று, முள்ளப் பரிச நிக் கோரு மலர்கட்குப், பள்ளமு மில்லை திடரில்லை பாழில்லை, புள்ளமு மில்லை யுருவில்லை தானே. (௬) ஆ. கூ௭௬.

---

காரிய காரணோபாதி.

செற்றிநின் சிவ வுபாதித் திரணையும், பற்றும் பரோபா தி யேழும் பகருணை, யுற்றிடு காரிய காரணத் தோடே, வற் றிட வச்சிவ மாகு மறுவனே. (க)

இருமு காரியோ பாதி யகன்றிட்டு, வேறுய் கனவு மிகுத் த கருகளு, வாறு தகன்ற சுழுத்தி யதிலெய்தாப், பேறு சிவ த்துயிர் தொம்பதம் டேசிலே. (உ)

அகார முயிரோ யுகாரம் பரமே, மகாரஞ் சிவமாய் வருமு

ப் பதத்துச், சிகாரஞ் சிவமே வகாரம் பரமே, யகார முயிரெ ன் றறையலு மாமே. (௩)

உயிர்க்குரி ராகி யொழிவற் றழிவற், றயிர்ப்பது காரணோ பாதி வெதிரேகத், துயிர்ப்புறு மீச னுபமிதத் தாலன்றி, வியர் ப்புறு மானவம் விடல்செய் யாவே. (௪)

காரிய மேழிற் கலக்கும் கபிம்பக, காரண மேழிற் கலக்கு ம் பரசிவன், காரிய காரணக் கற்பனை சொற்பதப், பாரறும் பாழிப் பராபரத் தானே. (௫) ஆ. கூ௮௧.

---

உபசாந்தம்.

முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே, பத்திக்கு வி த்தைப் பணிந்துற்றுப் பற்றலே, சித்திக்கு வித்துச் சிவபரந் தா னாகல், சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. (க)

காரிய மேழுங் கரந்திடு மாயையுட், காரண மேழுங் கர க்குங் கவிவெளி, காரிய காரண வாதனைப் பற்றறப், பாரண வு ம்முப சாந்தப் பரிசிதே. (உ)

அன்ன துரியமே யாத்தும சுத்தியு, முன்னிய சாக்கிரா தி தத் துரியு, மன்னு பரங்காட்சி யாவ துடனுற்றுத், தன்னி ன் வியாத்தித் தனிருப சாந்தமே. (௩)

ஆறு தமைங்கா னவத்தையுள் ளிருந்து, பேறுவ த ன்னை யறிந்தபின் தீர்சத்தி, கூறுத சாக்கிரா தீதக் குருபரன், பேறும் வியாத்தம் பிரரூப சாந்தமே. (௪)

வாய்ந்த வுபசாந்த வாதனை யுள்ளப்போ, யேய்ந்த சிவ மாத லின்சிவா னந்தத்துத், தோய்ந்தறல் மோலச் சுகாநுப வந்தோடே, யாய்ந்ததிற் றீர்க்கை யானதி லைக்கமே. (௫)

பரையின் பரவப ரத்துட னேகமாய்த், திரையின் று கிய தெள்புனல் போலவுந், துரையுணர்ந் தாறு மொக்க வு.

ளார்க்குளோவ், சகரசன் டானானை யற்றகணைக்கிலே. (௬)

ஆ நகூ.

---

## புறங்கூறாமை.

பிறையுட் கிடந்த முயலை யெறிவா, னறைமணி வாட்கொண்டவர்தமைப் போலக், கறைமணி கண்டனைக் காண்குறு வீட்டார், நிறைவறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே. (௧)

கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக், கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப், பெருந்தன்மை பேசுதி நீயோதி நெஞ்சே, யருந்தா வமுதட லாறுசென் றுலே. (௨)

கருவலர் மானக் கருவாயி னின்ற, பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை, மருவலர் செய்கின்ற மாதவ ரொத்தார், றருவலர் கேட்ட தனியும்ப ராமே. (௩)

பிணங்கவும் வேண்டாம் பெருநில முற்றும், பிணங்கியெம் பீசனை யீசனென் றன்னிற், கணம்பதி னெட்டுங் கழலடி காணா, வணங்கெழு நாடியங் கன்புற லாமே. (௪)

என்னிது மென்றுயி ராய விறைவனைப், பொன்னிது மாமணியாய புனிதனை, மின்னிப் பெவ்வுயி ராய விகிர்தனை, யுன்னிது முன்னு முறுவகை யாலே. (௫)

நின்று மிருந்துங் கிடந்து நிமலனை, யொன்றும் பொருள்க ளுரைப்பவ ராகினும், வென்றைம் புலனும் விரைந்து பிணக்கஅத், தொன்று புணருமொருவனு மாமே. (௬)

நன்னெறி வாயுள காயுள கேழுக்கு, மென்னெறி வாய்நிறை யெந்தை பிரான்றனைப், பண்ணெறி வானனைப் பாவித்த மாந்தரா, விண்ணெறி வாளர் விரும்புகின் றுரோ. (௭)

வின்னவ ராலு மறிவரி யான்றனைக், கன்னற வுள்ளே கருதிடிற் காலியிர், லென்றுற வாகமுப் போது மியற்றிப், பண்ணிடிற் றன்னும் பராபர னுமே. (௮)



ஒன்று புலனுட னேழும் பரந்தவன், பின்று னருள்செய்த பேரரு ளாளவன், கன்று மனத்தார்தங் கல்வியு மல்லவன், பொன்றுத போது புனைபுக ழானே. (௯)

போற்றியென் றேனெந்தை பொன்றுன சேவடி, யேற்றியே னென்று மெறிமணி தானகக், காற்றின் விளக்கது காயமயக்குறு, மாற்றலுங் கேட்டது மன்னுகின் றேனே. (௧௦)

தேடிக்கொண் டென்னுள்ளே சேர்தரு நந்தியைப், பூடிபுக் காரு முணர்க்கறி வாரில்லை, கூடிபுக் கேற்றலுற் றேனவன் கோலங்கண், டாடிக்கண் டேனவ னேழுங்கண் டேனே. (௧௧)

ஆவ புகழு மனைக்கரோர் ஞானமுந், தேவ ரிருக்குந் திசைவனை யொன்றுகண், டேமொன் றின்றி யுணர்வுசெய் வார்கட்கு, வானகஞ் செய்யு மறவனு மாமே. (௧௨)

மாமதி யாமதி யாய்நின்ற மாதவர், தூய்மதி யாகுஞ் சடர்பர மானந்தந், தாமதி யாகச் சகமுணச் சாக்கிரத், காமல மற்று ரமைவுபெற் றுரே. (௧௩)

பசமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட், டிசமுற்ற பாச விருளைத் துரந்து, மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே, சிதமுந் தவர்கள் சிவசித்தர் தாமே. (௧௪)

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன், சுத்தாசுத் தத்துடன் றோய்ந்தோ ராதவர், முத்தாம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச், சுத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. (௧௫)

ஆ ௩௦௫.

---

## அஷ்டதளகமலமுக்குணவவத்தை.

உதிக்கின்ற விந்திர னக்கி யியமனுந், துதிக்கு நிருதி வருண னல் வாயு, மதிக்குங் குபேரன் வடதிசை யீச, விதித்தெறன் முழைநிலைத்தநின் றுனே. (௧)

ஒடுக்கிய பூதமோ ரெட்டொடு மாறு, மடுக்கிய மாயா புரியத னுள்ளே, யிருக்கிய நன்றன் னருவினை யூடே, பொருந்திய சோதியை போர்க்கொடு மெய்ந்தே. (௨)

மொட்டலர் தாமரை மூன்றுமா மூன்றினும், விட்டலர் சிந்தனை சோதி விரிசுடர், கெட்டல ருள்ளே யிரண்டல ருள்ளுநிற், பட்டலர் சிந்தநேர் பண்டங் கருவே. (௩)

ஆதே யருவி மகங்குள மொன்றனுட், டூதே செய்தி யினன்னு வண்ணாரும், கூறே குலிமுலைக் கொம்பனை யாளொடும், கேதே யிருக்கும் விருப்பொரு டானே. (௪)

திசைவெட்டுத் தேரெட்டுத் தேவதை வெட்டும், வசைவெட்டு மாய்நின்ற வாதிப் பிரானை, வசைவெட்டு நான்குடன் முன்கு மெண்ணெய்த், முசைவெட்டு முன்னின் றுதிக்கின்ற வாறே. ()

ஏழுஞ் சகலமிப் பட்டுங் கடக்கொட்டுக், வாழும் பகமெனு மருட்டொன் பதி, ஊழி பராபர மோங்கிய பத்தினிற், மூழ்வது வான தனித்தன்மை தானே. (௬)

பல்லூழி பண்பன் பகலோ னிறையவ, னல்லூழி நயத்தினன் மேனின்ற வூழிகள், செல்லூழி யண்டத்துச் சென்றவவ் வூழியு, மவ்வூழி யுச்சியு மொன்றிற் பகவே. (௭)

புரியு முலகினிற் பூண்டவெட் டானை, யிரியுங் களிறொடு தேவர் குழாமும், மரியு மறையு மியங்கும் வெளியும், பரியு மாகாசத்திற் பற்றது தானே. (௮)

ஊறு மருவி யுயர்வரை யுச்சிமே, லாறின்றிப் பாயு மருவிக் குளமொன்றுண்டு, சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப், பூவின்றிச் சூடான் புரிசடை யோனே. (௯

ஒன்று மிரண்டு மொருங்கிய காலத்து, நின்று மிருந்துங் கிடந்து மெம்பல பேசினும், ஒன்று மிருந்து விகிர்தனை நாடிவர், சென்று இருந்துத் திருவுடை யோரே. (௰) ஆடு சாதி



நவாவத்தை நவாபிமானி.

சொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன், னற்பத விராட்டன் பொன் கர்ப்பனவ் யாகிருதன், பிற்பதஞ் சொலிதையன் பிரசா பத்தியன், பொற்புவி சாந்தன் பெருநவி மானியே. (௧)

நவமா மவத்தை நனவாதி பத்தில், பவமா மலங்குணம் பற்றறப் பற்றுத், தவமான சத்திய ஞானப் பொருளில், நவமார் துரியஞ் சொரூபம தாமே. (௨)

சிவமான சிந்தையிற் சீவன் சிதைய, பவமான மும்மலம் பாறிப் பறிய, நவமான வந்தத்தி லைந்தவ போதந், தவமா மவையாகித் தானல்ல வாகுமே. (௩)

முன்சொன்ன வொன்பானின் முன்னுறு தத்துவந், தன்சொல்லி லெண்ணத் தகாவொன்பான் வேறுள, பின்சொல்ல வாகுமிவ் வொன்பான் பேர்த்திட்டுத், தன்செய்த வாண்டவன் றன்னிறத் தானே. (௪)

உகந்தன வொன்பது மைந்து மூலகம், பகர்ந்த பிரானென்றும் பண்பிலே காடு, மகத்தெம் பிரானென்ப னல்லும் பகலும், மிகுந்தனை யவ்வினை யோடறுத் தானே. (௫)

நலம்பல காலத் தொருத்தன நீனம், குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும், பலம்பல பன்னிரு காலகி ளையு, நிலம்பல வாறின வீரமைய லருனே. (௬)

ஆதி பராபர மாகும் பராபர, சோதி பரமுயிர் சொல்லத் தகாது, மோதும் சுமமாயை யோரிரண் டோர்முத்தி, நீதியாம் வேதமொன் பானுட னுதியே. (௭)

தெருக சிக்கை தெளியத் தெளிவித்து, வேறு நரகசுவர்க் கமு மேதினி, யாரும் பிறப்பு முயிர்க்கரு ளால்வைத்தான்,

வேறுந் தெளியார் வினையுயிர் பெற்றதே. (௪)

ஒன்பா னவத்தையு மொன்பா னவயோனி, [illegible] நவமாதி, பொன்பானி னிற்பதோர் [illegible] செய்யமந் சிவமாதல் சித்தாந்த சித்தியே. (௫) ஆ ௩௨௫.

---

சுத்தாசுத்தம்.

[illegible] விரல்விடை, [illegible] விருப்பிட [illegible] பேசி யிருக்கும் பெருமறை [illegible] தாமே. (௧)

கருமங்க ளொன்று [illegible] கருமக், [illegible] பிறவிக், கருவினை யாவது [illegible] கன்மக் [illegible] பருமே (௨)

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள், மாயை மறைய [illegible] மாயை மறைய மறையவல் லார்க், [illegible] கருத்தில்லை தானே. (௩)

[illegible] முறைநிறை [illegible] தன்னைக் குறிப்பினி, [illegible] யாமே. (௪)

காயக் குழப்பனைக் காயநன் [illegible] காயத்தி [illegible] நந்திவந், [illegible] கருத்தறி யாரே. (௫)

[illegible] மாருக மென்பா ரறிவிலார், [illegible] மாயிட மாறு மதிகிலார், [illegible] மாயிட மாறு மதிக்கபின், [illegible] மாமே. (௬)

[illegible] யில்லை யருவிடமத் தருக், [illegible] யில்லை [illegible] செய்வார்க், [illegible] யில்லையா மத்தி [illegible]



[illegible] யருமறை [illegible] (௭)

[illegible] நின்று வனைந்து [illegible] நின்ற தோர் [illegible] தொடங்குங், [illegible] நின்றவர் [illegible] மரிகள், [illegible] டவர்க்கன்றிக் [illegible] (௮)

[illegible] ஆயன ஆவி வெளிவிடுக், [illegible] ஆதி வசதில்லை, [illegible] ஆதி வார்கட்குத், [illegible] ஆயவு மாமே. (௯)

[illegible] வாளா வைத்தது [illegible] வாளா [illegible] திருநாமந், [illegible] வாளா [illegible] சித்தியுந், [illegible] வாளாத் [illegible] சொல்லே. (௰)

பொருளது வாய்நின்ற புண்ணிய [illegible] போற் [illegible] வாய்நின்ற [illegible] வாய்க்கின்ற [illegible] (௰௧)

வினையா [illegible] வினைவ [illegible] வினையாலத் [illegible] விடலுந் தோரர், வினைவிட [illegible] வேறுபோதார், வினையாளர் [illegible] வினைவதி யாரே. (௰௨) ஆ ௩௩௩.

---

மோக்ஷநிந்தை.

[illegible] புண்ணிய [illegible] போர்க, [illegible] தொல [illegible] வருஞால மறிபு, [illegible] செய்திடு வார்களை தோறாக், [illegible] புண்ணத் தொடங்குவ தாமே. (௧)

[illegible] வார்குரு வைத்த [illegible] பேசித் திரிவார்கள், [illegible] செய்த [illegible] வல் லார்வர் பெறிது வாமே. (௨)

புறப்பட்டுப் போகும் [illegible] நெஞ்சைத், [illegible] சிந்தையைத் தெய்வமென் [illegible] [illegible]

பேச்சொன் றிலாமை பேராவினை யாதொன் றிலாமை
யிற், காரண மின்றிய காட்சிக் கதைமைத்தே. (௯)
ஆக ௨௱௯.

மகாவாக்கியம்.

நியதி வாறு மெனநின்ற பேருரை, யாவது நாற்றுமே யெ
னைச் சமைந்தாச், செய சிவமாக்குஞ் சேர்க்கை யேற்று, ளாய
சி வாயனந் தாணுத்தி யாகுமே. (௧)

உயிர்பர மாக வுயர்பர சிவ, னியல் சிவமாக வச்சிவ வே
தத், திரிவிலுஞ் சீராம் பராபர னென்ன, வுரிய வுரையற்ற வோ
மய மாமே. (௨)

வாய்காசி யேபரு மத்தக முச்சியி, லாய்காசி புச்சி முகல
லை யாய்நின்றுந், தாய்காடி யாதிவாக் காதிச் சலாதி, சேய்
கா டொளிபெனச் சிவகதி டைக்குமே. (௩)

அறிவறி யானை யிரண்டு மகற்றிச், செறிவறி வாயெங்கு நி
ன்ற சிவனைப், பிறிவறி யாது பிரானென்று பேணுங், குறியறி
யாதவர் கொள்ளறி யாரே. (௪)

அறிவா றறிவன வப்பு மனலு, மறிவா றறிவன வப்புங் க
லப்பு, மறிவா லிருந்தங் கறிவிக்கி லல்லா, லறிவா னறிந்த வ
றிவறி யோமே. (௫)

அதீதத் துள்ளாகி யகன்றவ னந்தி, யதீதத் துள்ளாகி ய
றிவிலோ னுன்மா, மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றும்,
பதியிற் பதியும் பரவுயிர் தானே. (௬)

அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன், முடிதொழ விச
ய முன்னின் றருளிப், படிதொழு தேபண்டு பாவித்த தெல்லா
ம், கடிதொழக் காணென்னுங் கண்ணுத லானே. (௭)



நின்மல மேனி நிமலன் பிறப்பிலி, யென்னுளம் வந்திவ
னென்னடி யானென்று, பொன்வளர் மேனி புகழ்கின்ற வான
வன், நின்மல மாகென்று நிக்கவல் லானே. (௮)

துறந்துபுக் கொள்ளொளி சோதியைக் கண்டு, பறந்ததெ
ன் னுள்ளம் பணிந்து கிடக்க, மறந்தறி யாவென்னை வானவர்
கோனு, பிறந்து பிறவாம லீங்குவைத் தானே. (௯)

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னு மெய்த்தோற்றத்
தவ்வாய் வந்தக் கரண மகிலமு, மவ்வா யுயிரு மிறையாட்ட
வாட்லாற், கைவாயி லாநிறை யெங்குமெய் கண்டதே. (௧௦)
ஆக ௪௱௬.

---

விசுவக்கிராசம்.

அழிகின்ற சாயா புருடனைப் போலக், கழிகின்ற நீரிற் கு
மிழியைக் காணி, லெழுகின்ற தீயிற் கற்பூரத்தை யொக்க,
பொழிகின்ற வியவுடற் போமப் பரத்தே. (௧)

உடலு முயிரு மொழிவற வொன்றிற், படருஞ் சிவசத்தி
தாமே பரமா, முடலை விட் டிந்த வுயிரெங்கு மாகிக், கடையுந்
தலையுங் கரக்குஞ் சிவத்தே. (௨)

செவிமெய்வாய் கண்மூக்குச் சேரிந் திரியம், விவின் றிய
மன மாதிக ளொத்தங், குவியொன் றிலாமல் விரிந்து குவிந்து,
தவிர்வொன் றிலாத சராசரந் தானே. (௩)

பரனெங்கு மாகிப் பார்த்தற்று நிற்குந், திரனெங்கு மாகி
ச் செறிவெங்கு மெய்தா முரனெங்கு மாயுலகுண்டு வுமிழ்க்
கும், வாமிங்கண் கண்டியான் வாழ்த்தற்ற வாறே. (௪)

அளந்து துரியத் தறிவினை வாங்கி, யுளங்கொள் பரஞ்சக
முண்ட தொழித்துக், கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தா
ல், விளங்கிய வெட்ட வெளியனு மாமே. (௫)

பெருமா, னைப்பேர் வெனமன மொன்றவித் தானே. (௧௪)

மனமது தானே நினைபவல் லார்க்கு, வினையொன்றுங் கூறு
மிருங்காய மேவத், துணிவினி லுதன்பாற் றக்கன செய்திடு பு
விதன் செயலாகும் போதப் புவிக்கே. (௧௫) ஆ. ௪௮௪

---

ஞானிசெயல்.

முன்னை வினைவரின் முன்னுண்டே நீக்குவர், பின்னை வி
னைக்கணுர் பேர்த்தறப் பார்ப்பர்க, டன்னை யறிந்திடுந் தத்து
வ ஞானிக, ளன்மையி லின்புற் றிடலின் றுரே. (௧)

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள், முன்னை வினையி
ன் முடிச்சை யவிழ்ப்பர்கள், பின்னை வினையைப் பிடித்துப் பி
சைவர்கள், சென்னியில் வைத்த சிவனரு ளாலே. (௨)

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளு, மனவாக்கு நே
ர்நிற்கில் வல்வினை மன்று, மனவாக்குக் கெட்டவர் வாதனை த
ன்னுர், தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே. (௩)

ஆ. ௪௧௧.

---

அவாவறுத்தல்.

வாசியு மூசியும் பேசி வகையறுத், தேசி யிருந்து பிதற்றி
ப் பயனில்லை, யாசையு மன்பு மறுமி னறுத்தபி, னீச னிருந்த
விடமெளி தாமே. (௧)

மாடத்து ளானலன் மண்டபத் தானலன், கூடத்து ளா
னலன் கோயிலு ளானலன், வேடத்து ளானலன் வேட்கைவி
ட்டார்நெஞ்சின், மூடத்து ளேநின்று முத்திதந் தானே. (௨)

ஆசை யறுமின்க ளாசை யறுமின்க, ளீசனோ டாயினு மா
சை யறுமின்க, ளாசை படப்பட வாய்வருந் துன்பங்க, ளா
சை விடவிட வானந்த மாமே. (௩)



அவனை பூதங்க ளைந்து முடனே, பவழி செய்கின்ற ப
ற்றற விசெ, விடுவது வேட்கையை மெய்க்கின்ற ஞானந், தொடுவ (௪)
து நம்மைத் தொடர்ந்து மாமே.

உவாக்கட லொக்கின்ற வுயிரும் போல, அவாக்கட லு
ட்பட்டுத் துஞ்சினர் வாறோ, நவாக்கட லுட்பட் டழுந்தினர் (௫)
மன்றோ, தவாக்கட லீசன் றரித்துநின் றானே.

நின்ற வினையும் பிணியுங் கெடுத்துசெய், யன்றெறி யற்றுக்
சுத்தம தாகனும், பின்னைக் கருமமும் பேர்த்தரு ளோர்பெற் (௬)
றத், தன்ற வழுத்தது ஞானிக ளியல்பே.

உண்மை யுணர்ந்துற வொன்றிய முத்தியாம், பெண்ம
யற் கெட்டறப் பேரட்ட சித்தியாந், தின்மையின் ஞானி சிவ
காயங் கைவிட்டால், வன்மை யருட்டா னடைந்தன்பி னா (௭)
றமே.

அவனிய லீசனொன் றன்புற வாயச், சிவனிய லீசனென்
னவ்வமைனும் போதார், பவனிவன் பல்வகை யாயிப் பிறவி, (௮)
புவனிவன் போவது பொய்கண்ட போதே.

கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும், பதிக்கின்ற
வாதிக்கப் பாரக முற்றும், விதிக்கின்ற வைவரை வேண்டா (௯)
கலக, கொதிக்கின்ற காயத்து ளாமொன்று மாமே.

உய்க்குன மென்றீரு பொருள் காண்கிலீர், உந்த மலவிற்
தெளியுறச் சேர்
லக்கின்ற நந்தியைச், சிந்தையில் வைத்துத் (௰)
த்திட்டான், முக்கைப் பிறவிக்கு மூவித் தாமே. ஆ. ௫௧௧.

---

பத்தியுடைமை.

முத்திசெய் ஞானமுங் கேள்வியு மாய்நின்ற, மத்தனை மா
யனை யமரர் பிரானைச், சித்தனைச் சாய்நெறி யாய்நின்ற சோ

நியைப், பத்தர் பரகம் பரபதி தானென்றே (௧)

அடியா ரடியா ரடியார்க் கடிமைக், கடியனாய் நல்கிட்
டடிமையும் பூண்டிட், டடியா ரருளா லவனடி கூட, வடியா
னிவ்வென் றடிமைகொண் டானே. (௨)

நீரிற் குளிரு நெருப்பினிற் சுட்டிடு, மாரிக் கடனந்தி யா
மாரறிபவர், பாரிற் பயனுறும் பார்க்கிலு சேரிய, ஞானப்பா
தி யாகிநின் றானே. (௩)

ஒத்தவ கேளு மறியா வொருவனை, யத்த னிருத்திட்
டார்த்தி வார்சொல்லப், பத்தர்தம் பத்தியிற் பார்படி லல்லது,
மூர்த்தியை யார்சொல்ல முந்தகின் றாரே. (௪)

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல, ஞான்கன்றாய் கா
டி யழைத்தேனென் னுதனை, வான்கன்றுக் கப்பாலாய் நின்ற
மறைப்பொரு ளூன்கன்று ளூடிவந் தன்புறுந் தானே. (௫)

பெத்தத்துந் தன்பணி யில்லை பிறத்தலான், முத்தத்துந்
தன்பணி யில்லை முறைமையா, லத்தற் கிரண்டு மருளா லளித்
தலாற், பத்திப்பட் டோர்க்குப் பணியொன்று மில்லையே. (௬)

பாவையிற் கர்ப்பமும் பாம்பும்பொய் யாகக், குரவன் சிலம்
பக் குளிர்வரை போதி, நாவா மலர்கொண்டு நந்தியை யல்லா
லிறைவனென் றென்மன மேத்தகி லாவே. (௭)

உறுதுணை நந்தியை யும்பர் பிரானைப், பெறுதுணை செய்து
பிறப்பறுத் துய்மின், செறிதுணை செய்து சிவனடி சிந்தித், துறு
துணை யாயங்கி யாகிநின் றானே. (௮)

வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற, தானவர் முப்பு
ரஞ்செற்ற தலைவனைக், கானவ னென்றுங் கருவரை யானெ
ன்று, மூனத னுள்ளனின்றங் கொன்றுபட் டாரே. (௯)

நிலைபெறு கேடென்று முன்னே படைத்த, தலைவனை நா



டித் தயங்குமென் னுள்ள, மலையுளும் வானகத் துள்ளும் புறத்
து, மலையுறு முள்ளத்து மூழ்கின் றானே. (௰) ஆ. [illegible]

முத்தியுடைமை.

முத்தியி லத்தன் முழுத்தவ ருட்பெற்றுத், தத்துவ சுத்தி
க் தலைப்பட்டுத் தன்பணி, மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட
மெய்யுண்மைப், பத்தியி னுற்றோர் பரானந்த போதரே. (௧)

வளங்கனி தேடிய வன்றுட் பாவை, யுளங்கனி தேடி யு
ழிதரும் போது, களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி, நலங்
கொண்ட நால்வரு நாடிகின் றாரே. (௨) ஆ. [illegible]

சோதனை.

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத், தம்மா னடி
நந் தருட்கூட லாடிநேர், மெய்ம்மாய மும்விட்டுத் தெம்மைத் தா
ந்திட்டுச், சும்மா விருந்திடஞ் சோதனை யாகுமே. (௧)

அறிவுடை யானரு மறையுறை யுள்ளோ, னெறிவுடை யான்மி
கு தேவர்க்குத் தேவன், பொறியுடை யான்புல னைந்துந் தடக்
க, குறியுடை யானொடுங் கூடுவ னானே. (௨)

அறிவறி வென்றங் கரற்று முலக, மறிவறி யாமையை யா
ரு மறியா, ரறிவறி யாமை கடந்தறி வாள, லறிவறி யாமை ய
கிய வாறே. (௩)

குறியாக் குறியினிற் கூடாத கூட்டத், தறிவா வறிவி லெ
ழுந்தேக சித்தமாய், நெறியாம் பராநந்தி நீடுமொன் றுஞ்,
செறியாச் செறிவே சிவமென லாமே. (௪)

காலினி லூறுங் கரும்பினிற் கட்டியும், பாலினுள் நெய்
யும் பழத்துள் ளிரதமும், பூவினு ளுற்றமும் போலுள னெம்பி
றை, காவல னெங்குங் கலந்துநின் றானே. (௫)

விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப், பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல, விருப்பர் மனத்திடை மெய்கள் பிரானுர், நெருப்புரு வாகி நிகழ்ந்து நிறைந்தே. (௬)

நந்தி பெருமா னடுவுள வியோமத்து, வந்தெ னகம்படிக் கோயிற்கொண் டான்கொள்ள, வெந்தைவந் தானென் றெழுந்தே னெழுதலுஞ், சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. (௭)

தன்மைவல் லோனைத் தவத்து ளொளித்தினை, நன்மைவல் லோனை நவிலுறை நந்தியைப், புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின், பன்மையி னும்மைப் பரிசுசெய் வானே. (௮)

தொடர்ந்துநின் றானென்னைச் சோதிக்கும் போது, தொடர்ந்துநின் றானல்ல நாதனு மங்கே, படர்ந்துநின் றாதிப் பராபரனெந்தைக், கடந்துநின் றவ்வழிக் காட்டுகின் றானே. (௯)

அவ்வழி காட்டு மமரர்க் கரும்பொரு, ளிவ்வழி தந்தைதா யாய்க்கேளி யாரொக்குஞ், செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடி, யிவ்வழி நந்தி யியல்பது தானே. (௰)

எறிவது ஞானத் துறைவா ளுருவி, யறிவது நோக்கிய வாண்டகை யானைச், செறிவது தேவர்க்குத் தேவர் பிரானைப், பறிவது பல்கணப் பற்றுவிட் டாரே. (௧௧)

ஆதிப் பிரான்றந்த வாளங்கைக் கொண்டபின், வேதித்த வென்னை விலக்கவல் லாரில்லை, சோதிப்ப னங்கே சிவபடா வன்னை, மாதிக்கட் டெய்வ மவனிவ னாமே. (௧௨)

அந்தக் கருவை யருவை வினைசெய்தற், பந்தம் பணியச்சம் பல்பிறப் பும்வாட்டிச், சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச் சோதனை, சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே. (௧௩)

உளையற்ற கொன்றை புனைந்தா னெனக்குக், களையற் றெழுந்த கலைவேட் டறுத்துத், திளைபொருந்த வென்னுட னிங்கா திருத்திப், புளையற்ற வென்னாட் புகுந்தற் பரனே. (௧௪)



ஆக அதிகாரம்-௨௨-ம்-திருமந்திரம்-௩௨௭.

எட்டாந்தந்திரமுற்றும்.

ஆக சிறப்புப்பாயிரமுட்பட-அதிகாரம்-௨௧௨.

கூடியதிருமந்திரம்-௨௬௪௯.

## ஒன்பதாந்தந்திரம்.

### குருதரிசனம்.

பலியு மலியும் பரந்து புகையு, மொலியுமெம் மீசன் றனைச் சென்றே யுரைக்கக், குலியுங் குருபடங் கண்டவர் தாம்போய்த், தெளிரு மலரடிச் சார்ந்துநின் றாரே. (௧)

இவனில்லை மல்ல தவனுக்கு மில்லை, யவனுக்கும் வேறில்ல முண்டா வறியி, னவனுக் கிவனில்ல மென்றென் றறிந்து, மவனைப் புறம்பென் றரற்றுகின் றாரே. (௨)

காடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின், கூடுஞ் சிவனது சொய்மலர்ச் சேவடி, தேட வரியன் சிறப்பிலி யெம்பிறை, யோடு முலகுயி ராகிநின் றானே. (௩)

இயம்புவ னாசனத் தோடு மலையு, மியம்புவன் சித்தக் குகையு மிடமு, மியம்புவ னாகாரத் தோடு வளமு, மியம்புவ னீரா திருவிலத் தோர்க்கே. (௪)

முகம்பீட மாமட முன்னிய தேய, மகம்பர வர்க்கமே யாசில்செய் தாட்சி, யகப்பர மாதன மெல்லெலாஞ் சிவிகை, சிரங் கற்குணை யாதாரந் தானே. (௫)

அகமுக மாம்பீட மாதார மாகுஞ், சகமுக மாஞ்சத்தி பாதன மாகுஞ், சகமுக மாக்கெய்ய மேசிய மார்கு, மகமுக மாய்ந்த வறிவுடை யோர்க்கே. (௬)

மாயை யிரண்டு மறைக்க மறைவுறுங், காயமோ ரைந்து
ங் கழிபத்தா றுகியே, தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்
தா ளாய்பவர் ஞானாதி மோனத்த ராமே. (௭)

---

ஞானகுரு தரிசனம்.

ஆறெழு மூப்பது மங்கே யடங்கிடுங், கூறக் குருபரன் கு
ழைந்து தந்திடுஞ், வேறெனவெய்த வோர வளித்திடும், பேறு தவா
னத்தின் பேறு பெருகவே. (௧)

அரியங்கன் மூன்றுங் கடந்தொளிர் சோதி, யரிய பரசிவ
மியானவ்வு மாகி, விரிவுறு விவற விட்ட நிலத்தே, பெரிய குரு
பதம் பேசவொண் ணாதே. (௨)

சிவனை நந்தி யடிச்சென் றடைபெற்றேன், வாயனை நந்தி
யை வாழ்த்தவென் வாய்பெற்றேன், காயனை நந்தியைக் காண
வென் கண்பெற்றேன், சேயனை நந்திக்கென் சிந்தைபெற் றே
னே. (௩)

கருடன் உருவங் கருதுமளவிற், பருவிடந் தீர்ந்து பயங்கெ
டுமாபோல், குருவின் உருவங் குறித்தவப் போதே, திரிமலந் தீ
ர்ந்து சிவனவ னாமே. (௪)

அன்னை விருப்பிட மாறு மறிவிலர், தன்னை விருப்பிட மாய்
ந்துகொள் வார்களுக், கன்னை வழிவந்த புன்னை யமர்ந்திடு,
மன்னைலக் காணி லவனவ னாமே. (௫)

தோன்ற வறிதலுந் தோன்றித்தோன் றுமையு, மான்றவ
றிவு மறிவை வாதிகளு, மூன்றனை நீங்குந் துரியங்கன் மூன்றற
வான்றிய நந்தி பரமோனத் தானே. (௬)

சந்திர பூமிக் குடன்புருவத்திடைக், கந்த மலரி னிரண்
டுகீழ்க் கன்னியும், பந்த மிலாத பளிங்கி னுருவினள், புந்தியு



ந்த பரங்குரு பற்றே. (௭)

டனம்புகுந் தானவ ரேறு மதுவு, நிலம்புகுந் தானொடு வா
னிலந் தாங்கிச், சினம்புகுந் தான்றிசை யெட்டு நடுங்க, வனம்
புகுந் தானூர் வடக்கென்ப தானே. (௮)

தானான வண்ணமுங் கோசமுஞ் சார்தருந், தானும் பா
ச வண்ணமெனத் தக்கன, தானான சோடச மார்க்கந்தா னில்
லுற்று, முன்னான் கொங்குமும் மேவுள்ள தானே. (௯)

மருவிப் பிரியா யாவெங்கள் மாநந்தி, யுருவ நினைக்கநின்
றன்னோ யுருக்கும், கருவிற் கரந்துள்ளங் காணவல் லார்க்கு
ருவினை யஞ் சோரு மருவா கத்தே. (௧௦)

தலைப்படலாமெங்க டந்தையன் றன்னைப், பலைப்படு பாச
மந்தவறத் திட்டு, நிலைப்பெற நாடி நினைப்பற வுள்கிற், றலைப்
படலாகுந் தருமமுந் தானே. (௧௧)

நினைக்கி னினைக்கு நினைப்பவர் தம்மைச், சுனைக்குள் வி
ளைவார்ச் சோதிய னாகி, நினைப்பினைத் தன்ன சிறைமைய
றிவுங், கலந்த மனத்திடைத் தாருபர்த் தாரே. (௧௨)

தலைப்படுங் காலத்துத் தத்துவன் றன்னை, விலக்குறின்
மேலை விதியென்று சொல்க, வலைத்துறை காய்நின்ற வாதிப்
பானை, நினைப்புறு வார்பத்தி தேடிக்கொள் வாரே. (௧௩)

தகழ்வொழிந் தாரவர் தத்தினை யுள்கி, நிகழ்வொழிந் தா
ம் பிரானொடுங் கூடித், திகழ்வொழிந் தார்சிவங் கண்டிடு
வார்களே, புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றானே. (௧௪)

வங்க மரகத மாணிக்க ரேகைபோற், சக்தி மாமொழிச்
குரு சன்மார்க்கம், மிக்க விரேகையி லாடத்தின் மூலத்தே,
தரச் சோதியுட் சோதியு மாமே. (௧௫)

உள்ளும் வாயு முடனூ ருமிருமாய்க், கள்ளுமை யோக
டவு விருப்பது மக்கள நீரொடு காலெனு மாமாய், வி

ன்று மின்றி வெளியான மேனியே. (௧௩)

பாச பதியென்று பார்முழு தெல்லாம், பரிவ தறிவினை கடக்கும் பதியாற், பெரிய பதிசெய்து பின்னு மடியார்க், குரிய பதியும்பா ராக்கின் றானே. (௧௪)

அம்பர நாத னகலிடந் தின்பொழுஞ், செம்பர மல்லது தாமறி யோமென்ப, ரும்பருள் வானவர் தானவர் கண்டில, ரெம்பெரு மானருள் பெற்றிருந் தாரே. (௧௫)

கோவணங் கும்படி கோவண மாகிப்பின், நாவணங் கும்படி நந்தி யருள்செய்தான், றேவணங் கோமினிச் சித்தந் தெளிந்தனம், போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே. (௧௬)

ஆ. ௨௮.

---

## பிரணவசமாதி.

தாரப் பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை, பாரித்த சூக்கும மேலைச் சொரூபப்பெண், ணூறித்த முத்திரை யாஞ்சத்தி சூக்கும, மேலைப் பிரணவம் வேதாந்த வித்தே. (௧)

ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி, யோமெனு மோங்காரத் துள்ளே யுருவரு, வோமெனு மோங்காரத் துள்ளே பலபேத, மோமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே. ()

ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்க, ளோங்காரத் துள்ளே யுதித்த சராசர, மோங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன, வோங்கார சீவ பரசிவ ரூபமே. (௩)

வருக்கஞ் சுகமாம் பிரமமு மாகும், மருக்கஞ் சராசர மாகு முலகிற், றருக்கிய வாதார மெல்லாந்தன் மேலே, யருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந் தோர்க்கே. (௪)

மலையு மலேருபல மருள்வன வாவன, நிலையிற் சரிகைக்



தீப தெரியார், நலமுங் குலமுந் தவஞ்சித்த மாகும், நலமுஞ் சன்மார்க்கத் துபதேசந் தானே. (௫)

சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ்சன் மார்க்கிகட், காடிய வீராதி யந்தமு மீரொழிற், கூடிய வந்தமுங் கோதண்ட முங்கடந், தேறியே ஞானநே யாந்தத் திருக்கவே. (௬) ஆ. ௩௨.

---

## ஒளி.

ஒளியை யறியி லுருவு மொளியு, மொளியு முருவ மறியி லுருவா, மொளியி லுருவ மறியி லொளியே, யொளியு முருக வுடனிருந் தானே. (௧)

புகலொளி தாரும் புவனங்க ளெட்டு, மகலொளி தாயிரு ளாசற வீசும், புகலொளி செய்தது மத்தா மறையிலே, மிகலொளி செய்தெம் பிரானிருந் தானே. (௨)

விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன், துளங்கொளி பெற்றதே பேரொளி வேறு, தற்றது சோதி யருள, வளங்கொளி செய்து கலந்துநின் றானே. (௩)

விளங்கொளி யீசன் பிறப்பொன்று மில்லி, துளங்கொளி ஞாயிறுந் திங்களுங் கண், வளங்கொளி யங்கியு மற்றைக்க ணேற்றி, விளங்கொளி செய்கின்ற மெய்காய மாமே. (௪)

மேலொளி கீழதன் மேவிய மாருதம், பாலொளி யங்கி பரந்தொளி யாகாச, நீலொளி செய்து நெடுவிசும் பொன்றிலு, மேலொளி யைந்து மொருங்கொளி யாமே. (௫)

மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி, பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி, துன்னிய வாறொளி தூய்மொழி நாடோறு, முன்னிய வாறொளி யொத்தது தானே. (௬)

விளங்கொளி மின்னொளி யாகிக் கறுத்து, துளங்கொளி யீ

சனைச் சொல்லுமெப் போது, முளங்கொளி மூலமடைநின் றுயி
ர்க்கின்ற, வளங்கொளி யெங்கு மருவிநின் றானே. (எ)

விளங்கொளி யவ்வொளி யவ்விருண் மன்னும், துளங்கொளி
யான்றெழு வார்க்கு மொளியா, வளங்கொளி யாரமு தா
கஞ் சாருங், களங்கொளி யீசன் கருத்த தானே. (அ)

இலங்கிய தெவ்வொளி யவ்வொளி யீசன், றுலங்கொளி
போல்வது தூங்கருட் சத்தி, விளங்கொளி மூன்றே விரிசுடர்
தோன்றி, யுளங்கொளி யுள்ளே யொருங்குகின் றானே. (௯)

உளங்கொளி யாவதென் னுண்ணின்ற சிவன், வளங்கொ
ளி யாநின்ற மாமணிச் சோதி, விளங்கொளி யாய்மின்னி வி
ண்ணொளி தோங்கி, வளங்கொளி யாயத்து ளாகிநின் றானே. ()

விளங்கொளி யாய்நின்ற விகிர்த னிருந்த, வளங்கொளி
பாசத்துட் டங்கிருட் சேராக், களங்கிரு ண்டமே கன்னுத
லாட, விளங்கொளி யுன்மனத் தொன்றிநின் றானே. (கக)

போது கருங்குழற் போனவர் தூதிடை, யாதி பரத்தை
யமரர் பிரானெனுந், சோதியு மண்டத்தப் பாலுற்ற தூவெ
ளி, நீதியி னல்லிரு ணீக்கிய வாறே. (கஉ)

உண்டில்லை யென்னுமுலகத் தியல்வது, பண்டில்லை யென்
னும் பரங்கதி யுண்டுகொல், கண்டில்லை மானுடர் கண்ட கருத்
துறில், விண்டில்லை யுள்ளோ விளக்கொளி யாமே. (கங)

சுடருற வோங்கிய வொள்ளொளி யாங்கே, படருறு கா
ட்சிப் பகலவ னீச, னடருறு மாயையி னுயிருள் வீசி, துடனுறு
ஞானத் தாயிய னுமே. (கச)

துளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்ற, ளிபவளச் செம்
பொன் னுதிப் பிராணங், களிபவ ளத்திலங் காரிரு ணீங்கி,
யொளிபவ ளத்தெங்கே ருடசனின் றானே. (கரு)

ஈசனின் றானிமை யோர்களின் றார்நின்ற, தேசமொன்



றின்றித் திகைத்திழைக் கின்றனர், பாசமொன் றாகப் பழவி
னைப் பற்றற, வாசமொன் றாமலர் போன்றது தானே. (கசு)

தானே யிருக்கு மவற்றிற் றலைவனுந், தானே யிருக்கு மவ
னென நண்ணிடும், வானு யிருக்குமிம் மாயிரு ஞாலத்துப், பா
லு யிருக்கப் பரவலு மாமே. (கஎ) ஆ. உக.

---

தூலபஞ்சாக்கரம்.

ஐம்ப தெழுத்தே யனைத்து வேதங்களு, மைம்ப தெழுத்
தே யனைத்தாக மங்களு, மைம்ப தெழுத்தி னடைவை யறிந்த
பி, னைம்ப தெழுத்தே யஞ்செழுத் தாமே. (க)

அகார முதலாக வைம்பத்தொன் றாகி, யுகார முதலாக
வோங்கி யுதித்து, மகார விறுதியாய் மாய்க்தமாய்த் தேறி, ச
கார முதலாகு நந்தியின் னாமமே. (உ)

அகாதி யீரெண் கலந்த பரையு, முகாதி தன்சத்தி யுள
ளொளி யீசன், சிகாதி தான்சிவ வேதமே கோண, நகாதி
தான்மூல மந்திர னல்லனே. (௩)

வாயொடு கண்ட மிதய மருவுந்தி, யாய விலிங்க மவற்றின்
மே லவ்வாய், தூயதோர் துண்ட மிருந்த நகுஞ்சொல்
லை, லாயத்தி னுள்ளங்கோ டாமெழுத் தந்தமே. (௪)

கிரணங்க ளேழுங் கிளர்ந்தெரி பொங்கி, கரணங்கள் வி
ட்டுயிர் தானெழும் போது, மரணத்தை வென்ற வுயிர் மாற்றிடும்
போது, மரணத்தைக் கட்டுவ தஞ்செழுத் தாமே. (௫)

ஞாயிறு திங்க ளவின்றெழு காலத்தி, னாயுறு மந்திர
மாறு மதிகிலர், சேயுறு கண்ணை திருவெழுத் தஞ்சையும், வா
யுற வோதி வழுத்தலு மாமே. (௬)

தெள்ளமு தூறச் சிவாய நமவென்று, வுள்ளமு தூறவொ
ருக்க நினைத்திடும், வெள்ளமு மாறல் விரும்பியுண் ணுதவார்,
வள்ளியர் நீர்போற் சுழல்கின்ற வாறே. (எ)

குருவழி யாய குணங்களி னின்று, கருவழி யாய கணக்கை யறுக்க, வருவழி மான மறுக்கவல் லார்கட், கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. (௮)

வெறிக்க வினைத்துயர் வந்திடும் போது, செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதுங், குறிப்பது வுன்னிற் குரைகழல் கூட்டுங், குறிப்பறி வான்றவங் கோனுரு வாமே. (௯)

நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று, துஞ்சும் பொழுதுந் துணைத்தாள் சரணென்று, மஞ்சு தவழும் வடவரை மீதுறை, யஞ்சி னிறைவ னருள்பெற லாமே. (௰)

பிரான்வைத்த வைந்தின் பெருமை யுணரா, திராமாற்றுஞ் செய்வார்கொ லேழை மனிதர், பராமுற்றுங் கீழொடு பல்வகை யானும், மராமுற்றுஞ் சூழ்ந்த வகையிடந் தானே. (௧௧)

ஆ ௬௦.

## சூக்குமபஞ்சாக்கரம்.

எளிய வாதுசெய் வாரெங்க ளீசனை, யொளியை யுன்னி யுருகு மனத்தராய்த், தெளிய வோதிச் சிவாய நமவென்னுங், குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே. (௧)

சிவன்சத்தி சீவன் செறுமல மாயை, யவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச், சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர, வவஞ்சேர்த்த பாச மணுககி லாவே. (௨)

சிவனரு ளாய சிவன்றிரு நாமஞ், சிவனரு ளான்மாத் திரோத மலமாயை, சிவன்முத லாகச் சிறக்கு நிரோதம், பவம தகன்று பரசிவ னாமே (௩)

வோதிய நமமல மெல்லா மொழித்திட்டவ், வாதி தனைவிட் டிறையருட் சத்தியாற், றீதற் சிவஞான யோகமே சித்திக்கு, மோதாஞ் சிவாய மலமற்ற வுண்மையே. (௪)

சமாதி யறுதி திரோதாயி யகலத், தமாதிய தாய்நிற்கத்



தானந்தத் தற்றுச், சமாதித் துரியந் தமதாக மாவே, சமாசி சமாதி சிவமாத வெண்ணவே. (௫)

அருட்டரு மாயமு மத்தனுந் தம்மி, லொருவனை யின்றவ னொன்றுய மாயை, நிரிமல நீங்கிச் சிவாயவென் றோது, மருவினை நீப்பது மவ்வெழுத் தாமே. (௬)

சிவசிவ வென்றே தெளிகிலா ரூமர், சிவசிவ வாயுந் தெரிக்கின் றடங்கச், சிவசிவ வாயத் தெளிந்துள் ளோர்கள், சிவசிவ வாருந் திருவரு ளாமே. (௭)

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர், சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ், சிவசிவ வென்றிடத் தேவரு மாவர், சிவசிவ வென்னச் சிவகதி தானே. (௮)

நமவென்னு நாமத்தை நாவி லொடுக்கிச், சிவவென்னு நாமத்தைச் சிந்தையுள் ளேற்றிப், பவமது தீரும் பரிசும தற்றால், லவமதி தீரு மறும்பிறப் பன்றே. (௯) ஆ ௬௯.

## அதிசூக்குமபஞ்சாக்கரம்.

சிவாய நம்மெனச் சித்த மொருக்கி, யவாய மறவே யடிமைய தாக்கிச், சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை, யவாய் கெடநிற்க வானந்த மாமே. (௧)

செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புறம், மஞ்சன வும்முறை யேறி வழிகொண்டு, துஞ்சு மவன்சொன்ன காலத் திறையினை, நெஞ்சென நீக்கா நினைபெற லாகுமே. (௨)

அங்கமு மாகம வேதம தோதினு, மெங்கள் பிரானெழுத் தொன்றறைந் திருப்பது, சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதிக்கா, ரங்கரை சேர்க்கு மருங்கல மாமே. (௩)

பழுத்தன வைந்தும் பழமறை யுங்கோ, விழித்தங் குறங்கும் வினையறி வாரில்லை, யெழுத்தறி வோமென் றுரைப்பார்க ளேதும், மொழுத்தை யழுத்த மெழுத்தறி யாரே. (௪) ஆ ௭௩.

திருக்கூத்துத்தரிசனம்.

எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசத்தி, யெங்குஞ் சிதம்
பர மெங்குந் திருநட்ட, மெங்குஞ் சிவமா யிருத்தலா லெங்
கெங்குந், தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. (௧)

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச், சொற்பத மா
மந்தச் சுந்தரக் கூத்தனைப், பொற்பதிக் கூத்தனைப் பொற்
றில்லைக் கூத்தனை, யற்புதக் கூத்தனை யாரறி வாரே. (௨)

சிவானந்தக்கூத்து.

தானந்த மில்லாச் சதானந்த சத்திமேற், றேனுந்து மா
னந்த மாநடங் கண்டீர், ஞானங் கடந்து நடஞ்செய்யு நம்பிக்
கு, கானந்தக் கூத்தாட வாடரங் கானதே. (௩)

ஆனந்த மாடரங் கானந்தம் பாடல்க, ளானந்தம் பல்லி
ய மானந்த வாச்சிய, மானந்த மாக வகில சராசர, மானந்த
மானந்தக் கூத்துகந் தானுக்கே. (௪)

ஒளியாம் பரமு முளதாம் பரமு, மளியார் சிவகாமி யா
குஞ் சமயக், களியார் பரமுங் கருத்துறை யந்தத், தெளிவாருஞ்
சிவானந்த நட்டத்தின் உத்தியே. (௫)

ஆன நட்டமைந் தகள சகளத்த, ஞான நடமாடி யைந்தொ
ழிற்றர, வான செழுஞ்சுடர் ஞானத் தொழிற்செய்தே, தேன்
மொழி பாகன் றிருநட மாமே. (௬)

பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட, மூதா
ண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட, நாதாண்ட வம
க்கரு மத்தாண்ட தற்பரத், தேகாந்த மாம்பிர மாண்டத்
தென்பவே. (௭)

வேதங்க ளாட மிகுவா கமமாடக், கீதங்க ளாட கிளர
ண்ட மேழாடப், பூதங்க ளாடப் புவன முழுதாட, நாதங்கொ



ண்டாடினான் ஞானானந் தக்கூத்தே. (௮)

பூதங்க ளைந்திற் பொறியிற் புலனைந்தில், வேதங்க ளை
ந்தின் மிகுமாக மந்தன்னி, லோதுங் கலைகால மூழி யுடனண்ட
ப், போதங்க ளைந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே. (௯)

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர், மூவர்க ளாதியி
ன் முப்பத்து மூவர்கள், தாபதர் சத்தர் சமையஞ் சராசரம்,
யாவையு மாடிடு மெம்மிறை யாடவே. (௧௦)

சுந்தரக்கூத்து.

அண்டங்க ளேழினுக் கப்புறத் தப்பா, லுண்டென்ற சத்
தி சதாசிவத் துச்சிமேற், கண்டங் கரியான் கருணை திருவுருக்,
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே. (௧௧)

தொருகோட்டி பாண்டங் கோடிசெங் கார, நடமெட்டோ
டைந்தாறு நாடியு ளுபிக், திட்டமுற் றெழுந்தேவ தாருவந் தில்
லை, வட்டமுற்ற மாவன மன்னவன் றானே. (௧௨)

பரமாண்டத் தூடே பராசத்தி பாதம், பரமாண்டத் தூ
டே படரொளி யீசன், பரமாண்டத் தூடே படர்தரு நாத
ம், பரமாண்டத் தூடே பரனட மாமே. (௧௩)

அங்குச வென்ன வெழுநாதக்கம் போதத்திற், றங்கிய
தோர்த்தி யெனுந்தாள வொத்தினிற், சங்கரன் மூலநா டிக்குட்
டித்தாடற், பொங்கிய காலம் புகும்போக மில்லையே. (௧௪)

ஆனந்தி யாடிப் பின்னவக் கூத்தாடிக், கானந்தி யாடிக்
கருமத்தில் நீத்தாடி, மோனச் சுழியு ளாடி முடிவில்லா, ஞா
னத்த னாடி முடித்தானென் னுதே. (௧௫)

சத்திக ளோக்குஞ் சிவபோக நாவேக்க, மூர்த்திக ளெட்டு
முகலாய் புகமெட்டுஞ், சித்திக ளெட்டுஞ் சிவபதந் தானெட்
டுஞ், சத்திக ளெட்டுமசன் றன்னட மாமே. (௧௬)

மேகங்க ளேழும் விரிகடற் றீவேழுந், தேகங்க ளேழுந்

சிவபாற் கணேமூர் தாகங்க ளேழுஞ் சாக்கிரா தீதமேழு, மா
யின்ற நந்தி யடிக்கீ ழடங்குமே. (௧௭)

---

பொற்பதிக்கூத்து.

தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியி, லற்புத மான
கோ ரஞ்ச முகத்தினு, ளொப்பில்பேரின்பத் துபய வுபயத்து
ட் டற்பரா னின்று தனிநடஞ் செய்யுமே. (௧௮)

அடியா ரரனடி யானந்தங் கண்டோ, ரடியா ரானவ ர
த்தரு ளுற்றோ, ரடியார் பவரே யடியவ ராமா, லடியார்பொ
ன் னம்பலத் தாடல்கண் டோரே. (௧௯)

அடங்காத வென்னை யடக்கி யடிவைத், திடங்காண்ப ரா
னந்தத் தேயென்னை யிட்டு, நடந்தான் செயுநந்தி நன்ஞானக்
கூத்தன், படந்தான்செய் துள்ளுட் படித்திருந் தானே. (௨௦)

உம்பரிற் கூத்தனை யுத்தமக் கூத்தனைச், செம்பொற் றிரு
மன்றுட் சேவகக் கூத்தனைச், சம்பந்தக் கூத்தனைத் தற்பரக்
கூத்தனை, யின்புற நாடியென் னன்பிலவைத் தேனே. (௨௧)

மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக் கூத்தனைப், பூணாற்ற
மன்றுட் புரிசடைக் கூத்தனைச், சேணுற்ற சோதிச் சிவானந்
தக் கூத்தனை, யாணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே. ()

விழுமும் வெருவும் விழுமெழு மெய்ச்சோருந், தம்மையுந்
தாமறி யார்கள் சதிர்கெடுஞ், செம்மை சிறந்த திருவம் பலத்
துள், எம்மலர்ப் பொற்பாதந் தன்புனைப் பார்கட்கே. ()

தேட்டறுஞ் சிக்கந் திகைப்பறும் பேட்டத்தன், வாட்ட
ங் காய்பூந்தி யாகி வருப்புல, ஓட்டறு மாசை யறுமுளத்
தக, நாட்ட முழக்குறு நாடகங் காணவே. (௨௪)

காளிபோ டாடிக் கனகா சலத்தாடிக், கூளியோ டாடிக்
குவலயத் தேயாடி, நீடிய நீர்தீக்கால் நீள்வா னிடையாடி, நா



ளுற வம்பலத் தேயாடி னானே. (௨௫)

மேருநடு நாடி மிக்கிடை பிங்கலை, கூருமிவ் வானின் இலங்
கைக் குறியுறுஞ், சாருந் திலைவனத் தண்மா மலயத்து, ஏறு
ஞ் சுழுனை யிவைசிவ பூமியே. (௨௬)

பூதல மேருப் புறத்தான தெக்கணம், ஓதும் இடைபிங்க
லைபொன் சுழுனையாம், பாதி மதியோன் பயிற்றிரு வம்பல,
மேதினிப் பூரணந் தெக்கினி லீதே. (௨௭)

---

பொற்றில்லைக்கூத்து.

அண்டங்க ளோரேழு மம்பொற் பதியாகப், பண்டையா
காசங்க ளைந்தும் பதியாகத், தெண்டிலிற் சத்தி திருவம் பலமா
கக், கொண்டு பரஞ்சோதிக் கூத்துகந் தானே. (௨௮)

குராவந்த ரேகையாய்க் கூர்ந்து குணமாய், விராவந்த மு
ற்றித் தென்றிசை சேர்ந்து, புராசந்த போகமும் புணர்வு
க் காணு, நிராநந்த மாகி நிருத்தஞ்செய் தானே. (௨௯)

ஆதி பரனாட வங்கைக் கனலாட, வோதுஞ் சடையாட
வன்மத்த மூன்றாட, பாதி மதியாடப் பாரண்ட மீதாட, நா
தமோ டாடினான் னாதாந்த நட்டமே. (௩௦)

குப்பிட வம்பலத் தாடிய கோனட, மப்பர மானமலா
ண்ட நட்டமாஞ், செப்பரு மாகுஞ் சிவலோகஞ் சேர்ந்து
ற்று, வம்பர ஞானமு மாகத்தி யுண்மையே. (௩௧)

மேதினி மூவேழ் மிகுமண்ட மோரேழு, சாதக மாகுஞ்
சமயங்க ளாற்றெட்டு, காதமொ ரைந்து கடானந்த நாற்பதப்,
பாதியோ டாடிப் பரவிரு பாதமே. (௩௨)

இடையிங் கலையிம வானோ டிலங்கை, நடுநின்ற மேரு ந
டுவாஞ் சுழுனை, கடவுந் தில்லைவனங் கைகண்ட மூலம், படர்
வொன்றி யென்னும் பராமாம் பரமே. (௩௩)

ஈருன கன்னி குமரியே காவிரி, வேறு நவதீர்த்த மிக்குள வெற்பேழுள், பேறுள வேதா கமமே பிறத்தலான், மாறுக தென்றிசை வையகஞ் சுத்தமே. (௫௩)

நாதத் தினிலாடி நாற்பதத் தேயாடி, வேதத்தி லாடித் தழலந்த மீதாடிப், போதத்தி லாடிப் புவன முழுதாடித், தீதற்ற தேவாதி தேவர் பிரானே. (௫௪)

தேவரோ டாடித் திருவம் பலத்தாடி, மூவரோ டாடி முனிசனத் தோடாடிப், பாவினு ளாடிப் பராசத் தியிலாடிக், கோவினு ளாடிடுங் கூத்தப் பிரானே. (௫௫)

ஆறு முகத்தி லதிபதி நானென்றுங், கூறு சமயக் குருபர னானென்றுந், தேறினர் தெற்குத் திருவம் பலத்துளே, வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானே. (௫௬)

அம்பல மாடரங் காக வதன்மீதே, யெம்பர னாடு மிருதாளி னொளி, யும்பர மானந்த நாதத் தருளையுண், டம்பத மாய்நின்று தாண்டவந் தருளுமே. (௫௭)

ஆடிய காலு மதிற்சிலம் போசையும், பாடிய பாட்டும் பலவான நட்டமுங், கூடிய கோலங் குருபரன் கொண்டாடத், தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. (௫௮)

இருதயந் தன்னி லெழுந்த பிராணன், கரசர ணாதி கலக்கும் படியே, வரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன், குரவனு மெங்கணுங் கூத்துகந் தானே. (௫௯)

(௬௰)

---

## அற்புதக்கூத்து.

குருவுரு வன்றிக் குனிக்கு முருவ, மருவுரு வாவது மந்த வருளே, திரிபுரை யாகித் திகழ்தரு வாளு, முருவரு வாகு முமையவ டானே. (௬௧)



திருவழி யாவது சிற்றம் பலத்தே, குருவடி யுள்ளாக் குனிக்கு முருவே, யுருவரு வாவது முற்றுணர்ந் தோர்க்கு, வருவழி யாவது மவ்வழி தானே. (௬௨)

நிருத்த சிரசிடை பன்னிரண் டங்குல, மோடு முயிரெழுந் தோங்கி யுதித்திட, நாடியி னாதாந்த நம்பெரு மானுகந், தாடிடந் திருவம் பலந் தானே. (௬௩)

வளிமேக மின்வில்லு வானக வோசை, தெளிய விசும்பிற் றிகழ்தரு வாறுபோற், களிபொளி யாருங் கலந்துடன் வேறா, யொளியுரு வாகி யொளித்துநின் றானே. (௬௪)

நிறுத்த கூத்தாக் கிசையெட்டிற் கீழ்மேலு, மாயு மறிவினுக், கப்புற மானந்த மாமறை மாமை கடந்ததின் றார்காண், நாயக னின்று நடஞ்செய்யும் வாறே. (௬௫)

கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங், கூத்தன் கலந்திடுங் கோதிலா வானந்தங், கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக், கூத்தனுங் கூத்தியுங் கூத்தினின் மேலே. (௬௬)

இடங்கொண்ட சத்தியு மெந்தை பிரானு, நடங்கொண் டிருந்தனை யாளு மதித்தேன், படங்கொடு நின்றவிப் பல்லுயிர்க் கெல்லா, மடங்கலுந் தாமாய்நின் றுநின் றானே. (௬௭)

சத்தி வடிவு சகலவா னந்தமு, மொத்தவா னந்த முமையவண் மேனியாஞ், சத்தி வடிவு சகளத் தெழுந்திரண், டொத்தவா னந்த மொருநட மாமே. (௬௮)

தெற்றிக்கு நேர பருவத் திடைவெளி, யுற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம், பற்றுக் குறும் பற்றுப் பரம னிருந்திடஞ், சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே. (௬௯)

அண்டந் தத்துவ மாகிச் சதாசிவன், தண்டினிற் சாத்தவி சாம்பவி யாதலாற், றெண்டலி லேழுஞ் சிவாசன மாகவே, கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. (௭௰)

மன்று நிறைந்த விளக்கொளி மாமலர், நன்றிது தானித
ழ் நாலொடு நூறவை, சென்றது தானொரு பத்திரு நூறுள, நி
ன்றது தானெறி மண்டல மாமே. (௫௧)

அண்ட மெழுகோடி பிண்ட மெழுகோடி, தெண்டிரை
சூழ்ந்த திசைக ளெழுகோடி, யெண்டிசை சூழ்ந்த விலிங்க
மெழுகோடி, யண்ட நடஞ்செயு மாலயந் தானே. (௫௨)

ஆகாச மாமுட லங்கார் முயலக, மேகாச மாந்திசை யெ
ட்டுந் திருக்கைகள், மோகாய முக்கண்கள் மூன்றொளி தானா
க, மாகாயன் மன்றுள் நடஞ்செய்கின் றானே. (௫௩)

அம்பல மாவ தகில சராசர, மம்பல மாவது வாதிப்பி
ரானடி, யம்பல மாவது வப்புத்தீ மண்டல, மம்பல மாவது
வஞ்செழுத் தாமே. (௫௪)

கூடிய திண்முழ வங்குழ லோமென்று, வாடிய மாநட
ராதிப் பிரானென்ன, நாடிய நற்கண மாரம்பல் பூதங்கள்,
பாடிய வாறொரு பாண்டரங் காமே. (௫௫)

அண்டத்திற் றேவர்க ளப்பாலைத் தேவர்க, ளெண்டிசை
சூழ்புவிக் குள்ளுநின்ற தேவர்கள், புண்டரீ கப்பதப் பொன்ன
ம் பலக்கூத்து, கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே. (௫௬)

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற், களிக்குந் திரு
க்கூத்துக் கண்டவர்க் கெல்லா, மளிக்கு மருட்கண்ணீர் சோர்
நெஞ் சுருக்கு, மொளிக்கு ளானந்தத் தமுதூறு முள்ளத்தே.

திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது, வுண்டார்க்கு
முண்டா முன்மத்தஞ் சித்திக்கும், கொண்டாடு மன்று
ளளிக்குந் திருக்கூத்து, கண்டார் வருங்குணங் கெட்டார்க்கு
மொக்குமே. (௫௮)

அங்கி தமருக மக்குமா லைபாச, மங்குசஞ் சூலங் கபால
முடன்ஞானந், தங்கு மபயந் தருநீல முமுடன், மங்கையோ
ர் பாகமாய் மாநட மாமே. (௫௯)



ஆடல் பதினோ ருறுப்பு மடைவாகக், கூடிய பாதஞ் சி
லம்புகைக் கொண்டாடி, நீடிய நாதம் பராற்பர மேயத்தே,
யாடிய நந்தி புறமகத் தானே. (௬௦)

ஒன்பது மாட மொருபதி னாறுட, னன்புறு மார்க்கங்க
ளாறு முடனாட, வின்புறு மேழினு மேழைம்பத் தாறுட, ன
ன்பது மாடினா னானந்தக் கூத்தே. (௬௧)

ஏழிலி லேழா யிகழ்ச்செழுத் தேழதா, யேழிலி லொன்
று யிழித்தமைத் தொன்றாகி, யேழினிற் சன்மார்க்க மெங்கள்
பரஞ்சோதி, யேழிசை நாடகத் தேயிசைத் தானே (௬௨)

மூன்றினி லஞ்சாகி முக்கூற் றறுபதாய், மூன்றினி லாறு
ம் முதற்பன்னீர் மூலமாய், மூன்றினி லக்க முடிவாகி மூர்த்தி
யே, மூன்றினு மாடினான் மோகாந்தக் கூத்தே. (௬௩)

தாமுழ வானவர் தம்முழ மேவுஞா, மாமணி யீசன் மல
ரடித் தாளினை, வாமணி யன்புடை யார்மனத் துள்ளெழுங்,
காமணி ஞாலங் கடந்துநின் றானே. (௬௪)

புரிந்தவ ளாடிப் புவனங்க ளாடத், தெளிந்தவ ளாடி மனா
வெங்கள் சிந்தை, பரிந்தவ ளாடிப்பல் பூதங்க ளாடி, வரிந்
தவ ளாடல்கண் டின்புற்ற வாறே. (௬௫)

ஆதி நடஞ்செய்தா னென்பர்க ளாதர்க, ளாதி நடஞ்செய்
கையாரு மறிகிலா, ராதி நடமாடல் யாரு மறிந்தபின், சோதி நடமா
டலாமருட் சத்தியே. (௬௬)

ஒன்பதோ டொன்பதா முற்ற விருபதந், தன்புறு கோ
ண மிருபதத் தாடினான், றன்புறு சத்தியுட் டோன்றிநின் றா
டே, யன்புறு மெய்ம்மையி னாடிநின் றானே. (௬௭)

தத்துவ மாடச் சதாசிவந் தானாடச், சித்தமு மாடச் சிவ
சத்தி தானாட, வைத்த சராசர மாட மறையாட, வத்தனு மா
டினா னானந்தக் கூத்தே. (௬௮)

இருவருங் காண வெழிலம் பலத்தே, யுருவோ டருவோ டருபரரூபமாய்த், திருவருட் சத்திக்குள் சித்தனா னந்த, னருளுரு வாகநின் றாடலுற் றானே. (௬௯)

சிவமாடச் சத்தியு மாடச் சகத்தி, லவமாட வாடாத வம்பர மாட, நவமான தத்துவ நாதாந்த மாடச், சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத் துள்ளே. (௭௰)

நாதத்தி னந்தமு நற்போத வந்தமும், வேதத்தி னந்தமு மெய்ச்சிவா னந்தமு, மாகற்ற நல்ல சதாசிவா னந்தத்து, நாதப் பிரமஞ் சிவநட மாகுமே. (௭௧)

சிவமாதி யைவர் திண்டாட்ட முந்திரத், தவமார் பசுபாச மாங்கை தனித்துத், தவமாம் பரனெங்குந் தானாக வாடுந், தவமாஞ் சிவானந்தத் தேர்ஞானக் கூத்தே. (௭௨)

கூடிநின் றொருகாலத்துத் தேவர்கள், வீடுநின் றுன்விகிர் தாவென்று நாமத்தைத், தேடநின் றந்திக முஞ்சுடர் ஞானொளி, யாடநின் றென்னையாட் கொண்ட வாறே (௭௩)

நாதத் துவங்கடந் தாதி மறைநம்பி, பூதத் துவத்தே பொலிந்தின்ப மெய்தினர், சேதத் துவமு மவற்றொடு சேதியும், பேப்படா வண்ணம் பின்னிதின் றானே. (௭௪)

அனந்த மானந்த மெப்ப ரறிவில, ரானந்த மாநட மாரு மறிகில, ரானந்த மாநட மாரு மறிந்தபின், னானந்த மற்றிட மானந்த மாமே. (௭௫)

திருந்தநற் றிவென் றுசரிய யையு, மருந்தவர் வாவென்ற னந்த மலர்க்கையும், பொருந்தி வினைப்பிணி யவ்வென்ற பொலங்கையுந், திருந்த நீயாற் றிருநிலை மெய்யே. (௭௬)

மருவுத் துடியுடன் மன்னிய வீச்சு, மருவிய வப்பு மனலுடன் கையுங், கருவின் மிதித்த கமலப் பதமு, முருவிற் சிவாய மடைவ யோதே. (௭௭)



அரன்றுடி தோற்ற மமைத்த திதியா, மானங்கி தன்னி லறையிற் சங்கார, மானூற் றனைப்பி லமருந் திரோதாயி, யானடி யென்று மநுக்கிரக மென்னே. (௭௮)

தீத்திரட் சோதி திகழொளி யுள்ளொளி, கூத்தனைக் கண்டவக் கோமளக் கன்னினாள், மூர்த்திகள் மூவர் முதல்வனிடைசெல்லப், பார்த்தனன் வேதங்கள் பாடினன் றானே.

நந்தியை யெந்தையை ஞானத் தலைவனை, மந்திர மானன் மருவி யுறைவனைத், தந்திர வானத்தி னப்புறத் தப்பாலச், சுந்தரக் கூத்தனை யென்சொல்லும் வாறே. (௮௰)

சேய வுருந்தி திருவம் பலத்திலே, யாயுறு மேனியை யாருமறிகிலர், தீயுறு செம்மை வெளுப்பொடு மத்தன்மை, யாயுறு மேனி யணைபுக லாமே. (௮௧)

தானான சத்தியுந் தற்பரை யாய்நிற்குந், தானாம் பரற்கு முயிர்க்குந் தருமிச்சை, ஞானாதி பேத நடத்து நடித்தருள், ளாறு லானடி மேயத்த தாமே. (௮௨) ஆ. கருகு.

---

## ஆகாசப்பேறு.

உள்ளத் துளோரினை யீச னொருவனை, யுள்ளத் துளேயங்கி யாய வொருவனை, யுள்ளத் துளேசோதி யாய வொருவனை, யுள்ளத் துளாயுட லாகாய மாமே. (௧)

பெருநில மாயண்ட மாயண்டத் தப்பாற், றருநில மாய்நின்ற கொள்கைய னீசன், பெருநில மாய்நின்று தாங்கிய தாளோ, னருநிலை யாய்நின்ற வாதிப் பிரானே. (௨)

அண்ட வொளியு மகண்ட வொளியுடன், பிண்ட வொளியாற் பிதற்றும் பெருமையை, யுண்ட வெளிக்குள் ளொளிக்கு ளொளித்தது, கொண்ட குறியைக் குலைத்தது தானே. (௩)

பயனறு கன்னியர் போகத்தி னுள்ளே, பயனறு மாதிப் பரஞ்சுடர்ச் சோதி, யயனொடு மாலறி யாவகை நின்றிட், டுயர்நெறி யாயொளி யொன்றது வாமே. (௪)

அறிவுக் கறிவா மகண்ட வொளியும், மறியா வலத்தினிற் பேரொளி மூன்றும், மறியா தடங்கிடு லத்த னடிக்குட், பிறியா திருக்கிற் பெருங்கால மாமே. (௫)

ஆகாச வண்ண னமரர் தலக்கொழுந், தேகாச மாகண மிட்டங் கிருந்தவ, னாகாச வண்ண மமர்ந்தநின் றப்புற, மாகாச மாயங்கி வண்ணனு மாமே. (௬)

உயிர்க்கின்ற வாறு முலகமு மொக்க, வுயிர்க்கின்ற வுள்ளொளி சேர்கின்ற போது, குயிற்கொண்ட போதை குலாவி யுலாவி, வெயிற்கொண்டெ னுள்ளம் வெளியது வாமே. (௭)

சுழுனை யகல்விய ஞான மலகத், தழுவி யகன்ற பெரும்பதி கத்தி, னழுவிப் பின்னொளி சோதி வெளியைப், பழுவி னருகம் பருகுது மாமே. (௮)

புறத்துள்ளா காசம் புவனமுலகம், மகத்துள்ளா காசமெம் மாதி யறிவு, மகத்துள்ளா காசத் தெழுஞ்சுடர்ச் சோதி, சகத்துளா காசந் தானஞ் சமாதியே. (௯) ஆ. ௧௮௫.

ஞானோதயம்.

மனசந்தி யிற்கண்ட மன்னன வாகும், கனவுற வானந்தங் காண்ட லதனை, வினவுற வானந்த மீதொழி வென்ப, வினைற்று மந்திய னந்த மிரண்டே. (௧)

கரியட்ட கையன் கபாலங்கை யேந்தி, யெரியுமிளம்பிறை சூடுமெம் மானை, யரியன் பெரியனென் றுட்பட்ட தல்லாற், கரியனென் செய்கொல் காண்கின்றி லேனே. (௨)



மிக்கார மு தன்ன நஞ்சுண்ட மேலவன், றக்கா னுரைத்த தவநெறி யேசென்று, புக்கா லருளும் பொன்னுரை ஞானத்தை, நக்கார் கழல்வழி காட்டி னரே. (௩)

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி, விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி, விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு, விளக்குடை யான்கழல் மேவலு மாமே. (௪)

தத்துவ மெய்துண்டு தத்துவ னங்குண்டு, தத்துவ மெய்யில்லை தத்துவ னங்கில்லை, தத்துவ ஞானத்தின் றன்மை யறிந்தபின், றத்துவ னங்கே தலைப்படுந் தானே. (௫)

விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே, யசும்பின் றறிய, தாரமு தாகும், பசும்பொன் றிகழும் படர்சடை மீதே, குசும்ப மலர்க்கந்தங் கூடிநின் றுமே. (௬)

முத்தின் வயிரத்தின் முன்னீர்ப் பவளத்தின், கொத்தின் பசும்பொன்னின் றூயொளி மாணிக்க, மொத்துய ரண்டத் துள்ளமர் சோதியைப் பெத்தன்மை யேறொன்று கூறுசெய் வீரே. (௭)

*நானென்றுந் தானென்று நாடினே னாடலு, நானென்று தானென் றிரண்டில்லை யென்பது, நானென்ற ஞான முதல்வனே நல்கின, னானென்று நானு நினைப்பொழிந் தேனே. ()

ஞானத்தி னன்னெறி நாதாந்த நன்னெறி, ஞானத்தி னன்னெறி நானென் றறிவோர்கள், ஞானத்தி னல்லியோக நன்னெறி யுள்ளவர், ஞானத்தி னன்மோன நாதாந்த வேதமே. (௮)

உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே, யுய்யவல் லார்கட் குயிர்சிவந் தெய்வமே, யுய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவ, முய்யவல் லாரறி வுள்ளறி வாமே. (௧௦)

காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்கும், பேணவல் லார்க்குக் கடலி னமுதொக்கும், பேணவல் லார்க்குப் பி

ழைப்பிலன் போர்ந்தி, யாணவல் லார்க்கே யவன்றுணை யாமே.
ஓமெனு மோரெழுத் துண்ணின்ற வோசைபோல், மேனி
ன்றதேவர் விரும்பும் விழுப்பொருள், சேர்கின்ற செஞ்சடைச்
செம்பெரு மானது, வார்கின்ற தேவ ரகம்படி யாமே. (௧௨)

ஆ. ௧௭௬.

---

சத்தியஞானனந்தம்.

எப்பாழும் பாழு மியாவுமா யன்றிச், முப்பாழுங் கெழுமு
முப்பாழு முன்னியே, யிப்பாழு மின்னவா றெனப் இலாவின்
பத், தற்பர ஞானந்தத் தானது வாகுமே. (௧)
தொம்பதந் தற்பதஞ் சொன்ன துரியம்போ, லம்பிய மூன்
றுந் துரியத்து நன்றுமம், மம்புவி யின்று வதிருக்க மப்பாலைச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே. (௨)
மன்னுஞ் சத்தியாதி மணிவொளி மாசோபை, யன்னதோ
டொப்ப மிடலொன்று மாறது, வின்னிப வுற்பல மொண்சீர்
நிறமணம், பன்னிய சோபை பகராறு மானதே. (௩)
சத்தி சிவன்பர ஞானமுஞ் சாற்றுங்கா, லுய்த்த வனந்த
ஞ் சிவமுய ரானந்தம், வைத்த சொரூபத்த சத்தி வருகுரு, வு
ய்த்த வுடலிவை யுற்பலம் போலுமே. (௪)
உருவுற் பலநிற மொண்மணஞ் சோபை, தரநிற்ப போலு
யிர்த் தற்பரந் தன்னின், மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்,
சொருபத்தன் சத்தியாதி தோன்றநின் றனே. (௫)
நினையு மளவி னெகிழ வணங்கிப், புனையி லவனைப் பொதி
யலு மாகு, மெனையுமெங் கோனந்தி தன்னருட் கூட்டி, நினையு
மளவி னினைப்பித் தனனே. (௬)
பாலொடு தேனும் பழத்து விரதமும், வாலிய பேரமு தா
கு மதுரமும், போலுந் துரியம் பொடிபட வுள்புகச், சில மிசி
க்கா னுருக்கேக் கிடமே. (௭)



அமரர் தவஞ்செடத் தண்டங் கடந்து, நமரத்து நின்றத
வினைய வீசன், பவளத்து முத்தம் பணிமொழி மாதர், தவ
(௮)
ளற்ற சோதி தொடர்ந்துநின் றனே.
மத்திம மாறு மாற்றி மலங்கிச், சுத்தம தாகுந் துரிய
த் துரிசறுப், பெத்த மறச்சிவ மாகிப் பிறழ்வுற் றுச், சத்திய
(௯)
ஞானந்தஞ் சார்ந்தனன் ஞானியே.
சிவமா யவமான மும்மலந் தீரப், பவமான மும்பாழைப்
பற்றறப் பற்றத், தவமான சத்திய ஞானந் தத்தே, தவ
மார் துரியஞ் சொருபம தாமே. (௧௦) ஆ. ௧௮௬.

---

சொருபோதயம்.

பரம குரவன் பரமெங்கு மாகித், திரமுற வெங்கணுஞ் சே
ர்க்தொழி வற்று, விரவு சொருபத் துரைகுஞ் சொருப, மரிய
(௧)
யித் தணைந்துநின் றனே.
குலைக்கின்ற நீரிற் குவலய நீரு, மலைக்கின்ற காற்று மன
லோடா காசம், நிலத்திடை வாவிடை நீடகவ் றுமே, வ
(௨)
லாகது வளஞ்செய மாறுதி யேனே.
அன்றுநின் றுனயன் மாலிந்திர் தேவர்க, ளொன்றுநின் று
உ யிறையெனென் றேத்தவுந், தங்கின் றுன்றனி நாயக னெம்
(௩)
பிறை, பொன்றிகின் றுன்புகழ் மூட்டி தானே.
சமையச் சுவடுந் தனியறி யாமற், சமயத்த காமாதி கார
ண மெட்டுந், இமிரச் செயலுந் தெரியுட னின்றே, ரமரர்க் கதி
(௪)
பதி யாகிநின் றேனே.
மூவகை யைவத் தொருவன் முதலுரு, வாயற வேறு ம
தபோ லனுப்பரன், சேய சிவமுந் துரியத்துச் சீர்பெற, மேவு
(௫)
நெறியென் றிறைநா வியம்புமே.
உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும், கருவன்றி யேநி

ன்று தானருவாகு மருவன்றி யென்ற மய்யப் பிரானைக், கு
ருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே. (௬)

உருவ நினைப்பவர்க் குள்ளுறுஞ் சோதி, யுருவ நினைப்பவ
ருயிர்புக் காண்ப, ருருவ நினைப்பவ ரும்பரு மாவ, ருருவ நினைப்
பவ ருலகதனில் யாரே. (௭)

பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றப், பரஞ்சோதி யெ
ன்னுட் படிந்தத் பின்னைப், பரஞ்சோதி புண்ணுணர் படியப் ப
டியப், பரஞ்சோதி தன்னைப் பறையக்கண் டேனே. (௮)

சொரூப முருவங் குணந்தொல் விழுங்கி, யரிய வுற்பல
மாமா றுபோல, மருவிய சத்தியாதி நான்கு மதித்த, சொரூ
க் குரவன் சுகோதயத் தானே. (௯)

உரையற்ற வானந்த மோன சொரூபத்தன், கரையற்ற ச
த்தியாதி காணி லகார, மருவுற் றுகார மகாரம தாக, வுரைய
ற்ற தாரத்தி னுள்ளொளி யாமே. (௰)

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய், முலைநின்ற மாதுமி
யோர்த்திவை யானும், புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து, க
லைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே. (௧௧)

ஆமா றறிந்தே னகத்தி னரும்பொருள், போமா றறிந்தே
ன் புகுமா றறிந்தே, னேமாப்ப தில்லை யினியோ மிடரில்லை,
நாமா முதல்வனு மாமென வாமே. (௧௨) ஆ. [illegible]

---

ஊழ்.

செற்றிலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென், மத்தகத்
தேபணி காட்டி மதிக்கிலென், வித்தக னாகி விதிவழி யல்லது,
தத்துவ ஞானிக டங்களுக் கின்றே. (௧)

தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால், வான்முன்
னஞ் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை, கோன்முன்னஞ்



சென்னி குறிவழி யேசென்று, நான்முன்னஞ் செய்ததே நன்
னில மானதே. (௨)

ஆறிட்ட நுண்மண லாறே சமைவதே, கூறிட்டுக் கொண்டு
சுமந்தது வாரில்லை, நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப், பே
றிட்டென் னுள்ளம் பிரியகி லாவே. (௩)

வாழ்வின் றிருக்கிலென் மாகடற் போகிலென், தாவின்று
செந்தீக் கலந்துடன் வேகிலென், சூழ்வுறு மாருதஞ் சூழ
மடிக்கிலென், றாழ்வுறு நாதனை நாடவ லானே. (௪)

ஆனை துரக்கிலென் னம்பூ டறுக்கிலென், கானத் துழுவை
சூழ்ந்து வளைக்கிலென், னேனைப் பதியினி லெம்பெருமானை
த்த, ஞானத் துழவினை நாளுமு வேனே. (௫)

கூடு கெடின்மற் றோர் கூடுசெய் வானுளன், வீடு கெடின
ற்கெடு வாரில்லை, நீடு கெடின்மற் றோர் நீடுக் காவலாக்கும், பா
டறு நந்தி பரிசறி வார்க்கே. (௬) ஆ. [illegible]

---

சிவதரிசனம்.

சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை, சிந்தையி னுள்
ளே சிவனும் வெளிப்படுஞ், சிந்தை தெளியத் தெளியவல் லார்க
ட்குச், சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. (௧)

வாக்கு மனமு மறைந்த மறைப்பொரு, ணோக்கு மின் னோ
க்கப் பெரும்பொரு ணுண்ணிது, போக்கொன்று மில்லை வரவி
ல்லை கேடில்லை, யாக்கமு மந்தனை யாய்க் கொள்வார்க்கே. ()

[illegible] பரம்பரன் பராபர னாகிய பரஞ்சென், னாளும் வழக்க
ற வொன்றிட் டாலும், நாளும் தருமென வாரறி, வொ
ன்று, கூறு புகழ் தருள்புரிந் தானே. (௩) ஆ. [illegible]

---

### சிவரூபதரிசனம்.

ஓதுமயிர்க்கா லொருமுழு தாகிய, பேதமபேதம் பிறழா தவானந்த, மாதிச் சொரூபங்கண் மூன்றகன் றப்பாலை, வேதக மோதுஞ் சொரூபிதன் மேன்மையே. (௧)

உணர்வு மவனே யுயிரு மவனே, புணரு மவனே புலவி யவனே, யிணரு மவன்றன்னை யெண்ணலு மாகான், றுணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே. (௨)

துன்னிநின் றான்றன்னை யுன்னிமுன் னாயிரு, மன்னி யவர்தங் குறையை முடித்திடு, மன்னிய கேள்வி மறையவன் மாதவன், சென்னியு ணின்றதோர் தேற்றத்த னாமே. (௩)

நின்றது சிந்தை விழித்தேன் விழித்தலுந், தன்றுற்ற சோதி தலைவ னிணையிலி, பொன்றுற்ற மேனிப் புரிசடை நந்தியு, மென்றுற் றறிவனு மென்னிற் றானே. (௪)

சத்திய ஞானத் தனிப்பொரு ளானந்தஞ், சித்தத்தி லோங்கச் சிவானந்தப் பேரொளி, சுத்தப் பிரம துரியந் துரியத்து, ளுய்த்த துரியத் துறுபே ரொளியே. (௫)

பரனல்ல நீடும் பராபர னல்ல, வுரனல்ல மீதுணை யொன்று மல்ல, தரனல்ல தானவ னாயல்ல வாகு, மரனல்ல வானந்தத் தப்புறத் தானே. (௬)

முத்தியுஞ் சித்தியு முற்றிய ஞானத்தோன், பத்தியு ளொத்து பரந்தன்னு ளின்றமர், சுத்தியு ளின்றோர்க்குத் தத்துவங் கூடார், சுத்தி யகன்றோர் சுகானந்த போதரே. (௭)

துரிய வதீதஞ் சொல்லறும் பாழா, மரிய துரிய மதீத புரியில், விரியுங் குவியும் விள்ளா மிளிருந், தெரியுந் திரியு முளப்பதெல் லாதே. (௮) ஆ. உ௪௫.



### முத்திபேதம், கர்மநிர்வாணம்.

ஓதிய முத்தி யடைவே யுயிர்பர, மேதமி லச்சிவ மெய்தந் துரியமே, யாதி சொரூபஞ் சொரூபத்த தாகவே, யேதமி லாநிரு வாணம் பிறந்ததே. (௧)

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள், கற்றற் றவர்கற் றகன்றிய கண்ணுதல், செற்றற் றவர்கற்றி நின்றவென் சோதியைப், பெற்றற் றவர்கள் பிறப்பொழித் தாரே. (௨) ஆ. உ௪௭.

### சூக்கியசம்பாதனை.

காயம் பலகை கவறைந் தகின்றோன்று, மாயம் பொருவதோ ரம்பத்தோ ரக்கர, மேய பெருமா னிருந்து பொருகின்ற, மாயக் கயற்றின் மறைப்பறி யேனே. (௧)

ஆறு பட்டுக் கிடந்தது வாசெறி, மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை, மாறிக் கிடக்கும் வகையறி வார்க்கு, நூறிக் கிடந்ததென் னுள்ளன்பு தானே. (௨)

ஆறு தெருவி லகப்பட்ட சந்தியிற், சாறு படுவன நான்கு பனையுள, வேறற் கரியதோ ரேணியிட் டப்பனை, யேறலுற் றேன்கட லேழுங்கண் டேனே. (௩)

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது, புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது, தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள், முழுதும் பழுத்தது வாழைக் கனியே. (௪)

ஐயென்னும் வித்தினி லானை விளைப்பதோர், செய்யுண்டு செய்யின் றெளிவறி வாரில்லை, மையணி கண்டன் மனம்பெறி னக்கிலம், பொய்யொன்று மின்றிப் புகவெளி தாமே. (௫)

பள்ளச்செய் யொன்றுண்டு பாழ்ச்செய் யிரண்டுள, கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது, வுள்ளச்செய் யங்கே யுழவுசெய் வார்கட்கு, வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே. (௬)

மூவணை யேரு முழுவது மூக்காணி, நாயணி கோலித் த
மியபார் [illegible] காவலை கோலி கழித்து செறுவுழார், கால

ணை கோலிக் களருழு வாரே. (௭)

ஒத்த பிரவசிலை வேழு தாவு, முத்தா லிலைதக்க விலையா ன் படுத்தகிர், பரத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற், கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே. (௮)

பட்டிப் பசுக்க ளிருபத்து நாலுள, குட்டிப் பசுக்களோ ரேழுள வைந்துள, பட்டிப் பசுக்கள் குடப்பாற் சொரியினும், பட்டிப் பசுவே பணவற்கு வாய்த்ததே. (௯)

ஈற்றுப் பசுக்க ளிருபத்து நாலுள, ஊற்றுப் பசுக்க ளொருகுடம் பால்போது வூ, காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து, மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே. (௧௦)

சட்டா னகத்திற் றலையான மச்சின்மேல், மொட்டா யெழுந்தது செம்பால் மலர்ந்தது, வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத், தட்டா னதனைத் தலைக்கொண் டானே.

அரிக்கின்ற காற்றங்கா லல்லற் கழனி, நிரிக்கின்ற வேரட்டஞ் செக்கெனக் கட்டி, வரிக்கின்ற கல்ல னறவையைப் பூட்டில், விரிக்கின்ற வெள்ளரி வித்தவித் தாமே. (௧௨)

இடர்க்கொண்டு நவி பெருவிட்டு வித்திக், இடர்க்கொண்டு பூட்டிக் கிளறி முளையை, யிடர்க்கொண்டு சோறட்டு மென்ன விருக்கா, இடர்க்கொண்டு செக்கெ லறுக்கின்ற வாறே. (௧௩)

விளைந்து கிடந்தது மேலைக்கு வித்தது, விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம், விளைந்து விளைந்து விளைந்துகொள் வார்க்கு, விளைந்து கிடந்தது மேவுமுக் காதமே. (௧௪)

களருழு வார்கள் கருத்தை யறியோர், களருழு வார்கள் கருதுவ தில்லை, களருழு வார்கள் களரை முளைத்த, வளரு வஞ்சியின் வாய்த்தது மாமே. (௧௫)

கூப்பிடு கொள்ளாக் குறுநரிக் கொட்டகத், தாப்பிடு

சித்தந் யங்கியுள் வைத்திட்டு, நாட்பட நின்ற நலம்புகுந் தானை, யேற்பட வில்லத் திவிருந் தானே. (௧௬)

மலைமேல் மழைபெய்ய மானகன்று துள்ளக், குலைமே லிருந்த கொழுங்கனி வீழ, வுலைமே லிருந்த வுறுப்பெனக் கொல்லன், முலைமே லமிர்தம் பொழிபவைத் தானே. (௧௭)

பார்ப்பா னகத்திலே பாற்பசு வைந்துண்டு, மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன, மேய்ப்பாரு முண்டாய் வெறிய மடங்கினாற், பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே. (௧௮)

அழைக்க லொக்க மரியேறு முப்பதுங், கேமா விரண்டொடு இய்யிலி யொன்பதுங், காமாக் குரங்கொளி நம்மனத் துள்ளன, மூவாக் கடாவிடின் மூட்டுகின் றானே. (௧௯)

எழுதாத பொத்தகத் தேட்டின் பொருளைத், தெருளாத கன்னி தெளிந்திருந் தோத, மலராத பூட்டின் மணத்தின் மலைவைப், பிறவாத வண்டு மணமுண்ட வாறே. (௨௦)

போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்யிற்றுங், கூகின்ற காவலின் கூழைத் தருக்கலி, யாகின்ற பைக்கூ புனைவுயன்று மைவுறும், வேகின்ற கூரை விருத்திபெற் றாரே. (௨௧)

மூத்தி லெழுந்ததோர் வேம்புண்டு வேம்பிலிற், சார்ந்து கிடந்த பனையிலோர் பாம்புண்டு, பாம்பைத் தாத்திட்டு வேம்பைத்தின் பாரிலறி, வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே. ()

பத்தப பரும்புலி யானை பதினைஞ்சு, வித்தக ரைவர் விநோதக ரெண்ம, ரத்தகு மூவ ரறவர் மருந்துவ, ரத்தலை யவ ரமர்ந்திருக் கின்றாரே. (௨௩)

இரண்டு கடாவுண்டிவ் வூரி லென்னேர் பிரண்டு கடாவுக்கு மொன்றே தழும்பு, விரண்டு கடாவு மிருத்திப் பிடிக்கில், விரண்டு கடாவு மொருகடா வாமே. (௨௪)

ஒத்த மனக்கொல்லை யுள்ளே தமன்கட்டிப், பத்தி வயல்

ற் பருத்தி நிறுத்தலிரன், முத்தக் கயிறுக மூவர்களறிவார், ணி த்தம் பொருந்த நிரம்பரின் றுரே. (உரு)

கூகையும் பாம்புங் கிளியொடு பூனையு, நாகையும் பூழு ந லிவி இறைவன, நாலகையைக் கூகை நனுக் நிறுத்தலுங், கூகை யைக் கண்டெலி கூப்பிடு மாறே. (உசு)

குலைக்கின்ற நன்னகை யாங்கொங் குழக்கி, விலைக்கின்ற வெள்ளொலி மூன்று குணக்கா, லுலக்குப் புறமெனி லோடு மி ருக்கும், புலிக்குப் பிறக்தவை போகின்ற வாறே. (உஎ)

காடுபுக் காரினி காணார் கடுவெளி, கூடுபுக் கானது வைக் து குதிரையு, மூடுபுக் கானது வாறள வொட்டக, மூடுபு நாவி டின் மூலமே யாமே. (உஅ)

கூரையுஞ் சோறுங் குறாயகத் தெண்ணையுங், காரைய நா னும் விளையுங் கண்டவர், பாறையி லுற்ற பறக்கின்ற தில போ, லாறைக் குழியி லழுந்துகின் றுரே. (உகூ)

அருத்தியுள் ளக்கரை தேர்ந்து மலைமேல், விருத்திகன் காணக்கப் போவார்முப் போதும், வருத்தியுள் ளின்ற மலை யைத் தவிர்ப்பா, ரொருத்தியுள் ளாளவ றாறி யோமே. ()

மருந்தவ கிளியுந் பம்பறை தொட்டுத், திருந்திய மாதர் திருமணப் பட்டார், பெருந்தவப் பூதம் பெறவுரு வாகு, மிரு ந்திய பேதிவ மிஸ்புற வாறே. (௩௧)

கூடும் பறவை பிணாகொத்தி மற்றத, ஞாடுங் குண்டி ய றக்குறி லென்னெக்குஞ், குடெறி செய்புண்டு மைக்கன் றிரி ன்ற, பாடறி வார்க்குப் புயனெளி தாமே. (௩௨)

இலையில்லை பூவுண் டினவண் டிங் கில்லை, தலையில்லை வேரு ண்டு தாளில்லை பூவின், முலையில்லை சொய்யு மலருண்டு சொப்பு க், தலையில்லை தாழ்ந்த மயிர்புல ராதே. (௩௩



அங்கண வின்றதோ ராலமரங்கண்டு, எங்கண வாழ்த்தி க டுவே பயன்கொள்வர், மிக்கவ ரஞ்ச தயரமுக் கண்டுபோய்த், துக்கவர் தாழ்ந்து இடக்கின்ற வாறே. (௩௪)

கூப்பிடு மாற்றில வன்கா ஒருகாதங், காப்பிடு கள்ளர் ந லந்துறின் றுருளர், காப்பிடு கள்ளனை வெள்ளர் தொடர்ந்திட்டி க், கூப்பிடு மீண்டதோர் கூரைகொண் டாரே. (௩௫)

கொட்டிய மாம்பழம் பூத்த குளத்திடை, வெட்டியும் வேம்பு மிவியதோர் வாழையுங், கட்டியுந் தேனுங் கலந்துண மாட்டாத, ரெட்டிப் பழத்தக் கிளைக்கின்ற வாறே. (௩௬)

பெடைவண்டு மான்வண்டிப் பேடை வண்ணக், கொடை கொண்ட பாசத்துக் கோல்முலை டாளுங், கடைவண்டு தாறு வண்ணுங் கலக்கலத் திட்ட, பெடைவண்டு தான்பெற்ற இன்பமு மாமே. (௩௭)

கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்தவ, னெல்லை கட ப்பித் திறையடி கட்டியே, வல்லசெய் தாற்றன் மதித்தபி ன ல்லது, கொல்லைசெய் செஞ்சுக் குறியறி யாதே. (௩௮)

கட்டத் தறிமேல தாமரை பூத்தது, குட்டத்து நீர்ற குவ ள யெழுந்தது, வட்டத்தி லுன்னோ விளங்கவல் லார்கட்குத், தட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே. (௩௯)

ஆறு பறவைக ளைந்தகத் துள்ளன, வாறு பறவை றுளிக் காம்பின் மேலன, வேறும் பெரும்பதி யேறுங் கடக்கயின், றாக வின்றி மீயுக லாமே. (௪௰)

கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள், வட்டனப் பூமி மருவிவக் றாதிக், கட்டனஞ் செய்து மயிற்றும் மெருமபி யுழொட்டலஞ் செய்கொனி யாவர்க்கு மாமே. (௪௧)

ஏழு வளைகட வெட்டுக் குலவரை, யாழும் விசும்பினி லங் கி மழைவனி, தாழு மிருநிலத் தன்மை யறுகண்டு, வாழ நினைக் கில் தாலய மாமே. (௪௨)

ஆலிங் கனஞ்செய் தகஞ்சுடச் குலத்துச், சாலிங் கனமந்
தத் தலைமை தவிர்த்தனர், கோலிங் கமைத்தபின் கூடப் பறா
வைகள், மாலிங்கன் வைத்தது மூன்றின் வழியே. (௪௩)

கொட்டிக்குக் காலி ரண்டே யிரண்டிக்குங், கொட்டிக்கு
க் காலிக்கும் பாரை வலிதென்பர், கொட்டிக்குக் காலிக்கும்
பாரைக்கு மூன்றுக்கு, மிட்டம் வலிதென்ப ரீச னருளே. ()

கயலொன்று கண்டவர் கண்டே யிருப்பர், முயலொன்று
கண்டவர் மூவரு மொப்பர், பறையொன்று பூசல் பிடிப்பா ரொ
ருவன், மறையொன்று கண்ட துருவம்பொன் றாமே. (௪௫)

கோரை யெழுந்து கிடந்த குளத்தினி, லாரை படர்ந்து
தொடர்ந்து கிடந்தது,நாரை பயின்றுப் போவல்ல காதலர்,
பாரை கிடக்கப் படிக்கின்ற வாறே. (௪௬)

கொல்லைமுக் காதமுங் காடைக் காதமு, மெல்லை மயங்
கிக் கிடந்த வருநெறி, யெல்லை மயக்கா தியக்கவல் லார்கட்கு,
வொல்லை கடந்துசென் றூர்புக லாமே. (௪௭)

பூவொன்று வித்து வொருங்கின காலத், தெருமறை
பெய்யா திருவிலச் செல்வி, தழுவி வினைச்சென்று தாம்பய வர
து, வழுவாது போவர் வளர்சடை யோனே. (௪௮)

பதங்கிடும் பாம்புமி பன்னிரு காதம், மொதுங்கிய தன்
கட லோரக மூலவு, மதங்கிய வார்கனி யாரமு துறப், பொ
துங்கிய வைவரைப் போய்விளைந் தானே. (௪௯)

தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு,வாணிபஞ்
செய்து வழங்கி வளர்மக, வீலிக் கிரையுமே நெஞ்சி விலைகளா
ர்க், காலிப் பழம்போ லனிக்கின்ற வப்பே. (௫௰)

முக்காத மாற்றிலே மூன்றுள வாழைகள், செக்குப்பழு
த்த கனிமலர் காய்த்தன, பக்குநூர் மிக்கார் படக்கினார் கன்
னியர், நக்கு மலருண்டு நடுவுநின் றாரே. (௫௧)

அடியு முடியு மமைந்ததோ ராங்கி. [illegible] டையின்கண்



முத்தலை மூங்கிலிற், கொடியும் படையுங் கோட்சர னையைந்து,
மடியும் வலம்புரி வாய்த்ததவ் வாறே. (௫௨)

குன்றியும் பாம்பும் பகைமுக வானரக், தென்றிக் கிடந்த
சிறுநரிக் கூட்டத்துக், குன்றுமை கூடித் தீராசி விறந்தபின்.
பன்றி நிரையைக் குறைக்கின்ற வாறே. (௫௩)

மொட்டித் தெழுந்ததோர் மொட்டுண்டு மொட்டிலைக்,
கட்டிவிட் டோடி மலர்ந்துங் காணலாம், பற்றுவிட் டம்மனை
பாழ்பட நோக்கினார், கட்டிவிட் டார்க்கன்றிக் காணவொண்
ணாதே. (௫௪)

நிரன்றிப் பாயு நிலத்தினிற் பச்சையாம், யாவரு மென்று
மறியவல் லாரில்லை, கூறு மறைபொருளாது பொழிபுனல்,
தேரினிக் கீர்மை யிடரினில் லாதே. (௫௫)

கூகை குருந்தம தேறிக் குணம்பயில், மோக முலகுக் கு
ளர்கின்ற காலத்து, காகமு மொன்று கவுரை செய்திடும்,
பாகனு மாய்நின்ற பண்பனு மாமே. (௫௬)

வாழையுங் கூரையும் வந்திடங் கொண்டது, வாழைக்கு
க் கூரை வலிது வலிதென்பர், வாழையுங் கூரையை வன்றுண்ட
க் செப்பிட்டு, வாழை யிடங்கொண்டு வாழ்கின்ற வாறே. ()

மலத்தைப் பிளந்து நெடுங்கட லோட்டிப், புனைந்துக் குர
வன் புணர்ந்த கொழுமீன், விலக்குமின் யாவர்க்கும் வேண்டி
ற் குறைபா, கருத்தமு மின்றி யடுவது மாமே. (௫௮)

தனிக்கு மொருபிள்ளை தட்டார கத்தில், விளிப்பதோ
ர் சங்குண்டு வேந்தனை நாடிக், களிக்குங் குசவர்க்குங் காவிதி
யார்க்கு, மளிக்கும் பதத்தொன் றுய்க்குதொள் வார்க்கே. ()

குடைவிட்டுப் போந்தது கோயி லொருமை, படைகண்டு மீ
ண்டது பாதி வழியி, லுடையவன் மந்திரி யுள்ளது போர்,நடை
பா நெடுங்கடை யைக்கொடு காண்டே

போகின்றவெட்டும் புகுகின்ற பத்தெட்டும், மாகிப் படைத் தவை யொன்பது வாய்த்துக் காரூ மெட்டொடு நாலு புரவியும், பாகன் விடாவிடிற் பன்றிய மாமே. (௮௧)

பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக், கூசி யிருக்குங் குரு கினந் தேர்க்தன்னுங், கூசி மறவன் றுலைவழி பெய்திடப், பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே. (௮௨)

கும்ப மலைமே லெழுந்ததோர் கொம்புண்டு, கொம்புக்கு மப்பா லடிப்பதோர் காற்றுண்டு, வம்பாய் மலர்ந்ததோர் பூவு ண்டப் பூவுக்கு வண்டாய்க் கிடந்து மணங்கொள்வ னீசனே. ()

வினையுந் தன்றும் விரவி யினைமுரல், தானுவு மேவித் த ருதலைப் பெய்தது, வாணிபஞ் செய்கென றுவலடை யாமுன்னர், காணவு மங்கே கலக்கின்ற வாறே. (௮௪)

கொங்குபுக் காரொடு வாணிபஞ் செய்து, வங்குபுக் கா லன்றி யாய்க்குதி வாரில்லை, திங்கள்புக் காலிரு ளாவ தறிந்தி லர், தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே. (௮௫)

போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது, தாதவி ழ் புன்னை தயங்கு மிருகரை, யேதமில் ஈசனியங்கு நெறியிது, மாத ரிருந்ததோர் மண்டலந் தானே. (௮௬)

கோமுற் றமருங் குழுக்களுந் தம்மிலே, காமுற் றகத்தி யி லெர் கடைதோறும், மீவுற்ற வென்றிப் பிடைஞானவழிகாட்டி, யா முற் றகட்டமு மித்துன்னை லாமே. (௮௭)

தோட்டத்தில் மாம்பழந் தொண்டை விழுந்தக்கால், வாட் டின் புறத்தி லரியழுந்த மென்செய, மூட்டுக் கொடுத்து மூ லையை முன்னிட்டுக், காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.

புலர்ந்தது காலென்று புட்கள் சிலம்பப், புலர்ந்தது போ லென்று பூம்பொழில் புக்கி, புலர்ந்தே யகவலெனும் போகத்துக்கு ம், புலம்பலுக் கென்னும் புலர்ந்திலை போதே. (௮௯)



தோணிமேலின் றண்ணீர் துறையில் விடுவன, வாணி பிடிக்க வின் வரவர்கோ ளான்றாலும், வாணிபஞ் செய்வார் வழிவி டையாற்றிடை, யாவரி கலக்கி லறுவிறு வாமே. (௯௦)

௨௮௭.

---

## மோனசமாதி.

நின்று மிருந்தார் கிடந்தா ரெனவில்லை, சென்றுந் தர் சித்த மோன சமாதியா, மன்றேயு மங்கே மறைப்பொரு ளொ அன்று, சென்றுங் கலந்தவர் சேர்கின்ற வாறே. (௧)

காட்டுக் குறியுங் கடந்தவர் காரண, மேட்டின் புறத்திலே முதிலைவைத் தெனபயன், கூட்டிக் குருத்தி கூட்டுடி னல்லாது, வாட்டின கருத்தி லதர்கிடந் தற்றே. (௨)

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்று, முணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை, புணர்வுடை யார்க ளுணர்ந்தவக் கால, முணர்வுடை யார்க ளுணர்ந்துகண் டாரே. (௩)

மறப்பது வாய்ந்தெழு மாயகன் றுட்டா, பிறப்பினை நீக்கி ட பேரு ளாளன், சிறப்புடை யாள்திரு மங்கையுந் தானு, முரக்கமில் போகந் தூங்கிடுக் தாரே. (௪)

அரியக்கண் மூன்றுங் கடந்தொளிர் சோதி, யரிய தரி ப முதின்மீது முளீரும், விரிவு ளிவு விழுங்கி யுமிழ்ந்தே, யுரை ச லறுந் திகத்திருள் ளாவே. (௫)

உருவிலி புலிவிலி பூன்மொன் றில்லி, திருவிலி திதிலி தே ர்த்துக் தேவனை, பொருவிலி பூதப் படையுடை யாளி, மருவி வக்கெதன் மனம்புகுந் தானே. (௬)

கண்டறி வாரில்லை காயத்தி லந்தியை, யெண்டிசை யோ டிறைவனென் றேத்துவ, ரண்டங் கடந்த வளவிலா வான னிதந், தொண்டர் முகந்த துறையறி யோரே. (௭)

தற்பர மல்ல சதாசிவ னல்லன், நிட்கள மல்ல சகள நிலையல்ல, யற்புத மாகிய வுபோகக் காமம்போற், கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. (அ)

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கா, ளகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்த, மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய, சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே. (கூ)

அப்பினி லுப்பென வந்த வணைந்திட்டிச், செப்பு பராபரஞ் சேர்பர முவிட்டுக், கப்புற சொற்பத மாளக் கலந்தமை, யெப்படி யப்படி யென்னுமவ் வாறே. (க0)

கண்டார்க் கழகிதாங் காஞ்சிரத் தின்பழந், தின்றார்க் கறியலா மப்பழத் தின்சுவை, பெண்டா விரும்பி மடவிய லாளொ, டுண்டாற், கொண்டா லறிவன் குணம்பல தானே. (கக)

சந்திபி ருந்தா னறிவுட் டெருவிலே, சந்தி சமாதிகடானே பொழிந்தது, வுந்தியி னுள்ளே யுதித்தெழுஞ் சோதியைப், புந்தியி னாலே புணர்ந்துகொண் டேனே. (க௨)

விந்துபடா வண்ணம் வேறிருந் தாய்ந்து, பந்துபடாதே பழமறை பார்த்துக், குறிய பாவுழக் கடந்தக் கற்பினி, புதிய பாழி லெடுங்குகின் றேனே. (க௩)

வாடா மலர்ப்புனை சேவடி வானவர், கூடா ரவெறி நாடொறு மின்புறச், சேடார் கமலச் செழுஞ்சுடர்ச் சென்று, நாடா ரமுது நாடா ரமுதே. (க௪)

அதுக்கென விருவ ரமர்ந்தசொற் கேட்டும், பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோ, லதுக்கென்று வேறே யனங்கனைக் காண, மதுக்கொன் றைத் தாரான வளர்தரு மன்றே ()

தானு மழிந்து தனமு மழிந்து, நானு மழிந்து வுயிரு மழிந்திட்டன், வானு மழிந்து மனமு மழிந்தபி, னானு மழிந்தமை காணறி யேனே. (க௬)



இருளும் வெளியு மிரண்டையு மாற்றிப், பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள் ளாகி, யருளா லழிந்திடு மத்த னடிக்கே, யருளாற் என்மன முற்றுநின் றானே. (எ)

ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபர, மொன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி, யொன்றிநின் றுள்ளே யுணர்ந்தே னுணர்வினை, யொன்றிநின் றேபல வூழிகண் டேனே. (கஅ)

ஆக கூ௩.

## வரையுரைமாட்சி.

தான்வனா வற்றாகி னுன வரைவறு, தானவ னாகி னுருவா நினைவறு, காமமி லென்றக னுரை யுகப்பது, நமொழி வாசகஞ் சொல்லுமி னீரே. (க)

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூமர்காள், கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ, திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப், புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

மனமாயை மாயையின் மாயை மயக்க, மனமாயை தான்மாயு மற்றொன்று மில்லை, மினமாயத் தில்லை பிதற்றவும் வேண்டாந், தனையாய்த் திருப்பது தத்துவந் தானே. (௩) ஆக கூ௩௬.

## அணைந்தோர் தன்மை.

மலமில்லை மாசில்லை மானாபி மானங், குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை, நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே, பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே. (க)

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங், கழிந்தேன் கடவுளு நானுமொன் றானே, னழிந்தேன் இனிவரு மார்க்கமும் வேண்டேன், செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. (௨)

ஆலைக் கரும்பு மழுத்தமக் காரமுஞ், சோலைத்தண் ணீரு மு
டைத்தெங்க ளூட்டிடைப், பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வா
ளொரு, கோலப்பெண் ணுட்குக் குறையொன்று மில்லையே. ()

ஆராது மென்னை யமட்டவொண் ணுதிலிச், சோரர் பிரா
ந்வைத்தென் சிந்தை புகுந்தனன், சேரா டியங்கே திரிவதல் லா
தில்லி, யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே. (௪)

பிரிந்தேன் பிரமன் பிணைந்தவோர் பாசந், தெரிந்தேன்
சிவகதி செல்லு நிலையை, யரிந்தேன் வினையை யயின்மன வா
ளால, முரிந்தேன் புரத்தினை முத்துவின் றேனே. (௫)

இன்றுதன் னருளா லுக்கொரு தெய்வமு, மொன்றுமென் ன
ருல குக்குயி ராவது, நன்றுதன் னுள்ளி நடவிரா யப்பழத் தின்
றுதன் டேற்கிற இத்திந்த வாறே. (௬)

சந்திரன் பாம்பொடுஞ் சூடுஞ் சடாதரன், வந்தென்னை
யாண்ட மணிவிளக் கானவ, னந்தமு மாதியு மில்லா வரும்
பொருள், சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே. (௭)

பண்டெங்க ளீசனெடுமால் பிரமனைக், கண்டவ் விருக்கு
ங் கருத்தறி வாரில்லை, விண்டங்கே தோன்றி வெறுமனே மா
யிடுந், அண்டங் கிருந்தோர் அறாது வாமே. (௮)

அன்னையு மத்தனு மன்புற்ற தில்லது, வன்னையு மத்தனு மா
ரறி வாரென்னை, யன்னையு மத்தனு மியாறு முடவிருந், தன்னை
யு மத்தனை யான்புரந் தேனே. (௯)

கொண்ட சுழியுங் குலவளை யுச்சியு, மண்டரு மண்டத் த
லைவரு மாதியு, மெண்டிசை யோரும்வந் தென்னைத் தலைத்
தொ, ழுண்டனர் காவிணி யுங்கொழிந் தேனே. (௧௦)

தானே திசையொடு தேவரு மாய்நிற்குந், தானே யுட
லவ ராகியு மாய்நிற்குந், தானே யுடலுயிர் தத்துவ மாய்நி
ற்குந், தானே புலகிற் றலைவனு மாமே. (௧௧)



சமன்வரின் ஞானவான் கொண்டே யறிவன், சிவன்வரி
னுடன் போவது தின்னாம், பவம்வரும் வல்வினைப் பண்டே
பெறுத்தேன், தவம் வருஞ் சித்தைக்குத் தானெதி ராமே. ()

சித்தஞ் சிவமாய் மலமுன்றுஞ் செற்றவர், சுத்தச் சிவ
மாவர் தோயார் மலபந்தம், சுத்தஞ் சிவனுங் கைசமுவ் சுக
காணுர், சுத்தம் பரவித்து தானுமென் னெண்ணியே (௧௨)

நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம், வினைப்பற் றறுக்கு
ம் விமல னிருக்கும், வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெரிலவு வியப ருமே. (௧௩)

சிவபெரு மானென்று நானழைத் தேத்தத், தவபெரு
மானென்று தான்வந்து நின்று, நவபெரு மானென்னை யாரு
மானென்று தான்வந்து நின்று, பணித்துநின் றேனே. (௧௪)
டாதன், பவபெரு மானைப் பணித்துநின் றே

பணித்துநின் றேன்பா மதி பதியைத், தணித்துநின் றே
னவி மற்றொன் றும் வேண்டே, னணித்துநின் றேனுட னாடிப்
பிரானைத், தணித்துநின் றேன்சிவன் றன்மைகண் டேனே. ()

எவ்வெஞ்ச மிச வினையுந் தாஞ்சேர்ந்து, முன்னாஞ்செய்
தேந்த முழுதாம் பிறப்பறுந், தன்னெஞ்ச மில்லாத் தலைவன்
றலைத்தி, பின்னஞ்செய் தென்னைப் பிணக்கறுத் தானே. ()

பிணக்கறுத் தாண்பிணி மூப்பறுத் தென்னுந், கணக்கறு
த் தாண்டவன் சுழுந்தி யென்னைப், பிணக்கறுத் தென்னுட
ன் முன்வந்த தின்பம், வணக்கஞ்செய் தேன்சிவம் வந்தது தானே.

சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப், பவம்வந் திட
நின்ற பாச மறுத்திட், டவனென்னை யாண்டரு ளாதிப் பெரு
மா, னவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே. (௧௫)

கரும்புந் தேனுங் கலந்தவோர் காயத்தி, லரும்புங் கரு
மருமாகிய வானத்தும், விரும்பிய புள்ளும் வெளிபுறக் கண்
டபின், கரும்புங் கசந்தது தேனும் புளித்ததே. (௨)

௨௩

உள்ள சரீரம் பொட்டியே யிட்டேன்பால், வள்ள லருத்தியே வைத்த வளம்பாடிச், செய்வன வெல்லாஞ் சிவமாகக் காண்டலாற், கைவள மின்றிக் கருத்தடக் கேனே. (௨௬)

மின்டார் கமலத்து மங்கை மிகச்சென்று, துண்டா விளக்கின் றகளிசெய் சோர்தரும், பூண்டா னொருத்தி புவகுண் டாமலி, மாண்டா னொருவனை வந்தது தானே. (௨௭)

ஆறே யருவி யகத்துள தொன்றுண்டு, ஆறே சிவகதி நுவ்வானு வன்னமுங், கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும், வேறே யிருக்கும் விழுப்பொரு டானே. (௨௮)

அன்பு ருருகி யழுவ னரற்றுவ, னென்பு முருக விராப்பக லேத்துவ, னெம்பெரு மானை யிறைவனை யீசனைத், தின்பன் கடிப்பன் றிருத்துவன் றானே. (௨௯)

மனம் விரிந்து குவிந்தது மாதவ, மனம் விரிந்து குவிந்தது வாய்வு, மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர், மனம் விரிந்தறை மாண்டது முத்தியே. (௩௰) ஆ. ௩௩௩.

---

## தோத்திரம்.

மாயனை நாடி மனநெடுந் தேரோடிப், போயின நாடறி யாதே புலம்புவர், தேயமு நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக், காயநன் னாட்டிடைக் கண்டுகொண் டேனே. (௧)

மன்று மலியோன் மந்திர நாதியிந்மே, விண்ணவர் பாடவிருந்தவ னடியெனின், முன்னியல் கால முதல்வனா ரருமந்தைப், பன்னின வெந்தை பாடறி வீரே. (௨)

முத்தினின் முத்தை முகிழின ராவிற்றை, யெத்தனை வாரெரு மெத்த பிறைவனை, யத்தனை நாளு நாற்றுகின் றேனெயோர், பித்தனி வனென்று பேசநின் றேனே. (௩)

புகுந்துநின் றானெங்கள் புண்ணிய மூர்த்தி, புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன், புகுந்துநின் றானடி யார்தங்கணெஞ்சம், புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே. (௪)



புதக்கண் ணடியிற் புகுந்திலன் போதுளான், வேதக்கண் ணடியில் வேறே வெளிப்படு, நீதிக்கண் ணடியினவார் மனத்துளன், நிதக்கண் ணடியிற் கேட்டுகின் றேனே. (௫)

நாமமோ ராயிர மோதுமி னுதனை, யேமமோ ராயிரத் துன்னே யிசைவீர்க, ணோமமோ ராயிர மோதவல் லார்கட்குக், காமமோ ராயிரங் கண்டொழிந் தார்களே. (௬)

போற்றுகின் றேன்புகழ்ந் தெம்புகழ் ஞானத்தேத் தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி, சாற்றுகின் றேனறை யோசிவ யோகத்தைப், போற்றுகின் றேனென்று தொழுகின்றேன் காணே. (௭)

நாடு விதஞ்செய்த நாடு பிஞ்சத்தியை, மூன்றா கமலத்தி ஞாயிசெல் றப்புறம், வீடே றுலகம் வழிப்பட நின்றமின், ஞார வுண்டு தெவிட்டனு மாமே. (௮)

வந்துநின் றானடி யார்கட் கரும்பொரு, ளிந்திர னாதி யிமையவர் வேண்டினுஞ், சுந்தர மாதர் குழலியொ னல்லனா, வந்தர வானத்தி னப்புற மாமே. (௯)

மண்ணிற் கலங்கிய நீர்போன் மனிதர்க, ளெண்ணிற் கலங்கி யிறைவ னிவனென்று, நுண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத், தெண்ணிற் படுத்த சிவனவ னாமே. (௰)

மெய்த்தவத் தானை விருப்பு மொருவர்க்குச், சைத்தலஞ் சேர்தரு செல்விக் கனியொக்குஞ், சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்க, ளத்தனை நாடி யமைந்தொழிந் தேனே. (௧௧)

அமைந்தொழிந் தேனளவில் புகழ் ஞானஞ், சமைந்தொழிந் தேன்றடு மாற்றமொன் றில்லை, புகைந்தெழும் பூதலம் புண்ணிய னண்ணி, வகைந்து கொடுக்கின்ற வள்ளலு மாமே. ()

வள்ளற் றலைவனை வானகன் னாட்டினை, வெள்ளப் புனற்சு

டை வேத முதல்வனைக், கள்ளப் பெருமக்கள் காண்பரோ கோலோவென்று, வுள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தானுமே. ()

இரு மலர்ப்பதந் தந்த கடவுளை, நாளும் வழிபட்டு நல் லைய்யு வான்றவர், கோளும் வினையு மறுக்குங் குரிசிலின், வாளு மனத்தொடும் வைத்தொழுந் தேனே. (௧௪)

விரும்பி லவனடி வீர சுவர்க்கம், பொருந்தி லவனடி புண் ணிய லோகந், திருந்தி லவனடி தீர்த்தமு மாகும், வருந்தி யவனடி வருந்தவல் லார்க்கே. (௧௫)

வா க ...டாழ் தாழிய வுலகினிற், றுவக மில்லாத் த னியாகும் ...னக வாழைக் கவிநகர்க் தள்ளேறு ம், பானகை ...நிலையைப் பற்றிநின் றேனே. (௧௬)

விதியது மேலை யமரு றைவும், பதியது பாய்புனற் கங் கையு மொன்று, நதியது தொல்வினைப் பற்றற விக்கும், பதியது வவ்விட்ட தந்தமு மாமே. (௧௭)

மேலது வானவர் கீழது மாதவர், தாளிடர் மாறுடர் கீ ழது மாதனவ், கானது கூவிள மாலை கமழ்சடை, யானது செ ய்யுமெய் மாருயிர் தானே. (௧௮)

சூழுங் கருங்கட லெஞ்ஞான்ற கண்டனை, யெழு பிறவி லு மீசன் பிறப்பிலி, யாழுஞ் சுவையு மட்டவிழ்மலர்க்குழல், வாழு மெழுத்தைந்து மன்னனு மாமே. (௧௯)

உலகமொ தொத்தமன் றொத்துயர் கார்நறை, யலர்கதி ர ங்கியொத் தாதிப் பிரானு, மிலவிய மாமுகி லொத்துமின் னிடைச், செலவொத் தமர்நிலைத் தேவர் பிரானே. (௨௦)

பரிசறிந் தங்குள வங்கி யருக்கன், பரிசறிந் தங்குளன் மா மதத் தீசனை, பரிசறிந் தங்குளன் மாமதி ஞானப், பரிசறிந் தன் னிலம் பாரிக்கு மாறே. (௨௧)



அத்தன் கடந்த மறைவது வாய்நிற்கும், பத்த வுலகினிற் கி டோர் பெரும்பொருள், அத்த வுலகெங்குந் தானே பராபரன், வத்து படைக்கிலது மாண்பது வாமே. (௨௨)

முத்தண்ட வீரண்ட மேமுடி யாகிலும், மத்த னுருவமுல கே முழுப்படி, மத்தனின் பாதாள மனவுள்ள சேவடி, மத்த னருளை மகிழ்ந்தனை நாமே. (௨௩)

ஆதிப் பிரானம் பிரானவ் வகலிடச், சோதிப் பிரான்சுடர் முன்னொளி யாய்நிற்கு, மாதிப் பிரானட்டத் தப்புறந் தன்னில், ஆதிப் பிரானுமே வாகிநின் றானே. (௨௪)

அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன், பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன், தொண்டர் தம்மனத் தினகழ் கா ண்டொரும், தொண்டர்கள் தூய்நெறி தாங்கிநின் றானே. (௨௫)

உணர்வுசெய் கோக்கம் பெருங்கடல் சூழ, நிலமுழு தெ ல்லா நிறைந்தவ னீசன், பலமுழு தெல்லாம் படைத்தனன் மு ன்னே, புலமுழு பொன்னிற மாகிநின் றானே. (௨௬)

பராபர னாகிப்பல் லூழிக டோறும், பராபர னாயிவ் வ கலிடந் தாங்கித், தராபர னாய்நின்ற தன்மை யுணரார், பிரா பர னாகி நிறைந்தநின் றானே. (௨௭)

போற்றும் பெருந்தெய்வந் தானே பிறிதில்லை, யூற்றமு மோசையு மோசை யொடுக்கமும், மேற்றுட னாளன் றதில பேர் தெய்வமாய், காற்றது வீசன் கலந்துநின் றானே. (௨௮)

திகையினைத் தாங்கிவ னேயவ னாகி, மிகையினைத் தாங்கிய வேழ்கட மலிதரே, புகையினைத் தாம்புற மங்கியிற் கூடி, மு கையினைத் தாம்மெய்ய னாதிப் பிரானே. (௨௯)

அகன்று ளகலிட மேழுமொன் றாகி, நிவன்று ளொளிநின் றொளியுறு மல்லன், இவன்றன் பசுபதி யெனுமாறே, கவின்று ளிலங்கு சம்பனு மாமே. (௩௰)

[illegible]

[illegible]

பெருஞ்சடை மூன்றினு முன்னொளி யாகித், தெரிந்தடை
லாயிற்குத் தேவர் பிரானு, மிருஞ்சடை விட்டிப் டிகவி-
மெல்லாம், பரிந்துடன் போகின்ற பஃறொளி யாமே. (௪)

உறுதியி னுள்வந்த வுள்வினைப் பட்டு, விறுதியின் வீழ்ந்தா
ரிரணம தாகுஞ், சிறுதியி னுள்ளொளி திப்பிய மூர்த்தி, பெறு
தியின் மேலோர் பெருஞ்சடை யாமே. (௫)

பற்றினி னுள்ளே பரமாய் பரஞ்சுடர், முற்றினு முற்றி
முனைக்கின்ற மூலவுருளி, செற்றியி னுள்ளே நினைவாய் நினைவுரு
மற்றவ னாய்நின்ற மாதவன் றானே. (௬)

தேவரு மாருந் திசைதிசை பத்தரு மேவரு மாம்விரி
நீருல கேழையு, மாவரு மாமமர்த் தெய்வ முலகினு, காவனு
மாதி நவிற்றுநின் றானே. (௭)

நோக்குங் கருடனொ டியே முனைக்கும், மீக்கு மலைத்
தலைவனு மங்குள, நீக்கும் வினையென் னமலன் பிறப்பிலி, போ
க்கும் வரவும் புணரவல் லானே. (௮)

செழுஞ்சடை யன்செம்பொ னேயொக்கு மேனி, பொழி
ந்தவ வாயு வொருங்குடன் கூடிப், பழித்திவ னெங்கும் பிறப்பி
லனீச, வெழுந்திவ செழுவ னொத்தவ னானே. (௯)

உணரவு மவ்வுயிர் மவனே, புணர்வு மவனே புவனு
மவனே, யிராவு மவன்றய லையெ மறவுமா காள், ஞானின்
மலர்க்கமுந் துலவிநின் றானே. (௧௦)

புலமையி குற்றமில் புண்ணிய வெங்கை, தலைமையின் ஞா
ன வழக்கமு மாகும், விலைமையின் வைத்தன வேதியர் கூறும்,
பலமையி லெங்கும் பரந்துநின் றானே. (௧௧)

விண்ணவ ராய பேருக்குமேழுனன், மன்னவ ராய
வருக்கட லெழுக்குட், தன்னவ ராயது தன்மையி னிற்ப
தோர், தென்னவ னங்கி வைத்தனின் றானே. (௧௨)



நின்றனன் மாலொடு நான்முகன் றானாகி, நின்றனன் ற
னிலங் கீழொடு மேலென, நின்றனன் றானொடு மால்வரை யே
ழ்கட, னின்றனன் றானே வளங்கனி யாயே. (௧௩)

புவனா பதிமிகு புண்ணிய னெங்கை, யவனே யுலகி லடர்
பெரும் பாக, னவனே யரும்பல சீவனு மாகு, மவனே யிறை
யென மாலுற்ற வாறே. (௧௪)

மண்ணின் னொளிரு மூலவாப் பிராணனும், விண்ணினி லியங்
கும் விரிகதி ராச்செல்லு, மண்ணினி னியங்கியும் வாயுவு மா
யிநிற்கும், கண்ணினின் றிலங்குங் கருத்தவன் றானே. (௧௫)

என்னு மெழுத்து மினஞ்செய லவ்வழி, பண்ணுந் திறனு
ம் படைத்த பரமனைக், கண்ணின் கவருங் கருத்தி லதுவிது,
வுண்ணின் றுருக்கியோ ராயமு மாமே. (௧௬)

இருக்கின்ற தெண்டிசை யண்டம்பா தாள, முருக்கொடு
தன்னடி வோங்கலின் வண்ணக், கருக்கொண்டு வெங்குங் கல
ந்திவன் றானே, திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே.

பலவுடன் சென்றவப் பார்முழு தீசன், செலவறி வாரிஃ
லை சேயு ளணிய, னலவியன் சங்கர னுதியெம் மாதி, பலவினை
யாய்நிற்கும் பான்மைவல் லானே. (௧௮)

அதுவறி வானவ னாதிப் புராண, னெதுவறி யாவகை நின்
றன் னீசன், பொதுவது வானவ புவங்க ளொட்டு, மிதுவறி வா
னந்தி யெங்கள் பிரானே. (௧௯)

நீரு நிலனும் விசும்பங்கி மாருத, மாரு முடம்பிறு சோதி
யு மாயுளன், பேரும் பராபரன் பின்னுரு கனைம்பிறை, யூருஞ்
சடைமுலப் பிலி தானே. (௨௰)

மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ், மூல னுரைசெய்த
முந்நூறு மந்திரம், மூல னுரைசெய்த முப்ப துபதேசம், மூல
னுரைசெய்த மூன்றுமொன் றாமே. (௨௧)

வாழ்கவே வாழ்கவென் னந்தி திருவடி வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம் வாழ்கவே வாழ்கவென் னாரணந் தான்முன் வாழ்கவே வாழ்க மயனரன் பாதமே. (௨௨)

ஆக அதிகாரம் - ௨௩௨ - திருமந்திரம் - ௩௦௦௦.

நவமாந் தந்திர முற்றும்.

---

ஆக சிறப்புப்பாயிர முட்பட - அதிகாரம்

௨௩௫ - கூடியதிருமந்திரம் - ௩௦௪௭

திருமந்திர முற்றும்.